# சென்னை

## 1639-க்கு முன், பின்

TNSDA
09701

டாக்டர்- கு. பகவதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 113

# சென்னை
# 1639-க்கு முன் பின்

9701

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY,
9701
MADRAS-28.

கு.பகவதி

*முதுநிலை ஆய்வாளர்*

*கலை- பண்பாட்டுத்துறை*

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

**சென்னை.**

954.82
பகவதி

# Bibliographical Data

| | |
|---|---|
| Title: | Cennai, 1639-kku mun pin |
| Author: | Dr.K.Bhagavathi<br>Senior Fellow, International Institute of Tamil Studies, Madras-113. |
| Publication ©: | International Institute of Tamil Studies, Madras-113. |
| Publication Number: | 222 |
| Language : | Tamil |
| Date of Publication : | December 1995 |
| Edition: | First |
| Paper used : | 16 kg creamwove |
| Size of the book: | 1/8 demy |
| Printing types used: | 10 pt. |
| No. of copies: | 1000 |
| No. of pages: | 172+6, |
| Price: | Rs. 35/- |
| Printers: | M/s. Pavai Printers (p) Ltd., Ms-14. |
| Artist: | Jegan |
| Subject: | The history of Cennai through the study of place names. |

வெள்ளி விழா வெளியீடு

டாக்டர் ச.சு.இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

ஊர்ப் பெயர் ஆய்வு என்பது கலைக்களஞ்சியம் எழுதுவதைப் போன்ற ஒரு கடினமான பணியாகும். மேலும், இவ் ஆய்வு பல்துறை புலமை பெற்றவர்களால் மட்டுமே செய்ய இயலும். மொழியியல், இலக்கியம், கல்வெட்டு, தொல்பொருள், புதைபொருள், நாட்டுப் புறப்பாடல்கள், மானிடவியல், நில இயல் முதலியவற்றின் கூட்டுச் சேர்க்கையால் உருவாகும் இவ்வாய்வு ஒரு புதிய ஆய்வுத் துறை ஆகும்.

தமிழில் ஊர்ப்பெயர் ஆய்வு குறித்து முதல் கட்டுரை எழுதியவர் ராவ்பகதூர் சி.எம்.இராமச்சந்திர செட்டியார் அவர்கள், ரா.பி.சேதுப்பிள்ளை எழுதிய தமிழகம்-ஊரும் பேரும் என்பதுதான், இத்துறையில் எழுதப்பட்ட முதல் நூல்.

பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளையைத் தொடர்ந்து பேராசிரியப் பெருமக்கள் சிலர் அத்துறையில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்ய முற்பட்டனர். டாக்டர் ஞானமுத்துவின் கன்னியாகுமரி மாவட்ட ஊர்ப் பெயர்கள், டாக்டர் கி.நாச்சிமுத்துவின் கோவை மாவட்ட ஊர்ப்பெயர்கள், சின்னபாண்டியன் எழுதிய நெல்லை மாவட்ட ஊரும் பேரும், த.கோ.பரமசிவம் எழுதிய தஞ்சை மாவட்ட இடப்பெயர்கள், மணிமாறன் எழுதிய மதுரை மாவட்ட ஊர்ப் பெயர்கள் என்பன இத்துறையில் குறிப்பிடத்தக்க ஆய்வேடுகளாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1982 முதல் ஊர்ப் பெயராய்வு செய்வதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. இவ் ஆய்வை இங்கு வித்திட்டு வளர்த்த பெருமை முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ச.வே.சுப்பிரமணியம் அவர்களைச் சாரும்.

மெய்.சந்திரசேகரன் எழுதிய தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள், கரு.நாகராஜன் எழுதிய செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள், முனைவர் ஆர்.ஆளவந்தார் எழுதிய கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் தொகுதி-1,

முதலிய நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டு ஊர்ப்பெயர் ஆய்வுக்கு ஊக்கமும், ஆக்கமும் தந்து உள்ளது.

தமிழில் இத்துறையில் ஆய்வு செய்பவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள். அவர்களில் தனிச் சிறப்புப் பெற்றவர் இந்நிறுவனத்தில் முதுநிலை ஆய்வாளராகப் பணிபுரிந்துவரும் முனைவர் திருமதி.கு.பகவதி அவர்கள் ஆவார். இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் தொகுதி-2, தமிழக ஊர்ப்பெயர்கள், தமிழகம்-இலங்கை ஊர்ப்பெயர்கள்- ஓர் ஒப்பாய்வு முதலிய நூல்கள் இவருடைய பல்துறை புலமைக்குச் சான்றாக அமைகின்றன.

நிறுவன வெள்ளிவிழாவை ஒட்டி ஊர்ப்பெயர் ஆய்வுத் தொடரில் சென்னை-1639-க்கு முன் பின் என்னும் இவருடைய நூலை நிறுவனம் வெளியிடுகிறது.

ஆழ்ந்த, அகன்ற நுண்மாண் நுழைபுலம் பெற்றுள்ள இவரது நூல் தமிழ் மொழிக்குக் கிடைத்த அரும்பெரும் பரிசில்.

நூலாசிரியர் மேலும் பல நூல்களை எழுதி ஊர்ப்பெயர் ஆய்விற்கும் நிறுவனத்திற்கும் பெருமை சேர்க்க வாழ்த்துகிறேன்.

நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் நிறுவனத் தலைவர் பேராசிரியர் கா.பொன்னுசாமி அவர்களுக்கு என்றும் நன்றி உரித்து.

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த பாவை அச்சகத்தாருக்கும் நன்றி.

**டாக்டர் ச.சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்

# முன்னுரை

மேலோட்டமாகப் பார்க்கும் போது காணப்படும் எளிமை, அணுகும் போது தெரியும் ஆழம் இரண்டிலும் அலை கடலுக்கு உவமையாகின்றன ஊர்ப்பெயர்கள். தன் வரலாறு, தான் இருக்கும் இடவரலாறு, அங்கு வாழ்மக்கள் வரலாறு, அவர்கள் பேசும் மொழி வரலாறு போன்ற பலவற்றையும் தன்னுள் தாங்கிய வரலாற்று மூலங்கள் அவை. எனவே வரலாற்று வரைவியலுக்கு ஊர்ப்பெயர்கள் ஒரு முக்கியமான மூலம் என்ற உண்மையை உறுதிப்படுத்துதலுக்கு, ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியை எடுத்துக் கொண்டு, அங்கு இன்று காணப்படும் ஊர்ப்பெயர்களை மூலங்களாகக் கொண்டு, அப்பகுதியின் தொடர்ந்த கால வரலாற்றைப் பன்முக நோக்கில் வெளிப்படுத்தும் ஒரு சோதனை முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. இதற்காக மேற்கொள்ளப்பட்டதே சென்னை மாநகர ஊர்ப்பெயர் ஆய்வு என்ற திட்டப்பணி.

இத்திட்டப் பணிக்குரிய செய்திகள் தொகுக்கப்பட்ட போது, சென்னையின் வரலாற்றில் 1639-ஆம் ஆண்டிற்குரிய முக்கியத்துவம் புலப்பட்டது. சென்னையின் பெருமைக்குரிய திருப்புமுனை அங்கே நிகழ்ந்தது தெரிய வந்தது. எனவே சென்னை மாநகர ஊர்ப்பெயர்கள் என்ற திட்டப்பணி தலைப்பு, நூலாக்கம் பெறும்போது 1639-ஆம் ஆண்டிற்குரிய வரலாற்று முக்கியத்துவம் கருதி 'சென்னை 1639-க்கு முன் பின்' என அமைக்கப்பட்டது. ஊர்ப்பெயராய்வு வரலாற்றுத் தெளிவிற்கு எந்த அளவிற்குத் துணையாகவல்லது என்பதற்கு இத்தலைப்பு மாற்றத்தையே சான்றாக்கலாம்.

இந்த ஆய்வில் இப்பகுதியின் நிலவியல், மக்களின் அரசியல், வாழ்வியல் குறித்த பல செய்திகள் புலப்பட்டன. ஆனால் தொடர்ச்சியாகப் பண்டு தொட்டு இன்று வரையிலும் கால முறைப்படி இவை கிடைக்கவில்லை. எனினும் மாலுமிக்குக் கரையிருப்பதைச் சுட்டவல்ல கலங்கரை விளக்காக இவை அமைகின்றன. அருகிய நிலையில் கிடைக்கும் இச்செய்திகளைக் கருதுகோளாகக் கொண்டு, பிற வரலாற்று மூலங்களின்

துணையுடனும் ஆராயும்போது, சென்னையின் வரலாறு மேலும் தெளிவு பெற வாய்ப்புண்டு. சான்றாக இப்பகுதியில் பண்டு காணப்பட்ட மக்கள், முதலில் நாகர் வழிபாடு, பின்னர் சிவலிங்க வழிபாடு கொண்டு திகழ்ந்தனர் என்பது இப்பெயராய்வு தந்த ஓர் எண்ணம். இதனைக் கொண்டு மேலும் மேலும் ஆராயும் போது இவ்வழிபாடு பற்றியும், இப்பகுதி மக்களின் பண்டைய சமய வரலாறு பற்றியும் அறிதல் இயலும்.

இந்நிலையில் இந்நூல் வெளிவரும் இச்சூழலில் எனக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் துணை புரிந்தோர் பலர். பெயராய்வுத் துறையில் என்னை ஈடுபடச் செய்த டாக்டர் ச.வே.சுப்பிரமணியன் அவர்கள், சென்னைத் தொடர்பாகப் பல நூல்களை எழுதி எனக்குப் பல செய்திகளை அறிமுகம் செய்துவைத்து, இப்பெயராய்வினைச் செய்யலாம் என்ற உணர்வையும் ஊக்கத்தையும் அளித்த நூலாசிரியர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள்.

இந்த நூலை விரைந்து கொணர வேண்டும் என்ற ஆர்வத்தை வளர்த்து, நூல் வெளிவரத் துணை நின்ற நிறுவன இயக்குநர் டாக்டர் ச.சு.இராமர் இளங்கோ அவர்களுக்கு என் நன்றி.

சிறப்பாக நூலை அச்சிட்ட பாவை அச்சகத்தினர்க்கும் நன்றி.

கு.பகவதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை

# சென்னை
# 1639-க்கு முன் பின்

# சென்னை

## 1639-க்கு முன் பின்

1639 சென்னை பிறந்த ஆண்டு. சென்னையின் வாழ்வில் வரலாற்றில் ஒரு சிறப்புமிகு ஆண்டு. தமிழகத்தின் வடகோடியில் ஒரு சாதாரணப் பகுதியாகத் திகழ்ந்ததினின்றும் உயர்ந்து, முட்டாச் சிறப்பின் பட்டினமாகத் திகழ அடித்தளமிட்ட ஆண்டு. இம் மாற்றம் பற்றி ஆராயும்போது அங்கே வெளிப்படுகின்றது சென்னையின் வரலாறு.

சின்னஞ்சிறுஊர்களின் சிதறலாகக் காணப்பட்ட பகுதி, இன்று மலர்மலி சோலையென குடியிருப்புகள் அடர்ந்து காணப்படுகின்றது; தொழில்வளம், வணிகவளம், கல்விவளம், கலைவளம் போன்ற பல வளங்கள் குவிந்து காணப்படுகின்றது. தவிர, தமிழகத் தலைநகராகவும் திகழும் இச் சென்னை நகரின் வளர்ச்சி, திட்டமிட்டுச் செயல்படுத்தியதால் ஏற்பட்ட வளர்ச்சி அன்று. இராமர் காலில் அகலிகையாக, பிரான்ஸிஸ்டே, கோகன் என்ற இரு ஆங்கிலேயரின் பார்வை ஏற்படுத்திய வளர்ச்சி. இதன் பின்னணி என்ன? இவ்வளர்ச்சிக்கு முன்னர், இப்பகுதியின் வரலாறு என்ன? என்பன போன்ற இப்பகுதியின் அனைத்து வரலாறுகளையும் தெரிந்து கொள்ள வரலாற்றுத்துறை ஆய்விற்குத் துணையாகும் அனைத்து மூலங்களும் துணையாகின்றன. இவற்றுள் ஊர்ப் பெயர்களின் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது.

ஊர்ப்பெயர்கள் சிறந்ததொரு வரலாற்று மூலம் எனினும் இதன் முக்கியத்துவம் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இன்னமும் முழுமையாக உணரப்படவில்லை. இதற்குக் காரணம் காட்சி எளிமையும் இவ்வாய்வின் செயல் அருமையுமாகலாம். ஊர்ப்பெயர்களின் பெயர்க்காரணம் மட்டும் தெளிவாக உறுதியாக அறிய வந்தால் சிறந்த வலுவான வரலாற்றுச் சான்றாக அதனைக் கொள்ளல் இயலும். சான்றாக இன்று அறிஞர் அண்ணாநகர், கலைஞர் கருணாநிதிநகர், எம்.ஜி.ஆர். நகர், டாக்டர் ஜெயலலிதா நகர், பெரியார் நகர் என்பன,சென்னை மாநகரில் காணப்படுகின்ற ஒரு சில ஊர்ப்பெயர்கள்.இவை அண்மையில் சூட்டப்பட்ட பெயர்கள் தலைவர்களின் செல்வாக்கைக்காட்டும் பெயர்கள் என்பதில் எந்தவிதக் கருத்து வேறுபாடும் இல்லை. இவைபோன்று வரலாற்று மாத்திரைகளாகத் திகழும் ஊர்ப்பெயர்கள், அவ்வக் காலத்து, அவ்வவ் நிலத்து வரலாற்றைத் தெளிவுபடுத்திக்கொள்ள, தெரிந்த வரலாற்றை

மேலும் உறுதிப்படுத்த, புதிய செய்திகளை வெளிப்படுத்த வல்லன. மேலும் ஊர்ப்பெயர்கள் மூலமாக வெளிப்படும் இத்தகைய உண்மைகளைக் கருதுகோளாகக் கொண்டு, அந்நோக்கில் மேலும் மேலும் ஆழமாக ஆராயும் போது, புதிய வரலாற்று ஒளி கிட்டும். வரலாற்றின் இருண்ட பகுதிகள் வெளிச்சம் பெற வாய்ப்புக் கிடைக்கும்.

சென்னை வரலாற்றிலும் இருண்ட பகுதிகள், விளக்கம் பெறாத பகுதிகள் மிகுதியாக உள்ளன. காரணம் கிடைக்கும் வரலாற்று மூலங்கள் முழுமையாக ஆய்வு செய்யப்படாமையே. ஒரு பொருளை முழுமையாகப் புரிந்து கொள்ள பல கோணப்பார்வை தேவை. அதனைப் போன்று ஓரிடத்தின் வரலாற்றை முழுமையாக வெளிப்படுத்தவும், அது தொடர்பான வரலாற்று மூலங்கள் அனைத்தும் நோக்கப்படவேண்டும்.அப்போது தான் முழுமை யான வரலாறு வெளிப்படும்.

இவ்வடிப்படையில் சென்னையை நோக்கும் போது, சென்னைத் தொடர்பான வரலாற்று மூலங்கள் அனைத்தும் ஆராயப்பட்டு விட்டனவா? காலந்தோறுமான இதன் வரலாறு தெளிவு படுத்தப்பட்டு விட்டனவா? என்ற கேள்விகள் , முதலில் விடைகாண வேண்டியனவாக அமைகின்றன.

சென்னையின் வரலாற்றை வெளிப்படுத்தும் நிலையில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் சில கிடைக்க வில்லை. History of Madras- C.S.Srinivasachari, Madras in the Olden time-Talboys Wheeler,The History of Madras -Glyn Barlow, Old Madras- W.S. Krishnaswami Naidu. தவிர சென்னை மாநகர் - மா.சு.சம்பந்தன், Madras Discovered-S. Muthiah, Vestiges of Old Madras (Four Volumes), The Madras Tercentenary Commemoration Volume போன்றன சென்னை குறித்த பல செய்திகளைக் கூறுகின்றன. ஆனால் அவை பெரும்பாலும் சென்னையின் பழமையைவெளிப்படுத்தாது, பிற்காலச் செய்திகளைத் தருவனவாகவே அமைகின்றன. எனினும் இந்நூல்களில் உள்ள பல வரலாற்றுச் செய்திகள் மூலம் சென்னையின் பழம் வரலாற்றை ஓரளவுக்கு உணருதல் இயலுகிறது.இவை தவிர,சென்னை மாவட்டக்கோவில் வரலாறு நூலில், நூலாசிரியர் இ.மு. சுப்பிரமணியபிள்ளை, சென்னைப் பகுதியில் உள்ள கோயில்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றார். மக்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த நிலையில் இச்செய்திகளும் சென்னை வரலாற்றை அறியத் துணை புரிகின்றன. சென்னைக் கோயில்கள், தொண்டை

நாட்டுக் கோயில்கள் , திருவான்மியூர்,வடபழனி கோயில் தொடர்பான நூல்களும் இத்தன்மையனவே.

திருமயிலைத் திருத்தலம் - இலக்கிய வரலாற்றுப் பார்வை என்ற சு.ராஜசேகரன் நூல் மயிலாப்பூர் பற்றிய வரலாற்றை அறியத் துணை நிற்கின்றது. மயிலாப்பூர் சென்னை மாநகரின் பகுதி; சென்னைப் பகுதியில் காணப்பட்ட பழம் ஊரினுள் ஒன்று என்ற நிலையில், இதன் வரலாறு, சென்னையின் வரலாற்றோடு ஒன்றிய நிலையில் இதன் வரலாற்றிலும் சென்னையின் வரலாற்றைக் காணமுடிகிறது.

இவை தவிர, சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் , தொல் பொருள் ஆய்வுத்துறை வெளியிட்ட தொகுப்பு. இது சென்னை மாநகர்ப்பற்றிய பல செய்திகளைப் பெறத் துணை ஆகிறது. மேலும் அறிஞர்பலரின் கட்டுரைகளும் சென்னை வரலாற்றுத் தொடர்புடையன.

இத்தகைய மேலே குறிப்பிட்ட வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கும் நூல்கள் பெரும்பான்மையும், 1639-க்குப் பின்னர், சென்னையின் வரலாற்றை விளக்குவனவாகவே உள்ளன. மேலும், இவை காலவாரியாக அமையாமல், பகுதி பகுதியாகச் சென்னை பற்றிய செய்திகளைத் தந்து நிற்பவை. சென்னையின் முழு வரலாறும் இவற்றுள் தெளிவுபட வில்லை. வரலாற்றை முறையாக வெளிப்படுத்தும் வகையில் தொன்று தொட்டு இன்று வரையிலுமாக அவை அமையவில்லை.

மட்டுமன்றி, மேற்கூறிய வரலாற்று ஆய்வுகளுக்கு ஊர்ப்பெயர்கள் மூலமாகக் கொள்ளப்படவில்லை.

எனவே இங்கு, சென்னை 1639-க்கு முன்,பின் என்ற இந்நூல், மேலே கூறப்பட்டநிறைவின்மையை நிறைவு செய்யும் பொருட்டு இந்த ஆய்வை அமைத்துக் கொள்ள விழைகிறது.

சென்னையின் வரலாற்றைத் தொன்று தொட்டு இன்று வரையிலும் காணல்; ஆய்விற்கு இதுவரையிலும் மூலமாக எடுத்துக் கொள்ளப்படாத ஊர்ப்பெயர்களை மட்டும் மூலமாகக் கொள்ளுதல் என்பது இவ்வாய்வின் நோக்கம்.

சென்னை மாநகர ஊர்ப் பெயர்கள் என்னும் போதும், காலமும் ஆய்வு எல்லையும் கருதி 122 ஊர்ப்பெயர்களே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.வேறு சில ஊர்ப்பெயர்கள், கல்வெட்டுகள்,அறிஞர் எழுத்து மூலமாக தெரிய வருகின்றன.எனினும் அவை இன்றைய சென்னை மாநகருக்குட்பட்ட ஊர்களா? இல்லை அண்மைப் பகுதியினவா? என்பது குறித்த செய்திகள்

கிடைக்கப்பெறாத நிலையில் இவ்வூர்ப்பெயர்கள் ஆய்வுக்குளடுத்துக் கொள்ளப்படவில்லை.

இந்நூல் இரண்டு பகுதிகளாக அமைகின்றது.

*முதல் பகுதியில்*

சென்னை மாநகர ஊர்ப் பெயர்கள் அகரவரிசைப்படுத்தப்பட்டு ஆராயப்படுகின்றன. ஊரின் வரலாற்றைக் கொண்டு ஊர்ப்பெயர்க் காரணம் புலப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இப்பகுதியின் இறுதியில் சென்னை மாநகர ஊர்ப்பெயர்களின் அமைப்பு முறை தொடர்பான செய்திகள் விளக்கப்படுகின்றன.

*இரண்டாம் பகுதியில்*

முதல் பகுதியில் வெளியான ஊர்ப்பெயர்க் காரணங்கள் மூலமாகவும், இப்பெயர்க் காரணங்களைக் காணத் துணைபுரிந்த ஊர்களின் வரலாறு மூலமாகவும் அறியலாகும் சென்னை மாநகரின் வரலாறு முப்பிரிவுகளில் விளக்கப்படுகின்றது.

***1. நிலவியல்***

***2. அரசியல்***

***3. வாழ்வியல்***

*முடிவுரையில்*

சென்னையில் காணப்படும் இன்றைய ஊர்ப்பெயர்கள், அவற்றின் முதல் பெயர் அல்லது முதலில் இடப்பெற்றதாகத் தெரியவருகின்ற பெயர் அகர வரிசையில் தரப்படுகின்றன.

# பகுதி -1

## சென்னை மாநகர ஊர்ப்பெயர்கள்

நாள்தோறும் புதிது புதிதாக மக்கள் வருகின்றனர். நிலைத்த வாழ்வை நாடுகின்றனர்; குடிபெயருகின்றனர். இது, இன்று சென்னையில் நாள்தோறும் நிகழும் நிகழ்ச்சி. இதன் காரணமாகச் சென்னையில் நாளும் முளைக்கின்றன புதிய புதிய குடியிருப்புகள். உலகின், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து தேனை நாடும் வண்டு போல் சென்னையை நாடும் தன்மை இன்னமும் நிற்கவில்லை. தொடர்ந்து நடைபெறும் இந்நிகழ்ச்சி, சென்னை தன்னை மேலும் மேலும் விரிவாக்கிக் கொள்ள காரணமாக அமைகிறது. இப்புதிய குடியிருப்புகள் பெறுவன புதிய புதிய பெயர்கள். இருப்பினும் இவை தமிழரின் ஊர்ப்பெயரிடும் மரபினின்றும் சற்றும் விலகவில்லை. இந்நிலையில் இன்று சென்னை மாநகரினுள் காணப்படும் ஊர்ப்பெயர்களுள் பழையன உண்டு; மாற்றம் பெற்றன உண்டு; புதியன உண்டு; மறைந்து வருவனவும் உண்டு. இவற்றுள் இவ்வாராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஊர்ப்பெயர்களாக அமைவன

1.அகரம் 2. அசோக் நகர் 3. அடையாறு 4. அண்ணா நகர் 5.அப்பாவு நகர் 6.அபிராமபுரம் 7.அமிஞ்சிக்கரை 8.அயனாவரம் 9.அரும்பாக்கம் 10.ஆதம்பாக்கம் 11.ஆயிரம் விளக்கு 12. ஆலந்தூர் 13.ஆழ்வார் திருநகர் 14.ஆழ்வார்பேட்டை 15.இந்திராநகர் 16.இராபர்ட்ஸன் பேட்டை 17.ஈக்காட்டுத்தாங்கல் 18.எடப் பாளையம் 19.எம்.ஜி.ஆர்.நகர் 20.எருக்கஞ்சேரி 21.எழும்பூர் 22.எஸ்.கே.நகர் 23.ஏழுகிணறு 24.ஐ.சி.எப் காலனி 25.ஓட்டேரி 26.கண்ணம்மாபேட்டை 27.கணேசபுரம் 28.கம்பர் நகர் 29. கன்னிகாபுரம் 30. கஸ்தூரி பாய்நகர் 31.காந்தி நகர் 32.காமராஜ் நகர் 33. கான்றன் ஸ்மித் நகர் 34.கிண்டி 35.கிருஷ்ணாம்பேட்டை 36. கிரேஸ்கார்டன் 37. கீழ்ப்பாக்கம் 38.கீழ்பார்க் கார்டன் 39. குயப்பேட்டை 40 கெல்லிஸ் 41.கே.கே.நகர் 42.கொடுங்கையூர் 43.கொருக்குப்பேட்டை 44.கொளத்தூர் 45.கோட்டூர் 46.கோட்டூர்புரம் 47.கோடம்பாக்கம் 48.கோபாலபுரம் 49,கோமளேஸ்வரன் பேட்டை 50 கோயம்பேடு 51.சத்தியமூர்த்தி நகர் 52.சாந்தோம் 53.சாஸ்திரி நகர் 54.சி.ஐ.டி.நகர் 55.சிங்கார கார்டன் 56.சிந்தாதிரிப்பேட்டை 57.சின்மயாநகர் 58.சின்னமலை 59.சூளை 60. சூளைமேடு 61.செம்பியம் 62.சேத்துப்பட்டு 63.சேப்பாக்கம் 64.சைதாப்பேட்டை 65. டிரஸ்ட் புரம்

66.தங்கசாலை 67.தண்டையார்பேட்டை 68.தரமணி 69.தாக்கர் சத்திரம் 70.தாடண்டர் நகர் 71. தாதன்குப்பம் 72.தியாகராயநகர் 73.திருமங்கலம் 74.திருவல்லிக்கேணி 75.திருவான்மியூர் 76.திரு.வி.க.நகர் 77.திருவேட்டீஸ்வரன்பேட்டை 78.தேனாம் பேட்டை 79.நந்தனம் 80. நாசரத்புரம் 81.நுங்கம்பாக்கம் 82. நொச்சிக் குப்பம் 83.பட்டினப்பாக்கம் 84. பத்மனாபநகர் 85. புதுப்பாக்கம் 86. புரசவாக்கம் 87.புளியந்தோப்பு 88.பெசன்ட் நகர் 89.பெத்தநாயக்கன் பேட்டை 90.பெரம்பூர் 91.பெரியமேடு 92.போயஸ்கார்டன் 93.மண்ணடி 94.மந்தைவெளி 95.மந்தை வெளிப்பாக்கம் 96.மயி லாப்பூர் 97,மாம்பலம் 98.முகப்பேரி 99.முத்தியா லுப்பேட்டை 100 மூலக்கடை 101.மேட்டுப்பாளையம் 102.மேட வாக்கம் 103.மேத்தா நகர் 104.ரங்கராஜபுரம் 105.ராயபுரம் 106.ராய்ப்பேட்டை 107.ராஜ் பவன் காலனி 108.ராஜா அண்ணாமலை புரம் 109.லஸ் 110.வட பழனி 111.வண்ணாரப்பேட்டை 112. வள்ளலார் நகர் 113.வி.ஓ.சி. நகர் 114. வியாசர்பாடி 115.வியாசர்பாடி ஜீவா 116.வெங்கடரத்தினம் நகர் 117.வேப்பேரி 118.வேளச்சேரி 119.ஹைகோர்ட் காலனி 120. ஸ்ரீநகர் 121. ஸ்ரீராம் நகர் 122.ஜவஹர் நகர்

இந்த ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இவ்வூர்ப்பெயர்கள் நவிர, மேலும் பல நகர்கள் (அவ்வை நகர், அழகிரி நகர், இளங்கோ நகர்,ஐ.ஓ.சி. நகர்,கவியரசுகண்ணதாசன் நார் , சர்மா நகர்;சாந்தி நகர், செரியன் நகர், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், துர்க்கா நகர், நாவலர் நெடுஞ்செழியன் நகர்,நேருநகர், பாரதிதாசன் நகர், மகாகவி பாரதி நகர், ம.பொ.சி. நகர், வாடியா நகர்) பல பேட்டைகள் (சஞ்சீவி ராயன் பேட்டை, சௌகார்பேட்டை, புதுப்பேட்டை, மீனாட்சிஅம்மன் பேட்டை, மீர்சாகிபு பேட்டை) பலஊர்கள்( கோடங்கியூர், புலியூர், சிறுவள்ளூர், பெருவள்ளூர்) பல புரங்கள் (ஏகாங்கிபுரம், பாஸ்கரபுரம், தாமோதரபுரம்) பல குப்பங்கள்(தத்தன்குப்பம், புதுமணிக்குப்பம், டொம்மிக்குப்பம்) பல இயற்கைச் சார்பு பெயர்கள்(கொண்டித்தோப்பு, நடுவக்கரை, ரஸாக்கார்டன்) உண்டு. எனினும் அவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

அகரவரிசையில் அமையும் இப்பெயர்கள் ஒவ்வொன்றாக இப்பகுதியில் ஆராயப்படுகின்றன.

இவற்றுள் சில ஊர்ப்பெயர்கள் தங்கள் பெயரிலேயே பெயர்க் காரணத்தை விளக்கி அமைகின்றன. சில பெயர்களுக்கு அவற்றின் ஊர்ப்பெயர்க் காரணம் அறிய இலக்கியச் சான்றுகள், கல்வெட்டுகள், பிற நாட்டார்க் குறிப்புகள், அறிஞர் கருத்துகள்

துணையாகின்றன. இவை அனைத்துமின்றி, ஒரு சில குறிப்புகள் மட்டுமே புலப்படும் ஊர்ப் பெயர்களும் உண்டு. சில ஊர்ப்பெயர்களுக்கு எந்த வித விளக்கத்தையும் பெற இயலாத நிலையில், இவற்றின் பெயர்க் காரணத்தையும் அறியக் கூடவில்லை. தவிர, விளக்கம் கிடைக்கும் ஊர்ப்பெயர்களும் தங்கள் ஊர்ப்பெயர்க் காரணத்தைத் துல்லியமாகத் தெரிவித்து விடவில்லை. இம்முன்னுரையோடு, இவ்வூர்ப் பெயர்கள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து ஊர்ப்பெயர்க் காரணம் காணும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இந்த ஆராய்ச்சியின் முடிவில், இவ்வூர்ப்பெயர்கள் அமைப்பு குறித்த சில செய்திகள், அவை தரும் ஒரு சில எண்ணங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

## 1.அகரம்

பெரம்பூர் அருகேயுள்ள குடியிருப்புப் பகுதி.

தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகின்ற இப்பெயர் தனி ஊர்ப்பெயராக அன்றி, ஊர்ப்பெயர்ப் பொதுக் கூறாகக் காணப்படுவதே மிகுதி. இங்கு அகரம் தனி ஊர்ப் பெயராக அமைகிறது.

அகரம் என்பதற்குப் பல விளக்கங்கள் தரப்படுகின்றன.

நகரம் அகரமாயிற்று என்பர்[1]. எனினும் அக்ரஹாரம் அகரமாயிற்று என்பதே பெரும்பாலானோர் கருத்து[2].

அந்தணர்களின் வாழ்விடம் அக்ரஹாரம் என வழங்கப்பட்டது. பின்னர், இது மருவி, அகரம் என்றாயிற்று. அகரம் பின்னர் தனி ஊர்ப்பெயராகவும், ஊர்ப்பெயர்ப் பொதுக்கூறாகவும் திகழத்தொடங்கியுள்ளது.

முதலில் அந்தணர் வாழ்விடத்தைக் குறித்த அகரம் பின்னர், சிறப்புப் பொருட் பேறு இழந்து, பொதுப்பொருட் பேறு பெற்று ஊர்ப்பெயரின் பொதுக்கூறாக மட்டும் திகழும் தன்மை பெற்றிருக்க வாய்ப்புண்டு.

இந்த வரலாற்றைக் கொண்டு நோக்குகையில், சென்னையில் காணப்படும் இந்த அகரம் என்ற ஊர், அந்தணர் வாழ்விடம் என்ற பொருளில் முதலில் தோற்றம் பெற்றிருக்கலாம் எனத்

1. செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள்-ப-53.
2. செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள் -ப- 133-134.
பேரும் பெருமையும்-ப-44

தோன்றுகிறது. எனவே இது இடைக் காலம் சார்ந்தது. குறிப்பாகச் சோழர் ஆட்சியில் இப்பெயர் உடைய ஊர் தோற்றம் பெற்றிருக்கக் கூடும் எனலாம். செய்திகள் எதுவும் இது குறித்துத் தெளிவாக இல்லாத நிலையில் வேறு விளக்கம் எதுவும் புலப்படவில்லை.

**ஊர்ப் பெயர் - அகரம்**

**காரணம்- அந்தணர் குடியிருப்பு**

## 2.அசோக் நகர்

அண்மையில் எழுந்த குடியிருப்பு இது. சைதாப்பேட்டைக்கு அருகில் உள்ள பகுதி 1947க்குப் பின்னர் எழுந்த குடியிருப்பு என்பது இதன் பெயர் தரும் எண்ணம். இதன் பழைய பெயர் புதூர். எனவே புதூரும் பழைய ஊராக இருந்திருக்காதோ எனத் தோன்றுகிறது. அரசின் வீட்டுவசதி வாரியத்தின் புதிய குடியிருப்புகள் இப்பகுதி வளர்ச்சிக்குத் துணைபுரிந்துள்ளன.

**ஊர்ப் பெயர்- அசோக்நகர்**

**காரணம்- அசோகச்சக்கரம்**

## 3.அடையாறு

சென்னையின் தெற்கே, திருவான்மியூருக்கு முன்னதாக அமைந்துள்ள குடியிருப்புப் பகுதி அடையாறு. அடையாறு பழமையான ஊரா? இலக்கியக் குறிப்புகள், கல்வெட்டுச் செய்திகள் இதுதொடர்பாகக் காணப்படுகின்றனவா? என்று ஆராயும் போது ஒன்றிரண்டு செய்திகள் இது குறித்துத் தெரிய வருகின்றன. தொல்பொருள் அறிஞர் இந்த ஊரைப் பற்றிச் சுட்டும் தன்மை, இதன் தொன்மையை விளக்க வல்லது. தொல் பொருளாய்வும் தமிழர் பண்பாடும் நூலின் ஆசிரியர் சா. குரு மூர்த்தி, 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களது சவக்குழிகள் காணப்படும் ஊர்களுள் ஒன்றாக, சென்னைக்கு அருகில் அடையாற்றையும் சுட்டுகின்றார்[3]. எனவே ஆற்றங்கரை நாகரிக வாழ்வியலில் ஈடுபாடு கொண்ட தமிழர் இந்த அடையாற்றுப் பகுதியையும் விட்டு வைக்க வில்லை. இங்கும் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை இந்தத் தொல்பொருள் ஆய்வு அறிஞரின் கருத்துத் தருகிறது. தொடர்ந்து இது தொடர்பான எண்ணங்கள் எதுவும் கிடைக்காத நிலையில் இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்வு குறித்தும் விளக்கம் எதுவும் கிடைக்கவில்லை.

3. தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும் -ப.75.

ஆங்கிலேயரின் சென்னை வருகையின் பின் இப்பகுதியில் மக்கள், குறிப்பாக, ஆங்கிலேயர் குடியேறத் தொடங்கியமையை வரலாறு தெளிவுபடுத்துகிறது[4]. அவர்களால் பல தோட்ட வீடுகள் கட்டப்பட்டன[5]. பிரம்ம ஞானசபை 1882 இல் கர்னல் ஆல்காட் என்பவரால் இங்குத் தொடங்கப்பெற்றது[6]. மிகவும் பரந்துபட்ட பகுதியாக இருந்த அடையாறு முழுமையும் இன்று குடியிருப்புகளால் நிறைந்து விட்டது. ஒவ்வொரு குடியிருப்பும் ஒவ்வொரு பெயருடனும் திகழத் தொடங்கியுள்ளது.

அடையாறு என்பது இந்த ஆற்றங்கரைப் பகுதியை மட்டும் குறித்து நிற்க சூழ்ந்துள்ள பரப்புகள் அனைத்தும், காந்தி நகர், கஸ்தூரிபாய் நகர், இந்திரா நகர், சாஸ்திரி நகர், பெசன்ட் நகர், எனப்பெயர் பெற்றுள்ளன. மேலும் ஆல்காட் குப்பம், பெசன்ட் கார்டன் என்ற பெயர்களும் இப்பகுதியில் காணப்பட்டமையை அறிகிறோம். இவை அனைத்தும் 20-ஆம் நூற்றாண்டைய பெயர்களாக அமைகின்ற நிலையில், இப்பகுதிகள் அண்மையில் குடியிருப்புகளாக உருவாக்கப்பட்டமை தெரிகிறது. ஆயினும், அடையாறு, இந்தப் புதிய குடியிருப்புகளால் நிறைவதற்கு முன்னர், இதன் அண்மைப் பகுதிகளில் சில, மக்கள் குடியிருப்புகளாகத் திகழ்ந்திருக்கலாம், இப்பகுதிகளில் மக்கள் பண்டு தொட்டே வாழ்ந்து வந்திருக்கலாம் போன்ற எண்ணங்களை அடையாறுக் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.

---

4.It was formerly a quiet resort of the wealthy European who lived in a few large mansions surrounded by wide lawns and big trees which recalled the features of an English park......The first map of the city which includes the suburb of Adyar was drafted in 1798, when the Court of the Recorder was established in order to fix the limit of the city. The map of 1822 shows a few native houses in the east of the compound but still no bunglow. The house was infact not built till 1853, though the history of the changes in the ownership of the land before that date is not without interest- The Madras Tercentenary Commemoration volume p.61.

5.In this vast acreage new gardens were developed. Olcott Gardens, Besant Gardens, Blavatsky Gardens, Damodhar Gardems, the Serene Gardens of rememberance and several new buildings built for others who in the years ahead would came to follow the founders in their search for truth, to study religion, philosophy and man and his place in the universe- Madras Discovered p- 150.

6.In 1882, they acquired for +600 on the thickly wooded banks of the Adyar River, a garden house and two smaller house set in a twelve hectare estate of orchards and parks. There at Huddletsnoe Gardens, they established in 1886, the world headquarters of the spiritual movement, that searches for truth in the wisdom of all the great religions of the world- Madras Discovered p-150.

அடையாறில் கிடைத்ததாகச் சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் ஒரு கல்வெட்டைத் தருகிறது.

ஊறூர்
கிறாம தேவதை
அகிலாண்ட கோடி
பிரமாண்ட நாயகி
பொன்னியம்மாள்
ஆலய கையிங்கிரிய
கூட்டம் ஊறூர் கிறா
ம மிராசு துளுவ வே
ளாள பொன்னப்ப
முதலியார் அவர்க
ளால் நிரப்பெரினது
1890 ஸ்ரீ ஆகஷ்டு மா
சத்துக்கு சரியான த
மிழ் விக்குருநி ஸ்ரீ
ஆடி மீ 18உ[7]

அடையாறில் இன்று பொன்னியம்மன் ஆலயம் இருக்கிறது. இந்தக் கோயிலின் வெளிச் சுற்று மேற்குச் சுவரில் பொறிக் கப்பட்டுள்ளது இக் கல்வெட்டு.எனவே இப் பொன்னியம்மன் ஆலயம் இருந்த பகுதி ஊறூர் என்று பெயர் பெற்றிருந்த ஒரு சிற்றூர் என்பது தெரிய வருகிறது. மேலும் இன்று பெசன்ட் நகர் என்று அழைக்கப்படும் பகுதியும் ஊறூர் என்ற சிற்றூரின் கீழ் இருந்த பகுதி என்பது ஊறூர் என்று இன்றும் அப்பகுதி அழைக்கப்படும் நிலையினின்றும் புலனாகிறது. இது ஊற்றூர் என்னும் பெயரினின்றும் மருவியிருக்கலாமோ என்ற எண்ணம் தோன்று கிறதே தவிர, பிற எண்ணங்கள் எதுவும் இது குறித்துத் தெரியவில்லை.

மேலே சுட்டப்பட்டுள்ள இப்பகுதியின் புதிய பெயர்கள் அனைத்தும் தம்தம் பெயரிலேயே தம் தம் ஊர்ப்பெயர்க் காரணத்தையும் விளக்கி அமைகின்றன. ஆயின் அடையாறு என்பதில் ஆறு தொடர்பான பெயர் என்பது தெரிகிறதே தவிர துல்லியமாக இதன் காரணத்தைத்தெளிவுபடுத்த முடியவில்லை.

---

7. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் -தொடர்எண் 1967/216

இதன் காரணமாக, பெயர்க் காரணங்களும் பலவாறு இயம்பப் படுகின்றன.

இன்றும் சென்னை மாநகரில் செல்லும் ஆறு ஒன்று அடையாறு ஆகும். அது செங்கல்பட்டில் உள்ள செம்பரம்பாக்கத்து ஏரியினின்றும் புறப்பட்டு, சென்னையின் வழியே சென்று கடலில் கலக்கிறது. அவ்வாற்றுப் பெயரே அடையாறு என்னும் பாக்கத்தின் பெயராயிற்று[8].

அடையாற்றின் முகத்தில் அமைந்த ஊர் அடையாறு என்னும் பெயர் பெற்றது.[9]

அடையாறு என்னும் ஆறு கடலோடு கலக்குமிடத்தில் அமைந் துள்ளதால் இதற்கு அடையாறு என்னும் பெயர் அமைந்தது.[10]

செங்கல்பட்டில் உள்ள செம்பரம் பாக்கத்து ஏரியினின்றும் ஓராறு புறப்பட்டுச் சென்னை மாநகரின் வழியாக ஓடிக் கடலில் கலக்கிறது. திருஞானசம்பந்தர் மயிலாப்பூரில் பாம்பு கடித்து இறந்து போன பூம்பாவை என்னும் பெண்ணின் எலும்புகளைப் பெண்ணுருவாக்கி உயிர்ப்பித்த பின், திருவான்மியூருக்குச் சென்றார். செல்லும் வழியில் அடியார்களுடன் இவ்வாற்றின் கரையில் தங்கி இளைப்பாறினார். அன்று முதல் இவ்வாறு அடிகளார் ஆறு என்று பெயர் பெற்றது. நாளடைவில் இவ்ஆற்றின் பெயர் அடையாறு ஆயிற்று. அடையாறு கடலொடு கலக்குமிடத்தில் இந்நகர் அமைந்து இருப்பதால் இவ்யாற்றின் பெயரைப் பெற்று இருக்கிறது,[11]

எல்லோரும் தஞ்சமடையும் ஆறு அடையாறு என்றும், கடலை அடையும் ஆறு அடையாறு என்றும், அடை-சேறு, சேறு நிறைந்த ஆறு அடையாறு என்றும் பெயர் பெற்றதாகக் கூறுவர்.[12].

இப்பெயர்க் காரணங்களில் எக்காரணம் உண்மையாக இருக்கக்கூடும் என்று எண்ணும் போது சில ஐயங்கள் எழுகின்றன.

அடையாறில் ஓடும் ஆறு புறப்படும் இடம் செங்கல்பட்டில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியாகும். சென்னையின் வழியே வந்து இப்பகுதியில் கடலில் கலக்கிறது. இங்கே எழும் வினா இந்த ஆறு

---

*8. ஊரும் பேரும் ப- 179.*

*9. ஊரும் பேரும் ப- 45*

*10. கலைக்களஞ்சியம் தொகுதி -1- ப- 52*

*11. தமிழக ஊர்ப்பெயர்க் காரணங்களும் சிறப்புகளும் ப-25*

*12. திருமயிலைத் திருத்தலம் ப- 62*

செம்பரம் பாக்கத்தினின்றும் கிளம்பும் போதே இப்பெயர் பெற்றுள்ளதா? இல்லை என்பதே பதில். சென்னை நகர வரைபடத்தில் இது கோட்டூர் பகுதியில் தான் அடையாறு என்று சுட்டப்படுகின்றதே தவிர, சைதாப்பேட்டையைக் கடந்து வரும் போது இப்பெயருடன் இல்லை.ராமாபுரம் பகுதியில் இந்த ஆறு கல்லாறு என அழைக்கப்படுகிறது. எனவே இப்பகுதியில் மட்டுமே இந்த ஆறு அடையாறு என்று அழைக்கப்பட்டு வந்தது, வருவது தெரிகிறது.

திருஞானசம்பந்தர் தொடர்பு காட்டலுக்கும் அடியார்கள் ஆறு என வழங்கப்படலுக்கும் வரலாற்றுச் சான்றுகள் உண்டா என நோக்கவும், சான்றுகள் கிடைக்க வில்லை.

எனவே மேற்குறித்த, பல பெயர்க் காரணங்கள் மேலோட்ட மான இப்பெயரின் பொருளில் பிறந்தவைகளாக அமைகின்ற மையை உணரக்கூடுகின்றது. மேலும் இது பற்றிய ஆய்வில் புகும் போது இங்கு நாம் நோக்குதற்குரியன இப்பெயரின் பொருள், இது இருக்கும் இடம், இப் பெயரின் தொன்மை போன்றன.

அடையாறு என்பதன் பொருளாக, அடைகின்ற ஆறு; ஆறு அடையுமிடம் என்ற இரண்டையும் கொள்ளலாம். காவிரி கடலோடு கலக்குமிடம் புகார் எனப் பெயர் பெற்றதை இங்கு நினைவு கூரலாம். இவ்வாறே, இந்த ஆறு கடலோடு கலக்குமிடம் என்ற பொருளில் இந்த இடம் அடையாறு என்று சுட்டப்பட்டு, பின்னர் இந்த ஆறும் அடையாறு எனப் பெயர் பெற்றுள்ளதாகக் கருதலாம். இந்த இடத்தில் மக்கள் வாழுமுன்பாக இப்பகுதி அல்லது இந்த ஆறு பெயர் பெற்றிருக்க வாய்ப்பில்லை. இங்கு மக்கள் வாழத் தொடங்கியவுடன், தாங்கள் வசிக்கும் இடத்தைக் குறிப்பிட்டுக் காட்ட, கடலை அடைகின்ற ஆற்றின் பக்கத்தில் உள்ள இடம் எனச் சுட்டியிருக்கலாம்.இந்த இடம் இருக்குமிடம் என நோக்க, ஆறு கடலோடு கலக்கும் பகுதி எனவே ஆறு கடலோடு சேருமிடம், ஆறு கடலை அடையுமிடம் என்பது பொருத்தமாக அமைகிறது. மேலும் ஒரு ஆறு நாட்டின் பல பகுதிகள் வழியாக ஓடும் போது ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ப, இடங்களும் வேறு வேறு பெயர்களைப் பெறுதல் இயற்கை. பல ஆற்றுப் பெயர்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இப்பெயரின் தொன்மையும் மேலே கண்ட பெயர்க் காரணத்திற்கு ஏற்புடையதாக அமைகிறது தொல்பொருள் அறிஞரின் கருத்துப்படி, இங்குப் பண்டு தொட்டே மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பது தெரிகிறது. அப்போதே தாங்கள் வசித்த

இடத்திற்குப் பெயர் சூட்டாமல் இருந்திரார். எனவே அப்போதே இட்ட பெயராக அடையாறும் இருந்திருக்க வேண்டும். இது இயற்கைச்சார்பு பெயராக அமைகிறது. பண்டைத் தமிழர் தாம் வசித்த ஊர்களுக்குப் பெரும்பான்மையும் சூட்டிய பெயர்கள் இயற்கைப் பெயர்களே.

எனவே ஆறு கடலை அடையுமிடம் என்ற பொருளில் இடப்பெயர் ஊர்ப் பெயராகி ஆற்றுப் பெயராகவும் பின்னர் அமைந்திருக்க வேண்டும் என்பது இந்த ஆய்வு தெளிவாக்கும் நிலை. இன்று சிலர் அடையார் என்று எழுதுவது தவறு என்பதும் அடையாறு என்பதே சரியான பெயர் என்பதும் இங்கு அமையும் முடிவாகும்.

**ஊர்ப்பெயர்-அடையாறு**

**காரணம்- ஆறு கடலை அடைகின்ற இடம்**

## 4.அண்ணா நகர்

தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணாவின் பெயரால் உருவாக்கப்பட்ட குடியிருப்புப் பகுதி. அமைந்தகரையின் அடுத்தாற்போன்று உருவாக்கப்பட்ட பல குடியிருப்புகளுள் மிகப்பெரிய குடியிருப்புப்பகுதியாக இது அமைகிறது. அண்ணா நகர் புதியதாக உருவாக்கம் பெற்ற ஊராக அமையினும், இங்குக் காணப்படும் சில பகுதியின் பெயர்கள் இவ்விடத்தில் இருந்த பழைய குடியிருப்புகளை இனங்காட்டுகின்றன.

திருமங்கலம், முகப்பேரிபோன்ற பெயர்களை இங்குச் சுட்டலாம்.

நான்கு வேதங்களும் தெரிந்த பிராமணர்கள் குடியிருக்கும் கிராமம் சதுர்வேதி மங்கலம்[13]. சதுர் வேதிமங்கலத்தின் குறுகிய வடிவம்மங்கலம்.

மங்கலம் என்ற பெயர், பழந்தமிழகத்திலேயே காணப் பட்டாலும்[14] திருஅடை பக்தி இயக்க காலத்திலேயே மிகுதியாகத் தோற்றம் பெற்ற நிலையில் இவ்வூரையும் இடைக்காலத்தைச் சார்ந்ததாகக் கருதலாம்.

முகப்பேரி, முகப்பு ஏரி என பிரியும். ஏரியின் முகப்புப்

13. ஊரும் பெருமையும் -பக்-47,48

14. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - ப- 109.

பகுதியில் உள்ள ஊர் என்ற பொருள் பொருத்தமானதாகும். இதன் அருகே ஏரி இன்றும் காணப்படுகிறது. மேலும் அருகாமைப் பகுதியான அம்பத்தூர் 'ஏரிகீழ் நாட்டு அம்பத்தூர்' என குறிப்பிடப்படும் தன்மை இப் பெயர்க் காரணத்தைப் பொருத்தம் பெறச் செய்கின்றது. சாதாரண ஊராகத் திகழ்ந்த இவ்வூர் இன்று அண்ணா நகரின் விரிவாக்கத்தில் மிகவும் நெருக்கமான குடியிருப்பாக மாற்றம் பெற்று வருகின்றது. இன்று முகப்பேரி டாக்டர் ஜெயலலிதா நகர் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

***ஊர்ப்பெயர்-அண்ணா நகர்***

***காரணம்- ஆட்பெயர்***

## 5.அப்பாவு நகர்

சைதாப்பேட்டையின் அருகில் உள்ள குடியிருப்பு

***ஊர்ப்பெயர் - அப்பாவு நகர்***

***காரணம்- ஆட்பெயர்***

## 6.அபிராமபுரம்

திருமயிலைக்கும் ஆழ்வார்பேட்டைக்கும் இடையேயுள்ள குடியிருப்புப் பகுதி அபிராமபுரம் என்று அழைக்கப்படுகிறது.

திருமயிலையின் ஒரு பகுதியாக முன்பு விளங்கியது ஆழ்வார்பேட்டை. மயிலையில் பேயாழ்வார் பிறந்த இடம் என்ற நிலையில் ஆழ்வார்பேட்டை என இப்பகுதி இன்று வரை சுட்டப்பட்டு வருகிறது. எனவே திருமயிலைக்கும் ஆழ்வார் பேட்டைக்கும் இடையேயுள்ள இன்றைய அபிராமபுரமும் முன்பு திருமயிலையின் ஒரு பகுதியாக விளங்கியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. மிகப்பரந்துபட்ட ஊரின் பல பகுதிகளிலும் குடியிருப்புகள் உருவாக்கப்படும் போது அவை தனித்தனியே பெயரிடப்பெற்று, தனி ஊராகக் குறிப்பிடப்படல் வரலாறு காட்டும் உண்மை. இவ்வரலாற்றுக்கு உட்பட்டதாக அபிராம புரமும் விளங்குகிறது[15].

அண்மையில் புதியதாகப் பெயர் சூட்டப்பெற்ற இக்குடியி ருப்புப் பகுதி இறைப் பெயராகிய அபிராமி என்பதால்

---

15. South of Luz and West of the Mylapore Temples were more paddy fields till they developed around 1934, as Abhiramapuram-Madras Discoverd. p.- 144.

அமைந்ததா? அல்லது ஆட்பெயரா? என்பதும் சிந்திக்கத் தக்கது. இங்கு அபிராமி தொடர்பான கோயில் எதுவும் இல்லை. இன்று தமிழர் தாங்கள் உருவாக்கும் பெரும்பாலான குடியிருப்புகளுக்குத் தங்களுக்குப் பிடித்தமான தலைவர்கள்பெயர் சூட்டுதலைப் போன்று, தாங்கள் வசிக்கும் ஊர்கள் மங்களகரமான பெயருடன் திகழவேண்டும் என்றும் விரும்புகின்றனர். இதனால் சக்தி, லஷ்மி, மங்களம் போன்ற பெயர்களைச் சூட்டுகின்றமையை வழக்கில் கொண்டுள்ளனர். எனவே இவ்வெண்ணத்தில் அபிராமி எனப் பெயர் சூட்டி இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. அபிராமி என்பதற்கு அழகு என்று பொருள். அழகிய ஊர் என்னும் கருத்தும் இங்குப் பொருத்தம் பெறுகிறது. அபிராமிபுரம் இன்று அபிராமபுரமாக மாறியிருக்கவும் வாய்ப்புண்டு.

**ஊர்ப்பெயர் -அபிராமிபுரம்**

**காரணம் - மங்களகரமான உணர்வு;அழகு**

## 7.அமிஞ்சிக்கரை

சேத்துப்பட்டை அடுத்த பகுதி அமிஞ்சிக்கரை. இந்தப் பெயரின் ஊர்ப்பெயர்க் காரணத்தை ஆராயமுற்படும் போது சில செய்திகள் சிந்திக்கத் தக்கவையாக அமைகின்றன. இது புதியதாக ஏற்பட்ட குடியிருப்புப் பகுதியன்று. எனினும் இது தொடர்பான பழமையான செய்திகள் எதுவும் தெளிவு பெறவில்லை. எனவே இதன் பெயர்க் காரணமும் புலப்படவில்லை. எனினும் ஒரு சில செய்திகளின் அடிப்படையில் இப்பெயர்க்காரணத்தைச் சிந்திக்கலாம்.

அமிஞ்சிக்கரை என்ற பெயரைப்பிரித்து நோக்கும்போது அம்இஞ்சி கரை என்று அமைகிறது.

அழகிய கோட்டைகரை என்று இப்பொருள் அமைகிறது. ஆயின் இங்கே கோட்டை இருந்ததாகத் தெரிய வில்லை.

எனவே அமைந்தகரை மருவி அமிஞ்சிக்கரை ஆகியிருக்கலாமா எனப்பார்க்கலாம்.

அமைந்த கரை என்னும் போது இங்கு ஏதும் நீர்நிலை இருந்தனவா என்ற நோக்கில் ஆராயலாம். சென்னையில் பல ஏரிகள் தூர்க்கப்பட்டு, புதிய குடியிருப்புகள் உருவாக்கப்பட்டதை ம.சு.சம்பந்தம் தன்னுடைய நூலில் குறிப்பிடுகின்றார். இவர், நுங்கம்பாக்கம் ஏரியிருந்த இடத்தில் சேவா கிராமமும்

அமைந்தகரையும் உண்டாயின, என்கின்றார்[16].

ஏரி எனில் கரையிருப்பது இயல்பு. இந்நிலையில் ஏரிக்கரையில் உருவாகிய குடியிருப்பு காரணமாக இப்பெயர் ஏற்பட்டது என்பது ஏற்புடையது.

ஆயின் சென்னை மாவட்டக் கோயில் வரலாறு நூல் 'கூவம்' ஆறு இவ்வழியே ஓடி வருகிறது. அதன் வடகிழக்குப் பகுதியிலே ஒரு பெரிய குளம் இருக்கிறது. கூவம் ஆற்றுக்கும் இப்பெரிய குளத்துக்கும் இடையே இயல்பாக அமைந்தகரை போல இவ்விடம் உள்ளது. அதனால் இவ்விடத்தில் தோன்றிய ஊர் அமைந்த கரை என்று பெயர் பெறுவதாயிற்று என்கின்றது[17]. இக் கருத்தும் பொருத்தமாக அமைகிறது.

இவற்றை நோக்க நீர்நிலை, கரை இவை தொடர்பாக இப்பெயர் ஏற்பட்டது என்பது மட்டும் உறுதிப்படுகிறது.

***ஊர்ப்பெயர்- அமைந்தகரை***

***காரணம்- நீர்நிலை***

## 8.அயனாவரம்

சென்னையின் மேற்குப் பகுதியில் உள்ள குடியிருப்பு. இன்று அயனாவரம் என்று இவ்வூர் அழைக்கப்படுகின்றது. இலக்கியக்குறிப்புகள் இவ்வூர் குறித்துக் கிடைக்கவில்லை. இடைக்கால கல்வெட்டு ஒன்று இவ்வூர் அயன்புரம் என்று அன்று அழைக்கப்பட்டு வந்ததைத் தெரிவிக்கிறது.

'ஐயங்கொண்ட சோழமண்டலத்துப் புழற்கோட்டமான விக்கிரம சோழ வளநாட்டுத்துடர் முள்ளி நாட்டு அயன்புரத்து அயன்புரங்கிழவன் தெள்ளியானான செழியதரையனும் அரையன் நின்ற நம்பி என்பவரும்' தெள்ளிய சிங்க நாயனார்க்கு நிலம் விற்றுக் கொடுத்ததைக் குறிக்கிறது[18].

கி.பி. 1309ஐச் சார்ந்தது இக்கல்வெட்டு. இங்கு அயன்புரம் இருந்த பகுதியும் தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தின் பல பிரிவுகளில் புழற்கோட்டம் ஒன்று. இக்கோட்டம் விக்கிரம சோழ வளநாடு

---

*16 சென்னை மாநகர் ப.-23*

*17 சென்னை மாவட்டக் கோயில் வரலாறு ப- 189*

*18. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் தொடர்எண் 1967/81 b*

என்றும் வழங்கப்பட்டி ருக்கிறது. இதன் பல பிரிவுகளில் துடர் முள்ளி நாடு ஒரு பிரிவு. இந்நாட்டு ஊர்களில் அயன்புரமும் ஒன்று என்பது இங்கே தெரியவருகிறது.

இத்தகைய விளக்கங்களில் அயன்புரம் என்ற இந்த ஊர் கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரேயே ஏற்பட்ட குடியிருப்பு என்பதும் தெரியவருகின்றது.

நடன காசிநாதன் தன்னுடைய கட்டுரைஒன்றில், அயன்புரம் பற்றிச்சுட்டும் போது கி.பி. 19ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றிலே அயனவரம் என்கிற சொத்திரிய கிராமம் என்று சுட்டப்படுகிறது என்கின்றார்.[19]

எனவே அயன்புரம் என்பது பின்னர் அயனவரம் என்றாகி, இன்று அயனாவரம் என்று வழங்கி வருகிறது என்பது புலனாகிறது.

எனினும் இந்த ஊர்ப்பெயர்க் குறித்த அறிஞர் சிந்தனைகள் எதுவும் கிடைக்கவில்லை.

அயனவரம், அயனாவரம் என்ற இரண்டும் மருவிய வழக்குகளாக அமைய, அயன்புரம் என்பதே முதல் வழக்காக, திரியாத வழக்காக அமையும் நிலையில் இதுவே இக் குடியிருப்புக்கு முதலில் வழங்கப்பட்ட பெயர் என்பதாக கொள்ளலாம்.

புரம் என்பது வரம் என்று மருவுதல் இயல்பான மக்கள் வழக்கு. இப்பொதுக் கூறைத் தவிர்த்து இப்பெயரை ஆராயும் போது. விளக்கம்தர இருப்பது அயன் என்ற சொல் மட்டுமே.

அயன் என்ற சொல்லை ஆராயும் போது இச் சொல் பண்டைத் தமிழர் பயன்படுத்திய சொல்லாகத் தெரியவில்லை. இடைக்காலத்திய பெயராகவே காணக் கிடைக்கிறது.

எனவே இச் சொல்லைக் கொண்டு உருவாக்கப்பட்ட இக் குடியிருப்பும் இடைக்காலத்தைச் சார்ந்ததோ எனக் கருதிப்பார்க்கலாம்.

இதன் பொருளை நோக்க,பிரமன், சர்க்கார் நிலம் என்ற இரண்டும் கிடைக்கின்றன[20]. இவ்விரு பொருட்களின் அடிப்படையிலேயே இவ்வூர்ப்பெயர் தோற்றம் பெற்றிருக்கக்கூடும்.

பிரமன் தொடர்பான ஊீரா எனக் காணின் இங்கு, நான்முகன்

---

19. தமிழரசு -16.5.1990 ப.23.

20. தமிழ் லெக்ஸிகன் தொகுதி 1 ப-110.

வழிபாடு இருந்ததா என்ற கேள்வி எழுகிறது

இன்று இங்கு இருக்கும் கோயில்களாக நாராயணீயம்மன் கோயில், பரசுராமலிங்கேஸ்வரர் கோயில், கரியமாணிக்கம் பெருமாள் கோயில், காசி விசுவநாதர் கோயில், அய்யப்பன் கோயில், சிவன் கோயில் என்பன தெரியவருகின்றன. பிற கோயில்கள் எதுவும் தெரிய வில்லை. கரியமாணிக்கம் பெருமாள் கோயிலில் 4 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. எனினும் சிதைந்தவை. கி.பி.13 ஐச் சார்ந்தவை என்கின்றார் தொல்பொருள் அறிஞர். எனவே பொதுவாக, பிரம்மாவுக்குத் தமிழகத்தில் கோயில் இல்லாமையும், இங்கு இருந்திருந்தால் ஏதேனும் வரலாற்றுக் குறிப்புகள் கிடைத்திருக்கலாம் என்ற உணர்வும் எழுகிறது.

அயன் என்பதற்குச் சர்க்கார் நிலம் என்ற குறிப்பு அண்மைக் காலத்தையே எண்ணச் செய்கிறது. எனவே பிற ஏதேனும் விளக்கம் கிடைக்கின்றதா என நோக்கலாம்.

இவ்வூரைப் பற்றி எண்ணுகையில் அயன்புரம் அயம்புரமாக அல்லது அயல்புரமா இருக்கலாம் என்ற எண்ணம் தோன்றுகிறது. அயம் என்பது நீர் நிலை, குளம், சுனை என்ற பொருட்களைத் தரும் ஒரு சங்ககாலச்சொல். எனவே நீர்நிலை அடிப்படையில் இது அயம்புரமாக இருந்து பெயர் பெற்றதாக இருக்கலாம். ஏனெனில் இடைக்காலக் கல்வெட்டில் இடம் பெற்ற நிலையில் இதன் காலம் இடைக்காலத்திற்கு முன்னையது. எனவே இவ்வூரும் பழந்தமிழகத்தில் காணப்பட்ட ஓர் ஊராக இருந்திருக்க வாய்ப்பு இருக்கிறது.அடுத்து அயல் என்பது பழந்தமிழர் பயன்படுத்திய ஒரு சொல். எனவே எழும்பூர், புரசைவாக்கத்தை அடுத்துக்காணப்படும் ஊர் என்ற நிலையில் அண்மையில் அமைந்த குடியிருப்பு என்ற கருத்தில் அயல்புரம் என்றாகி, பின்னர் அயன்புரமாகச் சுட்டப்பட்டு இருக்கலாமா என்ற எண்ணம் ஒன்றும் தோன்றுகிறது. இருப்பினும் வேறு எந்த செய்திகளும் தெளிவில்லாத நிலையில் இதன் பெயர்க் காரணத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் இயலவில்லை.

**ஊர்ப்பெயர் - அயன்புரம்**

**காரணம்-**

## 9.அரும்பாக்கம்

அமைந்தகரையை அடுத்துள்ள குடியிருப்பு இது.

அரும்பாக்கம் என்பதில் உள்ள 'பாக்கம்' பழமைச் சார்பு

காட்டுகிறது. இப்பெயரில் அமையும் அரும் என்ற பொதுக் கூறு இவ்வூரின் விளக்கத்தைத் தர இயலும் என்ற நிலையில் இப்பெயரை ஆராயலாம். அரும்பாக்கம் என்பது அருகன்பாக்கம் என்ற பெயரின் மரூஉவாக அமையலாமா என்ற கோணத்தில் எண்ணிப் பார்க்கலாம். சென்னையில் சமணம் பரவியிருந்துள்ளது. மயிலாப்பூரில் சமண மதத்தொடர்பு இருந்தமையை அறிஞர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.[21]. மேலும் 'புழல்' சமணக்கோயில் பற்றியக் குறிப்பும் உண்டு[22]. வில்லிவாக்கத்திற்கும் சமணர் தொடர்புண்டு. அடையாறில் ஒரு பள்ளிப் பட்டு காணப்படுகிறது. அருகந்துறை, அருகங்குளம் என்பவை அருகன் துறை, அருகன்குளம் என்பதன் திரிபுகளாக அமைகின்ற நிலை தெரிகிறது.[23] எனவே அரும்பாக்கம் என்பதும் அருகன்பாக்கம் என்பதன் மரூஉ எனல் பொருத்தமானது. இவ்வூர்த் தொடர்பாகக் கிடைக்கும் பிற செய்திகள் இக் கருத்தின் வன்மையைக் காட்டும்.

**ஊர்ப்பெயர்- அருகன்பாக்கம்**

**காரணம்- சமணச் சார்பு**

## 10. ஆதம் பாக்கம்

கிண்டியின் அருகேயுள்ள குடியிருப்பு. இதன் பெயர் ஆதன்+பாக்கம் என்று பொருள் தரும் நிலையில் ஆதன் பாக்கம் பழமையைச் சுட்டுகிறது. பிற செய்திகள் ஏதும் தெளிவுப்பெற வில்லை. இதன் பெயர் பழமை, ஊரின் பழமையையும் எண்ணச் செய்கிறது.

**ஊர்ப் பெயர்- ஆதன் பாக்கம்**

**காரணம்- ஆட்பெயர்**

## 11.ஆயிரம் விளக்கு

அண்ணாசாலையும் பீட்டர்ஸ் சாலையும் இணையும் முனையில் உள்ள பகுதி ஆயிரம் விளக்கு. நவாப் வாலாஜாவின் குடும்பத்தினர் இந்தப் பகுதியில் பெரும்பாலும் இருந்துள்ளனர்[24]. இன்றும் முகமதியர்கள் மிகுதியாக இப்பகுதியில் வாழ்கின்றனர்.

---

21. திருமயிலைத்திருத்தலம் 32

22. The Madras Tercentenray Commemoration volume p. 357

23. சமணமும் தமிழும் பக்.99- 104.

24. Madras Discoverd-p.256

புதுப்பாக்கத்தையும் தேனாம்பேட்டையையும் அருகாமையில் கொண்டுள்ள இப்பகுதியின் வரலாறு அண்மைக் காலத்தையே காட்டினும், இப்பெயர் குறித்துத் தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை.

Vestiges of Old Madras நூலில் ஹென்றி டேவிசன் லவ், இதனைப் பற்றி 'Thousand Lights Poodupauk' என எழுதுகின்றார்[25]. இதனின்றும் புதுப்பாக்கத்தின் ஒரு பகுதியாக இது இருந்தது தெளிவு பெறுகிறது. எனவே இப்பகுதி புதியதாகப் புதுப்பாக்கத்தில் பெயரிடப்பட்டு உண்டாக்கப்பட்ட குடியிருப்புப் பகுதி என்பதும் தெளிவாகிறது. எனினும் இது குறித்து ஐயுறத் தக்க கருத்துக்களே கிடைக்கின்ற நிலையில் இப்பெயர் குறித்துத் தெளிவினைப் பெறுதல் இயலவில்லை.

தமிழில் ஆயிரம் விளக்கு என்று சுட்டப்படும் இக்குடியிருப்பு ஆங்கிலத்தில் Thousand light என்றும் இந்துஸ்தானியில் Nakshah (or picture) என்றும் சுட்டப்படுகிறது[26].

'ஆயிரம் விளக்குகள் கொண்ட பிரார்த்தனை அறை' நவாப் உம்தாத் உல் உமராவால், இங்குக் கட்டப்பட்டதால் இப்பெயர் பெற்றது என்ற கருத்து இது குறித்து இயம்பப்படுகிறது. எனினும் இக்கருத்து தெளிவின்மையும் ஐயமும் கொண்டதாக அமைகிறது என்னும் கருத்தை அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். நவாப் கட்டியதாகத் தெளிவு இல்லை. இக்கட்டிடத்தின் பெயர் Majeed Dawlash என்பது, Graveyard இன் பெயர் ஆயிரம் விளக்கு என்ற கருத்துகள்[27] இங்கு ஐயங்களைத் தோற்றுவிக்கின்றன.

---

25.Vestiges of Old Madras- Vol-p.572.

26.A Circumstance which led to the further growth of the Mount Road was the rise of the place known as Ayiram vilakku and in Hindustani as Nakshah (or Picture The Madras Tercentenary Commemoration Volume- p. 131.

27. It has been named after a building constructed by Nawab Umdat- Ul-Umara( 1795-1801) for the assemblage of the Shias during the Moharram Mournings. It is in the angle formed by the junction of the Mount Road with Peters Road a few yards off St. Georges Cathedral .Col. Love holds that the current tradition that Umdat - Umar erected the curious structure called the Thousand Lights in the wedge at the junction of the Mount Road "Peters road does not seem founded, as the earliest map depicting it in 1822".He adds that the building is there marked Majeed Dowlah. In a third note, he observes the compound containing two buildings is first shown in the the map of 1816 and is lettered Nabob but the singular window- less edifice built with insets which adapts itself to the extreme angle between the Mount Road and Peters Road was not created till later. In the map of 1837 the property containing a Moslem graveyard is marked Thousand Lights-The Madras Tercentenary Commemoration Volume- p.131,132.

எனவே, லவ் கருத்துப்படி, [illegible] னை அறையின் பெயர் ஆயிரம் விளக்கு என்பது இல் [illegible] Graveyard இன் பெயர் ஆயிரம் விளக்கு என்பதும் குடியிருப்புக்கு ஆயிரம் விளக்கு என்ற பெயர் அமைந்ததற்கு Grave yard இன் பெயர் காரணமாக இருக்க வாய்ப்புத் தருகிறது. எனினும் Graveyard க்கும் ஆயிரம் விளக்குக்கும் என்ன தொடர்பு என்பது புலப்படவில்லை.

தமிழில் விளக்கு ஆங்கிலத்தில் Light என்று பொருத்தமாக அமைய, இந்துஸ்தானியில் picture என்று எவ்வாறு ஆயிற்று என்பதும் ஆய்விற்குரியது.

**ஊர்ப்பெயர் - ஆயிரம் விளக்கு**

***காரணம் -***

## 12.ஆலந்தூர்

கிண்டியை அடுத்துள்ள குடியிருப்பு. இன்று நகரின் வளர்ச்சியில் இவ்வூரும் வளர்ச்சி பெறத் தொடங்கியுள்ளது. இந்த ஊர்ப் பெயர் பற்றியசெய்திகள் எதும் புலனாகவில்லை. எனினும், மயிலாப்பூர்க் கல்வெட்டு ஒன்று (கி.பி.12) ஆலத்தூர் என்ற பெயரொன்றினைச் சுட்டும் நிலை, இன்றைய ஆலந்தூரைக் குறிப்பிடுகிறதோ என்று எண்ணிப்பார்க்க வாய்ப்பு அளிக்கிறது. மயிலைக்கு அண்மைப்பகுதியாக இது இருக்கின்ற தன்மையில் இக் கருத்து அமைகிறது.

> **''...யனார் தேவதானமான தண்ண ஆலத்தூர்**
>
> **நத்தமும் ஏரியும்...**
>
> **...நாயனார்க்கு த்திருநாமத்துக் காணியாக''**

இக் கல்வெட்டு மூலம் இது ஒரு தேவதான கிராமம் என்பது புரிகிறது[26].

இதன் அருகேயுள்ள நத்தமும் ஏரியும் நாயனார்க்குத் திருநாமத்துக் காணியாக அளிக்கப்பட்டதை இக் கல்வெட்டுக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

தமிழகத்தில் பல பெயர்கள் 'ஆல்' அடிப்படையில் அமைந்துள்ளன. ஆல் தமிழகம் சார்ந்த மரம். எனினும் ஆல் தொர்டர்பான எல்லாப் பெயர்களுக்கும் காரணமாக மரத்தைக்

---

26.சென்னை மாநகரக் கல்வெட்டுக்கள் -தொடர் எண் 1967/85

கொள்ளல் இயலாது என்பது மயிலை சீனி வேங்கடசாமி யின் கருத்து.[29] சங்க இலக்கியத்தில் சில செய்திகள் என்ற நூலில், தேனாம்பேட்டையில் இருக்கும் ஆலமர்ந்தாள் கோயில் என்பதற்கு விளக்கம் கூறும் போது அவர்; ஆல் என்பதற்கு நீர்நிலை என்பதைப் பொருளாகக் காட்டுகின்றார்.

'தண்ண' ஆலத்தூர் என்பதும், அருகே 'நத்தமும் ஏரியும்' என்பதும் இதனையும், நீர் நிலையுடன் தொடர்பு படுத்துகிறது. அருகாமையில் உள்ள மடுவக்கரை என்ற இன்றும் காணப்படும் ஊரும் நீர்நிலை தொடர்பானது. எனவே நீர்நிலை காரணமாக இப் பெயர் தோற்றம் பெற்றதாகக் கொள்ளல் பொருத்தமானதாகும்.

***ஊர்ப்பெயர் - ஆலத்தூர்***

***காரணம் - நீர்நிலை***

## 13.ஆழ்வார்திருநகர்

வடபழனிக்கு அருகில் உள்ள குடியிருப்பு. திருநெல்வேலி அருகாமையில் உள்ள ஆழ்வார் திருநகரியைச் சார்ந்த மக்கள் இங்குக் குடியேறிய நிலையில் தங்கள் ஊரின் நினைவாக, இப்பகுதிக்கு இப் பெயரைச் சூட்டினர் என்பது தெரியவரும் செய்தி.

***ஊர்ப்பெயர்- ஆழ்வார் திருநகர்***

***காரணம் -சொந்த ஊர்ப்பெயர் பற்று***

## 14.ஆழ்வார்பேட்டை

மயிலாப்பூரின் மேற்குப் பகுதி குடியிருப்பு ஆழ்வார் பேட்டை. திருவல்லிக்கேணி போன்று, மயிலையின் பகுதியாக இருந்து, பின்னர் தனிப்பெயர் பெற்றுள்ளது. இவ்வூர் பேயாழ்வார் பிறந்த இடம் என்பது இப்பெயர்க்காரணமாகச் சுட்டப்படுகிறது.

மேலும் பேயாழ்வார் கோயிலுக்குரிய நிலங்கள் இருந்ததால் இப்பெயர் பெற்றது.[30] மயிலாப்பூர் அருகேயுள்ளது. முதலில் இயற்கை, பின்னர் இதயத்தின் வழியாகவும் பின்னர் ஞானஒளியின் வழியாகவும் தொடர்ந்து தேடினால் இறைவனைப் பிரத்தியட்சமாகக் கண்டு விடலாம் என்பது பொய்கையாழ்வாரும்,

---

*29. சங்க இலக்கியத்தில் சில செய்திகள் ,பக்.169,170*

*30. திருமயிலைத் திருத்தலம் ப- 60*

பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் உலகிற்கு உணர்த்திய உண்மை. இம்மூன்று ஆழ்வார்களின் சிறப்பால் அமைந்த பகுதியே ஆழ்வார் பேட்டையாகும்[31] போன்ற எண்ணங்கள் இப்பெயருக்குரிய காரணமாகச் சொல்லப்பட்டாலும், இவை எந்த அளவிற்குப் பொருத்தமானவை என்பது புலப்படவில்லை.

பேயாழ்வார் பிறந்த இடம் மயிலாப்பூர். அவர் பாடல்களில் இவ்வூர் பற்றிய குறிப்புண்டா எனக்காண, திருவல்லிக்கேணி பற்றிய தொருக் குறிப்பு அங்குக் காணக் கிடைக்கிறதே தவிர, இப்பெயர் பற்றி இல்லை. எனவே இவருக்குப்பின்னர் இவர் பிறந்த இடம் என்ற நிலையில் இப்பெயரை இப்பகுதி மக்கள் இந்த இடத்திற்குச் சூட்டியிருக்க வாய்ப்புண்டு. மேலும் பேட்டை என்ற பொதுக்கூறு இடைக்காலத்தைச் சார்ந்தது என்ற நிலையிலும் இது பொருத்தமானதாக அமைகிறது.

***ஊர்ப்பெயர்- ஆழ்வார்பேட்டை***

***காரணம் - ஆட்பெயர்***

## 15. இந்திரா நகர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் பெயரால் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பு ; அடையாற்றின் ஒரு பகுதி.

***ஊர்ப்பெயர்- இந்திரா நகர்***

***காரணம் -ஆட்பெயர்***

## 16. இராபர்ட்சன்பேட்டை

மயிலாப்பூரின் பகுதியாக இருந்த மந்தை வெளியின் தென்கிழக்கேயுள்ள பகுதி இன்று இராபர்ட்சன் பேட்டை என வழங்கப்படுகிறது.

***ஊர்ப்பெயர் - இராபர்ட்ஸன் பேட்டை***

***காரணம் - ஆட்பெயர்***

## 17. ஈக்காட்டுத் தாங்கல்

கிண்டியை அடுத்த பகுதி ஈக்காட்டுத் தாங்கல். இதனுள் தாங்கல்

31. தமிழக ஊர்களின் பெயர்க் காரணங்களும் சிறப்புகளும் பாகம் -1-ப-101

என்பது பொதுக் கூறு. தங்குதல்-வசித்தல் என்ற பொருளடிப் படையில் அமைந்தது. (வரைபடம் ஈக்காட்டுக் கிராமம் எனக் குறிப்பிடுகிறது.)காடுகள் அடர்ந்த பகுதியாகக் கிண்டி விளங்கியிருப்பதை இன்றும் நாம் உணரக் கூடுகின்ற நிலையில், இப்பகுதியும் காட்டுப் பகுதியாக இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

ஈக்காட்டுத் தாங்கல் என்ற சொல்லைப் பிரித்து நோக்க, ஈ+காடு+தாங்கல் என விரிகிறது. ஈ+காடு என்பது ஈச்சங்காடு என்பதன் மரூஉவாக இருக்க வாய்ப்பு அமைகிறது. எனவே ஈச்சங்காட்டுப் பகுதி குடியிருப்பாக மாறிய போது ,ஈக்காட்டுத் தாங்கல் என்ற பெயரைப் பெற்றிருக்கலாம்.

மயிலாப்பூரில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டு[32] கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்கல்வெட்டு விருபாக்ஷிச்வரர் கோயில் கருவறையின் வடக்குச் சுவரில் காணப்படுகிறது. வீரராஜேந்திரச் சோழர் காலத்தது.

உலகாளுடைய நாயனார்க்குக் குமாரந்தை தேவன் என்பான் இரண்டு மாடை கொடையாக அளித்ததைக் குறிக்கிறது. இவன் 'ஈக்காட்டு...சார்ந்தவன்' என்பது இக்கல்வெட்டுத் தரும் செய்தி.

மேலும் ஒரு கல்வெட்டை ஈக்காட்டுத் தாங்கல் ஊர்சார்ந்தது என்கின்றது சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் நூல்[33] இக்கல்வெட்டு ஆண்டு கி.பி. 1793.

பார்த்தசாரதி சுவாமி கோயில் மண்டபத்தின் உள்ளே மேற்கு பக்க தளத்தில் உள்ளதாக இது குறிப்பிடப்படுகிறது. மண்டபமும் அதைச் சார்ந்த 36 காணி நிலமும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதிக் கோயிலைச் சார்ந்தது என்பதை இக்கல்வெட்டு குறிக்கிறது என்ற குறிப்பு அங்கு அமைகிறது.

**ஊர்ப்பெயர்- ஈக்காட்டுத் தாங்கல்**

**காரணம் - இயற்கை**

## 18.எடப்பாளையம்

ஜார்ஜ் டவுனில் காணப்படும் குடியிருப்புப் பகுதி. பாளையம் என்ற கூறு நாயக்கர் வரவுக்குப் பின்னர் உள்ள.வரலாற்றைக் காட்டுகிறது. எடப்பாளையம் என்று சுட்டப்பட்டாலும்,

32. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் -தொடர் எண்1967/117

33. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் -தொடர் எண்1967/210

இடையர்பாளையமா? அல்லது இடைப்பாளையமா? என்பது தெளிவு பெறவில்லை.

***ஊர்ப்பெயர்- இடைப்பாளையம்***

***காரணம் -***

## 19. எம்.ஜி.ஆர். நகர்

தமிழகத்தின் முதல்வராகயிருந்த டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் பெயரில் அமைந்த குடியிருப்புப் பகுதி. கே.கே. நகரை அடுத்த பகுதி.

***ஊர்ப்பெயர்- எம்.ஜி.ஆர். நகர்***

***காரணம்- ஆட்பெயர்***

## 20. எருக்கஞ்சேரி

சென்னையின் வட பகுதியில் பெரம்பூரை, வியாசர்பாடியை அடுத்துள்ள பகுதி.

எருக்கஞ்சேரி என்ற ஊர்ப்பெயர் எருக்கு+அம்+சேரி என்று அமைகிறது.

எருக்குச் செடிகள் நிறைந்த சேரி என்பது இதன் பொருள். இயற்கைச் சார்பு பெயர். எனவே பழைமையும் வெளிப்படுகிறது.

***ஊர்ப்பெயர்- எருக்கஞ்சேரி***

***காரணம்- தாவரம்***

## 21. எழும்பூர்

ஏறக்குறைய சென்னையின் மையப்பகுதியில் அமைந்துள்ள ஊர் எழும்பூர். சென்னையின் பிற தலங்கள் போன்று, சங்கப் பாக்களில் இவ்வூர் பற்றிய எந்த ஒரு செய்தியும் இல்லை. இடைக்காலத்திய சிந்தனைகள் சில, இவ்வூரை இனங்காட்டுகின்றன. எனினும் இப்பெயரினைத் தெளிவுபடுத்துவதாக இல்லை. பிற்காலச் சான்றுகள் இப்பெயரின் மாறுபட்ட வடிவங்களுடன் இவ்வூரின் இன்றைய வளர்ச்சி நிலையையும் அறிந்து கொள்ளத் துணையாகின்றன.

எழும்பூர் பற்றிய முதற் குறிப்பாகக் கிடைக்கின்ற அப்பரின் பாடல் இதனை எழுமூர் எனச் சுட்டுகிறது.

*கொடுங்கோளூர் அஞ்சைக் களம் செங்குன்னூர்*
*கொங்கணம் குன்றியூர் குரக்குக்காவும்*
*நெடுங்களம் நன்னிலம் நெல்லிக்காவும்*
*நின்றியூர் நீடுர் நியம நல்லூர்*
*இடும்பாவனம் எழுமூர் ஏழூர் தோழூர்*
*எறும்பியூர் ஏராரும் ஏமகூடம்*
*கடம்பை இளங்கோயில் தன்னில் உள்ளும்*
*கயிலாத நாதனையே காணலாமே* - 6.70.5

அப்பரின் இப்பாடல், சிவன் கோயில் தலமாக மட்டும் எழுமூர் என்பதைக் காட்டுகின்றதே தவிர, இது எந்த எழுமூர் எந்த இடத்தில் இக்கோயில் இருந்தது என்ற கருத்து எதையும் விளக்கவில்லை. எனவே அறிஞர்களிடம் இத்தலம் குறித்து வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. தஞ்சையிலும் ஓர் எழுமூர் இருப்பதனால், இது தஞ்சை எழுமூரா? சென்னை எழுமூரா என்பதே அந்த வேறுபாடு.

எழுமூர் மட்டுமல்லாது அப்பரின் இப்பாடல் குறிப்பிடும் பிற தலங்கள் பற்றியும் வேறுபட்ட கருத்துகள் உண்டு. மேலும் இப்பாடல் சுட்டும் தலங்கள் அனைத்தும் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் உள்ளவை என்பதும் உரையாசிரியர் உரையின் மூலம் தெரிய வரும் செய்திகள்[34] அப்பர் தனக்குத் தெரிந்த, தான் கேள்வியுற்ற, தான் செல்லாத, அல்லது தான் செல்லவியலாத சிவன் கோயில் தலங்களையெல்லாம் சுட்டவேண்டும் என்ற எண்ணத்தில் இப்பாடலை யாத்துள்ளார் எனக் கருதுதல் பொருத்தமாகலாம்.எனவே அறிஞர்கள் குறிப்பிடும் இரண்டு எழுமூர் பற்றிய ஆய்வும் தேவை. சென்னை எழுமூர் பற்றி எண்ணும் போது, இடைக் காலக் கல்வெட்டுகள் எழுமூர் பற்றியும், அதனோடு சார்ந்த பகுதிகள் பற்றியும் சுட்டி இதன் பழமையைச் சாற்றுகின்றன. எனவே இந்த எழுமூர் தேவார காலத்துக்கு முன்னரேயே இருந்திருத்தலுக்குரிய வாய்ப்பு காணப்படுகின்றது.

வரலாற்றுச் சிறப்பில்லாத சிறிய ஊர்; சிவன் கோயில் பழமையானது என்றல் இயலாதது. அப்பகுதி மக்களால் எய்மூர் என்று அழைக்கப்படுகிறது என்பன தஞ்சை எழுமூர் பற்றிய் செய்திகள்[35]

எனவே இரு எழுமூர்களின் சிவன் கோயில் பற்றிய வரலாறும், இவ்வூர்களின் பிற வரலாறுகளுமே அப்பர் சுட்டியது.எந்த எழுமூர்

34. பன்னிரு திருமுறை வரலாறு-ப.911
35. நேரில் கேட்டது - திரு.சுப்பிரமணியம்,ஆய்வாளர்-உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்34

என்ற கேள்விக்கு விடையளிக்க வல்லதாக அமையும்.

தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியிட்டுள்ள சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் நூலில் எழும்பூரில் கிடைத்துள்ள ஆறு கல்வெட்டுகள் தரப்பட்டுள்ளன. இவை அனைத்தும் 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்தன. கிறிஸ்டியன் அருளய்யா பிறப்பு - இறப்பு- 1858; கிறித்துவ ஆலயம் கட்டப்பெற்றமை - 1858; செயின்ட் ஆன்ட்ரூ பாலம் கட்டப்பெற்றமை -1817; கல்லூரி பாலம் கட்டப்பெற்றமை-1829; இராணுவ அதிகாரி பாலம் கட்டப்பெற்றமை-1825; இராணுவ அதிகாரி பாலத்தைக் கட்டியவர் ஜான்வா-1823.

இச்செய்திகளைத் தவிர, எழுமூரின் பழமை பற்றியோ, அதன் பெயர் பற்றிய செய்திகளோ அவற்றுள் இல்லை. ஆயின் சென்னையைச் சார்ந்த பிற பகுதி கல்வெட்டுகளில் சில, இவ்வூர் பற்றிய சில செய்திகளைத் தருகின்றன.

திருவல்லிக்கேணியில் கிடைத்துள்ள 16 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று,

'செயங் கொண்ட சோழ மண்---த்தில் புலியூர்க் கோட்டத்தில் எழுமூர் நாட்டில் திருவல்லிக்கேணி... யசிங்க பெருமாள், எனச் செல்கின்றது[36]. இங்கு, செயங் கொண்ட சோழமண்டலம் - புழற் கோட்டம் - எழுமூர்நாடு- திருவல்லிக்கேணி என்ற நாட்டுப் பிரிவுகள் தெளிவாகின்றன. எழுமூர் நாடு என்ற தலைமையின் கீழ் இருந்த நாட்டுப் பிரிவுகளுள் திருவல்லிக்கேணியும் ஒன்று என்பதும் புலப்படுகிறது. இங்கு இரண்டு செய்திகள் சுட்டத் தக்கனவாக அமைகின்றன.

1.எழுமூர் நாடு; அதன் கீழ் பல ஊர்கள் இருந்துள்ளன. எனவே அதன் பழமை அதன் பெருமை அல்லது தனித்துவம் பற்றிய எண்ணம் இங்குக் கருதத் தக்கது.

2.முதலில் மயிலையின் ஒரு பகுதியாக விளங்கியது திருவல்லிக்கேணி. பின்னர் அதனின்றும் பிரிந்து தனிக் குடியிருப்பு ஆகியது என்பது மயிலையின், திருவல்லிக்கேணியின் வரலாறுகள் தரும் உண்மை. இங்கு 16 ஆம் நூற்றாண்டில் திருவல்லிக்கேணி எழுமூரின் கீழ் அடங்கிய ஊரினுள் ஒன்றாக அமைகிறது. எனவே இங்கு எழுமூரின் கீழ் அடங்கிய பல கிராமங்கள் இருந்தள்ளன என்ற உண்மை தெரிய வருகிறது. 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரேயே ஓரளவுக்கு இப்பகுதியில் உள்ள ஊர்கள் ஆட்சி

36. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் தொடர் எண் 1967/79

நலனுக்காகப் பிரிக்கப்பட்டு இருந்தன.

எழுமூர் நாட்டில் அடங்கிய ஊராகக் கி.பி.16-க்கு முன்னரேயே திருவல்லிக்கேணியிருந்திருக்கலாம் என்ற எண்ணத்தைத் தருவது 1309 ஆம் ஆண்டைச் சார்ந்த திருவல்லிக்கேணியில் கிடைத்துள்ள இன்னொரு கல்வெட்டுமாகும்.

'புலியூர்க் கோட்டத்தில் எழுமூர் நாட்டில் தெள்ளிய சிங்க நாயனார் திருவிடையாட்டமான புதுப்பாக்கத்தில்' என்று செய்தி தொடர்கிறது[37] .13 ஆம் நூற்றாண்டில் புலியூர்க் கோட்டத்தின் பகுதியாக எழுமூர் நாடு திகழ்ந்துள்ளது. இதனுள், திருவல்லிக்கேணியுள் உறையும் தெள்ளிய சிங்க பெருமாளுக்கு உரியதாகப் புதுப்பாக்கம் இருந்துள்ளது என்பதைக் காண, திரு வல்லிக்கேணியும் எழுமூரின் பகுதியாக இருந்திருக்க வாய்ப்பு அமைகிறது.

புதுப்பாக்கம் என்ற கிராமம் தெள்ளிய சிங்க பெருமாளுக்கு உரியதாக இருந்ததை மேலும் ஒரு கல்வெட்டு தருகிறது[38].

திருஒற்றியூர்க் கோயிலில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் சிலவும் எழுமூர் பற்றிய சிந்தனையைப் பெற உதவுகின்றன. இங்கு, எழுமூா துடர் முனை நாடு என்றக் குறிப்புக் கிடைக்கிறது.

'எழுமூர்த் துடர் முனை நாட்டுக் காட்டுப்பாக்கம்'[39]

'ஜயங்கொண்ட சோழமண்டலத்து விக்கிரம சோழ வளநாடான புழற்கோட்டத்து எழுமூர் துடர் முனை நாட்டுச் சேற்றுப் பேடு'[40]

இவ்விரண்டு கல்வெட்டுகளும் முறையே விசய கண்ட கோபால தேவர், அரங்க நாதயாதவராயர் காலத்தில் உள்ள கல்வெட்டுகள். காலம் தெளிவாகத் தெரியாவிடினும் பிற்காலத்தன என்பது தெரிகிறது.

இரண்டு கல்வெட்டுகளிலும் எழுமூர்துடர் முனை நாட்டின் கீழ் இருந்த இரண்டு ஊர்கள் குறிப்பிடப்படுகின்றன. இச்சூழலில் மேலும் இரு கல்வெட்டுகள் இங்கே குறிப்பிடற்குரியன.

காஞ்சியும் தஞ்சையும் கொண்ட கன்னர தேவனின் 28 ஆவது கல்வெட்டு புலியூர்க் கோட்டத்துத் துடர் முனை நாட்டுச்

---

*37. சென்னை மாநகர் கல்வெட்டுகள் தொடர் எண் 1967/81* b

*38. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்-தொடர் எண் 1967/81சி*

*39. திருஅருட்பா மூலமும் உரையும் -பக். 236,237*

*40. திரு அருட்பா மூலமும் உரையும்- ப- 237*

சேற்றுப்பேடு,[41] என்றும், பார்த்திவேந்திரவர்மனின் கல்வெட்டு, புலியூர்க் கோட்டத்துத் துடைமுனை நாட்டுத் திருவலிதாயில்[42], என்றும் சுட்டுகின்றன.

எனவே காலம் தெளிவாகத் தெரியவில்லை எனினும், சேற்றுப்பேடு, காட்டுப்பாக்கம், திருவலிதாயில் மூன்றும் எழுமூர் துடர் முனை நாட்டினுள் அடங்கிய பகுதிகள் என்பது புலப்படுகின்றது.

இக்கல்வெட்டுக் குறிப்புகள் எழுமூர் நாடு, எழுமூர் துடர்முனை நாடு, துடைமுனை நாடு என்பன ஒன்றா வேறா என்ற ஐயத்தை எழுப்புகின்றன. வேறு வேறு என்ற எண்ணத்தைச் செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு நூல் தருகிறது[43]. மேலும் ஒரு கல்வெட்டுக் குறிப்பும் இக்கருத்துக்கு அரண் ஆகிறது.

'புலியூர்க் கோட்டத்தில் எழுமூர் நாட்டில் தெள்ளிய சிங்க நாயனார் திருவிடையாட்டமான புதுப்பாக்கம், என்ற செய்தியைத் தந்த அதே கல்வெட்டு 'இம்மண்டலத்துப் புழற் கோட்டமான விக்ரம சோழ வளநாட்டுத் துடர் முள்ளி அயன் புரத்து,' எனவும் குறிப்பிடுகிறது[44]. எனவே வேறுவேறு என்ற உணர்வு அமைகிறது. ஆயின் புழற்கோட்டம் அல்லது புலியூர்க் கோட்டத்தின் கீழ் நாடு என்ற பிரிவு இருந்துள்ளதே தவிர, துடர் முனை நாடு என்ற பிரிவு இருந்ததாகத் தெரியவில்லை[45]. துடர் முனை, துடர்முள்ளி, துடைமுனை போன்ற வேறுபாடுகளும் சிக்கலையே தருவன. மேலும் கிடைக்கும் தெளிவான சான்றுகளே இச்சிக்கலுக்கு விடை தரலாம் என்ற நிலையே இங்குச் சுட்டக் கூடியதாக அமைகிறது.

எனவே ஆங்கிலேயரின் வருகையின் போதே, எழுமூர் சிறப்புப் பெற்றதொரு ஊராகத் திகழ்ந்திருக்கலாம் என்பது பொருத்தமானது.

ஆங்கிலேயரின் வரவுக்குப் பின்னர், இவ்வூர் மேலும் சிறப்புப் பெறத் தொடங்கிற்று. 1639 முதல் கோட்டையில் தங்கள் இருப்பிடத்தைத் தக்க வைத்துக் கொண்ட அவர்கள், பின்னர் கோட்டையின் விரிவினை விரும்பி, திருவல்லிக்கேணியை முதலில் பெற்றனர். தொடர்ந்து எழுமூரைப் பெற முயற்சித்ததன்

41. திருஅருட்பா மூலமும் உரையும் - ப. 230
42. திருஅருட்பா மூலமும் உரையும் - ப.240.
43. செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு - பக் 11,12.
44. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் - தொடர் எண் 1967/81 b
45. ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் ப.54

விளைவு 1693-இல் எழுமூரைப் பெற்றனர்.[46] திருவல்லிக் கேணியுடன் எழுமூர், புரசைவாக்கம், தண்டையார்பேட்டை அப்போது அவர்களுக்குக் கிடைத்தன. இவை நான்கும் The Four old Townsஎன்று அப்போது அவர்களால் சுட்டப்பட்டன. தங்கள் பகுதியை விரிவுபடுத்தலுடன், பாதுகாப்பும் கருதிய அவர்களின் எண்ணம் இவற்றை இணைத்தலில் வெளிப்படுகிறது. கோட்டையை சுற்றிலும் உள்ள நான்கு ஊர்களாக அவை அமைகின்றன. எழுமூரை வாங்கிய பின்னர், எதிரிகளைத் தடுப்பதற்கு விழிப்பறை கட்ட மிகத் தகுதியுள்ள மேட்டிடம் எழும்பூரில் அமைந்திருப்பதாகக் கும்பினி அதிகாரி தன் அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்.

பின்னர் இங்கு இருந்த சத்திரம் காவல் கூடம் ஆக்கப்பட்டது.தொடர்ந்து இங்கு ஒரு கோட்டை உருவாகியது என்ற கருத்து, இங்குச் சுட்டுதற்குரியது.[47]

எழுமூர் இன்று எழும்பூர் என வழங்கி வருகிறது. ஆங்கிலேயர் எழும்பூரைப் பற்றி மிகுதியாக நினைத்தார்கள் என்பதை அதன் பல்வேறு பெயர் வடிவங்களும் தெளிவுபடுத்தும்.[48] (Eghumur, Egumbur,Elambur ) எனினும் இவை பெயர் ஆய்வுக்குத் துணையாக இல்லை. இதனை, ஜெர்மானியர் எக்கிமோர் என்று வழங்கினர்.

இப்பெயருக்குரியதாக இது வரையிலும் அறிஞர் சிலரால் சில விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.[49]

1. இங்குள்ள ஸ்ரீலட்சுமி நாராயணனை அத்திரி, பரத்வாஜர், கௌதமர், காசியபர், கௌசிகர், வசிஷ்டர், விசுவாமித்திரர் என்ற ஏழு முனிவர்கள் பூசை செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. ஏழு முனிவர்கள் பூசித்ததால், எழுமூர் என வழங்கி, காலப்போக்கில் எழும்பூர் என்றாகியது.இக்காரணம் பல ஊர்ப் பெயர்களுக்கும் சுட்டப்படும் புராணம் தொடர்பான காரணமேயன்றி, உண்மையன்று.

2. ஏழு ஊர்களால் ஆனது எழும்பூர்

இக்கருத்துக்கும் அடிப்படை ஏழ் என்ற சொல்லே. எழுமூரின் கீழ் ஊர்கள் இருந்தன. எழுமூர் நாடு தலைமை பெற்றிருந்த நிலை இக்கருத்தினைச் சுட்ட அடிப்படை யாகின்றதே தவிர, சரியான

---

46. சென்னை மாநகர் ப- 58
47. வைப்புத் தலம் - எழுமூர் ( எழும்பூர்) ப.18
48. The Madras Tercentanary Commemoration Volume -p-136.
49 வைப்புத் தலம் -எழுமூர் (எழும்பூர்) பக்-16,17,18

விளக்கம் இல்லை. சுட்டப்படும் ஏழு ஊர்களும் வேறுபடுகின்றன.

ஏழூர்களுள் ஒன்றாகச் சுட்டப்படும் சிந்தாதிரி பேட்டை போன்றன அண்மையில் உருவாக்கப்பட்ட குடியிருப்புகள். இவற்றைப் பழங்காலத்திலேயே இருந்ததாகத் தெரியவரும் எழுமூர் விளக்கத்திற்குத் துணை கோடல் அறிவியல் ஆய்வின் பாற்பட்டதன்று.எனவே எழுமூர் என்ற ஊர்ப்பெயர்க் காரணம் தெரிந்து கொள்ள இச்சொல்லையும், இதன் சூழலையும், காலத்தையும் ஆராய்தல் ஏற்புடைத்து.

தன்னுடைய 'வைப்புத் தலம்- எழுமூர்' என்ற கட்டுரையில் திரு.பொன்னுசாமி,

எழுதல்- எழுதுதல், எழுந்திருத்தல், தொடருதல், தோன்றுதல், புறப்படுதல், உயர்தல், பெயர்தல், மிகுதல், வளர்தல், உயிர் பெற்றுப் பரவுதல் என்பவற்றைக் காட்டி, உயரமான இடம் என்ற கருத்தில் எழுமூர் பெயர் அமைந்திருக்கலாம் என்பது முதன்மை பொருத்தமானதாகலாம் என்கின்றார். இதற்கு இவர் அருகில் உள்ள பெரியமேடு, மேட்டுப்பாளையம் போன்ற பெயர்களையும் சான்று காட்டுகின்றார்(ப.18). இக்கருத்து ஏற்புடையதா என்பதை ஆராயலாம்.

தமிழரின் ஊர்ப் பெயர் வரலாறு தமிழரிடம் ஊர்ப்பெயர் இடும் முறையிலும் வரலாறு இருந்ததைக் காட்டுகிறது. முதலில் இயற்கையும், பின்னர் செயற்கையும், தொடர்ந்து இறைச் செல்வாக்கும், அடுத்து மன்னர் போன்று ஆட்சியாளரும், தொடர்ந்து தனிமனிதப் பெயர்களும் மிகுதியாக ஊர்ப்பெயர்களில் செல்வாக்குப் பெற்றதை இவ்வரலாறு இனம் காட்டுகிறது.

இடைக்காலக் கல்வெட்டுகளில் இடம் பெற்ற எழும்பூர் அப்பர் பாடலிலும் இடம் பெற்றது. எனவே அவருக்கு முன்னரேயே இப்பெயர் இருந்ததை அறிய முடிகின்றது. எனவே இதன் பழமை தெளிவுறுகிறது. எனவே இயற்கைப் பெயராக இது இருக்கவும் வாய்ப்பு அமைகிறது.

சென்னை மாநகர ஊர்ப் பெயர்களில் பெரியமேடு, மேடவாக்கம் என்ற பெயர்களுடன் நரிமேடும் எண்ணத் தக்கது. எனினும் பெயர்களில் காணப்படும் மேடு இப்பகுதிகளில் இன்று இல்லை. இது போன்று எழுமூருக்கும் மேடு காரணமாக இருந்திருக்கலாம், எனினும் பிற பெயர்களில் மேட்டைக் குறிக்க மேடு என்பதே அமைய, இப்பெயருக்கு மட்டும் எழு என்பது ஏன் அமைந்தது என்பது ஓர் ஐயம். எழு ஊர் எழுகின்ற ஊர்; புதியதாக

எழுந்த ஊர் என்ற நிலையில் புத்தூர் போன்று அமைந்திருக் கலாமோ என்ற எண்ணமும் எழுகிறது. அப்படி எனில் புத்தூர் என்ற பெயரன்றி எழுமூர் என்ற பெயர் அமைந்ததற்கு என்ன காரணம் என்ற வினா எழும். எனவே இவையிரண்டில் எந்தப் பொருள் மேலும் தெளிவுக்கு வழி வகுக்கிறது என்று நோக்க, ஆங்கிலேயரின், மேலே சுட்டப்பட்ட குறிப்பு ஒன்று துணையாகிறது..

'எதிரிகளைத் தடுப்பதற்கு விழிப்பறை கட்ட மிகத் தகுதியுள்ள மேட்டிடம் எழும்பூரில் அமைந்திருப்பதாகக் கும்பினி அதிகாரி தன் அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்.'

எனவே எழும்பூரில் மேட்டுப் பகுதிகள் இருந்ததாகத் தெரிய வரும் நிலையில் மேட்டுப் பகுதியில் உருவாகிய ஊர் என்ற பொருளில் எழுமூர் என்றாயிற்று என்ற திரு. பொன்னுசாமியின் கருத்துச் சரியாக அமைய வாய்ப்புண்டு. பின்னர் மக்கள் வழக்கில் எழும்பூர் என்றாயிற்று என்றல் பொருத்தமானது.

மேலும் 'எழுமூர் துடர் முனை நாடு' என்று கல்வெட்டுச் சுட்டும் பெயரும் இப்பெயர்க் காரணத்தைப் பொருத்தம் ஆக்குகிறது.

தமிழ் லெக்ஸிகன் துடர் என்ற சொல்லுக்குத் தொடர் என்ற பொருளையும், துடரி என்பதற்குச் செடிவகை என்பதையும் தருகிறது.[50] முனை என்பதற்குக் கோடி, உச்சி என்பன பொருள்.

துடரி என்ற செடிவகையினைச் சங்க இலக்கியம் தெரிவிக்கிறது. புறநானூறு 177 ஆம் பாடலில் 'தீம்புளிக் களாவொடு துடரிமுனையின்' என்றதொரு பாடலடி வருகிறது. 'துடரியை வெறுத்து' என்று இதற்குப் பொருள் அமைகிறது.

மேலும் இச்செடி மலிந்த இடமாகக் கான்யாற்றுப் பகுதி காட்டப்படுகின்றது. எனவே காட்டுப் பகுதி, துடரிச் செடி மலிந்த இடமாக இப்பகுதி இருக்க வாய்ப்பு அமைகிறது. அடுத்து முனை என்பது உச்சி, மலை என்ற பொருளில்[51], இப்பகுதியில் உள்ள மலை பற்றித் தெரிய இயலாத நிலையிருப்பினும், இது மேட்டைக் குறித்திருக்கலாமோ எனவே எண்ணத் தோன்றுகிறது, எனவே எழுமூர் துடர் முனை நாடு என்ற பொருளில் இப்பகுதியை நோக்க, துடரிச் செடி நிறைந்த மேட்டுப் பகுதி, காட்டுப் பகுதியாக எழுமூர் திகழ்ந்திருக்க வாய்ப்புண்டு. இங்குக் காடுகள் மலிந்து

---

50 தமிழ் லெக்ஸிகன், தொகுதி-4, ப.2087,

51. துடரி- திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள ஒருமலை- தமிழ் லெக்ஸிகன் தொகுதி-4, ப.1958

காணப்பட்டன என்பதற்கு எழுமூர்த் துடர் முனை நாட்டுக் காட்டுப்பாக்கம் என்ற கல்வெட்டுத் தொடர் தரும் ஊர்ப் பெயரைச் சான்று ஆக்கலாம். மட்டுமல்லாமல் பொதுவாகச் சென்னைப் பகுதியில் காடுகள் மிகுந்திருந்தன என்பதைத் தொண்டை நாடு கொண்டும் காட்டலாம். ஜெர்மானியர் குறிப்பு சுட்டும் எண்ணம் கொண்டும் விளக்கம் அளிக்கலாம்.

மேற்கண்ட செய்திகளின் அடிப்படையில் எழும்பூர் ஊர்ப்பெயரை நோக்க, எழுமூர் மேடான பகுதியில் பண்டைக் காலத்தில் மக்கள் அமைத்துக் கொண்ட குடியிருப்பு என்பது பொருத்தமாக அமைகிறது.

***ஊர்ப்பெயர்- எழுமூர்***

***காரணம் - மேடு;மேட்டுப் பகுதியில் எழுந்த குடியிருப்பு***

## 22.எஸ்.கே. நகர்

சீதக்காதி நகர் என்பதன் சுருக்கம். பாரிமுனையின் அருகேயுள்ள பகுதி இன்று சீதக்காதி நகர் எனச்சுட்டப்படுகிறது. சீதக்காதி என்ற வள்ளலின் பெயரினை நினைவூட்டும் பெயர் இது.

***ஊர்ப்பெயர் - சீதக்காதி நகர்***

***காரணம் - ஆட்பெயர்***

## 23. ஏழு கிணறு

ஜார்ஜ் டவுனில் ஒரு பகுதி; வடசென்னையில் அமைந்துள்ள குடியிருப்பு. கோட்டைக்காக அரசு உருவாக்கிய முதல் நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் தோண்டப்பட்ட கிணறுகளின் அடிப்படையில் இப்பெயர் அமைந்தது.[52] ஆயின் 10 கிணறுகள் இங்கு உள்ளன என்று தெரிகிறது. முதலில் தோண்டப்பட்டவை ஏழு கிணறுகளாக இருக்கலாம். பின்னர் பிற கிணறுகள்

---

52.Turning left at Clive Battery and heading along old Jail Road you are close to seven wells (almost opposite Stanley Hospital) up till the 17th century the city's primary source of water supply, seven Government water works a scheme executed it 1772 was the citys first organised water supply,though initially it was meant only for the fort. The wells ten, not seven in number supplied 140,000 gallons a day and showed the sign of exhastion even a century later when Red hills reservoir become the city's main source of water supply. The wells do not exist today. but the site retains its connection with civic amenities being the home of a pumping station. Madras Discovered p. 200

தோண்டப்பட்டு இருக்கலாமோ எனக் கருதத் தோன்றுகிறது.

*ஊர்ப் பெயர்: ஏழு கிணறு*

*காரணம்: நீர்நிலை (கிணறு)*

## 24.ஐ.சி.எப். காலனி

பெரம்பூரைச் சார்ந்த பகுதி.ரயில் பெட்டித் தொழிற்சாலை ஏற்படுத்திய பின்பு அதைச் சார்ந்து இங்கு ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பு. Integral Coach Factory Colony சுருக்கமாக ஐ.சி.எப். காலனி என்று அழைக்கப்படுகிறது. அண்மையில் ஏற்பட்ட குடியிருப்பு. தொழில் வளமேம்பாடு குடியிருப்புகளை உருவாக்க வல்லது என்பதற்குச் சான்றாக இக்குடியிருப்பும் அமைகிறது.

*ஊர்ப்பெயர் - ஐ.சி.எப். காலனி*

*காரணம் - தொழில் தொடர்பு (ரயில் பெட்டித் தொழிற்சாலை)*

## 25. ஓட்டேரி

புரசை வாக்கத்தின் அண்மையில் உள்ள குடியிருப்பு. ஓட்டு+ஏரி ஓட்டேரியாயிற்று. ஏரி நீர்நிலையைக் குறிக்க , பகுதியின் விளக்கம் புலப்படவில்லை.

*ஊர்ப்பெயர்- ஓட்டேரி*

*காரணம் -நீர்நிலை*

## 26.கண்ணம்மாபேட்டை

மாம்பலத்தின் அருகில் உள்ள குடியிருப்பு.

*ஊர்ப்பெயர் - கண்ணம்மா பேட்டை*

*காரணம் - ஆட்பெயர்*

## 27. கணேசபுரம்

ஆதம்பாக்கத்தை அடுத்துள்ள குடியிருப்பு. ஆட்பெயரா இறைப் பெயரா என்பது புலப்படவில்லை.

*ஊர்ப்பெயர்- கணேசபுரம்*

*காரணம் - ஆட்பெயர் அல்லது இறைப்பெயர்*

## 28. கம்பர் நகர்

கவியரசர் கம்பர் நினைவுக் குடியிருப்பு. பெரம்பூர் அருகேயுள்ளது.

***ஊர்ப்பெயர்- கம்பர் நகர்***

***காரணம் - ஆட்பெயர்***

## 29. கன்னிகாபுரம்

வடசென்னையில் கொத்தவால் சாவடிச் சந்தையில் அமைந்த கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோயில் காரணமாக இப்பகுதி கன்னிகா புரம் என்ற பெயரினைப் பெற்றுள்ளது. இக்கோயிலில் உள்ள கல்வெட்டில் இத்திருக்கோயில் கி.பி. 1769 இல் கட்டப்பெற்றது என்ற குறிப்புள்ளது[53]. எனவே இப்பெயரும் அதன் பின்னர் இக்குடியிருப்பு பெற்ற பெயராக இருக்க வேண்டும். அதற்கு முன் இவ்விடம் கோமுட்டித் தோட்டம் என்றும் கொத்தவாற்சந்தை என்றும் காய்கறித்தோட்டம் என்றும் பெயர் பெற்றிருந்தது[54] என்பதையும் நோக்க, கொத்தவாற் சந்தையின் ஒரு பகுதியில் இக்கோயிலை அமைத்து மக்கள் வழிபடத் தொடங்கினர். பின்னர் இந்தக் கோயில் சூழ்ந்த இடம் கன்னிகாபுரம் எனப்பெயர் பெற்றது என்பது தெளிவாகிறது.

***ஊர்ப்பெயர் - கன்னிகாபுரம்***

***காரணம் - இறைப்பெயர்***

## 30. கஸ்தூரிபாய் நகர்

இந்தியாவின் தந்தை மோகன் தாஸ் கரம்சந்த் காந்தியின் மனைவிபெயரால் அண்மையில் அடையாறில் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பு.

***ஊர்ப்பெயர்- கஸ்தூரி பாய் நகர்***

***காரணம்-ஆட்பெயர்***

## 31. காந்தி நகர்

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் பெயரால் அடையாறில்

---

53 சென்னை மாவட்டக் கோயில் வரலாறு. ப.209

54. சென்னை மாவட்டக் கோயில் வரலாறு. ப- 209

அண்மையில் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பு. கஸ்தூரிபாய் நகருக்கு மறுபக்கத்தில் அமைந்துள்ளது.

**ஊர்ப்பெயர்- காந்தி நகர்**

**காரணம்- ஆட்பெயர்**

## 32. காமராஜ் நகர்

தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த திரு.காமராஜ் பெயரால் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பு.

எம்.ஜி.ஆர். நகரின் அருகாமையில் உள்ள குடியிருப்பு.

**ஊர்ப்பெயர்- காமராஜ் நகர்**

**காரணம்- ஆட்பெயர்**

## 33. கான்றன் சிமித் நகர்

கான்றன் சிமித் என்பவரின் பெயரால் சூளைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு குடியிருப்புப் பகுதி.

**ஊர்ப் பெயர்- கான்றன் சிமித் நகர்**

**காரணம்- ஆட்பெயர்**

## 34.கிண்டி

சென்னையில் உள்ள குடியிருப்புகளில் தெளிவு தராத ஊர்ப் பெயர்களுள் இதுவும் ஒன்று. கிண்டி என்ற சொல் தனிச் சொல் நிலையில் இவ்வூருக்கு அமைந்ததா? அல்லது இது மரூஉப் பெயரா என்பதும் புலனாக்வில்லை. அறிஞர்கள் கருத்துகள் எதுவும் இது குறித்து மிகுதியாக இல்லை. ஒரு சில எண்ணங்களே இது குறித்து அமைவன[55] .ஆயினும் அவையும் எந்த விதத் தெளிவையும்

---

55.Another circumstance which favoured the growth of the Mount Road as a busy centre of British activity was the rise of the Government house at Guindy in the last few years of the 17 th century. The real meaning of the term Guindy is rather obscure. It has been translated as a basin or depresstion and it was apparently a region of gardens in those times. It was Govermer Thomas Pitt (1698-1709) that was responsible for the growth of Government House at Guindy. The Madras Tercentenary Commemoration Volume. p. 123-124.

All that capital messuage or dweleing house with the outhouses, stables, buildings and erections situate at Guindymoade near the race stand and St. Thomas Mount and called or known by the name of Guindy Lodge and also that piece or parcel of ground situate lying and being at Guindymode aforesaid.

The Madras Terecntenary commemoration volume p- 19.

அளிக்கவில்லை. இது கிண்டி மோடு என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

**ஊர்ப்பெயர் - கிண்டிமோடு**

**காரணம்-**

## 35.கிருஷ்ணாம் பேட்டை

சேப்பாக்கம் அருகில் உள்ள குடியிருப்பு. ஆட்பெயராக இருக்கலாம்.

**ஊர்ப் பெயர்- கிருஷ்ணாம்பேட்டை**

**காரணம்- ஆட்பெயர்**

## 36. கிரேஸ்கார்டன்

வண்ணாரப்பேட்டையின் அருகேயுள்ள குடியிருப்பு. கிரேஸ்' என்பவரின் தோட்டம் காரணமாக இப்பெயர் அமைந்திருக்கலாம்.

**ஊர்ப்பெயர்- கிரேஸ் தோட்டம்**

**காரணம்- ஆட்பெயர்**

## 37. கீழ்ப்பாக்கம்

சேத்துப்பட்டின் அருகாமைக் குடியிருப்பு. நிலத்தின் தன்மையால் இப்பெயர் பெற்றது.

**ஊர்ப்பெயர்- கீழ்ப்பாக்கம்**

**காரணம்- நிலத்தின் பள்ளமான அமைப்பு**

## 38. கீழ்ப்பாக் கார்டன்

கீழ்ப்பாக்கத்தின் ஒரு பகுதி இன்று கீழ்ப்பாக் கார்டன் என்று அழைக்கப்படுகிறது. கீழ்ப்பாக்கம் விரிவு படுத்தப்பட்ட போது அங்குள்ள தோட்டம் காரணமாக இப்பெயர் பெற்றிருக்கலாம்.

**ஊர்ப்பெயர்- கீழ்ப்பாக்கம் தோட்டம்**

**காரணம்- விரிவாக்கம்**

## 39. குயப்பேட்டை

மயிலாப்பூரின் வடபகுதி. குயவர்கள் வாழ்ந்த குடியிருப்பு காரணமாக இப்பெயர் பெற்றது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பதிவாளராக இருந்த சச்சிதானந்தம் பிள்ளை என்பவர் இவ்வூரின் பெயரைத் திருநீலகண்டபுரம் என்று மாற்றியுள்ளார் என்பது செவிவழிச் செய்தி. எனினும் குயப்பேட்டை என்ற பெயரே இன்று வரையிலும் நிலைத்துள்ளது.

***ஊர்ப்பெயர்- குயவர்பேட்டை***

***காரணம்- குயவர்கள் வாழ்ந்த ஊர்.***

## 40. கெல்லிஸ்

புரசைவாக்கத்திற்கு அருகில் உள்ள குடியிருப்பு. இதன் பெயர் பிற மொழிச் சார்பு காட்டுகிறது. இன்று கிள்ளியூர் என இது மாற்றப்பட்டுள்ளது. கிள்ளியூரே இதன் பழைய பெயர் எனவும் சுட்டப்படுகிறது.

***ஊர்ப் பெயர் - கெல்லிஸ், கிள்ளியூர்***

***காரணம்: ஆட் பெயர்***

## 41. கே.கே.நகர்

தமிழக முதலமைச்சராகத் திகழ்ந்த கலைஞர் பெயரால் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பு. இன்று நகரின் மிகப் பெரிய குடியிருப்புப் பகுதி. மாம்பலத்தின் அண்மையில் இருக்கும் இப்பகுதி தவிர, வடசென்னையிலும் ஒரு கருணாநிதி நகர் உண்டு.

***ஊர்ப்பெயர்-கலைஞர் கருணாநிதி நகர்***

***காரணம்- ஆட்பெயர்***

## 42. கொடுங்கையூர்

வியாசர்பாடி அருகே அமைந்துள்ள குடியிருப்பு.-வளைந்த நில் அமைப்பு காரணமாகக் 'கொடும்' என்ற பெயரை இவ்வூர் பெற்றதா என நோக்கலாம். எனினும் இதன் முதல் பெயர் கொடுங்கையூரா? அல்லது பிறவா என்பது தெளிவு பெறவில்லை.

**ஊர்ப்பெயர்- கொடுங்கையூர்**

**காரணம்-**

## 43. கொருக்குப்பேட்டை

வடசென்னையில் தங்கசாலை அருகாமையில் இருக்கும் குடியிருப்பு. இதன் வரலாறு ஏதும் தெரியவில்லை. இங்குச் சீனிவாசப் பெருமாள் கோயில் ஒன்று இருக்கிறது. இது ஒரு சிறிய கோயில். சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் நூல் கந்த சாமிக் கோயில் கருவறையின் தெற்குச் சுவரில் ஒரு சிலைக்குக் கீழ் இருக்கும் கல்வெட்டு பற்றிய எண்ணத்தைத் தருகிறது[56]. சடையாண்டி என்பார் கோயில் மண்டபத்துக்குக் கருங்கல் தளவரிசை செய்ததைக் குறிக்கிறது இக்கல்வெட்டு. பிற ஊர்ப்பெயர் குறித்த செய்திகள் ஏதும் புலப்படவில்லை.

இப்பெயரை நோக்க, குறுக்குப்பேட்டை என்று இந்தப் பகுதியின் அமைப்பு காரணமாக இப்பெயர் வழங்கப்பட்டு வந்து, பின்னர் வழக்கில் மருவி, கொருக்குப்பேட்டை ஆயிற்றோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

**ஊர்ப்பெயர்- குறுக்குப்பேட்டை**

**காரணம்- அமைப்பு**

## 44. கொளத்தூர்

பெரம்பூரின் அண்மைக் குடியிருப்பு. குளம் காரணமாகப் பெயர் பெற்ற ஊர்.

**ஊர்ப்பெயர் - குளத்தூர்**

**காரணம் - நீர்நிலை**

## 45. கோட்டூர்

அடையாறின் மேற்கேயுள்ளது கோட்டூர். கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மயிலாப்பூர் கல்வெட்டுகள் சில, கோட்டூர் பற்றிச் சுட்டுகின்றன. எனவே கி.பி. 13 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரேயே இங்கு மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது.

---

56. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்- தொடர் எண் 1967/172

இதன் பெயர் இதனை மேலும் பழங்காலத்துக்குக் கொண்டு செல்கின்றது.

கல்வெட்டுகளில் இது 'கோட்டூர்' எனவும் 'கோட்டூர் நாடு' எனவும் குறிப்பிடப்படுகிறது. இலக்கியம் போன்ற பிற வரலாற்று மூலங்கள் இது குறித்துத் தெரியவில்லை எனினும் கோட்டூர்த் தொடர்பாகத் தெரியவரும் 6 கல்வெட்டுக் குறிப்புகளும் சில செய்திகளை இனங்காணச் செய்கின்றன[57]. இந்த ஆறு கல்வெட்டுகளும் திருவல்லிக்கேணியிலும், மயிலாப்பூரிலும் கிடைப்பனவே அன்றி கோட்டூரில் எதுவும் கிடைக்கவில்லை.

கி.பி. 13 முதல் கி.பி. 15 வரையுள்ள காலஞ்சார்ந்த இக்கல்வெட்டுகளில் நின்றும் கோட்டூர் நாடு, எழும்பூர் போன்ற ஒரு நாட்டுப் பிரிவு என்பதும் அதன் கீழ் பல ஊர்கள் இருந்திருக்கலாம் என்பதும் புலனாகின்றன.

ஜெயங்கொண்ட சோழமண்டலத்தின் பிரிவான புலியூர்க் கோட்டத்துள் அடங்கிய நாட்டுப் பிரிவு இது என்பதை இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கோட்டூர் நாட்டுள் அடங்கிய ஊராகத் திருவான்மியூர் இருந்துள்ளதும் தெரிய வருகிறது.

எனவே இது பழங்காலத்திலேயே ஓரளவிற்குப் பெரிய ஊராக விளக்கியுள்ளது தெரியவருகிறது. இங்குள்ள மாரிச் செட்டித் தெருவில் வெங்கடேச பெருமாள் கோவில் இருக்கிறது. ஆயின், இக்கோயில் பற்றிய குறிப்பு எதனையும் இக்கல்வெட்டுகளின் வழியே உணர முடியவில்லை. எனினும் இங்குச் சண்டேசுவரர்க்குக் கோயில் இருந்ததோ என்றதொரு எண்ணம், கோட்டூர் தொடர்பான இரண்டு கல்வெட்டுகள் மூலமாகத் தெரியவருகிறது.

....கோட்டூர் நாட்டு எங்கள் காணி ஆதி சண்டே சுவர தேவற்கு விலை ஆவது ஆகவும் -1967/60

.....கோட்டூர் நாட்டு சண்டேசுவர நாயனார்க்கு- 1967/169

இக்கோட்டூரின் பகுதியாக இருந்து இன்று கோட்டூர் புரம் என தனித்த குடியிருப்பாகச் சுட்டப்படும் பகுதி ஆற்காட்டு நவாப் புக்கு உரிமையான பகுதியாக இருந்தது. இன்று இப்பகுதியில்

---

57. சென்னை மாநகர் கல்வெட்டுகள்- தொடர் எண் 1967/40, 1967/60, 1967/80, 1967/81, 1967/169, 1967/115

செட்டிநாட்டு அரசர் வீடு உள்ளது[58]

மேற்குறித்த சான்றுகள் இப்பெயராய்விற்குத் துணை புரியவில்லை எனினும் இதன் பழமையைத் தெரிவிப்பன என்பது உண்மை. எனவே கி.பி. 12 அளவிலான கல்வெட்டுகள் இதன் காலத்தை மேலும் முன்னர் கொண்டு செல்லுகின்றன. இந்நிலையில் இதன்பழமையுடன், இருப்பிடம் கொண்டும் இதன் பெயரை ஆராயலாம்.

கோட்டூர் - கோடு + ஊர்

கோடு என்பதற்குரிய பல பொருட்களுள் உச்சி, வளைவு என்பனவும் அடங்கும். இங்கு உச்சி என்ற பெயரில் ஆராயும் போது பொருள் எதுவும் விளங்கவில்லை. ஆயின் வளைவு என்பதைக் கொண்டு காண இதன் சூழல் தெளிவாகிறது.

அடையாறு என்ற ஆறு சைதாப்பேட்டையிலிருந்து கோட்டூர் வழியாக அடையாற்றை அடைகிறது. இங்குக் கடலில் கலக்கிற இந்த ஆறு, இப்பகுதியில் வரும்போது, இந்தப் பகுதியின் நிலத்தன்மைக்கு ஏற்ப வளைந்து பின்னர் நேராகச் செல்கிறது.

எனவே இது ஆறு வளைந்து செல்லுமிடத்தில், ஆற்றங்கரையி லிருக்கும் ஊர் என்ற பொருளில் கோட்டூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம் இவ்விடத்தின் இயற்கைச் சூழல் இப்பெயர்ச் சூட்டலுக்குப் பொருத்தமானதாக அமைகிறது என்பது இங்குத் தோன்றும் எண்ணம்.

நாகர்கோவிலைச் சா்ா்ந்த 'கோட்டாறு' என்ற ஆற்றுப் பெயரும் ஊர்ப்பெயரும் இங்கு இணைத்து எண்ணத் தக்கன. பொதுவாகத் தமிழகத்தில் கோட்டூர் என்று ஊர்ப் பெயரிடும் வழக்கு உண்டு என்பதைத் தஞ்சையிலும் தூத்துக்குடியின் அருகிலும் இருக்கும்

---

58. Once all Nandanam and Saidapet east of Mount Road and the land across the Adyar River now known as Kotturpuram belonged to the Nawab and was called the Nawabs Garden. This vast trees shaded park was the Nawabs-country retreat and his palace was where another more modern palace. Adyar House was built in 1958 by M.A. Chidambaram of the Raja of Chettinad family. It is said that Adyar house in Kotturpuram was built on a mound formed by the debris of Arcot's palace. The Nawabs gardens around the palace are now no more, the area fast developing as one of the city's better residential localities. But the name Nawab's Gardens still remains as a reminder of things past. Madras Discovered p- 64.

கோட்டூர் என்ற ஊர்ப்பெயர் கொண்டும் அறிய முடிகின்றது.

***ஊர்ப் பெயர்- கோட்டூர்***

***காரணம்- நிலத்தின் வளைந்த அமைப்பு***

## 16. கோட்டூர் புரம்

கோட்டூர் பழமையான ஊர். இதன் விரிந்த பரப்புக்குள் தற்போது ஏற்பட்ட புதிய குடியிருப்பு கோட்டூர் புரம் என வழங்கப் படத் தொடங்கியுள்ளது.

இன்று விஸ்தரிப்பு என்று பெயர் பெறும் தன்மை இதனுடன் ஒத்தது.

***ஊர்ப்பெயர்- கோட்டூர்புரம்***

***காரணம்- ஊரின் விரிவாக்கம்***

## 47. கோடம்பாக்கம்

இன்று திரைப்படத் தொழிலின் மேன்மையால் தென்னிந்தியாவின் ஹாலிவுட் என்று சிறப்புப் பெயர் பெற்று விளங்குகிறது கோடம்பாக்கம். பாக்கம் என்ற பழம் ஊர்ப்பெயர்ப் பொதுக் கூறு கொண்டு கோடம்பாக்கம் என்ற ஊர்ப்பெயர் அமையினும் இவ்வூரின் வரலாறு பற்றிய குறிப்புகள் எதையும் காணக்கூடவில்லை. எனவே அறிஞர்கள் அவரவர்களுக்கு இணங்க, சில காரணங்களைச் சொல்லிச் சென்றுள்ளனர்.

'கோடம்பாக்கம் பழங்காலத்தில் கோடலம்பாக்கம் எனவும், கோடலம்பாகை எனவும் அழைக்கப்பட்டது என்பது திருக்கோயில் முன்னாள் ஆசிரியர் என்.ஆர்.முருகவேள் கருத்து.[59]

கோடன் என்பது கோடகன் என்பதன் மரூஉ மொழி. கார்க் கோடகன் என்பது கார்க்கோடன் என மருவி வழங்கும். கார்க் கோடகன் என்பது எட்டுப் பெரிய நாகங்களுள் ஒன்றான கடவுட் பாம்புக்குப் பெயராகும். அதியமான் நெடுமான் அஞ்சி என்பதுஅஞ்சி என மருவி வழங்குதல் போல, கார்க் கோடகன் என்பது கோடன் என மருவி வழங்குதல்இயல்பாகும்.[60] நமது தமிழகத்தில் நாகப்பட்டினம், நாகூர், நாகர்கோயில், கோடன் பாக்கம் என்னும் பெயர்களுடன் ஊர்கள் இன்றும் உள்ளன.[61]

---

*59 வரம் தரும் வட பழனி ஆண்டவர் -ப.45*

*60 பத்துப் பாட்டு ஆராய்ச்சி- ப.393*

*61 பத்துப் பாட்டு ஆராய்ச்சி- ப.397*

ஆர்க்காடு நவாப் காலத்தில் இப்பகுதியில் குதிரை லாயங்கள் இருந்ததால் கோடாபாக் (கோடா-குதிரை;பாக்-தோட்டம்) என்று அழைக்கப்பட்டதாகவும் இதுவே பிற்காலத்தில் கோடம்பாக்கம் என்று பெயர் பெற்று விட்டது என்ற கருத்தும் உண்டு.[62]

இக்கருத்துகள் அனைத்தும் இந்த ஊர்ப்பெயர் காரணத்திற்கு ஏற்புடையதாக் அமையினும், இவற்றுள் எது உண்மையானதாக இருக்கலாம் என்பது ஆய்வுக்குரியதாக அமைகிறது.

கோடம்+பாக்கம் என்ற பெயரை ஆராயும் போது, இது கோடம் என்ற சொல் நிலையில் பொருள் தராது அமைகிறது. எனவே இச்சொல் மரூஉவாக அமைய வாய்ப்புள்ளது. அறிஞர்கள் இங்கே சுட்டியது போன்று கோடலம்பாக்கம், கோடகன் பாக்கம் என்பவற்றின் மருஉவாகக் கோடம்பாக்கம் ஆகியிருக்கலாம் எனினும் இப்பெயர்களின் வழக்கு வடிவங்கள் எதுவும் கிடைக்காத நிலையில் இதனை உறுதிப்படுத்தல் இயலவில்லை. மா. இராச மாணிக்கனார் கோடகன் நாகர் தொடர்பு காட்டுகின்றார். பிறஊர்ப் பெயர்களையும். இயம்புகின்றார்.

எனினும் சான்றுகள் பிற இன்மை இதன் உண்மையை உணரயியலாமைக்குரிய அடிப்படையாக அமைகிறது.

தன்னுடைய 'சென்னை மாவட்டக் கோயில் வரலாறு' நூலில், இ.மு.சுப்பிரமணியபிள்ளை, மா.இராசமாணிக்கனார் கருத்தை ஒட்டியே தனது கருத்தைத் தருகிறார். தியாகராய நகரின் மேற்கே இருக்கும் நகரம் கோடன் பாக்கம் கார்க் கோடகன்.என்றும் கார்க்கோடன் எனவும் பெயர் பெறுவது எட்டு நாகங்களுள் ஒன்று. அது வழிபட்ட ஊர் இது கோடகன் நல்லூர் என்பது நெல்லை மாவட்டத்தில் தண் பொருந்தப் பேராற்றின் வடகரையில் இருக்கிறது, என எழுதிச் செல்கின்றார்[63].

இவர் நாகர் தொடர்புடன் புராணத்தை இணைத்தும், மற்றொரு பெயரைச் சான்றுகாட்டியும் விளக்குகின்றார். முன்பு; கோடம்பாக்கம் இருக்கும் பகுதி புலியூர் என்று வழங்கி வந்ததாகத் தெரிகிறது. தொண்டைமண்டலத்தின் பல பிரிவுகளில் ஒன்று

---

62.Kodambakkam,it is said derives from Goda Bagh (Horse Garden) in the Hindustani. The Arcot Nawabs apparently once had stables here. But now on either side of the main road, have sprung up the cities newest residential 1 colonies- Asokh Nagar, K.K.Nagar, Gill nagar, Mahalingapuram.Madras Discoved p-263.

63. சென்னை மாவட்டக் கோயில் வரலாறு ப - 178

புலியூர் நாடு. அதனுள் பல ஊர்கள் இருந்தன. குன்றத்தூர், போரூா, மாங்காடு, அமரூர், கோட்டூர் போன்றவை இவை.[64] புலியூர் என்ற பெயர் இன்றும் கோடம்பாக்கத்தின் சில பகுதிகளுக்கு வழங்கி வருகின்றது. எனவே இப்பகுதி முழுமையும் முன்பு புலியூர் என்று வழங்கி வந்துள்ளதாகக் கருதலாம். அப்போது கோடம்பாக்கம் என்ற பெயர் இருந்திருக்காது. இல்லையெனில் புலியூரின் ஒரு பகுதி இப்பெயரால் சுட்டப்பட்டு இருக்கலாம். தனி ஊராக இருந்திருந்தால் புலியூர் நாட்டு ஊர்களுள் ஒன்றாக இதுவும் சுட்டப்பட்டு இருக்கும்.

மேலும் இங்குக் காணப்படும் வியாக்கிரபுரீசுவரர் கோவில் பற்றிய எண்ணமும்[65] இப்பகுதி புலியூர் என்று முன்னாளில் அழைக்கப்பட்டதையே உறுதி செய்கிறது. இயற்கைச் சார்பில் விலங்குப் பெயர்களும் ஊருக்கு அமைவது இயல்பு. காட்டுப் பகுதிகளை மிகுதியாக உடைய சென்னைப் பகுதியில், புலிகள் அன்று காணப்பட்டிருந்த நிலையில் இப்பெயர் அங்குத் தோன்றியிருக்க வாய்ப்பு அமைகிறது. பின்னர் இதற்குப் புராணச் சார்பு கற்பித்து, வட மொழிப் பெயரைச் சூட்டியிருக்கின்றனர் என்ற நிலையில் இக்கருத்தினை ஏற்றுக் கொள்ளலாம்.

எனவே புலியூரின் ஒரு பகுதி பின்னர் கோடம்பாக்கம் என்று அழைக்கப்பட்டுள்ளது எனினும் மேலும் சான்றுகள் கிடைக்கும் வரை பெயர்க் காரணங்களில் எக்காரணத்தையும் உறுதிப்படுத்துதல் இயலாததாகவே உள்ளது.

***ஊர்ப்பெயர்- கோடம்பாக்கம்***

***காரணம்-***

## 48. கோபாலபுரம்

ராயப்பேட்டையின் அருகில உள்ள குடியிருப்புப் பகுதி. இவ்வூர்பெயரை நோக்க இதுவும் ஆட்பெயராக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

***ஊர்ப் பெயர்- கோபாலபுரம்***

***காரணம்- ஆட்பெயர்.***

---

64. The Tamils eighteen hundred years age p. 28

65. வியாக்கிரம் -புலி வேங்கை என்பன ஒரு பொருட்சொற்கள். வியாக்கிரம் பூசித்திருந்த ஊர் வியாக்கிரபுரி. பவிபூசித்திருந்த இடம் புலியூர். வேங்கை பூசித்த ஈசர் வேங்கீசர் - சென்னை மாவட்டக் கோவில் வரலாறு ப- 178.

# 49. கோமளேஸ்வரன் பேட்டை

எழும்பூரின் அண்மைப் பகுதி இது.

கோமளேஸ்வரர் கோயிலை ஒட்டிய குடியிருப்புப் பகுதி கோமளேஸ்வரன் பேட்டை என்ற பெயரைப் பெற்றுள்ளது. இக்கோயில் சந்திரகிரி மன்னனால் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பெற்றது என்ற கருத்துக் காணப்படுகிறது[66]. எனவே இக்குடியிருப்பும் பின்னர் புதியதாக அமைந்தது தெரிகிறது. இது புதுப்பேட்டையின் ஒரு பகுதி என்ற கருத்துக் காணப்படுவதை நோக்க[67]. எழும்பூரின் அகத்தே காணப்பட்ட இப்பகுதிகள், பின்னர் தனித் தனிக் குடியிருப்புகளாக, தனித்தனியே ஊர்ப்பெயர்களையும் கொண்டு இலங்கத் தொடங்கியுள்ளன என்பதை அறிய முடிகிறது. மேலும், ஏழு ஊர்களைக் கொண்ட பகுதி எழும்பூர் என்ற பெயர் பெற்றது என்ற கருத்தினைச் சுட்டும் அறிஞர்கள், கோமளேஸ்வரன் பேட்டையையும் அதனுள் ஒன்றாகச் சுட்டுகின்றனர்.[68] இந்த ஏழு ஊர்கள் என்ற கருத்தில் மாறுபாடு இருப்பதை முன்னர்க் கண்டோம். இருப்பினும் எழும்பூரைச் சார்ந்தது கோமளேஸ்வரன் பேட்டை என்பது இங்குக் கருதத் தக்கது.

கோ என்பது பசு என்று பொருள்படும். இக்கோவிலில் உள்ள கோமளேஸ்வரர் சுயம்புமூர்த்தி, இப்பகுதி காடாக இருந்த போது ஒரு பசு மூர்த்தியை வழிபட்டது. அதற்கேற்ப இம்மூர்த்தியின் திருமேனியில் பசுவின் குளம்பு பதிந்த அடையாளம் இன்றும் காணப்படுகிறது. இப்பகுதியில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருநாமத்தால் இந்நகர் பெயர் பெற்றுள்ளது என்ற கருத்து[69]. பொதுவாக பல ஊர்ப் பெயர்களுக்கும் அளிக்கப்படும் புராணச் சார்பு கற்பனையாக உள்ளது. எனினும் இங்குக் கோமளீஸ்வரன் என்பது சிவனின் பெயர் என்ற நிலையில் இக்கோயிலின் பெயரால் இப்பகுதி பெயர் பெற்றது என்பது தெளிவாகிறது.

**ஊர்ப்பெயர்- கோமளீஸ்வரன்பேட்டை**

**காரணம்- இறைப் பெயர்.**

---

66. சென்னை மாவட்டக் கோயில் வரலாறு-ப.188

67. Across the Harris Bridge from Mount Road, Komaleswaranpet, a part of Pudupet. Madras Discovered-P.102.

68. The Madras Tercentenary Commemoration Volume- P.136.

69. சென்னை மாவட்டக் கோவில் வரலாறு ப- 188

## 50. கோயம்பேடு

அரும்பாக்கத்தை அடுத்துள்ள குடியிருப்பு. கோவன்+ புத்தூர் - கோயம்பத்தூர் என்றாகியது போன்று, கோவன்+பேடு, கோயம்பேடு என்றாகிவிட்டது எனலாம்.

***ஊர்ப்பெயர்- கோயம்பேடு***

***காரணம்-ஆட்பெயர்***

## 51. சத்தியமூர்த்தி நகர்

வடசென்னையில் வியாசர்பாடிக்கு அண்மைக் குடியிருப்பு. கோடம்பாக்கத்தின் அருகிலும் ஒரு சத்தியமூர்த்தி நகர் உள்ளது.

***ஊர்ப்பெயர்- சத்தியமூர்த்தி நகர்***

***காரணம்:ஆட்பெயர்***

## 52. சாந்தோம்

செயின்ட் தாமஸின் பெயரைத் தாங்கிய குடியிருப்பு. செயின்ட் தாமஸ் என்ற பெயர் சாந்தோம் என வழங்குகிறது. மயிலாப்பூரின் ஒரு பகுதி கி.பி. 15-க்குப் பின்னர் இப்பெயர் பெற்றது.இயேசு கிறிஸ்துவின் சீட்ரான செயின்ட் தாமஸ் பெயருக்கும் தமிழகத்தின் வடக்கில் உள்ள மயிலாப்பூருக்கும் என்ன தொடர்பு என்று காணும்போது வரலாறு சில விளக்கங்களைத் தருகிறது.

மயிலாப்பூர் அன்று மிகவும் பரந்த பகுதி. இன்று அதன் பகுதிகள் பல தனிக்குடியிருப்புகளாக, தனிப்பெயர்களுடன் திகழ்கின்றன. இவற்றுள் ஒன்று சாந்தோம்.

மயிலை தொடர்பான இலக்கியக் குறிப்புகள், கல்வெட்டுகள், மயிலையின் வளம், தொன்மை, மக்களின் வாழ்வியலைக் காட்டுகின்றன. எனினும் அங்குச் சாந்தோம் பற்றிய எந்தவிதக் குறிப்புமில்லை. இந்த பகுதிக்கும் கிறித்துவம் அல்லது செயின்ட் தாமசுக்கும் உரிய தொடர்பு குறித்த எந்தவிதக் கருத்தும் இல்லை.

ஆயின் பிறநாட்டார்க் குறிப்புகள் இது குறித்து உள்ளதாக அறிஞர் கருத்துத் தெரிவிக்கின்றனர். தாலமி (கி.பி.119-161) குறிப்பிடும் முசிறி, தினா, மனார்பா(மலியர்பா) சூசிகானா, பட ஆகியவற்றின் விளக்கத்தின் போது, வி.எஸ்.வி. இராகவன் புனிததாமஸ் கி.பி.57இல் இந்தியாவுக்கு வந்தமை, முசிறியில் (கொடுங்கோளூர்) இறங்கியமை, மயிலாப்பூர் வந்தமை,

சாந்தோம், சின்ன மலைத் தொடர்புகள் (அவர் கொலை செய்யப்பட்டது கி.பி.65இல் ) 17 ஆண்டுகள் இந்தியாவில் தங்கியிருந்தமை போன்ற செய்திகளைத் தருகின்றார். பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் அவர் இவ்விளக்கங்களைத் தருகின்றார். மார்க்கோ போலோவும் செயின்ட் தாமஸ் பற்றிய கருத்துத் தெரிவிக்கின்றார் என்பது அறிஞர் கருத்துகளினின்றும் தெளிவாகிறது[70].

மயிலாப்பூரில் இவர் வாழ்ந்தமை தொடர்பாகப் பல செவிவழிச் செய்திகளும் அறிஞர்களால் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன[71]

---

70. Marco Polo who visited the village in the 13th century mentions the Nestorian chapel there and the tomb of St. Thomas as well as a monastery the Nestorians had built atop of St. Thomes Mount - Madras Discoved - p-125.

71. மயிலாப்பூரில் கந்தப்பராசா ஆண்டு வந்தார். இவர் சிவபக்தர். அந்தணர்களைப் போற்றினார்.பய்யனூரில் குறும்பர்களோடுப் போரிட்டு வென்றார். செயின்ட் தாமஸ் மயிலைக்கு வந்தார். அரண்மனையில் தங்கினார்.அதிகாரி ஒருவன் அவரை அயலர் என்று எண்ணிக் கன்னத்தில் அறைந்தான். அவனைப் புலி அடித்துக் கையைக் கடித்து, வாயில் வைத்துக் கொண்டு அரண்மனை வந்தது. அரசன் அவருக்குச் சிறப்புச் செய்தான். செயின்ட் தாமஸ் அந்தணர்களோடு வாதம் செய்து வென்றார்.அவருடைய உபதேசத்தை அரசன் ஏற்றுக் கொண்டான். முதலில் நூறு பேர் மதம் மாறினர். பின்வர் எழு நூறு பேரை மதம் மாற்றினார். அந்தணர்களைக் கிறித்தவர்களாக்கினார். மயிலாப்பூரில் உள்ள தேவாலயத்தில் தங்கி அற்புதங்கள் நிகழ்த்தினார். அந்தணர் அவரை விரட்ட முயன்றனர். அந்தணர் தலைவன் கோயிலின் உள்ளே தன் மகனைத் தானே கொன்று விட்டு, செயின்ட் தாமஸ் மீது பழி சுமத்துகிறான். இறந்த பிள்ளை உயிர் பெற்று எழுந்து, தன்னைச் செயின்ட் தாமஸ் கொல்லவில்லை. தன் தகப்பனே கொன்றான் என்று கூறினான். கந்தரப்பராசன் செயின்ட் தாமஸை மதித்துக் கிறித்தவ மார்க்கத்தைப் பரப்பக் கட்டளையிட்டான். அவரும் அப்படியே செய்தார்.

விக்கிரமாதித்தன் இந்தியாவை ஆண்ட காலத்தில் திருமயிலை கந்தப்பராசாவால் ஆளப்பட்டுவந்தது. பறங்கியர் வாணிகம் புரிய வந்தனர். தாழ்குடி மக்கள் பலர் அவரால் மதம் மாறினர். உயர்குலத்தோர் அவரை வெறுத்தனர்.

கந்தப்பராசா ஒரு நாள் கடலில் பெரிய மரக்கட்டை மிதந்து வந்ததைப் பார்த்தார். கந்தப்பராசா அதனைக் கொண்டு வருமாறு மீனவரை ஏவினார். மீனவர் முயற்சிகள் வீணாயின. கிறிஸ்தவர் இதனைச் செயின்ட் தாமஸிடம் கூறினர். அவர், அரசர் விரும்பினால் மிதக்கும் கட்டையை அவருக்கு உரிமையாக்குவேன் என்று கூறினார். அரசர் வேண்ட, தாமஸ் ஒரு படகில் ஏறி, கட்டை மிதக்கும் இடம் வந்து, அதைச் சுற்றி வந்து, தம் கையால் தொட்டார். கரைக்கு வந்து சேர்ந்தார். அவர் இழுக்காமலேயே கட்டை தானே பின் தொடர்ந்து வந்தது. அரசன் மகிழ்ந்து தன் மகனுக்குப் பாடம் கற்பிக்குமாறு, செயின்ட் தாமஸை வேண்டினான். தாமஸ் பல கிறிஸ்தவக் கோயில்களைக் கட்டினார்.

அமைச்சர்கள் செயின்ட் தாமஸை விரட்ட முயன்றனர். ஒரு நாள் பாடங்கேட்டு திரும்பி வந்த இளவரசனை அடித்துக் கொன்றனர். பழியைச் செயின்ட் தாமஸ் மீது சுமத்தினர். அரசன் அவரைத் திட்டினான். அவர் உன் மகனுக்கு உயிர் தருகிறேன். கொலையாளியைப் பற்றி அவனிடம் கேளுங்கள் என்றார். இறந்த மகன் உயிர் பெற்றெழுந்து கொலையாளிகளைக் காட்டினான். அரசன் கொலையாளிகளைக் கொன்று, தானும் தன் மகனுமாகக் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்தான். இந்துக்கள் அரசன்

ஆயின் தமிழிலக்கியச் சான்றுகள் எதுவும் தெளிவு தரவில்லை. இந்துமதத்துடன் சமணம் இங்கு இருந்ததாகவே 15 வரை உள்ள வரலாறு தருவதாக அறிஞர் உரைக்கின்றார்[72].

மேலும் 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருமயிலையில் இசுலாமியர்கள் இருந்திருக்கின்றனர் என்ற கருத்தும் இங்குச் சுட்டுவதற்குரியதாக அமைகிறது.[73]

வாஸ்கோடகாமா இந்தியா வந்தது கி.பி. 1498 ஆம் ஆண்டு. அதன் பின்னர் இந்தியாவுக்குப் போர்த்துக்கீசியர்கள் வருகை புரிய ஆரம்பிக்கின்றனர். அவர்கள் மயிலைப் பகுதிக்கு வரும் போது இப்பகுதி அழிவுற்றுக் காணப்பட்டது என்கின்றார் எஸ். முத்தையா[74] எனவே பிறமதத்தார் பலர் இங்கு வாழ்ந்து வந்தமை அவர்களுக்குள் பூசல் வர ஏதுவாக இருக்கலாம். இப்பகுதி அழிவுற்றிருக்கலாம் என்ற எண்ணம் தோன்றுகிறது. மேலும் ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் இக்கிராமத்தைத் தாமஸின் நகரம் என்று தெரிந்து இருந்தனர் என்ற எண்ணமும் இங்குச் சிந்தனைக்குரியதாகிறது.[75]

ஆகவே போர்த்துக்கீசியர் வரும் போதே இப்பகுதிக்கும்

---

இல்லாத சமயத்தில் செயின்ட் தாமஸைத் தாக்கினர். அவர் தப்பிச் சென்று சின்னமலைக் காடுகளில் பதுங்கினார். முனிபரத்வாஜா புகலிடம் தந்தார். கந்தப்பராசா மீண்டும் அவரைக் கோட்டைக்குக் கொணர்ந்தார். மீண்டும் இந்துக்கள் செயின்ட் தாமஸைத் தாக்க முயன்றனர். அவர் ஓடி திருமயிலையின் மேற்கே தான் கட்டிய கோயிலில் புகலடைந்தார். முதுமை காரணமாகக் களைத்து விழ்ந்தார். எதிரிகள் நெருங்க மீண்டும் வடக்கே கடலருகே ஓடிக் காட்டையடைந்து உயிர் துறந்தார்.

சில காலம் கழித்துப் பறங்கியர் கப்பல் இரவில் காற்றால் அலைக்கழிக்கப்பட்டது. கரையை அடைய் முடியவில்லை. மாலுமி விழித்தான். கடற்கரைப் பகுதியில் வானோக்கி ஒரு சுடர் கண்டான். இந்த விந்தையை உணரக் கரை சேர்ந்தான். ஒளியின் இடம் நோக்கி, ஊரார் சிலருடன் சென்றான். தூயரின் எலும்புகளைக் கண்டான். சிறு கோயில் ஒன்று இங்குக் கட்டுக. பறங்கியர் நாட்டுக்குத் தூயரின் புனிதப் பொருட்களை எடுத்துச் செல்க என்னும் ஒலி வானில் கிளம்பியது. எலும்புகளைக் கண்ட இடத்தில் மாலுமி கோயில் கட்டினான். அதற்குக் காளக அன்னை கோயில் என்று பெயர்.-திருமயிலைத் திருத்தலம்-பக்.29-30

72. திருமயிலைத்திருத்தலம் - ப- 56.

73. திருமயிலைத்திருத்தலம் -ப- 56.

74. But the first European setlers of this area the Portuguese found the village in ruins when they arrived in the first years of the 16th century. Madras Discovered . p- 125.

75. The Arabs knew the village as Betumah the Town of Thomas in the 9th and 10th centuries- Madras Discoverd- p- 125.

தாமஸிற்கும் உள்ளத் தொடர்பு தெரிகிறது. எனினும் போர்த்துக்கீசியரின் வருகையின் பின்னர் அவர்களால் கோட்டை முதலியன கட்டப்பெற்று அவர்களுக்குரியதாக இப்பகுதி அமைந்த போதே இப்பகுதி சாந்தோம் என்ற பெயரைப் பெற்று நிலைக்கத் தொடங்கியது என்ற தெளிவினை நாம் பெறல் கூடுகிறது.

போர்த்துக்கீசியர் வருகையைப் பற்றி ஆராயும்போது, சில சிந்தனைகள் அறிஞர்களால் சுட்டப்படுகின்றன. போர்த்துக்கீசியர்கள் 1521இல் பரங்கி மலையில் உள்ள ஆலயத்தைப் புதுப்பித்தனர் என்றும் பின்னரே இந்த கடற்கரைக் கிராமத்திற்கு வந்தனர் என்றும் கருத்து அமைகிறது[76]. சு.ராஜசேகரன் கருத்தாகிய கி.பி.1522 சமயத்தில் போர்த்துக்கீசியர் சாந்தோமில் குடியேறினர் என்பதும் இதற்கு அரணாகிறது. சி.சிவராமமூர்த்தி போர்த்துக்கீசியர்கள் 1516இல் முதலில் 'லஸ்'ஸில் குடியேறிய தன்மையை விளக்குகின்றார். அங்கு முதலில் கோயில் கட்டிய தன்மையையும் இயம்புகின்றார்.[77]

சாந்தோமில் உள்ள தாமஸின் கல்லறை ஏழு முறைகள் திறக்கப்பட்டன என்பதும் இயேசுவின் தூதர் கல்லறை மீது எழுப்பப்பட்ட ஒரே கோயில் இது என்பதும் இங்குர்

---

76. In 1521 they repaired the old Nestorian chapel as well as the Nestorian monarstery at the Mount, and the next year founded a settlement in the coastal village calling it San Thome and building in it a new church the European building (an honour disputed by near by Luz church) in what is now Madras city and the nucleus of the present bailica. St. Francis Xavier who was active in Mylapore in 1545 prayed at the tomb of St. Thomas here that year. In 1898 a new cathedral, the towering structure of today was consecrated on the ruins of an earlier cathedral which had been demolished three years before. This new cathedral was built by Dom Heniques Reed de Silva the first Bishop of Mylopore.. Madras Discovered - p- 125-126.

77. The earliest European monument in India, centuries after her contact with the Greeks after the triumphal march and conquest of the Panjab by the young and ambitious Macedonian king is of 1516 A.D. and it is in Mylopore. It is the Foundation stone of the Luz church 'an ancient looking black stone in one of the outer walls. Traditian has it that Portuguese when they arrived at this place and wondered where to buid their church saw a light which they regarded as a divine beckoning setlled there and built a church on the spot where appeared the light. This was in 1516 and the church is named after Light Luz. The Madras Tercentenary Commemoration Volume. p- 153.

குறிப்பிடத்தக்கன.[78]

***ஊர்ப்பெயர்- சாந்தோம்- Saint Thomas***

***காரணம்- இயேசுவின் தூதர் புதைக்கப்பட்ட இடம்.***

## 53.சாஸ்திரி நகர்

திருவான்மியூரின் ஒரு பகுதியாக இருந்த இடத்தில் மறைந்த, இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பு.

***ஊர்ப்பெயர்- சாஸ்திரி நகர்***

***காரணம்- ஆட்பெயர்***

## 54.சி.ஐ.டி. நகர்

City Improvement Trust சென்னையில் குடியிருப்பு வசதிகளைப் பெருக்க ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. இந்த அமைப்பு உருவாக்கிய சி.ஐ.டி. நகர்கள் மாம்பலம், மயிலாப்பூர் பகுதிகளில் உள்ளன.

***ஊர்ப்பெயர்- சி.ஐ.டி.நகர்***

***காரணம்- நகர வளர்ச்சி***

## 55.சிங்காரகார்டன்

வடசென்னையில் உள்ள குடியிருப்பு. சிங்காரத் தோட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

***ஊர்ப்பெயர்- சிங்காரத்தோட்டம்***

***காரணம்-***

## 56.சிந்தாதிரிப்பேட்டை

கூவம் ஆற்றங்கரையில், சுங்கு ராமர் என்ற வணிகருக்கு சொந்தமான நிலம், நெசவாளர்க்கான குடியிருப்பாக ஆக்கப் பட்டதை இந்த ஊர்ப்பெயரின் வரலாறு உணர்த்துகிறது. இப்பகுதி

---

78. Tradition has it that the tomb has been opened four times, the first time just a few years after Thomas death, the second between 222 and 235 A.D. when most of the Saints relics were removed for a troubled journey that finaly ended in 1258 in Ortona; the third by Portuguese when they were rebuilding the church in 1522-23; and the final opening in 1729 when Coja Petrus Uscan benefactor of several Roman catholic institutions including St. Rita's chruch in Santhome was one of the witnesses . Madras Discovered - p- 126- 127.

பெரிய மேட்டிற்குத் தெற்கில், சுங்குராமர் என்ற வணிகர் ஒருவருக்குச் சொந்தமான தோட்டமாய் முதலில் இருந்தது. கவர்னர் ஜார்ஜ் மார்டன் பிட்டு என்பவரின் காலத்தில் இப்பகுதி சென்னை மாநகரோடு சேர்க்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் இங்கு நெசவாளர்க் குடியிருப்பை அமைத்தனர். எனவே நெசவாளர்களின் சிறுதறிகள் பல இங்கே இயங்கி வந்தன. இதன் காரணமாய் இதற்குச் சின்ன தறிப்பேட்டை என்ற பெயர் ஏற்பட்டது. நாளடைவில் இது சிந்தாதிரிப்பேட்டை என வழங்கலாயிற்று. இங்கே இதன் ஆதி உரிமையாளர் சுங்குராமர் பெயரால் ஒரு வீதியும், ஒரு நூல் நிலையமும் உள்ளன என்ற கருத்தைத் தமிழ் நாடு மாவட்டக் குறிப்புகள் நூல் தருகிறது (பக்.58-59). இக்கருத்தைச் சார்ந்தே அறிஞர் பலரின் கருத்தும் அமைகிறது.[79] மக்கள் குடியேற்றத்துடன் கோயில்களும் பல எழத் தொடங்கியதை இன்று

---

79) Over a century and a half earlier began the 'depretting' process, a process that has been common place throughout the history of the city. In 1734 Governor Morton Pitt felt more cloth was needed for export and so he decided to build a new weavers' town. He acquired for this purpose chief Merchant Sunka Rama's garden in the last loop of the Coovam before the river flows into the sea; the acquition being made easier by the chief merchant having been dismissed and so being out of favour with the Government. Pitt now resloved to settle several hundred families of spinners, weavers, painters, washers and dyers along with Brahmans and dancing women and other necessary attendents to the Pagoda. The village was to be called Chintadre Pettah- Madras Discovered - p-102.

The village of Chinnatarai Pettai is largely due to the enterprice and initative of Adiappa Narrayana the dubash of Governor Banyan. The village of weavers which goes by the name of Chintadri pettah today thus came into being. The residents being mainly Hindus, Adiappa erected new temples and for the benefit of the Muhammadans a mosque was also built up. About 1740 with the gradual loss of the estate of Adiappa an appeal was prefered to the company's government for funds for the upkeep of the temple. Adiappa died in 1743. But the Chintadripet temple was later used as a powder magazine when the city was besieged in 1758-1759 and as hospital in 1785. The Madras Tercentenary Commemoration volume p -364.

Another Name for the place has been suggested as the original viz. Chinna Tari Petta (the village of small looms) see His. of Madras by C.S.S. p- 149

சென்னை மாநகர் பக். 67

This is Chintadripet founded in 1734 by Governor George Morton Pitt who was born in Fort St. George in 1693. The village was founded as a weavers settlement. taking its name from Chinna Tari Peta (village of small looms) and 230 families were settled in 1737. Madras Discovered p -245.

அக்குடியிருப்பில் காணப்படும் பல கோயில்கள் சுட்டுகின்றன. அங்காளம்மன் கோயில், சுப்பிரமணிய சுவாமி கோயில், ஆதிகேசவப் பெருமாள் கோயில், ஆதிபுரீசுவரர் கோயில், ஆதிபொன்னியம்மன் கோயில் போன்ற பல கோயில்கள் இங்கு உள்ளன.

இக்கோயில் வரலாறுகளும் இப்பெயராய்வுக்குத் துணை யாகலாம் என்ற நோக்கில் அவற்றை ஆராயும் போது கிடைக்கும் செய்திகள் சில கருத்துகளைத் தெரிந்து கொள்ளத் துணையாகின்றன. இக்கோயில்கள் அனைத்தும் இக்குடியிப்பு உருவாகிய பின்னர்தான் தோன்றியிருக்க வேண்டும் என்பது ஐயத்திற்கு இடமில்லாத ஒன்று. ஏனெனில் சுங்கு ராமர் இப்பகுதியை நெசவாளர்க்கு என அளிக்கும் போது இங்குக் கோயில் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. இங்குக் கிடைத்த இரு கல்வெட்டுகள் சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. கி.பி.1782, 1874 ஆம் ஆண்டு சார்ந்த இரு கல்வெட்டுகள் அவை. ஆதிபுரீச்வரர் கோயிலின் இரண்டாவது சுற்றில் உள்ள மண்டபத் தூண், ஸ்ரீ ஆதிபுரீச்வரர் தீர்த்தவாசி மண்டபத்திற்கு மேற்கே உள்ள கல்தூணின் மேல்பகுதி என இரண்டு இடங்களிலும் முறையே இக்கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன.

கண்டி வாக்கு வெங்கடசாமி நாயக்கர் குமாரர் க.பார்த்தசாரதி என்பார் தீர்த்தவாரி மண்டபம் கட்டி வைத்ததை ஒன்றும் (1782), பாகிரதி அம்மாள் பெயர்த்தியும் கமலம்மாள் மகளுமான கோகிலாம்பாள் என்பவர் ஆதிபுரீச்வரர் சன்னதியில் கொடி ஏற்று மண்டபம் கட்டியதை மற்றொன்றும் (1874) குறிப்பிடுகின்றன.

எனவே கி.பி.1782-க்கு முன்னர் இக்கோயில் கட்டப் பெற்றுவிட்டது என்பதும் அதன் பின்னர் தொடர்ந்து இங்குப்பலராலும் திருப்பணிகள் நடைபெற்று வந்துள்ளன என்பதும் இங்குத் தெளிவாகும் செய்தி.

கவர்னர் பன்யன் காலத்தில்(கி.பி.1735-44) துபாஷியாக இருந்த ஆதியப்ப நாராயணா, இக்குடியிருப்பு உருவாக்கப்பட்டவுடன் இங்குப் பல கோயில்களை கட்டினான் என்ற குறிப்பு கிடைக்கிறது. ஆயின் அவை எவ்வை என்பது தெரியாத நிலையில் இக்கோயில்களின் பெயர்கள் சிறிது விளக்கம் தருகின்றன. ஆதிபுரீச்வரர் கோயில், ஆதிகேசவப்பெருமாள் கோயில்,

ஆதிபொன்னியம்மன் கோயில் என்று கோயில்களின் பெயர்களில் காணப்படும் ஆதி என்ற பெயர், ஆதியப்ப நாயக்கரால் கட்டப்பட்ட நிலையில், இப்பெயர் இக்கோயில்களுக்குச் சூட்டப்பட்டிருக்கலாம் என்ற சிந்தனையைத் தருகிறது. பிற கோயில்கள் பிற்காலத்தில் எழுந்தனவாகலாம்.

***ஊர்ப்பெயர்- சின்ன தறிப்பேட்டை***

***காரணம்- சிறிய தறிகள்- நெசவாளர் குடியிருப்பு***

## 57. சின்மயா நகர்

வடபழனியின் அருகே புதியதாக எழுந்த குடியிருப்பு. இந்து மதத் துறவி சின்மயானந்தா பெயரில் எழுந்த பகுதி.

***ஊர்ப்பெயர்- சின்மயா நகர்***

***காரணம்- ஆட்பெயர்***

## 58. சின்னமலை

செயின்ட் தாமஸ், கிறித்தவ ஆலயம் இது தொடர்பானவை. இன்று இங்கு மக்கள் மிகுதியாக வாழ்கின்றனர். பிற செய்திகள் இது குறித்துத் தெரியவில்லை. ஆயின் இப்பெயர் இதனைப் பழமையான இடமாகக் காட்டுகிறது.

***ஊர்ப்பெயர்- சின்னமலை***

***காரணம்- இயற்கை (மலை)***

## 59. சூளை

புரசவாக்கத்தின் அருகில் உள்ள குடியிருப்பு. செங்கற் சூளை தொடர்பால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

***ஊர்ப்பெயர்- சூளை***

***காரணம்- செங்கற் சூளை***

## 60. சூளை மேடு

கோடம்பாக்கத்தின் பகுதி. சூளை தொடர்பாகப் பெயர்பெற்ற இன்னொரு குடியிருப்பு.

*ஊர்ப்பெயர்- சூளைமேடு*

*காரணம்- செங்கற் சூளை*

## 61. செம்பியம்

பெரம்பூரின் அண்மையில் காணப்படும் குடியிருப்பு இது. இதன் வரலாறு, பெயரின் விளக்கம் தெளிவு பெற வில்லை.எனினும் செம்பியன், செம்பியன் மாதேவி என்பன சோழர் சார்புப் பெயர்கள். எனவே இவ்வூரும் சோழர் காலத்தில் உருவாகிய குடியிருப்பாக அமையலாமோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

*ஊர்ப்பெயர்- செம்பியம்*

*காரணம்- சோழர்ச் சார்பு*

## 62. சேத்துப்பட்டு

நுங்கம்பாக்கத்தை அடுத்த குடியிருப்பு. இதன் பெயர், இதனை இயற்கைச் சார்புப் பெயராகக் காட்டுகிறது. சேறு+பட்டு சேறுபட்டு; சேத்துப்பட்டு ஆகியிருக்கலாம். இதன் அருகாமையில் ஏரியிருப்பது நீர்நிலை, சேற்றுடன் தொடர்பு படுத்த வாய்ப்பு தருகிறது. நுங்கம்பாக்கத்தின் வரலாறு, இதன் பழமையைத் தெளிவுபடுத்த ஓரளவிற்கு உதவுகிறது. அறிஞர் கருத்துகளும் கல்வெட்டுச் சான்றுகளும் இக்கருத்திற்கே அரணாகின்றன.

'திருஒற்றியூரில் உள்ள இராட்டிரகூட மன்னன் 3 ஆம் கிருஷ்ணனின் கல்வெட்டில் 'சேற்றுப்பேடு' என்று குறிக்கப் படுகிறது. புலியூர்க் கோட்டத்தைச் சார்ந்த துடர் முனியூர் நாட்டில் அமைந்திருந்திருக்கிறது இதே ஊர். ஸ்ரீரங்கநாதயாதவராயர் காலத்தில் செயங்கொண்ட சோழமண்டலம் புழல் கோட்டம் என்றும், விக்கிரமசோழவள நாட்டில் எழுமூர் துடர்முனி

நாட்டைச் சார்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.[80]

1823 ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு, 'சேத்துப்பட்டு' என இதனைத் தெரிவிக்கிறது.[81]

**ஊர்ப்பெயர்- சேத்துப்பட்டு**

**காரணம்- இயற்கை- சேறு**

## 63. சேப்பாக்கம்

சேல்+பாக்கம் : சேல்பாக்கம். சேப்பாக்கம் ஆகியிருக்க வாய்ப்பு அளிக்கிறது. கடற்கரை அருகாமை சேல், பாக்கம் இரண்டுப் பொருட்களையும் பொருத்தமுறச் செய்கிறது.

**ஊர்ப்பெயர்- சேப்பாக்கம்**

**காரணம்- இயற்கை**

## 64. சைதாப்பேட்டை

செங்கல்பட்டு மாவட்டத்தின் ஒரு வட்டமாக இருந்தது சைதாப்பேட்டை. பின்னர் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. இன்று சென்னை மாவட்டத்தின் கீழ் உள்ள பகுதியாக இது அமைகிறது.

சைதாப்பேட்டை என்பது பிற்காலத்தில் சூட்டப்பட்ட புதிய பெயரே எனினும், இப்பகுதியில் மக்கள் முன்னரேயே வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும் அவர்கள் தங்கள் ஊரை வேறு பெயரால் அழைத்தனர் என்பதும் வரலாறு தரும் உண்மையாகும்.

இங்கே சில கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. சில கோயில்களும் இங்கே காணப்படுகின்றன. இவை சில ஊர்ப் பெயர்களைச் சுட்டுகின்றன. அவற்றின் மூலம் சில செய்திகள் வெளிப்படுகின்றன. நான்கு கல்வெட்டுகள் சைதாப்பேட்டை சார்ந்து காணப்படுகின்றன. கி.பி.1726, 1884 ,1896, 1887 ஆம்

80 தமிழரசு - 16.5.1990, ப.22

81 சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் தொடர் எண் 1967/187

ஆண்டுகளைச் சார்ந்தன அவை[82]

ஆர்மீனிய நாட்டைச் சார்ந்த காஜா பீடர்ஸ் உஸ்கன் என்பவர் கட்டிய பாலம் பற்றிய செய்தியைத் தருவது முதல் கல்வெட்டு சைதாப்பேட்டை பாலத்தின் கிழக்குப் பக்கச் சுவரில் பதிக்கப்பட்ட கல்லில் உள்ளது என்றக் குறிப்பு இப்பாலம் கட்டப்பட்ட ஆண்டினைத் தருகிறது.

1884ஐச் சார்ந்த கல்வெட்டு சித்தி விநாயகர் கோயிலின் வடக்குச் சுவரில் உள்ளது. சைதாப்பேட்டை வட்டம் காரணி கிராமத்தில் உள்ள திரு.சித்தி புத்தி விநாயகருக்கு நித்திய பூஜை தரும கைங்கர்யத்துக்கு அதே ஊரைச் சார்ந்த தருமலிங்க முதலியாரின் மனைவி சுந்தரம்மாள் தன் கடையிலிருந்து வரும் குடிகூலிப் பணத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சாசனம் எழுதி வைத்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது.

இங்குத் திருப்பணித் தொடர்பான செய்தி அமையினும் ஊர்ப்பெயர் தொடர்பான செய்தியைப் புரிந்து கொள்ளவும் இக்கல்வெட்டு வழிவகுக்கிறது.

சைதாப்பேட்டை தாலுக்கா, காரணி கிராமத்தில் எழுந்த ருளியிருக்கும் காருண்ணிய ஈஸ்வரர் திருக்கோயில் என்று செல்கிறது இக்கல்வெட்டு. இதன்மூலம், கி.பி. 1884க்கு முன்னரேயே சைதாப்பேட்டை தாலுக்காவாக அமைந்தது தெரிகிறது. இதனுள் காரணி கிராமம் இருந்தது தெரிகிறது. இங்கு இருக்கின்ற ஈஸ்வரன் பெயர் காருண்ணிய ஈஸ்வரர் என்பதும் புலப்படுகின்றது.

எனவே காருண்ணிய ஈஸ்வரன் கோயில் இருந்தமை காரணமாக இப்பகுதியும் காருண்ணிய கிராமம் என்று அழைக்கப்பட்டதா? அல்லது காரணி என்பதற்குப் பார்வதி என்பது பொருள். பார்வதிக்கு எடுக்கப்பட்ட கோயிலில், பின்னர் இறைவனும் இடம் பெற, காருண்ய ஈஸ்வரர் என்று இறைவனும், காரணி கிராமம் என கிராமமும் அழைக்கப்பட்டு இருக்குமா என்ற வினாக்களுக்கு விடை இல்லை. அல்லது சீர்கருணீகர் அல்லது கருணீகர் இன மக்கள் வாழ்ந்தனரா? என்பதும் எழும் வினா.

கல்வெட்டில் காருண்ய ஈஸ்வரர் என்று குறிப்பிடப்பட்

---

82. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் - தொடர் எண் 1967/205, 206,207,208

டிருப்பினும் இன்று காரணீஸ்வரர் என்றே இக்கோயில் இறைவன் அழைக்கப்படுகின்றான்.

கி.பி. 1887 ஐச் சார்ந்த மற்றொரு கல்வெட்டு இக்கோயிலின் வடக்குச்சுவரில் (உட்பக்கம்) உள்ளது.

சைதாப்பேட்டையைச் சார்ந்த காரணி கிராமத்திலிருக்கும் வா.ஆறுமுகமுதலியார் குமாரர் சுப்பராய முதலியார் தன் பங்களாவைக் காரணீச்வரர் கோயிலுக்குக் கொடை அளித்ததையும், அப்பங்களாவின் குடிக் கூலியிலிருந்து அக்கோயிலுக்கும் மற்றும் செல்வ விநாயகர், ஞான விநாயகர், சுப்பிரமணியர், இராமசாமி ஆலயங்களுக்கு நெய் விளக்கு தர்மம் அளித்து வந்ததையும் இக்கல்வெட்டு குறிக்கிறது.

இக்கல்வெட்டில் முதலில் குறிப்பிட்டபடி காரணி கிராமம் என்ற ஊர்ப்பெயர் தெரிகிறது. மேலும் கி.பி.1887இல் அப்பகுதியில் இருந்ததாக விநாயகர், சுப்பிரமணியர், இராமசாமி ஆலயங்கள் பற்றியும் தெரிகிறோம். மேலும் மேற்படியூர் செல்வ விநாயகர், ஞானவிநாயகர், சுப்பிரமண்யர், இராமசாமி சந்நிதானங்களுக்கும் என்று எழுதிச் செல்கின்ற தன்மை, காரணி கிராமத்திலேயே இந்தக் கோயில்களும் இருந்துள்ளன என்பதைத் தெரிவிக்கின்றது. இன்றும் இங்கு இவை உள்ளன.

அடுத்து உள்ள கல்வெட்டு, 1896 ஐச்சார்ந்தது. சீனிவாசப் பெருமாள் கோயிலின் கிழக்குச் சுவரில் உட்பக்கம் உள்ளது. இக்கல்வெட்டு ஸ்ரீபிரசன்ன வெங்கட நரசிம்ம சுவாமி கோயிலில் சைதாப்பேட்டையைச் சார்ந்த ஜெயராம் செட்டியார் மடப் பள்ளி கட்ட ஆரம்பித்ததையும், அவர் மூத்த மகன் வீராசாமி செட்டியார் அதைக் கட்டி முடித்ததையும் கூறுகிறது. இக்கல்வெட்டில் சைதாப்பேட்டை ஜெயராம் செட்டியார் என்ற குறிப்புடன் இரகுநாதபுரம் என்கிற சைதாப்பேட்டையில் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

முன்னைய கல்வெட்டுகள் சைதாப்பேட்டையிலிருக்கும் காரணி கிராமம் என்று சுட்டிய தன்மை சிந்திக்கத் தக்கது. சைதாப்பேட்டை பெரிய ஊர். அதன் ஒரு பகுதி காரணி கிராமம். சைதாப்பேட்டையின் மற்றொரு பெயர் இரகுநாதபுரம். எனவே இரகுநாதபுரத்தின் பகுதி காரணி கிராமம் என்றாகிறது. இந்நிலையில் இங்கு இராமர் கோயில் இருந்ததாகத் தெரியவரும் தன்மை, இரகுநாதனாகிய இராமன் கோயில் இருந்ததால், இப்பகுதிக்கு இரகுநாதபுரம் என்ற பெயர் முதலில் அமைந்திருக்க

வேண்டும். பின்னர் பிற கோயில்கள் கட்டப்பெற்று, காரணி கிராமம் ஒரு பகுதியாகச் சுட்டப்பட்டு இருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும், காரணீச்வரர் கோயில் பராமரிப்பைத் திருக்காரணி செங்குந்த சபையார் பேணுகின்றனர் என்ற குறிப்பைக் காண்கிறோம்.[83] எனவே செங்குந்த சபையார் வழிவழியாக இக்கோயிலைப் பேணி வந்திருக்க வாய்ப்புண்டு என்ற நிலையில், முதலியார் வரவுக்குப் பின்னர் இக்கோயில் கட்டப் பெற்றிக்கக் கூடும் என்ற எண்ணமும் தோன்றுகிறது. இம்மு தலியார் வரவு என்று நோக்கவும், சில செய்திகள் காணக் கிடைக்கின்றன. எனவே இரகுநாதபுரமே பழைய பெயராக இருக்க வேண்டும். அதன் ஒரு பகுதி காரணி கிராமம் என்று அழைக்கப் பட்டு இருத்தல் வேண்டும் என்பதும், சைதாப்பேட்டை பின்னர் இரகுநாதபுரம் பெற்ற பெயராக இருக்கலாம் என்றும் தோன்று கிறது. ஏனெனில் சைதாப்பேட்டை என்ற ஊர்ப்பெயர் அமைந்த பின்னர் ஒரு வேளை இரகுநாதபுரம் என்ற பெயர் அமையின், சைதாப்பேட்டையின் ஒரு பகுதிக்குப் பெயராகச் சுட்டப்பட்டு இருக்குமே தவிர, முழுமைக்கும் இப்பெயர் அமைய வாய்ப்பிருக்குமா என்பது வினாவிற்குரியது.

சைதாப்பேட்டை என்ற பெயரை ஆராயும் போது சில கருத்துகள் சுட்டப்படுகின்றன. ஆற்காட்டு நவாப்பால் தன்னுடைய உதவியாளருக்கு 1730-இல் கொடுக்கப்பட்ட பரிசான நந்தனம், சைதாப்பேட்டை, கோட்டூர்புரம் பகுதிகள் அனைத்தும் நவாப் புக்குச் சொந்தமாக இருந்தவை. சைதரப்பேட்டை 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இதன் வளர்ச்சி கருதி, தனக்கு என்று ஒரு பாகத்தை வைத்துக் கொண்டு, மீதி மூன்றையும் நெசவாளர், வாணிகர், கலைஞர் ஆகியோருக்குப் பிரித்துக் கொடுத்தார் நவாப் என்ற செய்திகள் இங்குத் தொடர்புடைன.[84] எனவே 1730இல் இப்பகுதி,

---

83 சென்னை மாவட்டக் கோயில் வரலாறு - ப.169

84.Beyond Nandanam is Saidapet, Syedkhans Pettai ( property) a gift by the Nawab of Arcot to Syed Shah one of his retinye in 1730. To develop the area, he devided it into four quarters, kept one for himself, another for weavers a third for traders, and a fourth for artisans. Once all Nandanam and Saidapet east of Mount Road and the land across the Adyar River now known as Kotturpuram belonged to the Nawab and was called the Nawabs Garden. This vast tree shaded park was the Nawab's country retreat and his palace was where another more modern palace, Adyar house was built in 1958 by M.A.Chithambaram of the Rajah of Chettinads family. It is said that Adyar house in Kotturpuram was built on a mound formed by the debris of Arcot palace.Madras Discovered p-64

பரிசாகக் கொடுக்கப்பட்ட பின்னர் சையத்கான்பேட்டை என வழங்கப்படத் தொடங்கியுள்ளது என்பதுதெளிவாகிறது. இது சையத்பேட்டை என்று மருவி, பின்னர் சைதாப்பேட்டை யாகியிருக்க வாய்ப்புண்டு.மேலும் இப்பகுதியை இவர் பிரிக்கும் போதே, இங்கு நெசவாளர்கள் இருந்தார்களா அல்லது அதன் பின்னர் குடியேற்றப்பட்டார்களா என்பது தெரியவில்லை. எனினும் ஆங்கிலேயர் இங்கு நெசவாளர்களைக் குடியேற்றியதாகக் குறிப்பு ஒன்று காணப்படுகிறது.[85] இக்கருத்தும் தெளிவில்லை. ஆயின் இங்கு ஏற்கெனவே மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பது இப்பகுதியின் பிற பெயர்கள் சுட்டும் தன்மையாகும்.

**ஊர்ப்பெயர்- சையத்கான் பேட்டை**

**காரணம்- ஆட்பெயர்**

## 65.டிரஸ்ட் புரம்

டிரஸ்ட் புரம் என்ற பிறமொழிப் பெயரே இந்தக் குடியிருப்புப் புதிதாக எழுந்த குடியிருப்பு என்பதைத் தெரிவிக்கிறது. கோடம் பாக்கத்தின் பகுதி இது. இங்குக் குடியேறிய மக்கள் இப்பகுதிக்கு மட்டும் இப்பெயரிட்டு வாழத் தொடங்கியுள்ளனர் என்னும் எண்ணம் எழுகிறது. டிரஸ்ட் மூலம் உருவாக்கப்பட்ட குடியிருப்பாக இருத்தலுக்கு வாய்ப்பு உள்ளது.

**ஊர்ப்பெயர்- டிரஸ்ட்புரம்**

**காரணம்- குழு நியமித்து ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பு.**

## 66. தங்கசாலை

வடசென்னையில் உள்ள மிக நீளமான தெருவின் வடகோடியில் நாணயங்கள் அச்சடிப்பதற்காகக் கட்டப்பட்ட கட்டிடம் காரணமாக இப்பெயர் உருவாகியது. ஏற்கனவே இங்கு இருந்த தொழிற்சாலை ஒன்றினை அகற்றிவிட்டு, அங்கு நாணயத் தொழிற்சாலை உருவாக்கிக் கட்டிடம் கட்டப்பட்டது. கி.பி.1807-இல் கட்டிடம் முடிந்ததெதினும் பணிகள் தொடங்குவதற்குரிய பொறிகள் அமைப்பது 1841- இல் தான்

85. சென்னை மாவட்டக் கோயில் வரலாறு- ப.168

முடிந்தது.[86] ஆயினும் இந்தக் கட்டிடத்தில் நாணய வேலை தொடரவில்லை. எனினும் இம்முயற்சிகளே இப்பெயருக்குக் காரணமாக அமைந்தது

**பெயர்- தங்கசாலை**

**காரணம்- தங்க நாணயம் அச்சடிப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்டிடம் இருந்த சாலை.**

## 67. தண்டையார்பேட்டை

ஆங்கிலேயர்கள் தம் கோட்டையுடன் 1693இல் இணைத்த குடியிருப்புகளுள் தண்டையார்பேட்டையும் ஒன்று. பழைய கிராமமாகவும் இது சுட்டப்படுகிறது.

இது பழைய குடியிருப்பு எனினும் இதன் பெயர்க் காரணம் புலப்படவில்லை. இதன் ஒரு பகுதி அருணாசல ஈஸ்வரன் பேட்டை எனப்பெயரிடப்பட்டதைச் சென்னை மாநகர்க் கல்வெட்டு தரும் செய்திகள் தெளிவாக்குகின்றன.

தண்டையார்பேட்டையைச்சார்ந்த கல்வெட்டு ஒன்று அருணாசலேஸ்வரர் கோயில் முன் கோபுரத்தின் வலதுபக்கச் சுவரில் உள்ளது. கி.பி. 1778 ஐச் சார்ந்தது.

திரு பெரும்புதூர் திருமணம் அருணாசல முதலியார் மகன் முத்து முனியப்ப முதலியார் என்பார் அருணாசலயீசுவரர் கோயிலையும், உண்ணாமுலையம்மை கோயிலையும், கோபுரத்தையும், பிற சாத பிம்ப மண்டபம், பலிபீடம் முதலானவற்றையும்

86. The Mint goes back to 1640, when it functioned in the fort, but it was only in 1692, that the Mughals authoriesd the East India company to mint gold mohurs and silver rupees to their standards in the companies mint. In 1742 by the new Nawab's firman, the Poonamallee mint was shifted to Chindadripet where Linghi chetty, the contrtactor of the Fort mint, now Struck Arcot rupees as well as star pagodas and gold mohur's Rupees (replacing star pagodas), and annas currency was introduced by the British in 1816 and the mint was then moved in 1841 -2 to a building erected on the site where, in 1804 had stood a powder mill. This move took the two Madras mints to the building that are at the North end of what is called Mint street today, the largest street in North Madras. This move took years. After the powder mill was moved to The Island, work began on building the new mint. The buildings were ready by 1807 but the machinery was not perfect. It was only towards the end of 1841 that perfection could be achieved and the move of the mint finalised. But to what use? With minting no more in Madras, the mint buildings are today only part of the huge Government press. Madras Discovered- p- 201

தன் தாய், தந்தை, குரு ஆகியவர்களின் நினைவாகக் கட்டி வைத்ததைக் குறிக்கிறது. இந்த இடத்துக்கு அருணாசலயீசுவரர் பேட்டை என்று பெயரிட்டதையும் தெரிவிக்கிறது என இக்கல்வெட்டுக்கு விளக்கம் தருகின்றனர் தொல்பொருள் அறிஞர்.[87]

எனவே கோயிலைக்கட்டி, கோபுரம் தெரிகின்ற வரையும் அருணாசல ஈசுவரர் பேட்டை என்ற பெயரையும் இட்ட தன்மையை நோக்க இப்பகுதியில் மக்கள் ஏற்கனவே வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பது தெரிகிறது. எனினும் மக்கள் ஏற்கனவே வாழ்ந்த பகுதியாகிய தண்டையார்பேட்டையின் செல்வாக்கு இதனைத் தெருப் பெயர் நிலைக்கு மாற்றி விட்டிருக்கிறது. இன்று அருணாசல ஈஸ்வரர் தெரு என்று சுட்டப்பட்டாலும் 19 ஆம் நூற்றாண்டில் இது அருணாசல ஈஸ்வரர் பேட்டை என்றே வழங்கப்பட்டுள்ளது என்பதை இங்கே கிடைத்துள்ள இன்னொரு கல்வெட்டு தெரிவிக்கிறது. கி.பி.1864 ஐச் சார்ந்தது அக்கல்வெட்டு.[88] சென்னைக்கடுத்த அருணாசல ஈஸ்வரர் பேட்டை கோயில் எதிர் மடத்தில் வாசஞ் செய்யும் என்று இது அமைகிறது. இன்று இப்பகுதியையும் இணைத்துத் தண்டையார்பேட்டை அமைகிறது.

*ஊர்ப் பெயர்- தண்டையார்பேட்டை.*

*காரணம் -*

## 68 தரமணி

பெயர்க்காரணம் விளக்கம்பெற வில்லை.

## 69. தாக்கர் சத்திரம்

அயன்புரத்தின் ஒரு பகுதி தாக்கர் சத்திரம் எனப்பெயர் பெற்றுள்ளது. தாக்கர் என்ற குடும்பப் பெயரையுடைய குஜராத்தைச் சார்ந்த வாணிகர் கட்டிய சத்திரம் காரணமாகத்தாக்கர் சத்திரம் என்ற பெயர் உருவாகி, பின்னர் குடியிருப்பையும் குறிக்கத் தொடங்கியுள்ளது[89].

87. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் தொடர் எண் 1967/170

88. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் தொடர் எண் 1967/

89. Near them in Ayanavaram in Taukers choultry, Sri. Kasi Viswanathan temple(1805) and other charities endowed by a trust setup in 1804 by two women of the Gujerati Tawker family. The Tawkers first settled in Madras in the early 18th century, their business officially opening here in 1761.

அயனாவரத்தின் பகுதியில், இன்றைய தாக்கர் சத்திரத்தில் காசி விஸ்வநாதர் கோயில் வெளிப்புறம் சுவரில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது[90]. அது கி.பி. 1806 ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு.

சிவராம டாக்கர் அவர்கள் பெயரன் மூளேசுவர டாக்கரின் மகன் விசுவநாத டாக்கர் இருபத்தேழு காணி நிலம் வாங்கியிருந்ததில் அவர் அனுமதி பெற்ற அவர் மனைவி, மகன், மருமகள் ஆகியோர் விசுவநாதபுரம் என்கிற அக்ரஹாரம் ஏற்படுத்தி அதில் காசிவிசுவநாதர், விசாலாட்சி அம்மன் ஆகிய சுவாமிகளுக்குக் கோயில் எடுப்பித்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டு வழக்குமொழியில் உள்ளது எனத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் குறிப்புத் தருகின்றனர்.

அயினாவரமென்கிற சொத்திரிய கிராமத்தில் அக்கிரஹாரம்

வாலய முதலான தற்மம் பண்ணுகுறத்துக்காக--

----------- விசுவநாதபுரமெ

ன்கிற அக்கிரஹாரம் கட்டி வைச்சு அதிலே சத்திரம் கட்டி தோட்

டம் குளம் ஸ்ரீ காசிவிசுவனாத சுவாமி

தர்மம் பண்ணி

னோம்...என, தொடர்கின்றது இக்கல்வெட்டு .

எனவே டாக்கர் காலத்தில் அயன்புரத்தில் இவர்கள் கோயில், சத்திரம் முதலியன அமைத்து அதற்கு விசுவநாத புரம் எனப்பெயர் இடுகின்றனர். அவர்களுக்குப்பின்னர், விசுவநாதபுரம்என்ற பெயர் மறைந்து, இவர்கள் கட்டிய சத்திரத்தின் பெயர் இப்பகுதியின் பெயராக நிலைத்ததையுணரமுடிகிறது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1806. எனவே கி.பி. 1806 க்கு பின்னர் தோற்றம் பெற்ற பெயர் இது என்பதும் தெளிவு பெறுகிறது.

**ஊர்ப்பெயர்- டாக்கர் சத்திரம்**

**காரணம்- ஆட்பெயர் அல்லது குடும்பப்பெயர்.**

## 70.தாடண்டர் நகர்

சைதாப்பேட்டையில் உருவாக்கப்பட்ட குடியிருப்பின் பகுதி, தாடண்டர் நகர் என்றழைக்கப் பெறுகிறது. சார்லஸ் தாடண்டரை

90. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் தொடர் எண் 1967/181

நினைவூட்டும் பெயர் இது[91]

**ஊர்ப்பெயர்- தாடண்டர் நகர்**

**காரணம்-ஆட்பெயர்**

## 71. தாதன் குப்பம்

பெரம்பூர் அடுத்து இருக்கும் குடியிருப்பு. ஆட்பெயராக இருக்க வாய்ப்புள்ளது. பிற தெளிவில்லை. குப்பம் சிறிய குடியிருப்பு எனக்காட்டுகிறது.

**ஊர்ப்பெயர்- தாதன் குப்பம்**

**காரணம்- ஆட்பெயர்**

## 72. தியாகராயநகர்

மாம்பலத்தின் ஒருபகுதி இப்பெயரால் அழைக்கப்படுகிறது. 1919 ஆம் ஆண்டு உருவாக்கிய அமைப்புத் திட்டத்தின்படி, சென்னை மாநகராட்சிப் பொறுப்பை நிறைவேற்றும் முதல் ஆணையாளராகப் பொறுப்பு ஏற்றவர் சர். 'பி.தியாகராயச் செட்டியார் ஆவார். இவர் இப்பொறுப்பைச் சிறப்புடன் நிறைவேற்றி நலன்கள் புரிந்தார். இவர் பெயரால் இப்பகுதி அழைக்கப்படுகிறது. 1922 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது இக்குடியிருப்பு[92]

**ஊர்ப்பெயர்- தியாகராய நகர்**

**காரணம்- ஆட்பெயர்**

## 73. திருமங்கலம்*

## 74. திருவல்லிக்கேணி

சென்னையின் பழம் சிறப்பு வாய்ந்த ஊர்களுள் ஒன்று மயிலாப்பூர். இது அன்று மிகப் பெரிய ஊராக இருந்தது. பின்னர்

---

91. Just before the bridge there are on the left of the road, the original buildings of one of the first modern teachers trainging colleges in this part of the world an institution whose doors first opened in 1856 and which will ever be associated with the name of Charles Todhunter - who is remembered in the name of a housing colony here. Madras Discovered -p- 64

92. சென்னை மாநகர்- ப.215

* பார்க்க அண்ணா நகர்

அதன் பகுதிகள் ஒவ்வொன்றாகத் தனிக்குடியிருப்பாக மாறி, தனி ஊர்ப்பெயராலும் குறிக்கப்பட்டுச் சிறக்கத் தொடங்கின. இவற்றுள் முதன்மை வாய்ந்தது, முதலில் பிரிந்தது திருவல்லிக்கேணி.

பேயாழ்வார், திருமழிசையாழ்வாரின் பாடல்கள் இவ்வூர் தொடர்பான முதற் குறிப்பாக அமைகின்றன. இவற்றிற்கு முன்னர் இப்பகுதியின் தன்மை குறித்தோ, இப்பெயர் குறித்தோ எந்த வித விளக்கமும் இல்லை. எனினும் மயிலையின் ஒரு பகுதி என்ற உணர்வினை இப்பாக்கள் மூலமாக நாம் பெறும்போது, மயிலையின் பழைய வரலாற்றிலேயே இதன் வரலாறும் அடங்கி விடும் தன்மை புலமைவதை உணரக் கூடுகிறது.

பேயாழ்வார்,

**வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள வெண்முத்தம்**

**அந்தி விளக்கும் மணி விளக்காம்-எந்தை**

**ஒரு வல்லித்தாமரையாள் ஒன்றிய சீர்மார்வன்**

**திருவல்லிக்கேணியான் சென்று**

என்கின்றார்[93]. திருமால் திருவல்லிக்கேணியனாகக் கருதப்பட்டான் என்ற நிலையில் இங்குக்கோயில் இருந்தமையை அறிய முடிகிறது. இங்கு மக்கள் வாழ்ந்திருக்கலாம் என்ற உணர்வும் இங்கேயே வெளிப்படத் தொடங்குகிறது.

திருமழிசையாழ்வார்,

**தாளாலுலகம் அளந்த அசைவே கொல்**

**வாளா கிடந்தருளும் வாய் திறவான் -நீளோதம்**

**வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்**

**ஐந்தணைவாய் நாகத்தணை**

என இயம்பும் தன்மையில்[94] திருமாலின் கோலம், பள்ளி கொண்ட கோலம் தெரிகிறது. எனவே இவர்கள் காலத்தில் திருவல்லிக்கேணியில் திருமால் கோயில் இருந்தமை; அக்கோயிலின் இறைவன் கிடந்த கோலத்தைக் கொண்டு திகழ்ந்தமை தெளிவு பெறுகிறது.

மேலும் மாமயிலை மாவல்லிக் கேணியான் என்ற கருத்து மயிலையின் ஒரு பகுதி மாவல்லிக்கேணி என்பதை உணரச்

---

93. பேயாழ்வார்- மூன்றாம் திருவந்தாதி-16.

94. திருமழிசை யாழ்வார் - நான்முகன் திருவந்தாதி -ப-35

செய்கிறது. மயிலாப்பூர் சிவத்தலம், இப்பகுதி திருமால்தலம். எனவே மயிலாப்பூரில் இருந்த வைணவர்கள் தங்கள் இறைவனுக்கு என்று தனியே கோயில் கட்டிக் கொண்டு, இப்பகுதியில் கோயிலைச் சுற்றி வாழத் தொடங்கிய நிலையில், பின்னர் இப்பகுதி தனி ஊராகத் திகழத் தொடங்கியிருக்கலாம் என்பது இங்கு எழுகின்ற எண்ணம். எனினும் அதுவரையிலும் மயிலையின் ஒரு பகுதியாகவே இது திகழ்ந்துள்ளது என்பதையே இப்பாடலடிகள் சுட்டுகின்றன.

முதல் குறிப்புகளாகக் கிடைக்கும் இப்பாடல்களில் கோயில் பற்றிய பிற செய்திகளோ, திருவல்லிக்கேணி என்ற ஊர் பற்றியோ எதுவும் தெரியவில்லை.

திருமங்கையாழ்வாரின் பாடல்கள் மேலும் சில செய்திகளைத் தருகின்றன.

**குரவமே கமழும் குளிர் பொழிலூடு குயிலொடு மயில்கள் நின்றால**

**இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் திருவல்லிக்கேணி (2-3-7)**

எனச்சுட்டும் இவர்,

**மன்னு தண் பொழிலும் வாவியும் மதிளும் மாடமாளிகையும்**

**தென்னன் தொண்டையர் கோன் செய்த நன்மயிலைத்**

**திருவல்லிக்கேணி நின்றானை (2-3-10)**

என, தென்னன் தொண்டையர் கோன் திருப்பணி செய்தான் என்ற வரலாற்றுச் செய்தியையும் தருகின்றார்.

அடர்ந்த சோலை சூழ்ந்த பகுதியாக இருந்த திருவல்லிக்கேணியில், திருமங்கையாழ்வாருக்கு முன்னரேயே தென்னன் தொண்டையர்கோன் சில நற்பணிகளைப் புரிந்துள்ளான் என்புதை இப்பாடல் விளக்கி நிற்கிறது. ஆயின் பேயாழ்வாரும், திருமழிசையாழ்வாரும் இது பற்றி ஏதும் குறிப்பிட வில்லை.

ஆழ்வார்கள் காலநிலை நூலாசிரியர் மு.இராகவையங்கார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் இருவரும் கி.பி.5,6,7 -ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்கள்; திருமங்கையாழ்வார் 7,8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்று கூறுகின்றார்.[95]

95. ஆழ்வார்கள் கால நிலை ப-61

எனவே பேயாழ்வாரும், திருமழிசையாழ்வாரும் குறிப்பிடாத இந்த வரலாற்றுச் செய்தியை, திருமங்கையாழ்வார் குறிப்பிடும் தன்மை முதலிருவர் காலத்தில் இக்கோயில் சிறு கோயிலாகத் தோற்றம் பெறத் தொடங்கிய நிலை அமைய அவர்களுக்குப்பின்னர், திருமங்கையாழ்வாருக்கு முன்னர் தென்னன் தொண்டையர் கோனால் பல திருப்பணிகள் இங்குச் செய்யப்பட்டன என்பதை அறிவிக்கிறது எனக் கொள்ளலாம்.

இதற்கும் விளக்கம் அளிக்கின்றார் மு.இராகவையங்கார். திருமங்கை மன்னன் தம் திருவல்லிக்கேணித் திருப்பதிகத்தில்,

**மன்னு தண் பொழிலும் வாவியும் மதிலும்**
**மாட மாளிகையும் மண்டபமும்**
**தென்னன் தொண்டையர் கோன் செய்த நன்மயிலைத்**
**திருவல்லிக்கேணி நின்றானை**

என்று அருளிச் செய்கின்றார். இதனுள் திருவல்லிக்கேணிக்குப் பல திருப்பணிகளும் செய்து அத்தலத்தைச் சிறப்பித்த தொண்டையர் கோனான பல்லவேந்திரன் பற்றிக் கூறுதல் காணலாம். இப்பெரியார் 6,7 ஆம் நூற்றாண்டுகளின் பின் முன் பகுதிகளிலும், இவர்க்கு மூத்தவர்களும் முக்காலமும் உணர்ந்த இருடிகளுமான முதலாழ்வார் மூவரும் 5,6 ஆம் நூற்றாண்டுகளின் முன் பின் பகுதிகளிலும் எழுந்தருளிருந்தவர்கள் என்று மேற்கூறிய செய்திகளைக் கொண்டு துணிவதில் எவ்வகை தடையும் நிற்க இடமில்லை. கோயிற்கர்ப்ப கிருகத்திற் கண்டறியப் பட்ட சிலா சாசனமொன்று 780 இல் பட்டம் பெற்ற நந்திவர்மனது12 ஆம் வருஷத்து அமைந்ததாக உள்ளது. இச்சாசனப் போக்கினின்று திருவல்லிக்கேணி கோயில் நந்திவர்மன் காலத்துக்கு முன்னதாகவே எல்லா திருப்பணிகளும் நிரம்பியிருந்ததாகவே தோற்றக் கூடியது. அதனால் மேற்பாசுரம் கூறுமாறு வாவி, மதில், மாடமாளிகை, மண்டபம் முதலியன புதியனவாக நிருமித்துத் திருவல்லிக்கேணியைச் சிறப்பித்த பல்லவன், அத்தந்தியின் தந்தையும், பரம பாகவதனுமான பல்லவமல்லனாகக் கருத இடமுண்டு.[96]

எனவே இக்கல்வெட்டு, தந்திவர்மன் காலத்தில் கோயில் சிறப்பு பெற்றும் இப்பகுதி மக்கள் குடியிருப்புப்பகுதியாகவும் விளங்கியதை அடையாளம் காட்டுகிறது. தந்திவர்மன் (கி.பி.778-825) காலத்திற்கு முன் இக்கோயில் பணிகளும்

---

96 ஆழ்வார்கள் கால நிலை -ப-61

ஊர்ப்பணிகளும் முடிந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. மேலும் மாதர்கள் வாழும் திருவல்லிக்கேணி எனப்பாடும் திருமங்கையாழ்வாரும் இவர் காலத்தவர். தந்திவர்மன் செய்த கோயிற் பணிகளாகப்பல காணப்படினும் திருவல்லிக்கேணி கோயில் பற்றிய செய்திகள் எதுவும் இல்லை.[97] மேலும் தந்திவர்மன் வரகுண பாண்டியன் (கி.பி.800-830) என்ற பாண்டியனை எதிர்த்தமையும், வென்ற வரகுண பாண்டியன் பல்லவர் பெரு நாட்டைச் சேர்ந்த சோழநாடு முழுவதையும் கைப்பற்றியதோடு நில்லாமல் தொண்டை நாட்டில் பெண்ணையாற்றங்கரை வரை உள்ள நாட்டையும் பிடித்துக் கொண்டான் என்பதை நன்குணரலாம் என்கின்ற கருத்தும் தெரிகிறது.[98] தென்னன் தொண்டையர்கோன் என்ற பெயர் இவர்கள் இருவருக்கும் வர வாய்ப்பில்லை. எனவே தந்திவர்மனுக்குத் தந்தையாகிய இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் (கி.பி.710-775) இப்பணி நடைபெற்றிருக்கலாம் என்பது பொருத்தமாக அமைகிறது.

இரண்டாம் நந்திவர்மன் 65 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தவன். இவன் ஆட்சிக்கால வரலாற்றை வெளிப்படுத்துவனவற்றுள் பல்வேறு பட்டயங்களும் திருமங்கையாழ்வார் பாடல்களும் அடங்கும் என்கின்றார் இராசமாணிக்கம் பிள்ளை.[99]

இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் நடைபெற்ற போரில் உதயசந்திரன் உதவியமையும், பல்லவன் வெற்றி பெற்றமையும் வரலாறு காட்டும் நிகழ்ச்சியாகும். எனவே இரண்டாம் நந்திவர்மன் தென்னன் தொண்டைமான் என்று அழைக்கப்பட்டு இருக்க வாய்ப்பு அமைகிறது. மேலும் இவன் சிறந்த வைணவன்.[100] இவன் ஆட்சியில் பல கோயில்கள் நாடெங்கும் கட்டப்பட்டன. இவன் திருப்பணிசெய்ததாகத் திருவல்லிக்கேணியில் செய்தி கிடைக்க வில்லை என்பது தெளிவு எனினும் இவனது தமிழ் மண்டலம் வடவேங்கடம் முதல் புதுக்கோட்டை வரை பரவி இருந்தது.[101] ஊர்பற்றிய செய்தி இவ்வாறு அமைய இங்குள்ள கோயில், இறைவன் பற்றிய செய்திகளும் சில கிடைக்கின்றன. பள்ளி கொண்ட கோலமே முதலில் நமக்குத் கிடைக்கின்றது. திருமழிசை

97. பல்லவர் வரலாறு- ப.194
98. பல்லவர் வரலாறு -ப.193
99. பல்லவர் வரலாறு-ப.177
100. பல்லவர் வரலாறு ப. 186
101. பல்லவர் வரலாறு ப. 186

ஆழ்வார் பள்ளி கொண்ட பெருமாளை மட்டுமே பாடுகின்றார்.

திருமங்கையாழ்வார் பாடல்களில் திருமால், தெள்ளிய சிங்கப் பெருமாள், பார்த்தசாரதி, கண்ணன் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். எனவே திருமங்கையாழ்வார் பாடும்போது இங்கு இம்மூர்த்தி இல்லையா? திருமழிசையாழ்வார் பாடல்பெற்ற மூர்த்தி தனியே கோயிலில் இருந்தாரா? என்ற ஐயங்கள் இங்கு எழுகின்றன.

இங்கு இன்று பார்த்தசாரதிப் பெருமாளே முதன்மையாக இருக்கின்றார். பள்ளி கொண்ட பெருமாள் சந்நிதியும் உள்ளது. மேலும் கஜேந்திர வரதர், தெளிசிங்கப் பெருமாள் (நரசிம்மர்) இராமர் மூவரும் இடம் பெற்றுள்ளனர்.

எனவே, திருமங்கையாழ்வார் பாடல்களில் இடம் பெற்ற மூர்த்திகளே இன்றும் காணப்படுகின்றனர். இவர்களின் பழமை எண்ணத்தக்கது மட்டுமின்றி ஏன் பள்ளி கொண்ட பெருமாள் பாடல் பெறவில்லை.? இந்த அரங்கரே ஆதியில் இக்கோயிலில் இருந்தவர் ஆவார் என்பது அறிஞர் கருத்து. இந்நிலையில் இங்குக்கிடைக்கும் கல்வெட்டுகள் ஆராய்வதற்குரியன ஆகின்றன. இங்குக்கிடைக்கும் 91 கல்வெட்டுகளில்[102] சில கல்வெட்டுகளே சில செய்திகளை இனங்காட்டுகின்றன. பிற அனைத்தும் தெளிவில்லாதவை.

தந்திவர்மன் கல்வெட்டு பழமையானது. இக்கல்வெட்டு பார்த்தசாரதி கோயிலின் கருவறையின் நுழை வாயிலின் வடபால் ஒரு கல்லில் உள்ளது என்ற செய்தியைச் சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் நூல் தருகிறது (தொடர் எண் 1967/1). எனவே திருமங்கையாழ்வார் பாடிய பார்த்தசாரதி அன்றே கோயில் கொண்டிருந்திருக்கிறார் என்பது புலப்படுகிறது.

சென்னை மாநகர்க் கல்வெட்டுத் தொடரில் 79 ஆவது கல்வெட்டு பார்த்தசாரதி கோயில் மணவாள மாமுனி சந்நிதியின் வெளிப்புறச் சுவரில் அமைந்துள்ளது. கி.பி.1309 ஆவது ஆண்டு கல்வெட்டு இது. புலியூர்க் கோட்டத்து எழுமூர் நாட்டில் எழுந்தருளியுள்ள தெள்ளிய சிங்க நாயனார்க்கு நிலம் விற்றுக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.

கி.பி.1564- ஐச் சார்ந்த இன்னுமொரு கல்வெட்டு, தெள்ளிய சிங்கப் பெருமாளின் தாசன் செய்த நற் செயல்கள் பற்றியது (1967/

---

102. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் தொடர் எண் 1967-1971

*81.) 1599* சார்ந்த ஒரு கல்வெட்டும் தெள்ளிய சிங்கப் பெருமாள் தொடர்பானதே (1967/81.). எனவே இவையனைத்தையும் நோக்க, இடைக்காலத்தில் இக்கோயிலில் தெள்ளிய சிங்கப் பெருமாளே தனிச்சிறப்புப் பெற்று விளங்கியுள்ளார் என்பது தெரிகிறது. இன்று பார்த்தசாரதியே குறிப்பாகச் சுட்டப்படுகின்றார். எனவே அனைத்தும் திருமாலின் பலவடிவங்கள் எனினும் ஒவ்வொரு காலச் சூழலிலும் ஒவ்வொரு வடிவத்தைச் சிறப்புடன் வழிபட்டுள்ளனர் என்பதை உணரக்கூடுகிறது.

இந்நிலையில் திருமங்கையாழ்வார் காலத்திற்கு முன்பு பள்ளி கொண்ட பெருமாள் சிறப்புற்றுப் பேசப்பட, இவர் காலத்தில் இந்த நால்வரும் சிறப்புடன் கோயில் கொண்டாரோ என்ற எண்ணம் தோன்றுகிறது. இருப்பினும் பள்ளி கொண்ட பெருமாள் அங்கு இருப்பின், சுட்டியாவது சென்றிருப்பர் எனவே முதலில் உள்ள கோயில் தனியே இருந்திருக்கலாம். பின்னர் இந்நால்வரும் இன்று காணப்படும் இக்கோயிலில் அமைக்கப்பட்டு இருக்கலாம். அப்படி எனில் இன்று பள்ளி கொண்ட பெருமாளும் இங்குக் காணப்படுகின்றாரே என்ற கேள்விக்கு விடை தருகிறது மற்றொரு கல்வெட்டு. கி.பி.1564 ஐச் சார்ந்தது இக்கல்வெட்டு (1967/81) 'தெள்ளிய சிங்கப் பெருமாளின் அடியாளான நரசிங்கதாஸன் என்பவர் பள்ளி கொண்ட பெருமாள், மகாலட்சுமியார் பூதேவியார், நரசிங்கபெருமாள் ---- ஆகிய சுவாமிகளை எழுந்தருளச் செய்ததையும், வேத வல்லி நாச்சியாருக்கு உற்சவத்திருமேனி செய்தளித்ததையும், பள்ளி கொண்ட பெருமாள் கோயில், கிருஷ்ணன் கோயில், முன் மண்டபம்------ ஆகியவைகளை ஏற்படுத்தியதையும் திருவாபரணங்கள் அளித்ததையும் குறிக்கிறது' என்ற செய்தியைச் சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் தருகிறது.

எனவே அதுவரையிலும் இக் கோயிலில் இடம் பெறாத பள்ளி கொண்ட பெருமாள் இவரால் இங்குப் பிரதிஷ்டைச் செய்யப்படுகிறார். இவர் பழைய கோயிலில் காணப்பட்ட திருமழிசையாழ்வாரால் பாடல் பெற்ற பள்ளி கொண்ட பெருமாளா? இல்லை புதியவரா என்பது போன்ற விளக்கங்கள் கிடைக்கவில்லை. இன்று இக்கோயில் மேலும் வளர்ச்சியடைந்து புகழ் பெற்று விளங்குகிறது.

மயிலையின் பகுதியாக இருந்து பின்னர் தனிக் குடியிருப்பாக மாறிய திருவல்லிக்கேணி, அரசியல் நிர்வாகத்திற்கு ஏற்ப, ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு பகுதியின் கீழ்

இருந்தமையைக் கல்வெட்டுகள் தருகின்றன.

மயிலைத் திருவல்லிக்கேணியாக முதலில் இருந்ததைக் கண்டோம்.

கி.பி. 808 ஆம் ஆண்டு தந்திவர்மன் கல்வெட்டில் இது திருவல்லிக்கேணி எனக் குறிப்பிடப்படுகிறது[103].

கி.பி. 1309.ஐச் சார்ந்த கல்வெட்டு புலியூர் கோட்டத்தில் எழுமூர் நாட்டில் தெள்ளிய சிங்கநாயனார் திருவிடையாட்டமான புதுப்பாக்கத்தில்[104] எனச் சுட்டும்தன்மை இதன் பழமையைக் காட்டுகிறது. புதுப்பாக்கம் திருவல்லிக்கேணியுடன் எழுமூர் நாட்டின் பகுதியாக இருந்திருக்கலாம் என தோன்றுகிறது. கி.பி.16 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு[105]. செய்யங்கொண்ட சோழ மண்.....த்தில் புலியூர் கோட்டத்தில் எழுமூர் நாட்டில் திருவல்லிக்கேணி, என்ற குறிப்பைத் தருகிறது. கி.பி.1793ஆம் ஆண்டு ஈக்காட்டுத்தாங்கலைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு [106] சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி, எனக் குறிப்பிடும் தன்மையில் இது சென்னையின் ஓர் ஊராக ஒரு பகுதியாகத் திகழத்தொடங்கியது தெரிகிறது.

இதுபுனிதஜார்ஜ் கோட்டையுடன் கி.பி.1672இல் சேர்க்கப் பட்டதைச் சென்னையின் பின் வரலாறுகள் தெளிவாக்குகின்றன.

இதனைப் பற்றிய விளக்கத்தை Vestiges of Old Madras என்ற நூலில் பரக்கக் காணலாம் (ப.349).

இத்தகைய பழம் சிறப்பு வாய்ந்த திருவல்லிக்கேணியின் பெயரின் எளிமை, தெளிவு காரணமாக இப்பெயரில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. இவ்வூரைப் பற்றிய முதல் குறிப்புகளே மாவல்லிக்கேணி, திருவல்லிக்கேணி என இதன் சிறப்பையும், பெருமையையும் சுட்டும் நிலையில் அமைந்தன. இன்று மாவல்லிக்கேணி என்பது மறைந்து திருவல்லிக்கேணி நிலைபெற்றுவிட்டது. மாவல்லிக்கேணி என்பது இயற்கைப் பெயர். மயிலையின் ஒரு பகுதியில் அல்லிக்கேணி இருக்க, இது முதலில் இடப்பெயராகி, பின்னர் குடியிருப்புக் காரணமாக

---

103. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்- தொடர் எண் 1967/1

104. ,, ,, 1967/81டி

105. ,, ,, 1967/79

106. ,, ,, 1967/210

ஊர்ப்பெயராகத் திகழத் தொடங்கிற்று. கோயில் சிறப்பு, ஊரையும் சிறப்பிக்கத் தொடங்கியுள்ளது எனக் கருதுதல் இயலுகிறது.

**ஊர் பெயர்- திருவல்லிக்கேணி**

**காரணம்-இயற்கை (அல்லிநிறைந்த கேணி,நீர்நிலை)**

## 75.திருவான்மியூர்

திருவான்மியூர் தலம் குறித்த செய்திகளை அறிய அவ்வூர் தொடர்பான இலக்கியங்கள் உதவுகின்றன. ஞானசம்பந்தரின் தேவாரப்பதிகங்கள், திருநாவுக்கரசரின் பதிகம், சேக்கிழாரின் கூற்று, அருணகிரிநாதரின் திருவான்மியூர் தலப் புராணம், திருப்புகழ், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், அருட்கவிசேதுராமன் பாடல்கள் இவ்வூரைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. இவற்றுள் இடைக்கால இலக்கியங்களும் திருவான்மியூர் தலபுராணமுமே ஊர்ப் பெயர்க் காரணம் காண துணையாகின்றன. இங்குள்ள கோயில் கல்வெட்டுகளும் இவ்வூர் தொடர்பான பிற கல்வெட்டுகளும் இவ்வாய்வுக்கு உதவுகின்றன. பிற எந்த இலக்கியமும் சுட்டாத திருவான்மியூரின் பெயர்க் காரணத்தைத் திருவான்மியூர் தலபுராணம் தருகிறது.[107]

புற்றிலிருந்து வெளிவந்ததால் வான்மிகர் என்ற பெயர் பெற்ற முனிவர் வான்மீகிமுனிவர். இராமர் காவியத்தைப் படைத்த பின்னர் மார்க்கண்டேயர் சிவ பூசையின் சிறப்பினை எடுத்து இயம்புகின்றார். அதனைக் கேட்டு, இந்திய நாட்டு புண்ணியத் தலங்களை வழிபட கிளம்பிய வான்மீகி இவ்வூரில் வன்னி மரத்தடியில் சுயம்புலிங்கத்தை வழிபடும் போது, ஈசன் அவருக்குக் காட்சியளித்து வரங்களை அளிக்கின்றார். அப்போது முனிவர் தங்களது தரிசனம் எனக்குக் கிடைத்த இவ்விடம் அடியேன் பெயரால் என்றும் வழங்கப்படவேண்டும். இப்புண்ணிய தலத்தில் பிறக்கும் அனைத்து உயிர்களும் வீடுபேறு அடையவேண்டும். தாங்கள் உமையன்னையுடன் இப்பகுதியில் கோயில் கொண்டு என்றென்றும் விளங்க வேண்டும் என்று விண்ணப்பிக்க, வரங்களை அளிக்கின்றார் சிவபெருமான் .

எனவே வான்மீகரின் விருப்பப்படி, சிவபெருமான் அளித்த வரத்தின் படி இப்பெயர் இவ்வூருக்கு அமைந்தது என்பது

---

107. வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசன்-பக்-43,44,

இத்தலபுராணத்தின் வாயிலாகத் தெரிய வருகின்ற ஊர்ப்பெயர்க் காரணமாகும்.

பின்னர் எழுந்த நூல்கள் பலவும் தலபுராணம் சுட்டும் இக்கருத்து உண்மையானதா அல்லது கற்பனையானதா என்று எதுவும் சிந்தியாது வழிவழியாக வான்மீகியுடன் தொடர்பு படுத்தியே பெயர்க்காரணத்தை எழுதி வருகின்றனர்.[108] கற்பனையிணையப் படைக்கப்படும் இலக்கியங்களில் இம்மாதிரியான எண்ணங்களைச் சுட்டும் போது அவை கற்பனையாகவே நின்று விட வாய்ப்புண்டு. ஆனால் வரலாற்று அடிப்படையில் கோயில் பற்றியியம்பும் போதும் இப்பெயர்க் காரணங்கள் சுட்டப்படுதல் மீண்டும் ஆராயத்தக்கவையாகின்றன.

வான்மீகி இங்கு வந்தாரா? இதற்கு வரலாற்றுச்சான்று உண்டா? இவர் காரணமாகத் தான் கோயில் எழுந்ததா? போன்ற சிந்தனைகளை எழுப்பும் நேரத்தில் இக்கருத்து கற்பனை எனில், எவ்வாறு இதனைக் கற்பனை என உறுதிப் படுத்துவது? அப்படி என்றால் உண்மையான பெயர்க்காரணம் என்ன? அதனை எவ்வாறு அணுகுவது போன்ற வினாக்கள் எழுகின்றன.

'திருவான்மியூர் தலபுராணம் முதலில் வடமொழியில் தோன்றியது. அதனை மொழி பெயர்த்து வெளியிட்ட பெருமை ஸ்ரீ அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியாருக்கு உரியது 19 படலங்களும், 1022 விருத்தங்களும் உடைய இத் தலபுராணம் 1895.இல் சென்னை இந்து யூனியன் அச்சுக் கூடத்தில் அச்சாகியது.

---

108. இத்தலத்தில் வான்மீகி முனிவர் வழிபாடு ஆற்றிப் பேறு பெற்றார். இக்காரணம் பற்றி இத்தலம் திருவான்மியூர் எனப்பெயர் பெற்றது - தொண்டை நாட்டுப் பாடல் பெற்றசிவத்தலங்கள் - ப.264

இராமாயணத்தைப் பாடி முடித்த வான்மீகி முனிவர் தாமும் இராமபிரானைப் போல் சிவ பூஜை செய்ய விரும்பினார். தன் விருப்பத்தை மார்க்கண்டேயன் மகரிஷிடம் தெரிவிக்க அவர் சிவபூஜை செய்வதன் சிறப்பினையும், முறையினையும் வான்மீகிக்கு எடுத்துரைத்துத் தென்திசை செல்லுமாறு பணித்தார். தென்திசை வந்த வான்மீகி இப்பகுதியில் வன்னி மரத்தடியில் அமர்ந்து சிவ பூஜை செய்து தவம் இயற்றியதால் இப்பகுதியில் அமைந்த ஊர் வான்மீகியூர் என்று பெயர் பெற்று நாளடைவில் திருவான்மியூர் ஆயிற்று என்பர். தமிழக ஊர்களின் பெயர்க்காரணங்களும் சிறப்புகளும் - பாகம்-2, ப.193

வான்மீகம் என்றால் புற்று. அப்படியானால் புற்றில் சிவலிங்கம் இருப்பதாகக் கேட்கக்கூடாது. தவம் செய்து கொண்டே இருந்து புற்று மூடியதும் அறியாது இருந்தவர் வான்மீகி முனிவர். அவர் பெயரால் இவ்வூருக்கு வாழ்வு வந்தது. சென்னைக் கோயில்கள் - புக்.82.

இந்த இரண்டு நூல்களும் இப்பொழுது கிடைப்பது அரிதாக உள்ளது. அதனை உரைநடையில் சுருக்கமாக எழுதி வெளியிட்டுள்ளனர்' என்பது திருவான்மியூர் தலபுராணம் தொடர்பான எண்ணமாக அமைகிறது.[109]

இத்தலபுராணத்தில் அமையும் தொண்டை நாட்டு வருணனை ஊர் வருணனை இவற்றைக் காண இப்பகுதியைப் பற்றி நன்கு தெரிந்த ஒருவரால் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. மேலும் இதனுள் திருவள்ளுவர் தோற்றம் பெற்றமை, சம்பந்தர் தொடர்பு, சேக்கிழார் பிறந்தமை போன்றவை சுட்டப்படும் நிலையில் இத்தல புராணம் சேக்கிழார் காலத்திற்குப் பின்னர் எழுந்தது என்பதும் தெரிகிறது. எனவே திருவான்மியூர் புகழ் பெற்ற பின்னர் இத்தல புராணம் எழுதப்பட்டு இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

இந்நிலையில் இவ்வூர்ப்பெயர்க்காரணம் கற்பனையாகவே அல்லது உண்மையாகவே இருப்பினும் அதுவும் பிற்காலத்ததா? அல்லது பண்டு தொட்டே இக்காரணம் சுட்டப்பட்டு வந்ததா? என்பதையும் நாம் நோக்க வேண்டும். மேலும் வான்மீகி முனிவரே தம்பெயரை அவ்வூருக்கு வைக்கச் சொல்கின்றார் எனில் அவ்வூருக்கு அவர் வந்து வழிபட்டுச் செல்லும் வரை, அவ்வூர் பெயரில்லாது இருந்ததா என்பது கேள்வி. எனில் அங்கே இருந்த சுயம்புலிங்கத்தை முதலில் இவர்தான் வழிபட்டாரா? அதற்கு முன் இந்த இடம் வழிபாட்டுத் தலமாக இல்லையா போன்ற வினாக்கட்கும் விடை கிடைக்க வேண்டும். இதற்கு விடை தேட முற்படுகையில் இத்தலபுராணத்திற்கு முன்னைய செய்திகளை ஆராய வேண்டிய நிலை அமைகிறது. தொண்டை நாட்டைப் பற்றிய செய்திகள் சில சங்கப்பாக்கள் மூலம் தெரிய வருகின்றன. இச்செய்திகளில் இன்றைய சென்னைப் பகுதி குறித்த எந்த விதக் கருத்தையும் காணல் இயலவில்லை. திருவான்மியூர் பற்றியும் எந்த வித எண்ணமும் தெளிவு பெறவில்லை. வான்மியூர் பற்றியச் செய்தியை முதன் முதலில் நமக்குத் தருவன தேவாரப்பாக்களே. இவ்வூரைத் திருஞான சம்பந்தர் இரண்டு பதிகங்களிலும் திருநாவுக்கரசர் ஒரு பதிகத்திலும் பாடிச் சென்றுள்ளனர்.

இவர்கள் பாடல்கள் விளக்கும் செய்திகள், இவர்கள் இங்கு வந்து இறைவனை வழிபடும் போதே இவ்வூர் சிறந்ததொரு ஊராக, மக்கள் வாழிடமாக இருந்தது என்பதைத் தெளிவாக்குகின்றன.

சம்பந்தரின் பதிகத்தில் (140) முதலிரண்டு வரிகள் இத்தலம்

---

109. வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசன். பக். 32

பற்றிய வருணனையாக அமைகிறது.

திருவான்மியூர்க் கடற்கரைத் தலம்.

**கரை யுலாங் கடலிற் பொழி சங்கம் வெள்ளப்பிவன்**
**திரை யுலாங் மீன் உகளுந் திருவான்மியூர்**

மூர்த்தி அர்ச்சிக்கப்படும் நிலையில் அமைந்தவர்.

**சந்துயர்ந்தெழு காரகில் தண்புனல் கொண்டு தம்**
**சிந்தை செய்தடியார் பரவுந் திருவான்மியூர்**
சோலைகள் சூழ்ந்த தலம்.

**கானயங்கிய தண்கழி சூழ் கடலின் புறம்**
**தேனயங்கிய பைம் பொழில் சூழ் திருவான்மியூர்**
உயர்ந்த மாடங்களையுடைய மாளிகைகள் நிறைந்த ஊர்.

**மஞ்சுலாவிய மாடமதிற் பொலி மாளிகைச்**
**செஞ்சொலார்கள் தாம் பயிலுந் திருவான்மியூர்**

சிறப்புடைய மங்கையர் இருந்த அவ்வூர் மதில்கள் உறுதியானவை .

**மண்ணினிற் புகழ் பெற்றவர் மங்கையர் தாம்பயில்**
**திண்ணெனப் புரிசைத் தொழிலார் திருவான்மியூர்**

மதில்களின் பக்கங்களில் அந்தணர்களின் ஓதுதல் ஒலி கேட்டுக் கொண்டு இருக்கும்.

**போதுலாவிய தண் பொழில்சூழ் புரிசைப்புறம்**
**தீ திலந்தணர் ஒத்தொழியாத் திருவான்மியூர்**

கடல் வளம், அதனால் புகழும் செல்வமும் நிறைந்த ஊர்.

**பொருது வளர் கடலெண்டிசையுந் தருவாரியால்**
**திரிதரும் செல்வம் மல்கும் திருவான்மியூர்**

சோலையில் வண்டினங்களுடன், தவத் தொழிலாளரின் இசையும் சேர்ந்து ஒலிக்கும்.

**மைதழைத் தெழு சோலையில் மாலை சேர் வண்டினம்**
**செய்தவத் தொழிலாளரிசை சேர் திருவான்மியூர்**

இங்கு இறைவியுடன் இறைவன் வீற்றிருக்கின்றான்.

**திருவான்மியூர்த் தொக்க மாதொடும் வீற்றிருந்தீர்**

இக்கருத்துக்கள் சிறந்த அமைதியான பாதுகாப்பான வாழ்விடமாகத் திருவான்மியூர்த் திகழ்ந்ததைக் காட்டுகின்றன.

அடுத்த பதிகம் (3-313),

**திரையார் தெண்கடல் சூழ்**
**செடியார் மாதவி சூழ்**
**செய்யார் செங்கயல் பாய்ச்ச**
**திண்ணார் வண் புரிசை**
**சேதமில்லாத், தேனார் சோலைகள் சூழ்**
**செறிவார் மாமதில் சூழ்**
**திண்டேர் விதியதார்**
**சென்றார் தம் இடர் தீர்,**

என, திருவான்மியூரின் வருணனையைத் தருகிறது. மேலே சுட்டிய எண்ணங்கள் மீண்டும் இங்கு உறுதிப்படுத்தப் படுகின்றன.

திருநாவுக்கரசரின் பதிகமும் (5-82) திருவான்மியூரின் சிறப்பைக் காட்டும் வண்ணமே அமைகின்றது.

வண்டு சேர் பொழில் உடையது வான்மியூர், தூமொழி யாரவர் வணங்கும் தன்மையுடையது என்பதுடன், நாண்மலர் தூவி வழிபடும் வழிபாட்டுத் தன்மையையும் இயம்புகின்றார் இவர்.

**அஞ்சி நாண்மலர் தூவி அழுதீரேல்**
**வஞ்சம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே (82-6)**
**நாண்மலர் தூவி வலஞ் செயில்**
**வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே (82-9).**

இறைச் சிறப்பு உண்மையானது. கடல் வளம், வாணிபம், மக்கள் மாளிகையில் வசித்தமை, மதில் சூழ்ந்த ஊர் போன்றவை கற்பனையா அல்லது உண்மையா என்று எண்ணும் போது அவையும் உண்மையாகலாம் என்றே தோன்றுகிறது. ஏனெனில் இதன் அருகேயுள்ளது மயிலாப்பூர், இவ்வூர் பற்றிய எண்ணங்களும் இதனோடு ஒத்த நிலையில் உள்ளன. இறைச் சிறப்புடன் வாணிகச் சிறப்பையும், மக்கள் மகிழ்ச்சியாக விழாக் கொண்டாடி மகிழ்ந்து வாழ்ந்த நிலையையும் காண்கின்ற போது, திருவான்மியூரும் சிறந்த ஓர் ஊராக அன்றே திகழ்ந்திருத்தல் தெளிவுபடுகிறது. மேலும் இறைச் சிறப்புடன் மக்கள் வாழ்வியல் செய்திகளை மிகுதியாகக் கற்பனைக்கலக்காது பாடிச் சென்ற அக்கால் மரபையும் இங்கு எண்ணலாம்.

தேவாரப் பாக்களில் அமையும் இக்கருத்துகள் இவ்வூர் ஒரு பழமையான சிறந்த ஊர் என்ற எண்ணத்தைத் தருகின்றன. திருவான்மியூர்த் தலபுராணம் தரும் பெயர்க்காரணம் தொடர்பான

எந்தக்கருத்தையும் இங்கே நாம் காணயியல வில்லை. இப்பெயர்க் காரணம் உண்மையெனில் தமிழகம் முழுமையும் இக்காரணம் தெரிய வில்லை எனினும் அருகாமை பகுதிகளிலாவது தெரிந்திருக்க வேண்டும். திருவான்மியூரில் வாழ்ந்த மக்களுக்காவது தெரிந்திருக்க வேண்டும். தமிழகம் முழுவதும் பெரும்பாலும் சென்று பாடிய, ஒவ்வொரு ஊரைப்பற்றியும் செய்திகளை உணர்ந்து அவற்றைத் தங்கள் பாடல்களில் குறிப்பிட்டுச் செல்கின்ற தேவாரப் புலவர்களுக்கும் இக் காரணம் தெரிய வில்லை. எனவே பிற்காலத்தில் தலபுராணம் எழுதும் போது கற்பனையாக இச் செய்தியைப் புனைந்துள்ளனர் என்ற முடிவுக்கு வரல் இயலுகிறது.

சேக்கிழாரும், ஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சென்று வணங்கியமையைப்பாடும் போது அன்றைய இவ்வூரின் வளர்ச்சியைப் புலப்படுத்துகின்றார்.

*அன்பு தருவார் தங்கோயில் மணி நெடுங் கோபுரம்*

*சார்ந்தார்* திருஞான 12

*மிக்குயர்ந்த கோபுரத்தை வணங்கி வியன் திருமுன்றில்*

*புக்கருளிக் கோயிலினைப் புடைவலங் கொண்டு உள்ளணைந்து-*

திருஞான 1122

எனும் போது, நெடுங் கோபுரம், சுற்றுப் பகுதி, உள்ளே கோயில் என கோயில் அமைந்த தன்மை தெரிகிறது. சேக்கிழார் திருவான்மியூருக்கு அண்மையில் குன்றத்தூரினைச்சார்ந்தவர் என்ற நிலையில், அவர் இக் கோயிலைப் பற்றித் தெளிந்த அறிவுடன் எழுதியிருக்கிறார் என்பது புலப்படுகின்றது மேலும் கோயிற் கல்வெட்டுகளும் இவ்வளர்ச்சி உண்மையானது என்பதையே இயம்புகின்றன. பிற்காலத்து இலக்கியங்கள் இத்தலம் பற்றி இதன் புகழையியம்பினாலும் அனைத்தும் இறைத் தொடர்பையே சித்திரிக்கின்றன.

திருவான்மியூரில் அம்மன் கருவறையின் புறச்சுவர்களில் சோழர் காலத்துக் கல்வெட்டுகள் கரணக்கிடைக்கின்றன. விளக்கெரிக்க ஆடுகள் அளித்தல், நிலதானம் அளித்தல், இங்குள்ள சில பிராமணர்கள் பற்றிய குறிப்பு, மாலை தொடுக்க பொருள், நெல் தானமாக அளித்தல் என வழிபாடு தொடர்பான செய்திகளை

இவை குறிப்பிடுகின்றன.[110]

இத்தலம் பற்றி, சென்னையின் பிற பகுதிகளில் கிடைத்த கல்வெட்டுகளிலும் இத்தகைய கொடை அளித்த செய்தியே காணப்படுகிறது.[111] இவற்றின் ஊடே, திருவான்மியூர் சோழர் காலத்தில் செயங்கொண்ட சோழ மண்டலத்து புலியூர்க் கோட்டத்தில் கோட்டூர் நாட்டுத் தேவதானமாகவும் புலியூர்க் கோட்டமான குலோத்துங்கச் சோழவள நாட்டுத் திருவான் மியூராகவும் திகழ்ந்தமையும் தெரிய வருகின்ற செய்திகளாக அமைகின்றன. ஆயினும் இக்கோயில் கட்டப்பட்டமை தொடர்பான எந்தச் செய்தியும் இல்லை. மேலும் இச் சோழர் கால கல்வெட்டுகள் அனைத்தும் அம்மன் கருவறைச்சுவர்களிலேயே வெட்டப்பட்ட நிலையில் சிவன் கருவறையைச் சுற்றி ஏன் ஒரு கல்வெட்டு கூட இல்லை என்ற வினா எழுகிறது. முதலில் சோழர் காலத்தில் அம்மன் கோயில் மட்டுமே கல்லால் கட்டப்பட்டது என்பதும் சரியானதன்று. ஏனெனில் திருவான்மியூர்க் கோயிலின் சிறப்பே சிவனின் புகழை அடிப்படையாகக் கொண்டது. எனவே அம்மன் கோயிலுக்கு முன்னரேயே, சோழர் காலத்திற்கு முன்னரேயே சிவன் கோயில் கட்டப்பெற்று இருந்திருத்தல் வேண்டும். எனினும் இது பற்றிய தெளிவினைப் பெறுதல் இயலவில்லை. ஆயின் அனைத்துச் செய்திகளும் ஊரின் பழமைக்கே நம்மை இட்டுச் செல்கின்றன.

மேற்சுட்டிய செய்திகளை நோக்கும் போது இரண்டு எண்ணங்கள் தெளிவாகின்றன.

1. தலபுராணம் சுட்டிய ஊர்ப்பெயர்க்காரணம் இவற்றில் சுட்டப்படாத காரணத்தால் அக்காலத்தில் தமிழர் இக்காரணத்தைச் சுட்டுவது மரபாக இருந்திருக்கவில்லை.

2. தேவாரப்புலவர் சென்று பாடுமுன்பாகவே கோயிலும் ஊரும் சிறப்புற்று காணப்பட்ட நிலையில் இவ்வூரின் தோற்றம் பழமையானது.

தமிழக ஊர்ப்பெயர் வரலாறு என்று நோக்கும் போது, காலந்தோறும் வேறு வேறு அடிப்படையில் பெரும்பான்மையான பெயர்கள் தோற்றம் பெற்று வந்துள்ளமையைக் காண முடிகிறது. பண்டைக்காலத்தில் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய தமிழர்கள் ஊர்ப்பெயர்கள் இடுவதிலும் இயற்கைக்கே முதலிடம்

---

110. வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசன்- ப.97

111. ,, -ப.100

கொடுத்தனர். மன்னன் உயிர்த்தே மலர் தலை யுலகமாக அக்கால வாழ்வியல் இருந்த நிலையிலும் மன்னனின் பெயர்களைத் தம் குடியிருப்புகளுக்கு இடவில்லை. இறைவணக்கமும் இருந்தது. எனினும் இயற்கையே முதலிடம் பெற்றிருந்தது. பின்னர் பக்தி இயக்க காலத்தில் இறைச்சார்பு பெயர்களும், தொடர்ந்த காலத்தில் அரசன் சார்பு பெயர்களும் முக்கிய இடம் பெற்றன.

பிற்காலத்தில் ஆட்பெயர்கள் மிகுந்த செல்வாக்கு பெற்றன. இன்று வரையிலும் தொடரும் நிலையும் இதுவே. இவ்வடிப்படையைக் கொண்டும், ஊர் தோற்றம் பெற்றிருக்கக் கூடிய காலத்தைக் கொண்டும் இப்பெயர்க் காரணத்தை ஆராய முற்படும் போது தலபுராணக் காரணம் ஐயத்திற்குரியதாக அமைகிறது. திருவான்மியூரின் பழமையினை வலியுறுத்தும் மேலே கண்ட சான்றுகள் இயற்கைச் சார்பு பெயராக இது இருத்தலையே பொருத்தமானதாக ஆக்குகின்றன.

திரு+வான்+மி+ஊர்= திருவான்மியூர்

திரு என்பது பெரும்பாலும் பக்தி இயக்க காலத்திலும் அதற்குப்பின்னரும் இணைக்கப்பட்ட அடையாகவே பல ஊர்ப்பெயர்களின் வரலாற்றிலும் வெளிப்படுகின்ற காரணத்தால் முதலில் இப்பெயரும் வான்மியூர் என்று மட்டுமே இருந்திருத்தல் சரியானது.

கிடைக்கும் முதற்சான்றுகளான தேவாரப்பாக்களில் வான்மியூர் என்ற வழக்குக் காணப்படுவதாலும் இது உறுதிப்படுகிறது.

வான் என்பது தமிழ்ச் சொல் இதற்கு மரவகை என்றும் பொருள் உண்டு[112] எனவே இம்மரங்கள் மிகுந்த இடம் என்ற பொருளில் இப்பெயர் அமைந்திருக்க வாய்ப்புண்டு. ஆயின் பாடல்களில் சோலைகள் சூழ்ந்த இடம், கடற்கரைத் தலம் என்ற குறிப்புகள் உள்ளனவே தவிர, குறிப்பாக இம்மரங்கள் மிகுந்திருந்ததாக எச்சான்றும் இல்லை.

வன்னி என்பதைத்தல விருட்சமாகத் தலபுராணம் சுட்டுகிறது. இன்றும் வன்னி மரமே தலவிருட்சம். இம்மரங்கள் மிகுதியாக இருந்தமைக்கும் சான்றுகள் இல்லை. ஆயின் வன்னி மரம் தமிழகத்தில் பண்டைக் காலத்திலேயே இருந்தமையைச்

---

112. வான்-ஆகாயம், மூலப் பிரகிருதி. மேகம், மழை, தேவருலகு, அமிழ்தம், மோட்சலோகம், நன்மை, பெருமை, அழகு, வலிமை, நேர்மை, மரவகை-தமிழ் லெக்ஸிகன் -ப.3625

சிலப்பதிகாரம் உறுதிப்படுத்துகிறது.[113] எனவே வன்னியூர் என்ற பொருளில் வன்னிமீயூர் வான்மியூர் என்றாகியதா என்பதும் தோன்றும் எண்ணம்.

திரு ஆல்-மீ ஊர் என்றும் இதனைப் பிரிக்கலாம். ஆல் என்றால் நீர் என்ற பொருளும் உண்டு. எனவே நீரின் அருகில் உள்ள ஊர் என்ற பொருளில் ஆன்மியூர் பின்னர் திரு அடை இணைவில் திருவான்மியூர் என்று திரிந்ததோ என்றும் பொருள் கொள்ள இடமுண்டு.

இன்னொரு பெயர்க்காரணமும் சிந்தித்தற்குரியதாகிறது. வான்மிகம் என்பதற்குப்புற்று என்று பொருள் தருகிறது தமிழ் லெக்சிகன்[114] எனவே புற்றுகள் மிகுந்த இப்பகுதியில் முதலில் கோயில் அமைந்து பின்னர் சார்ந்து அமைந்த குடியிருப்பும் வான்மியூர் எனப்பெயர்பெற்றதோ என எண்ணிப்பார்த்தலும் பொருத்தமாக அமைகிறது. மேலும், இப்பகுதியைப் புற்றுகள் நிறைந்த பகுதியாக இன்று வரை மக்கள் சுட்டுவதும் இக்கருத்துக்கு அரணாக உள்ளது. மட்டுமல்லாது வான்மீகி முனிவர் புற்று மூடும் வரை தவம் செய்து கொண்டு இருந்தார் என்பதும் புற்றுத் தொடர்பைக் காட்டுகிறது. எனவே புற்று அடிப்படையிலும் இக்கதை புனையப் பெற்றிருக்க வாய்ப்புண்டு. எனவே ஒற்றியூர் ஊர்ப்பெயரில் ஒற்று-புற்று என்ற பொருள் தொடர்பும், கோடம்பாக்கம் கோடகன் பாக்கம், நாகம் தொடர்பு காட்டுவதும் இங்கும் புற்றுத் தொடர்பினைப் பொருத்தமாக்குகிறது. அரவாநாடும் இங்குச் சுட்டத் தக்கது.

எனவே பாம்பு புற்றுகளின் மிகுதி இவ்வூருக்கு இப் பெயரை அளிக்க மிகுந்த வாய்ப்பினை அளிக்கின்றது என்ற நிலையில் இப்பெயரினை எண்ணலாம்.

***ஊர்ப்பெயர்- திருவான்மியூர்***

***காரணம்- புற்று***

## 76.திரு.வி.க.நகர்.

தொழிற்சங்கத் தலைவரும், சிறந்த பேச்சாளரும் பண்பாளரும்

---

*113. வன்னி மரமும் மடைப்பள்ளியும் சான்றாக*

*முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள் -சிலப்.21-5-6*

*114. வான்மீகம் -புற்று, இந்திரவில் -தமிழ் லெக்ஸிகன்-ப.3626.*

ஆகத் திகழ்ந்த திரு வி.கல்யாணசுந்தரனார் பெயரில் திரு வி.க.நகர் பெரம்பூர் பகுதியில் தோன்றியது; பெரம்பூர் ஏரியிருந்த பகுதியில் எழுந்தது இக்குடியிருப்பு போன்ற எண்ணங்கள்[115] இக்குடியிருப்புத் தொடர்பானவை.

***ஊர்ப்பெயர்- திரு.வி.க.நகர்***

***காரணம்- ஆட்பெயர்***

## 77.திருவேட்டீஸ்வரன் பேட்டை

திருவல்லிக்கேணி, புதுப்பாக்கம் இவற்றிற்கு இடைப்பட்ட பகுதி திருவேட்டீஸ்வரன் பேட்டை. திருவட்டீஸ்வரன் பேட்டை என்றும் வழங்குவர். பெரிய கோயில் ஒன்று இங்குக் காணப்படுகிறது. கோயில் காரணமாக இப்பெயர் இப்பேட்டைக்கு ஏற்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. பேட்டை என்ற ஊர்ப்பெயர்ப் பொதுக்கூறு, முகமதியர்கள் இப்பகுதிக்கு வந்த பின்னர் நுழைந்தது என்ற நிலையில் இதன் காலம் கி.பி.12 க்குப் பிற்பட்டது. எனினும் இவ்வூரின் தோற்றம் போன்ற வரலாறுகள் தெளிவு பெறவில்லை.

இவ்வூர் பற்றி எண்ணும் போது, ஒரு குறிப்பு இதனை 1736 -க்கு முன்னதாக இருந்ததைத் தெளிவுபடுத்துகிறது[116] மேலும் திருவட்டீஷ் என்று இப்பெயரைக் குறித்ததையும் அங்குக் காண்கின்றோம். எனவே இப்பெயர் அன்று திருவட்டீஸ்வரர் பேட்டை என்று அழைக்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

சிவலிங்கம், செண்பக அம்மையுடன் மேலும் பல மூர்த்தங்களும் எழுந்தருளியுள்ள தலம் இது. சேக்கிழார் மூர்த்தமும் அதில் இருக்கும் தன்மை இப்பகுதியின் காலம்முன்னர்க் குறிப்பிட்டது போன்று கி.பி.12 க்குப் பிற்பட்டது என்பதை வலியுறுத்துகிறது. இத்திருக்கோயில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் செங்கல் பணியாகக் கட்டி முடிக்கப்பெற்றது. இக்கோயிலுக்குத் திருவேட்டீஸ்வரன் பேட்டை, புதுப்பாக்கம், முகலிவாக்கம் ஆகிய மூன்று ஊர்களையும் அரசர் உரிமையாக்கினார் என்ற செய்தியைச்

---

*115 சென்னை மாநகர் -பக்.213,215.*

116. Early in 1736 it was reported to the President that a poligar, in Tiruvatesh (Thiruvateeswaranpet) a village not two miles from the Fort but out of the companys bound, had been arrested by the Serjeant of the Mayor's court

-The Madras Tercentennary Commemoration Volume - p.199.

சென்னை மாவட்டக் கோயில் வரலாறு தருகிறது.

இந்நிலையில் பிற்காலத்து எழுந்த இவ்வூர் குறித்த வரலாறு பிற யாதும் தெரிய வில்லை. எனினும் இந்த ஊர்ப்பெயருக்குரிய காரணங்களாகச் சிலவற்றை அறிஞர் சுட்டிச் சென்றுள்ளனர்.

சேப்பாக்கத்தில் அரண்மனையிலிருந்த ஆர்க்காட்டு நவாபு ஊர் உண்டாக்கிக் காட்டை அழிக்கும் போது, அழித்த பணியாளருள் ஒருவன்தானே முளைத்தெழுந்த இச்சிவ லிங்கத்தின் மேல் வெட்டி விட்டான். சுயம்புலிங்கப் பெருமான் மேல் அவ்வெட்டு இன்றும் காணப்படுகிறது. அதனால் பெருமான் வெட்டீஸ்வரன் எனப்பெயர் பெற்றார். இதனை அறியாதார் சிலர் வேடனாக வந்த அருச்சுனனுடைய ஈசன் வேட்டீஸ்வரன் (வேடன் ஈஸ்வரன்) எனக் கூறுவார்கள்[117].

மூர்த்தியின் மேல் வெட்டப்படும் தன்மையும், அது கொண்டு அங்குக் கோயில் எழுப்பிய தன்மையும் தமிழகத்தில் பரவலாகப் பல ஊர்ப்பெயர்களுக்கும் சொல்லி வரும் புராணச் செய்தியாகும். இங்கும் அக்கதையே சுட்டப்படுகிறது.

அடுத்து வேடன் அருச்சுனனாக, அவனது ஈஸ்வரன் சிவன் என்ற காரணம் அமைகிறது. எனவே இங்கு அறிவியல் அடிப்படையில் பொருத்தமாக இருக்கக்கூடியது எது என்று ஆராய முனைய, போது, இப்பகுதியில் வாழ்ந்த வேடன் வணங்கிய லிங்கமாக இது இருந்திருக்க வாய்ப்பு அமைகிறது. எனவே அது வேடன் ஈஸ்வரன் என்றாகி, பின்னர் வேட்டீஸ்வரனாக ஆகியிருக்க வாய்ப்புண்டு. கோயிலின் சிறப்பு திருவேட்டீஸ்வரம் என அமைய வாய்ப்பை நல்கியுள்ளது என்பது பொருத்தமான காரணமாக அமைகிறது.

**ஊர்ப்பெயர்- திருவேட்டீஸ்வரன்பேட்டை**

**காரணம்- வேடன் வணங்கிய கோயில்**

## 78.தேனாம்பேட்டை

அண்ணாசாலையில் ஆயிரம் விளக்கை அடுத்திருப்பது தேனாம்பேட்டை. கி.பி.1800 ஆம் ஆண்டுவரை, இக்குடியிருப்பில் மிகுதியாக வேளாண்மை செய்யப்பட்டு வந்தது. நெல், வெற்றிலை, வாழை, கரும்பு, காய்கறிகள் பயிரிடப்பட்டு வந்தன. இதன் அருகாமையில் இருந்த ஏரி இதற்கு மிகவும் துணையாக

117. சென்னை மாவட்டக் கோயில் வரலாறு-பக்-162,163.

இருந்தது. எனவே வேளாளர்களும், பள்ளர்களும் இங்கு வாழ்ந்தனர். அண்ணாசாலையின் வளர்ச்சி இவர்களுக்கு உறுதுணையாக இருந்தது. எனவே வெள்ளாளதேனாம்பேட்டை பள்ளி தேனாம்பேட்டை உருவாகின என்பது தேனாம்பேட்டை பற்றிய கருத்து[118]

பின்னர் இங்கு ஆங்கிலோ இந்தியர்கள் பெரும்பான்மையாக வாழத் தொடங்கினர். பல தோட்ட வீடுகள் கட்டப்பட்டன போன்ற செய்திகளையும் அறிகின்றோம். 1837 இல் இங்குஅமைக்கப்பட்ட Botanical Garden, 1852 இல் கட்டப்பட்ட Christ Churchமுக்கியமானவை. [119]

தேனாம்பேட்டை இன்று சென்னையின் மிக முக்கிய, மக்கள் நெருங்கி வாழும், பகுதியாக இருக்கிறது. கி.பி.1800 க்கு மேல், ஆங்கிலேயரின் வரவு இதன் விரைந்த வளர்ச்சிக்குத் துணைபுரிந்துள்ளது. ஆயின் அதன் முன்னைய வரலாறோ இப்பெயரின் வரலாறோ தெளிவுபெறவில்லை. பேட்டை என்பது கி.பி.12 க்குப் பின்னர் முகமதியர் நுழைவின் பின்னர் ஊர்ப்பெயர்ப் பொதுக்கூறாக ஊர்ப்பெயரில் இடம் பெற்றதை வரலாறு காட்டுகிறது. தேனாம்பேட்டையைப் பொறுத்தவரையிலும், இப்பகுதி நீர் வளம் காரணமாகத் தொடர்ந்து விவசாய நிலமாக நன்செய் நிலமாக இருந்த நிலையில், தொழிற்பேட்டையாகத் திகழ்ந்த தன்மையைவிட வழிவழியாக நிலமாகத் திகழ்ந்திருக்கக் கூடிய தன்மையே பொருத்தமாக அமைகிறது. இலக்கியச் சான்றுகள், இப்பகுதி கல்வெட்டுச்சான்றுகள் எதுவும் இது குறித்து இல்லை. பாலசுப்பிரமணியன் கோயில், ஆலையம்மன் கோயில், இராமலிங்கேஸ்வரர் கோயில், கிருஷ்ணசாமி பெருமாள் கோயில் இங்குக் காணப்படுகின்ற கோயில்கள் ஆகும். [120] இவை இப்பெயராய்வுக்குரிய எந்த வித விளக்கத்தையும் தரவில்லை.

---

118. The region was before 1800, an area practically devoted to the cultivation of the paddy, betal, plantain, sugarcane and vegetables. A large number of Vellalas and Pallis took advantage of the facilities afforded by the Mount Road and its communications with the neighbouring villages to settle here and the Vellala and Palli Tenampets thus came into existence. The local people made a name as gardeners and cultivatiors. The long tank in the west parallel to which the Mount Road runs, gave them every fecility, and the expansion of Madras gave them ample apportunity for marketing their produce., The Madras Tercenetnary Commemoration Volume- p. 132.

*119. சென்னை மாவட்டக் கோயில் வரலாறு பக்.13*

*120. சென்னை மாவட்டக் கோயில் வரலாறு பக்- 166*

இந்நிலையில் இப்பெயரினை ஆராயும் போது தெய்வநாயகம் என்பதன் மருஉவாகத் தேனாம் என்பதுஅமையலாமா எனத் சிந்திக்கத் தோன்றுகிறது. எனவே தெய்வநாயகம் என்பதற்கும் இவ்வூருக்கும் உரிய தொடர்பு பற்றி ஏதும் செய்திகள் கிடைக்கின்றதா என நோக்க, கல்வெட்டுச் சான்று ஒன்று துணை புரிகிறது .

நுங்கம்பாக்கத்தில் இருக்கும் அகத்தீசுவரர் கோயிலின் கிழக்குச்சுவர் மேல் உள்ள ஒரு கல்வெட்டு கி.பி 1808 ஐச் சார்ந்தது. இக்கல்வெட்டு, நுங்கம்பாக்கத்திலிருக்கும் அகத்தீசுவர சுவாமி அகிலாண்டீஸ்வரியம்மன் ஆகிய கோயில்களுக்கு நிலம் சத்திரம் தோப்பு ஆகியவற்றை ரா.ரா தெய்வ நாயக முதலியார் என்பார் வாங்கிக்கொடை அளித்ததையும், அவருக்குப் பிறகு அவரது மகன் சுப்பராய முதலியார், பெயரான் தெய்வ நாயகம் ஆகியவர்கள் அக்கொடையை வழுவாது காப்பாற்றி வந்ததையும் தெரிவிக்கிறது[121]

இங்குக் குறிப்பிடப்படும் ரா.ரா. தெய்வநாயக முதலியார் மிகுந்த செல்வமும் செல்வாக்கும் உள்ளவர் என்பதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

இவர் இக் கோவில் சார்ந்த நிலம், சத்திரம், பிரகாரம் போன்றவற்றுடன் கோயில்படித்தாம முதலாகியது நடக்கும் படியாக விட்டிருக்கின்ற நிலங்களையும் விலைக்கு வாங்கிக் கோயிலுக்கு அளித்துள்ளார். நுங்கம்பாக்கம் தேனாம்பேட்டையை அடுத்த பகுதி எனவே இக் கோயிலுக்கு வாங்கி அளித்த நிலங்கள் தேனாம்பேட்டைப் பகுதியிலிருந்திருக்க வாய்ப்பு அமைகிறது. ஏனெனில் இப்பகுதி விவசாய நிலங்கள் இருந்த பகுதியாகச் சுட்டப்படுகிறது. எனவே இப்பகுதியின் அருகாமை, இவர் கோயிலுக்குக் கொடை அளித்த செய்தி, இப்பெயரின் விரிவு, இப்பகுதியின் இயற்கைச்சூழல் அனைத்தும் தெய்வநாயகம் முதலியார்க்கும் இப்பேட்டைக்கும் தொடர்பு இருந்திருக்கலாம் என்பதைப் பொருத்தமாக்குகின்றன.[122]

---

121. சென்னை மாகர்க் கல்வெட்டுகள் தொடர் எண் 1967/197

122. சென்னப்பட்டணத்திலிருக்கும் பூ வகியாத (ன்)
வெண்களிறும் வெண்பரியும் வெண் குடையு
ம் மேழிக் கொடியுஞ் சாமரையும் வெண்
ங்குந்த வுண்டையும் விடுகோலும் மீன் (ப) தா
தையுங் குவளை மாலையுமே உடைத்த( )
(கி)ய துளுவ வேளாள குலத்தவர்களில் வி(ள)
ங்கியிருந்த ரா.ரா. தெய்வ நாயக முதலியார்
சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்- தொடர் எண் 1967/197

மேலும், பொதுவாகப் பேட்டை என்பது முதலில் தொழிற்சார்புடனும், பின்னர் பொதுப்பொருளில் ஊர்ப்பெயர்ப் பொதுக்கூறாகத் திகழத் தொடங்கிற்று எனினும் இதற்கு இன்னொரு பொருளும் காணப்படுகிறது. உடைமைப் பொருளையும் பேட்டை என்ற சொல் குறிக்கிறது. அது அவன் பேட்டை என்றால் அப்பகுதி அவனுக்குச் சொந்தமானது; உரிமையானது என்பது இன்றும் மக்கள் வழக்கில் இருந்து வரும் ஒரு வழக்கு. அப்பொருளில் நோக்கும் போது, தெய்வநாய கத்திற்குரிமையான நிலங்கள் இருந்த பகுதி என்ற பொருளில் இது தெய்வநாயகம் பேட்டை என்று வழக்குப்பெற்று, பின்னர் தெய்யன்னாபேட்டை என மருவி, தேனாம்பேட்டை என்று பின்னர் வழங்கத் தொடங்கியிருக்கலாம் என்பது இங்குத் தெளிவாகும் ஒரு எண்ணமாகும்.

***ஊர்ப்பெயர்- தெய்வநாயகம் பேட்டை***

***காரணம்- ஆட்பெயர்***

## 79. நந்தனம்

தேனாம்பேட்டைக்கும், சைதாப்பேட்டைக்கும் இடைப்பட்ட குடியிருப்பு. நந்தனம் ஆண்டில் இங்கே மக்கள் குடியிருக்கத் தொடங்கியதன் காரணமாக இப்பகுதியும் இப்பெயர் பெற்றது என்பது செவிவழிச்செய்தி.

***ஊர்ப்பெயர்- நந்தனம்***

***காரணம்- ஆண்டு***

## 80.நாசரத்புரம்

கிண்டிக்கு அருகாமையில் உள்ள புதிய குடியிருப்பு. திருச்செந்தூர் அருகேயுள்ளது நாசரத் என்ற ஊர். அங்குள்ள மக்கள் குடியேற்றத்தினால் இப்பெயர் வைத்தனரா அல்லது வேறுகாரணமா என்பது புலப்படவில்லை.

***ஊர்ப்பெயர்- நாசரத்புரம்***

***காரணம்-***

## 81.நுங்கம்பாக்கம்

சென்னையில் மிகவும் மக்கள் நெருங்கி வாழும் பகுதிகளில்

ஒன்றாகத் திகழ்கிறது நுங்கம்பாக்கம்.

சென்னை மாவட்டக் கோயில் வரலாறு நூல் இங்குக காணப்படும் இரண்டு கோயில்களைப் பற்றிய சில செய்திகளைத் தருகின்றது. இவற்றின் மூலம் ஒரு சில செய்திகள் கிடைக்கின் றனவே தவிர, இவ்வூர்ப்பெயர் தெளிவு பெறவில்லை.

மாம்பலத்தை அடுத்த பகுதி இப்பகுதி. குளக்கரை ஒன்றில் அகத்தீசுவரர் கோயில் உள்ளது. இன்னொரு கோயில் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள்கோயில் . இவ்விரண்டு கோயில்களும் கட்டப்பட்ட காலம் தெளிவாகத் தெரியவில்லை. மேற்குறித்த நூல் பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோயில் பற்றி விளக்கும் போது, பெருமாளுக்கு ஆதிப்பேர் வைகுண்டப் பெருமாள். இங்கேபொம்மராசர் என்பார் அரசாண்டிருந்தார். அதனால்தான் இவ்வூர் பொம்மராசபுரம் என்று பெயர் பெற்றது. இந்த அரசருக்குப் பெருமாள் கனவிலே தோன்றி எழுந்தருள் மூர்த்தி இருந்த இடத்தைக் கூறினார். அரசர் அப்படியே சென்று எழுந்தருள் பெருமாளை எடுத்து வந்தார். அதனாலேயே பெருமாள் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் என்று அழைக்கப்பெறுகிறார். திருவேங்கட மலையிலிருக்கும் வெங்கடேசப் பெருமாள் பெயரால் எழுந்த கோயில் இது என எழுதிச் செல்கின்றார்.[123]

இந்தக் கதை உண்மையா கற்பனையா என்பது தெரியவில்லை எனினும் இக்கோயிலின் காலம் பிற்காலம் என்பதற்குச்சான்றாக இக்கருத்து அமைகிறது.

கி.பி.1808 ஐச் சார்ந்த ஒரு கல்வெட்டு, திரு. அகத்தீஸ்வரர் கோயிலின் கிழக்குச்சுவரில் காணப்படுகிறது என சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் நூல் தெரிவிக்கிறது[124].

**....இந்த பொம்ம**
**புரத்துக்குப்பிறிதி நாமமாகிய நுங்கம்பா**
**(க்கத்)திலிருக்கும் ஸ்ரீ அகிலாண்டகோடிபி(ர)**
**மாண்ட நாயகராகிய அகதீஸ்வர சுவாமி(யும்)**
**...........**

எனச் செல்கின்றது இக்கல்வெட்டு. நுங்கம்பாக்கத்திலிருக்கும்

---

123. சென்னை மாநகர்க்கோயில் வரலாறு - 177.

124. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் - தொடர் எண் 1967/97

அகத்தீஸ்வர சுவாமி, அகிலாண்டேசுவரியம்மன் ஆகிய கோயில்களுக்கு நிலம், சத்திரம், தோப்பு ஆகியவற்றை ரா.ரா. தெய்வநாயக முதலியார் என்பார் வாங்கிக் கொடை அளித்ததையும், அவருக்குப்பிறகு அவர் மகன் சுப்பராய முதலியார், பெயரன் தெய்வநாயகம் ஆகியவர்கள் அக்கொடையை வழுவாது காப்பாற்றி வந்ததையும் தெரிவிக்கிறது.

இக்கல்வெட்டின் காலம் கி.பி 1808 எனத் தெரிகின்றதை வைத்து நோக்க, இக்கோயிலின் காலமும், இப் பெயரின் காலமும் கி.பி.1808 க்கு முன்னரேயே இருந்துள்ளது என்பது தெரிகிறது. எனவே நுங்கம்பாக்கம், பொம்மபுரம் என்ற இரண்டு பெயர்களும் கி.பி.18 க்கு முன்னைய காலத்தனவாக இருந்திருத்தல் வேண்டும்.

இங்குச் சுட்டப்பட்ட வைகுண்ட பெருமாள் கோயிலின் இன்னொரு பெயர் பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயில். பிரசன்ன என்பதும், கல்வெட்டில் குறிப்பிடப்படும் பொம்மபுரம் என்பதும் தமிழ்ப் பெயர்கள் இல்லை. இவை தெலுங்கு மொழிப்பெயர்கள். தெலுங்கு மக்கள் இப்பகுதியில் குடியிருப்பினை அமைத்துக்கொண்ட நிலையில்இடப்பட்ட பெயர்களாக இவற்றைக் கருதுதல் இயலுகிறது.

நுங்கம்பாக்கம் என்ற பெயரினை ஆராயும் போது நுங்கம்பாக்கத்தில் பாக்கம் என்ற சொல் புலப்படும் அளவுக்கு நுங்கம் என்ற பெயரின் விளக்கம் புலப்படவில்லை, இருப்பினும் பாக்கம் என்ற சொல்லின் பழமையும், தமிழ்ச்சார்பும் நுங்கம் என்றச் சொல்லையும் தமிழ்ச் சொல்லாக இருக்கலாம் என்ற பார்வையில் திருப்புகிறது.

நுங்கு+அம்+பாக்கம் நுங்கம்பாக்கம் ஆகும். நுங்கு பனையின் உறுப்பு எனவே பனைமரங்கள் நிறைந்த பகுதி என்ற பொருளில் இப்பகுதியின் பெயர் அமைந்திருக்கலாமோ என்று தோன்றுகிறது.

இந்நிலையில் இப்பகுதியின் வரலாறு மேலும்சில எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது. சென்னை மாவட்டக் கோயில் வரலாறு நூலாசிரியர் இங்குள்ள அகத்தீசுவரர் கோயில் பற்றி எழுதும் போது, ஒரு கருத்தினைத் தெரிவிக்கிறார்.

இவ்வூருக்குக் கிராமதேவதை சேத்துப்பட்டில் இருக்கும் கருக்காத்த அம்மன். அந்த அம்மையின் எழுந்தருள் திருமேனி

இத்திருக்கோயிலில் இருக்கிறது. கருக்களைக்காத்தருளும் அம்மை இவள்.[125]

இக்குறிப்பு ஓர் எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. இவரது கருத்துப்படி நுங்கம்பாக்கம் ஊரின் கிராம தேவதை சேத்துப்பட்டில் இருக்கின்ற கருக்காத்த அம்மன் என்ற எண்ணம், நுங்கம்பாக்கம் என்ற பகுதி முன்பு சேத்துப்பட்டின் ஒருபகுதியாக இருந்திருக்க வேண்டும். எனவேதான் இங்குள்ள மக்களின் கிராம தேவதை அங்கு இருக்கும் வாய்ப்பு அமையும் என்ற எண்ணத்தைத் தருகிறது. இக்கருத்துகள் அனைத்தையும் தொகுத்து நோக்கும் பொழுது சேத்துப்பட்டு என்ற ஊர் முதல் ஊராக அமைய, பின்னர் அதன் பரந்த பகுதியில் இருந்த பனை மரங்கள் நெருக்கமாக இருந்த பகுதியும், மக்களின் குடியிருப்பு ஆக மாறும் நிலை ஏற்படுகிறது. இங்கு மக்கள் வாழத் தொடங்கியவுடன் கோயில் அமைக்கவும் தொடங்கினர். பின்னர் இப்பகுதியில் பிற பகுதி மக்கள், குறிப்பாகத் தெலுங்கர் குடியேற்றம், இப்பகுதிக்குப் பொம்மபுரம் என்ற பெயரையும் தருகின்றது. பின்னர் பொம்மபுரம் செல்வாக்கு இழக்க நுங்கம்பாக்கம் நிலைத்து விட்டது.

***ஊர்ப்பெயர்- நுங்கம்பாக்கம்***

***காரணம்- இயற்கை (பனை)***

## 82.நொச்சிக்குப்பம்

நொச்சிக்குப்பம் கடற்கரை சார்ந்து காணப்படும் குடியிருப்பு. இதன் பெயர் இயற்கைச்சார்பு காட்டுகிறது.

***ஊர்ப்பெயர்- நொச்சிக்குப்பம்***

***காரணம்- இயற்கை(நொச்சி)***

## 83.பட்டினப்பாக்கம்

பட்டினப்பாக்கம் என்ற பெயரைக் கேள்வியுற்றதுமே, பெயரின் பழமையும், சிறப்பும் ,பொலிவும் நினைவுக்கு வரினும், இங்குக் குறிப்பிடப் பெறும் பட்டினப்பாக்கம் சிலப்பதிகாரம் குறிப்பிடும்

***125 சென்னை மாவட்டக் கோயில் வரலாறு-ப.177***

காவிரிப்பூம்பட்டினத்தின் பகுதி அன்று. மயிலையின் ஒருபகுதியே இது. ஆங்கிலத்தில் Fore Shore Estate எனக்குறிப்பிடப்படுகிறது. சாந்தோமின் தெற்குப் பகுதியில் காணப்படும் இப்பகுதி சுதந்திரத்திற்கு முன்பு வரை Butt Medu என்று வழங்கி வந்ததாகத் தெரிகிறது. [126] இப்பெயரைப்பற்றி எண்ணும் போது மேலும் சில பெயர்கள் தொடர்பு காட்டுகின்றன.

வில்லிவாக்கம் அருகேயுள்ள ஓரிடம் மக்கள் வழக்கில் பட்மோடு என்று வழங்கி வருகிறது. பரங்கி மலையின் அருகில் உள்ளது பட்ரோடு. ஆங்கிலேயர் பலரும் மிகவும் விரும்பி வாழ்ந்த இடம் பரங்கிமலைப்பகுதி, எனவே இப்பெயர் ஆங்கிலேயர் அல்லது அதற்கு முன்பு இப்பகுதியுடன் மிகவும் தொடர்பு கொண்டிருந்த போர்த்துக்கீசியர் பெயருடன் தொடர்புடையதாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. தமிழில் உள்ள மேடு என்பது மோடு என்றும் வழக்கில் அமைகிறது. எனவே ஆட்பெயருடன் நிலத்தின் அமைப்பும் இணைந்த பெயராக அண்மைக் காலம் வரை இருந்த பெயர் பட்டினப்பாக்கம் என்று மாற்றம் பெற்றுள்ளதைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

***ஊர்ப்பெயர்- பட்டினப்பாக்கம்***

***காரணம்- கடற்கரை***

## 84. பத்மநாப நகர்

அடையாறின் ஒரு பகுதி இன்று பத்மநாபநகர் என்று அழைக்கப்படுகிறது. பத்மநாபன் கோயில் இப்பகுதிக்கு இப்பெயரை அளித்துள்ளது.

சூளைமேட்டின் அருகிலும் ஒரு பத்மநாப நகர் உள்ளது.

***ஊர்ப்பெயர்- பத்மநாப நகர்***

***காரணம்- பத்மநாபன் கோயில்***

## 85. புதுப்பாக்கம்

அண்ணாசாலையை ஒட்டிய பகுதி புதுப்பாக்கம். பீட்டர்ஸ் சாலையைத் தென்னெல்லையாகக் கொண்டது. திருவேட்டீஸ்வரன் பேட்டையின் வட மேற்குப்பகுதிகள் புதுப்பாக்கமாக

---

126. Foreshare Estate was an area known until Independence as 'Butt Medu' (Butt Mount) where soldiers used the shooting ran..Madras Discovered -p.128.

அமைகிறது. இவ்வூர் முதன் முதலாகக் கம்பெனி குறிப்புகளில் 1673 இல் காணப்படுகிறது. நவாப்பின் நிலமாக இது இருந்துள்ளது. இதனை ஆங்கிலேயர் பல காலம் போராடி 1742 இல் பெற்றுள்ளனர் போன்ற செய்திகள் இது தொடர்பாக அமைகிறன.[127]

இங்குச் செல்லப்பிள்ளையார் கோயில் ஒன்று இருக்கிறது. பிற செய்திகள் எதுவும் இது குறித்து இல்லை. நவாப் அளிக்கும் போதே இதற்குப் புதுப்பாக்கம் என்ற பெயர் இருந்துள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் இங்குப் பல தோட்ட வீடுகள் உருவாக்கப்பட்டன என்பது தெரிகிறது. எனவே சிறிய கிராமமாக இருந்த இதன் பகுதிகளும் தோட்டமாக அல்லது விளைச்சல் நிலமாக இருந்திருக்கலாம். இவ்வூரின் பெயர் இதனைப் புதியதாக எழுந்த குடியிருப்பு எனக் காட்டுகிறது. எனவே நவாப் காலத்தில் அல்லது அவரின் காலத்திற்கு முன்பாகப் புதியதாக ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பாக அமையலாம் என்று தோன்றுகிறது. மேலும் இதன் அண்மையில் தென்மேற்கில் உள்ள இன்று வழக்கில் இல்லாத ஓர் ஊராக வீரசானூர் என்பதைச் சுட்டும்போது[128] இப்பெயரின் காரணம் தெரியாவிடினும், வீரசானூர் பழைய கிராமமாக இருந்து அதன் அருகாமைப்பகுதி புதுப்பாக்கம் என புதியக்குடியிருப்பாக அமைந்திருக்கலாமோ எனத் தோன்றுகிறது.

**ஊர்ப்பெயர்- புதுப்பாக்கம்**

**காரணம்- புதிய குடியிருப்பு**

## 86. புரசைவாக்கம்

சென்னையில் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் புரசைவாக்கமும் ஒன்று. இக் குடியிருப்புப் பகுதி ஓரளவிற்குப் பழமையானது என்பது தெரிய வரினும் துல்லியத்தன்மையுடன் இதனை உணர்ந்துகொள்ள செய்திகள் துணை புரியவில்லை. இந்நிலையில் இந்த ஊரின் பெயர்க்காரணத்தையும் தெளிவாக்கிக் கொள்ள இயலவில்லை.

புரசைவாக்கம் பற்றிய வரலாற்றிற்கு ஓரளவு துணை புரிவன

---

127. First mentioned in the company records in 1673,' Podupaca' or 'Podupaca' was obtained from the Nawab after,a long period of negotiations in 1742. Madras Tercentenary Commemoration Volume. p-126

128. A record of 1774 says that out of 30 grants of lease grounds during that year, no less than 11 were at Puduppak, the rest being at Veerasanur to the South west of it and elesehere. The Madras Tercentenary Commemoration Volume.p12

இங்கு அமைந்துள்ள கங்காதரேசுவரர் கோயிலினுள் கிடைக்கும் நான்கு கல்வெட்டுகள்,சூளைப்பகுதியில் கிடைத்துள்ள இரண்டு கல்வெட்டுகள், ஆங்கிலேயரின் குறிப்புகள், அறிஞர் எண்ணங்கள் ஆகும். சுந்தரரின் பாடல் ஒன்றிலும் இது சுட்டப்படுகிறது என்ற கருத்து அமையினும் தெளிவில்லாத சான்று அது.

கங்காதரேசுவரர் கோயில் 2000 ஆண்டுகட்கும் புராதனமான கோயில் என்ற கருத்து இருப்பினும்[129] சான்றுகள் இல்லை. கிடைக்கின்ற கல்வெட்டுகள் கி.பி.13 க்குப்பின்னர் உள்ளவை. இந்நிலையில் இக்கோயிலைப்பற்றிய ஆய்வு சில எண்ணங்களைத் தருகின்றன.

இக்கோயிலில் காணப்படும் ஊன்றீசுவரர், மின்னொளி நாயகி திரு உருவங்கள் பற்றிக் குறிப்பிடும் ஆர்.கோபாலகிருஷ்ணன், இச்சிறப்பு மிக்க திருத்தலம் (வெண்பாக்கம்) பூண்டி நீர்த் தேக்கம் உருவாகும் பொழுது நீரில் மூழ்கும் நிலையிலிருந்ததால் அத்திருக் கோயிலில் உள்ள மூர்த்திகளைப் புரசைவாக்கம் அருள் மிகு கங்காதரேஸ்வரர் திருக்கோயிலில் எழுந்தருளச் செய்துள்ளனர்[130] என்கின்றார்.

இத்தெய்வத் திரு உருவங்கள் மட்டுமின்றி, மேலும் பலவும் வெண்பாக்கம் கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்டதே என்பது திரு. உருத்திர குப்புசாமி நாயக்கர் கருத்து.[131]

கொடிக்கம்பத்திற்கு வடக்கே, குளத்து மதில்சுவற்றை ஒட்டி, ஆவுடையார் இல்லாத பெரிய சிவலிங்கம் வெண்பாக்கம் உளம்போகீர் கோயிலில் இருந்து வந்தவர். 30 ஆண்டுகளுக்கு முன் இந்தச் சிவலிங்கத்தையும் இன்னும் சில சிலைகளையும் திரு. ஒற்றியூரான் இராமசாமி பிள்ளை கொண்டு வந்தார்.

தென்மேற்கு மூலையில் குருந்த மரத்தடியில் சுப்பராய குருக்கள் தன் வீட்டில் பூசையில் இருந்த ஆவுடையாருடன் உள்ள சிவலிங்கத்தைக் கொண்டு வந்து கொடுத்து அந்த இடத்தில் நிறுவச் செய்தார்.

---

*129. கங்காதரேசுவரர் கோயில் கும்பாபிஷேக கோலாகலம் அருள் மிகு கங்காதரேச்வரர் திருக்கோயில் புரசைவாக்கம் சென்னை.6-1-84 மலர் வெளியீடு-ப.11*

*130. அருள் கங்காதரேஸ்வரர் திருக்கோயிலில் உறையும் அருள்மிகு மின்னொளி நாயகி உடனுறையும் அருள் மிகு ஊன்றீசுவரர் -ஆர்.கோபாலகிருஷ்ணன். ப-12*

*131. கங்காதரேஸ்வரர் கோயில் திருமேனிகளைப் பற்றிய நினைவுகள் திரு.சித்தானந்த தொண்டர் உருத்திர குப்புசாமி நாயக்கர், ''------'' 11-ப-25*

வெண்பாக்கத்திலிருந்து வந்த மற்ற சிலைகள் உச்சிஷ்ட கணபதி,. ஊன்றீசுவரர், மின்னொளி நாயகி, ஆறுமுகன், துர்க்கை, பைரவர், தட்சிணாமூர்த்தி ஆகியன.

மேலும் 1972 ஆம் ஆண்டு வரை 63 நாயன்மார்கள் சிலைகளும் இல்லை.

இவற்றைப் போன்று தெற்கே உள்ள வைதீசுவரன் மேடவாக்கத்திலிருந்து கொணரப்பட்டது

எனவே இக்கோயிலின் கருவறையில் இருக்கும் சிவலிங்கம் தவிர பிற அனைத்தும் அண்மையில் பிறபகுதிகளில் இருந்து கொணர்ந்து இங்கே வைக்கப்பட்டன என்பது புலப்படுகிறது. இந்நிலையில் முதலில் இக்கோயிலின் தன்மை என்ன என்று ஆராய முற்படும் போது ஒரு சிறிய கோயில், கருவறையில் சிவலிங்கம் இருந்துள்ள ஒரு கோயில் என்பது மட்டுமே புலப்படுகிறது. இக்கருத்துக்கு அரணாகவே பிற கருத்துகளும் புலப்படுகின்றன.

இங்குள்ள இராஜகோபுரம் முன்பு இல்லை. 1983 இல் கட்டி முடிக்கப்பட்டு, கும்பாபிஷேகம் 30-5- 1983 இல் நடைபெற்றுள்ளது.[132] எனவே இவை எல்லாம் இல்லாத நிலையில் அமைந்ததே கோயிலின் முதல் நிலை.

இங்குள்ள கல்வெட்டுகள் பற்றி நோக்கும் போது சென்னை மாநகரின் பிற கல்வெட்டுகள் போன்றே இவையும் செய்திகளைத் தெளிவாகத் தரவில்லை. இக்கோயிலில் இருப்பதாகத் தெரியவரும் கல்வெட்டுகள் நான்கு. [133]

கி.பி.13 ஐச் சார்ந்ததொரு கல்வெட்டு கங்காதரேசுவரர் கோயிலில் ஒரு கல்லில் அமைகிறது, இது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர் நாட்டுத் திருவான்மியூரில் உள்ள உலகாளுடைய நாயனாருக்கு விளக்கு எரிப்பதற்காக நீலகங் கரையன் என்பான் கொடையளித்ததைக் குறிக்கின்றது என்ற கருத்தினை அறியும் போது இக்கோயிலுக்கும் இக் கல்வெட்டிற்குமுரிய தொடர்பு என்ன என்ற வினா எழுகிறது. திருவான்மியூர் கோயில் சார்ந்த கல்வெட்டாக இது இருத்தலுக்கே பொருத்தம் அமைகிறது. கோயில் கட்டப்படும் போதோ அல்லது புதுப்பிக்கும் போதோ இக்கல்வெட்டு இங்கே கொணரப்பட்டு

132. கங்காதரேஸ்வரர் கோயில் கும்பாபிஷேக கோவுங்கலம் ப.11

133. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் - தொடர் எண் 1967 /177,1967/178.1967/179.1967/180

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY

இருக்கலாம்.

அடுத்த கல்வெட்டு கி.பி.15 ஐச் சார்ந்தது. கங்காதரேஸ்வரர் கோயிலில் முதற்சுற்றில் ஒரு கல்லில் உள்ளது. விசய நகர அரசு சார்ந்த தேவராயர் காலத்ததோ என்ற ஐயம் இருக்கின்றதே தவிர, கல்வெட்டுச் செய்திகள் புலனாக வில்லை.

மூன்றாவது கல்வெட்டு பற்றியும் முன்னையது போன்று அரசர் பற்றிய ஐயம் இருப்பினும் காலம் கி.பி.16 என்று தொல்பொருள் ஆய்வாளர் குறித்துச் செல்கின்றனர். ஆயர்களில் ஒருவரான அழகன் பெருமாள் கோயிலுக்கு நித்தம் திருவிளக்கு ஏற்றுவதற்காகக் குடியமர்த்தப்பட்டதைக் குறிப்பிடுகிறது. எ்னினும் இக்கோயில் பற்றிய குறிப்போ, ஊர் பற்றிய குறிப்போ இதனுள்ளும் இல்லை. இதுவும் கோயிலில் ஒரு கல்லில் தான் உள்ளது.

அடுத்த கல்வெட்டு கி.பி.16 ஐச் சார்ந்தது. விசயநகர அரசு காலத்தது, செய்திகள் தெளிவாக இல்லாதது. இதனுள் குறிப்பிடப்படும் பட்டணம் என்ற சொல் சென்னை பட்டணத்தைக் குறித்து அமைந்திருக்கலாம். மேலும் கங்காதரேஸ்வரர் கோயில் கருவறையின் வடபுறத்தில் உள்ளது என்ற குறிப்பு இங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. கருவறையின் வடபுறக் கல் என்னும் போது இக்கருவறை கட்டப்பட்ட காலமும் கி.பி.16 ஆக இருக்கலாம் என்ற எண்ணம் எழுகிறது.

எனவே இவற்றைக் கொண்டு நோக்க, இங்குள்ள இக் கல்வெட்டுகள் கி.பி.13 க்குப் பின்னர் உள்ளனவாக அமையும் தன்மை இருப்பினும் அவை இக்கோயில் பற்றியோ, இவ்வூர் பற்றியோ எந்த வித விளக்கத்தையும் தாராமையும், கருவறைக் கல்வெட்டு கி.பி.16க்கு உரியது என்ற தன்மை, விளக்கு எரிக்க ஆள் ஏற்பாடு பண்ணிய ஆண்டும் கி.பி.16 என்ற குறிப்பு, இக்கோயிலின் காலமும் கி.பி.16 ஆக இருக்கலாம் என்ற உணர்வினுக்கு வழி வகுக்கிறது.

ம.சு.சம்பந்தன் தன்னுடைய நூலில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோயில் இது என்று கருத்துத் தெரிவித்துள்ளார். எனினும் அவரும் சான்று எதையும் தரவில்லை. [134]

---

134. தலை நகர் சென்னை - ம.சு. சம்பந்தன் -ப-181

சூளைப் பகுதியில் கிடைத்த இரண்டு கல்வெட்டுகள் புரசபாக்கம் என்ற ஊர்ப்பெயரைச்சுட்டி, சில செய்திகளைத் தருகின்றன.[135]

புரசபாக்கம் கிராமத்திற்கு எல்லையில் விசைய விக்கினேசுவரர் கோயில் அமைத்தமை, விசைய விக்கினேசபுரம் என்று அப்பகுதிக்குப் பெயரிடப்பட்டமை, கல்மண்டபம், தண்ணீர்ப் பந்தல், அக்ரஹாரம் போன்றன அமைத்தமை போன்ற செய்தி களைக் காண்கின்றோம். இக்கல்வெட்டுகள் இரண்டும் கி.பி.17 ஐச் சார்ந்தவை.

ஆங்கிலேயேர் சென்னையில் தங்கத் தொடங்கியது கி.பி. 1639 ஆம் ஆண்டு. பின்னர் திருவல்லிக்கேணியையும் தங்கள் கோட்டைப் பகுதியுடன் இணைத்துக் கொண்டனர். பிறகு இவர்கள் பெற்ற ஊர்கள் புரசைவாக்கம், எழும்பூர், தண்டையார்பேட்டை, நுங்கம்பாக்கம். இதுபற்றி எழுதும் அறிஞர், இவை நான்கும் செயின்ட் ஜார்ஜைக் காட்டிலும் பழமையானவை என்று எழுதுகின்றனர்[136] சிறிய கோயில் இருந்ததையும் சுட்டுகின்றனர்.

எனவே இங்குள்ள இக்கோயில் எக்காலத்து எழுந்தது என்பதனைத் தெளிவாகச் சுட்டுதலுக்குரிய சான்றுகள் தெளிவாகக்கிடைக்காவிடினும், கிடைக்கும் சான்றுகள் கோயிலைப் பிற்காலத்ததாகவே காட்டுகின்றன.

எனவே கோயில் பின்னர் கட்டப்பட்டது எனினும் ஊர் பழமையானதாக இருந்திருக்கலாம் என்பது புரசைவாக்கம் என்ற பெயர் தரும் எண்ணமாக அமைகிறது.

**சுந்தரரின் பதிகம்,**

**தென்னூர் கைம்மைத் திருச்சுழியற் றிருக்கானப் பேர்**

**பன்னூர் புக்குறையும் பரமற் கிடம் பாய் நலம்**

---

*135. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்-தொடர் எண்.1967/213, 1967/214*

136. Among the additions to the city an appeal to Emperer. Aurangazeb, the Governer E Yale, got Tantore ( Tondairpet, Persewacca ( Purasavakkam) and Yemore( Egmore) as free gift. The Emperor's son granted Nungambacca (Nungambakkam) and four adjoining villages, for an annual rent of 1500 pagodas, there were villages much more ancient than Fort St George and had their little pagodas like the Gangadeswarar shrine of Purasavakkam The Madras Tercentenary Commemoration Volume-p. 364-365.

என்னூர் எங்கள் பிரான் உறையுந் திருத்தேவனூர்
பொன்னூர் நாட்டுப் பொன்னூர் புரிசை நாட்டுப் புரிசையே.

திரு நாட்டுத் தொகை-12-6

என்று அமைகிறது. இப்பதிகம் புரிசை என்பதனை வைப்புத் தலத்தினுள் ஒன்றாகச் சுட்டுகிறது. இது பற்றி அறிஞர் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்[137].

புரிசை என்பது புரசைப்பாக்கம் என்று இவ்வூரார் கூறுகிறார்கள். புரிசை என்பது திருவண்ணாமலையின் அருகில் உள்ள தொரு பதி. புரசைப்பாக்கம் புரிசை என்று மருவாதே புரசை என்று தானே மருவும். ஆதலின் சுந்தரர் கூறியது புரசைவாக்கம் ஆகாது.

சுந்தரர் பாடிய புரிசை நாட்டுப் புரிசை, காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ளது என்பார் செங்கல்வராய பிள்ளை.

புரிசை என்பது மணவூர்க் கோட்டத்தைச் சேர்ந்த ஐந்து நாடுகளுள் ஒன்று. மற்ற நாடுகள் பாகசாலை, இல்லத்தூர், கண்ணூர், பெருமுச்சி. அவை மணவூருக்குத் தெற்கே உள்ளவை. மணவூர் தொண்டைமண்டலத்தில் முக்கிய நகரமான காஞ்சிபுரத்திற்கு வடக்கே 25 மைல் தொலைவில் உள்ளது. திரு ஒற்றியூரில் இருந்து காஞ்சிபுரம் சென்ற சுந்தரர் திருவெண்பாக்கம் வடதிருமுல்லைவாயில் ஊர்களில் பாடிய பதிகங்கள் உள்ளன. அவர் இந்த ஊருக்கு வந்திருக்கலாம். எப்படியிருந்தாலும் அவர் குறிப்பிட்ட புரிசை நாட்டுப் புரிசை இந்தப் புரசைவாக்கம் என்ற கூற்று ஆய்வதற்குரியது என்று கருத்துத் தெரிவிக்கின்றனர் அறிஞர்.

எனவே ஆராயும் போது,

1. இன்றைய சென்னை மாநகரப் பகுதி குறித்த நாட்டுப் பிரிவுகளை நோக்க இப்பகுதியில் எழுமூர் நாடு, எழுமூர் துடர்முனை நாடு, கோட்டூர் நாடு, ஞாயிறு நாடு போன்ற பிரிவுகளைக் காண்கின்றோம். புரிசை நாடு என்ற தொரு பிரிவினைக்காணுதல் இயலவில்லை.

2. புரசைப்பாக்கம் தொண்டைமண்டலத்துப் புழற் கோட்டத்து

137. புரசைக் கங்காதரேஸ்வரர் கோயில் பற்றிய சில குறிப்புகள்- க.பொன்னுசாமி. ப.41

எழுமூர் நாட்டைச் சார்ந்தது என்ற தொரு குறிப்பும் அமைகிறது[138].

இவ்வாறு புரசைவாக்கம் பற்றிய செய்திகள் அமையினும் ஊர்ப்பெயர் பற்றிய தெளிவு அளிப்பவையாக இவை இல்லை. இந்நிலையில் இவ்வூர்ப் பெயர்க்காரணம், இந்த ஊர்ப்பெயரின் சொல் பொருள் விளக்கம் மூலமாக ஏதேனும் விளக்கம் பெறுகின்றதா என நோக்கலாம். இது வரையியிலும் இந்த ஊர்ப் பெயர்க்காரணம் இரண்டு வகையில் சொல்லப்பட்டு வந்துள்ளது[139].

புரசை என்றால் யானை கட்டும் கயிறு. யானை கவுனி வழியாக யானைகள் போவதுண்டு. அந்த யானைகளுக்கு இங்குக் கயிறு செய்யப்பட்டுக்கொண்டு போகப் பட்டதனால் இந்த இடத்திற்குப் புரசை என்ற பெயர் ஏற்பட்டதாகச் சொல்லலாம் என்பது ஒரு கருத்து.

இக்காரணம் தெளிவாக இல்லை. வரலாற்றுச் சான்றும் இதற்கில்லை. கயிறு செய்யப்பட்டு, யானை கவுனிக்குக் கொண்டு செல்லப்பட்டதற்கான சான்றுகள் தெரிய வில்லை. கயிறு செய்வதற்குரிய தென்னை மரங்கள் மிகுதியாக இங்கு இருந்தனவா? அல்லது அருகாமையில் இருந்தனவா என்ற கேள்வி கட்குவிடையில்லை.

அக்காலத்தில் மரம், செடி, கொடி முதலியவைகளின் பெயர்கள் அவை அதிகமாக இருந்த இடங்களில் ஏற்ப்ட்ட குடியிருப்பு களுக்குப் பெயராய் அமைந்தன. புரசு என்ற மரம் மிகுந்திருந்த காட்டைத் திருத்திக் குடியேறிய இடமாதலானும் கடற்கரையை அடுத்துக் குடியேறிய இடங்கள் பாக்கம் என்று சொல்லப் பட்டதாலும் இந்த இடத்திற்குப் புரசவாக்கம், புரசைபாக்கம் என்பது பெயராயிற்று. சில சமயங்களில் பகரத்திற்குப் பதில் வகரம் ஒலிக்கப் படுதலால் புரசைவாக்கம் என மருவிற்று.[140]

புரசை-தாவரப் பெயர், புரசம்பூ, புரசு, புரசுமரம் என்ற மரங்களைக் குறிப்பிட்டு, அவற்றிற்கு முறையே புரசு, புனமுருங்கை, பூவரசு போன்ற பொருட்களையும் தருகின்றது தமிழ்ப்பேரகராதி[141] எனவே இங்குப்புரசு என்ற மரம் என்பது

---

*138. புரசைகங்காதேஸ்வரர் கோயில் பற்றிய சில குறிப்புகள் சு.பொன்னுசாமி-ப.42*

*139. ,, ,, ப-41*

*140. ,, ,, ப-41*

*141 தமிழ் லெக்சிகன் -பகுதி5 ப. 2769*

இருந்திருக்க வாய்ப்பு அமைகிறது. மேலும் இங்குள்ள கோயிலில் பெருமாள் கிழக்கே பார்க்க, புரசை மரத்தடியில் எழுந்தருளியுள்ளார் என்ற குறிப்பும் இப்பகுதியில் புரசை மரம் இருந்திருத்தலை உண்மையாக்குகிறது.

பாக்கம் என்பது பொதுக்கூறு. தமிழகத்தில் குறிப்பாகத் தமிழகத்தின் வடபகுதியில், நெய்தல் நிலப்பகுதியை, கடற்கரைப் பகுதியைக் குறிப்பிட மக்கள் பயன்படுத்திய வழக்கு இது. எனவே, புரசைவாக்கம் குறித்த மேலும் செய்திகள் தெளிவு பெறும் வரையிலும் இம்முடிவினைக் கொள்ளுதல் ஏற்புடைத்தாகும்.

கடற்கரைப் பகுதியான இப்பகுதி, புரசை மரங்களை மிகுதியாகப் பெற்றிருந்த காரணத்தால் இப்பெயர் பெற்றிருக்கலாம் பின்னர் புரசவாக்கம் என்ற இடத்தின் பெயர் மக்கள் குடியிருப்புக் காரணமாக ஊர்ப்பெயராக அமைந்தது.

***ஊர்ப்பெயர்- புரசைவாக்கம்***

***காரணம்- இயற்கை (புரசு)***

## 87. புளியந்தோப்பு

வடசென்னையில் காணப்படும் குடியிருப்பு.புளிய மரங்கள் நிறைந்த பகுதி பின்னர் குடியிருப்பாக மாற்றம் பெற்ற பகுதி.

***ஊர்ப்பெயர்-புளியந்தோப்பு***

***காரணம்- இயற்கை (புளி)***

## 88. பெசன்ட் நகர்

பிரம்மஞான சபையின் தலைவராகத் திகழ்ந்த அன்னிபெசன்ட் அம்மையாரின் பெயர் பெற்ற இடம். அடையாற்றின் கரைத் தொடங்கி, திருவான்மியூரின் முந்திய பகுதிகள் பெசன்ட் நகர், பெசன்ட் கார்டன் என்று அழைக்கப்படுகின்றன.

***ஊர்ப்பெயர்-பெசன்ட் நகர்***

***காரணம்-ஆட்பெயர்***

## 89. பெத்தநாயக்கன் பேட்டை

ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்னரேயே சென்னை சார்ந்த பகுதியில் மக்கள் வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றாக அமைவதில்

பெத்த நாயக்கன் பேட்டையும் ஒன்றாகும். முத்தியாலுப் பேட்டையும், பெத்தநாயக்க்ன் பேட்டையும் பழைய கறுப்பர் பட்டணத்திற்குப் பின்னர் கறுப்பர் பட்டணம் என்று அழைக்கப்பட்டது. இன்று ஜார்ஜ் டவுனின் ஒரு பகுதியாகப் பெத்த நாயக்கன் பேட்டை அமைகிறது. இங்குள்ள கோயில்கள் ஆதிகேசவப் பெருமாள் கோயில், சென்னமல்லீசர் சென்னகேசவப் பெருமாள் கோயில், பைகிராகி மடம் கங்கேசுவரர் பெருமாள் கோயில் ஆகியன. பெத்தநாயக்கன் பேட்டை என்ற சொல் தெளிவாகத் தெலுங்குச் சொல் என்பதைக் காட்டுகிறது. எனவே தெலுங்கர் இங்கு வாழ்ந்த சூழல் புலப்படுகிறது.

இப்பெயர்க்காரணம் பெத்தநாயக்கன் (உயர்காவல் அதிகாரி) தொடர்பானது என்பதை அறிஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.[142] பெத்த நாயக்கன் என்ற பெயர் கல்வெட்டில் சென்னைபுரி பெத்துநாயக்கன் பேட்டை என்றும் சுட்டப்படுகிறது.[143] எனவே வழக்கில் பெத்து நாயக்கன் பேட்டை எனச்சுட்டப்படும் தன்மையும் இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

இப்பகுதியின் வடக்கு மேற்குபாகங்கள் விவசாய நிலமாக 1755 வரை இருந்தது என்பதும், பெத்தநாயக்கன்பேட்டைக்கும் முத்தியாலுப்பேட்டைக்கும் இடையே வயல்கள், தோட்டங்கள், வெளிப்பகுதிகள், ஒரு கால்வாய் இருந்தது என்பதும்

---

142. In Black town, three Indian Officials supervised the settlement. They were the Atikari, the head man who maintained order collected revenue and exercises magisterial function; the Kanakkapulle or the Adikari. accountant; and the Pedda Nayak the chief watchman who maintainded law and order and brought offenders to trial before the Adikari at the choultry (the town house - town hall) Madras Discovered-p.10

The police arrangements of old Madras were vested in a hereditary offician known as the Poligar of Madras. The first of these watch man named Pedda Nayak (senior naik or big peon) has left his name to a large section of the town known as Pedda Nayak petta. Formerly a suburb, of Madras it is today a part of George town. The Madras Tercentinary Commemoration Volume .p.187

After the disappearance of the old Black town, the .name Black town came to be applied to Muthialpetta and Pettanaik petta jointly- p.300

Pitts map shows that. Pettanaick petta was the first area to be used for residential purposes out side the white town by the English factors.-p.300

*143. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் - தொடர் எண் 1967/215*

அறிஞர்களால் குறிப்பிடப்படுகின்றன"[144] இப்பெயர்த் தொடர்பாக எழுதும்போது மா.சு. சம்பந்தன் தனது நூலில் 'இதற்குக் காரணம் சென்னையில் நீண்டநாளாக வாழ்ந்து வந்த மக்களுக்கும், புதிதாகக்குடியேறிய மக்களுக்கும் ஏற்பட்ட உரிமைப் போராட்டமும் இவர்களிடையே சமூகத்தில் உண்டான மரியாதை ஏற்றத் தாழ்வுகளுமே என்னலாம். இச்சச்சரவுகளை ஆரன் பேக்கர் தலையிட்டுத் தீர்த்து வைத்தான்.....மேற்சொன்ன கட்சி தீர்ப்பிலிருந்து சில செய்திகள் தெரியவருகின்றன. அன்று இந்தியர் வாழும் பகுதியை அதிகாரி, கணக்கப்பிள்ளை, பெத்தநாயக்கன் என்னும் மூன்று உத்தியோகஸ்தர்கள் நிர்வகித்து வந்தார்கள். இவர்கள் வழி வழி அப்பதவியை ஏற்றார்கள். இவர்களால் ஒழுங்கும் அமைதியும் அப்பகுதியில் ஏற்பட்டன' என்று கூறி செல்கிறார்[145] இப்பெயர் மட்டுமின்றி இங்குக் காணப்படும் பிற பெயர்களும் சான்றாக லிங்கி செட்டி, தம்பு செட்டி போன்ற பெயர்களும் தெலுங்குச்சார்பையே காட்டுகின்றன. எனவே தெலுங்கு மக்கள் இங்கு வாழத் தொடங்கிய நிலையில் இப்பகுதியில் அவர்களின் வாணிபம், தொழில் காரணமாக அவர்கள் செல்வாக்கும் உயர்ந்து உயர் காவல் அதிகாரி நிலைக்கும் அவர்கள் உயர முடிந்தது போன்ற எண்ணங்களைப் பெற முடிகிறது.

***ஊர்ப்பெயர் - பெத்த நாயக்கன் பேட்டை***

***காரணம்- தலைமைத்தன்மை; பதவிப் பெயர்***

## 90. பெரம்பூர்

பிரம்பூர் பெரம்பூர் ஆகியிருக்கிறது. பிரம்பு - மூங்கில், மூங்கில் அடர்ந்த பகுதி பின்னர் குடியிருப்புப்பகுதியாக மாறியிருக்கிறது. ரயில் பெட்டித் தொழிற்சாலையால் இன்று புகழ் பெற்று விளங்குகிறது இப்பகுதி. பல சிறு கோயில்கள் இங்குக் காணப்படுகின்றன.

***ஊர்ப்பெயர்- பிரம்பூர்***

***காரணம்-இயற்கை (பிரம்பு)***

---

144.The Madras Tercentenary Commemoration Volume.p.300

*145. சென்னை மாநகர் ப.46*

## 91. பெரிய மேடு

சூளையின் அருகாமையில் இருக்கும் ஊர் மேடு காரணமாகப் பெயர் பெற்ற குடியிருப்பு.

இங்கு இன்றுள்ள முகமதியர் தர்க்கா புகழ் பெற்றதாக அமைகிறது.

***ஊர்ப்பெயர்-பெரியமேடு***

***காரணம்-நில அமைப்பு***

## 92.போயஸ் கார்டன்

பெயர்க்காரணம் தெளிவில்லை. ஆட்பெயராகப் போயஸ் இருக்கலாம்.

***ஊர்ப்பெயர்-போயஸ்கார்டன்***

***காரணம்-***

## 93.மண்ணடி

ஜார்ஜ் டவுனில் முத்தியாலுப்பேட்டையின் அண்மைப்பகுதி.

***ஊர்ப்பெயர்-மண்ணடி***

***காரணம்-இயற்கை (மண்)***

## 94.மந்தைவெளி

மயிலாப்பூரின் தென் பகுதி. மந்தைவெளியாக இருந்தப்பகுதி. பின்னர் மக்கள் குடியமர்ந்த நிலையில் இப்பெயரே ஊர்ப்பெயராகவும் ஆயிற்று. மந்தைவெளியும் மந்தை வெளிப்பாக்கமும் முன்பு இணைந்து இருந்திருக்கவேண்டும்.

***ஊர்ப்பெயர்-மந்தைவெளி***

***காரணம்-மேய்ச்சல் பகுதி அல்லது மந்தை அடைக்கப்பட்ட இடம்***

## 95.மந்தைவெளிப்பாக்கம்

மயிலாப்பூரின் கிழக்குப் பகுதி மந்தைவெளிப்பாக்கம். மந்தைவெளியின் பகுதி மந்தைவெளிப்பாக்கமாயிற்று.

இப்பெயர்களின் பொருளும், மயிலையின் வரலாறும் இவையும் மயிலை போன்று பழமையான ஊர்களாக இருந்திருத்தலை உறுதிப்படுத்துகின்றன.

**ஊர்ப்பெயர்-மந்தைவெளிப்பாக்கம்**

**காரணம்-மந்தைவெளி -நெய்தல்நிலப்பகுதி**

## 96.மயிலாப்பூர்

பழமையும் சிறப்பும் வாய்ந்ததொரு குடியிருப்பு மயிலர்ப்பூர். சங்க இலக்கியங்களில் மயிலாப்பூர் பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. ஆயின் தொடர்ந்த கால இலக்கியங்களில் இது பற்றிச் சுட்டப்படும் எண்ணங்கள் இதன் பழமைபற்றிய சிந்தனையைத் தருகின்றன. தொண்டை நாட்டுப்பகுதியாகவும் பின்னர் பல்லவர் சோழர்களால் ஆளப்பட்ட பகுதியாகவும் இடைக்காலம் வரையில் இருந்துள்ளது. தேவாரப்பாக்கள் இவ்வூரின் சிறப்பினைச் சிறப்பாக தருகின்றன.

கடல் அலைகள் உலவுகின்ற மயிலை. மயிலையின் ஒரு பகுதி சேரி, அதுவேல் வடிக்கும் தொழிலாளர்கள் நிறைந்த சேரி, அச்சேரியின் மழை தரும் சோலைப் பகுதியுள் கோயில் உள்ளது போன்ற கருத்துகளில் மயிலை செழிப்பு வாய்ந்ததொரு பகுதியாக, வணிகப் பகுதியாக, இறைப்பெருமையுடையதாக இருந்தது தெளிவாகிறது. வேல் செய்யும் வல்லோர் வாழ்ந்த பகுதி என்றக்குறிப்பில் மன்னர்த் தொடர்பு தெரிகிறது. பிற்காலத்தில் தல இலக்கியங்கள் பல இதன் பெருமையைத் தெரிவிக்கின்றன. முதலில் திருவல்லிக்கேணி சாந்தோம் போன்ற பல பகுதிகளும் இதனுள் அடங்கியபகுதிகளாக இருந்தன. பின்னர் அவை தனித் தனியாகப் பிரிந்து இதன் பரப்பைக் குறைத்து விட்டன. சமயச் சார்பாகப் புகழ் பெற்ற இவ்விடம் திருவள்ளுவர் பிறந்த இடமாகவும் கருதப்படுகிறது. நேமிநாதர் வாழ்ந்த இடமாகவும் கருதப்படுகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இத்தலத்தின் பெருமைபண்டு தொட்டு இன்று வரையிலும் தொடர்ந்து காணப்படுவது குறிப்பாகச்சுட்டத்தக்கது.

மயிலாப்பூர் பற்றிய முதற்குறிப்பு பிற நாட்டார்க்குறிப்பாக அமைகிறது. தாலமி மலியர்பா என்று சுட்டுவது மயிலாப்பூர் என்பது வரலாற்றாசிரியர்கள் கருத்து.

தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் ஐயடிகள் காடவர்கோன் இயம்பிய சிவத்தளி வெண்பாவில் இவ்வூர் பற்றிய குறிப்பு முதலில் அமைகிறது.

**மயிலை திருப்புன்னையங்கானல் சிந்தியாயாகில்**

பின்னர், தொடர்ந்த கால இலக்கியக் குறிப்புகள் இப்பெயரின் வடிவங்களை இனம் காட்டுகின்றன. பல்வேறு பட்டமக்களின் தொடாபையும் இவ்வூரின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் இவ்வழக்குகள் தெளிவுபடுத்துகின்றன.

| | |
|---|---|
| மாமயிலை- | திருமழிசையாழ்வார் |
| மயிலாப்பில்- | திருநாவுக்கரசர் |
| மயிலாப்பு- | |
| மயிலை- | சம்பந்தர் |
| மயிலை- | திருமங்கையாழ்வார் |
| மாமயிலை- | ,, |
| தொன்மயிலை | சுந்தரர் |
| மயிலை- | நந்திக் கலம்பகம் |
| மயிலாபுரி- | ,, |
| மயிலாப்பில்- | கம்பவர்மன் கல்வெட்டு |
| மயிலை- | திருத்தொண்டர் திருவந்தாதி |
| மயிலாப்பில் | |
| திருமயிலை | கி.பி.12 ம் நூற்றாண்டு |
| திருமயிலாபுரி | |
| தென்மயிலாபுரி | |
| மயில்கள் நிறைந்த பகுதி- | மார்க்கோபோலோ |
| திருமயிலாப்பூர்- | கல்வெட்டுகள் |
| மயிலாப்பில்- | தொல்-நச்சி உரை |
| மைரா போலிஸ்- | ஜான்டி மரிசு நோலி |
| மயிலை- | அருணகிரி நாதர் |
| மைலாபூரா- | டுரேட் பார் போஸா |

| | |
|---|---|
| மெலியபூர்- | போர்த்துக்கீசியர் |
| மயிலாப்பூர்- | கி.பி.17 |
| மயூரபுரி, மயூரநகரி- | பிரம்மாண்ட புராணம் |
| மயிலாப்பூர்- | சென்னை மக்கள் |
| மைலாப்பூர் | ஆங்கிலேயர் |

(நன்றி: முனைவர் சு.ராஜசேகரன் ப.20)

இவ்வாறு காலந்தோறும் இது பல்வேறு மக்களாலும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. அனைத்தும் மயில்சார்புடன் அமைகின்றன. பல மரூ உவாகக் காணப்படுகின்றமையும் நோக்கத் தக்கது. தொடர்ச்சியாக அமையும் இப்பெயர்களின் மூலம் இதன் மூல வடிவம் யாது என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளல் இயலுகிறது.

பிற மொழியாளர் மலியர்பா எனக் குறிப்பிட்டுள்ளனர். தமிழரால் சுட்டப்பட்ட முதல் பெயராக மயிலை அமைகிறது. மேலும் ஏறக்குறைய சம காலத்திய வழக்காக மயிலாப்பில், மயிலாப்பு அமைகின்றன.மயிலை என்ற பெயரை நோக்க, இது ஒரு மரூஉப் பெயர் என்பது தெரிகிறது. இதன் விரிவு எனக் காண அக்காலப் பிறவடிவங்களான மயிலாப்பில், மயிலாப்பு காணப்படுகின்றன. எனவே மயிலையின் தொல்வடிவம் மயிலாப்பு அல்லது மயிலாப்பில் என இருந்திருக்க வாய்ப்பு அமைகிறது.

மயில்+ஆப்பு-மயிலாப்பு

மயில்+ஆப்பு+இல்-மயிலாப்பில்

இல் என்பதற்கு இடம் என்ற பொருள் அமைகிறது. ஆப்பு என்பதற்கு முளை, எட்டி, நோய், உணவு, கட்டு, சரீரம் என்ற பொருட்களைத் தமிழ் லெக்சிகன் தருகிறது.[146] எனவே மயில்+ஆப்பு+இல் என்பதில், ஆப்பு பொருத்தமாக இல்லை. ஆப்பு என்பதை மரூஉச் சொல்லாகக் கொண்டால் ஆர்ப்பு என்பது முதற்சொல்லாக அமையும். ஆர்ப்பு என்பதற்குரிய பல பொருட்களுள் ஒலித்தல், பேரொலி என்பனவும் அடங்குவன. எனவே மயில் ஒலிப்பு இடம் என்ற பொருள் இங்குப் பொருத்தம் பெறலாம். மயிலாப்பில் இதன் முதல் வடிவமாக இருந்திருத்தல் பொருத்தமாக அமைகிறது.

---

146.தமிழ் லெக்சிகன் தொகுதி - ப - 232.

மேலும் மயிலை என்பது மயிலாப்பு என்று ஆகியிருத்தல் இயலாதது. மருவும் போது எழுத்துகள் குறையும் தன்மை உண்டு. விரியும் போது அடை, ஒட்டுகள் இணையுமேதவிர மயிலை, மயிலாப்பு என விரிதலுக்குரிய வாய்ப்புண்டா என்பது வினாவிற்குரியது. எனவே மயில்கள் மிகுதியாகக் குழுமியிருந்து அகவிய இடம் மயிலாப்பில் எனக் குறிப்பிடப்பட்டு மக்கள் வழக்கில் திரிந்து மயிலை என வழங்கத் தொடங்கியிருக்கிறது எனக் கொள்ளல் பொருத்தமாக அமைகிறது.

மயில்கள் ஒலி எழுப்பும் இடம் என்ற பொருள் இவ்வூர் பெயர்க்காரணமாகத் தெரிய வந்தாலும் இதுதவிர பிற விளக்கங்களையும் ஆய்வாளர் சுட்டியுள்ளனர்.[147]

மயில்களின் ஆரவாரத்தினால் இப்பெயர் அமைந்தது என்பதுடன்

1. இறைத் தன்மையால் பெயர் பெற்றது.

2. அப்பகுதியை ஆண்ட பழைய குலத்தவரின் மரபுரிமைச் சின்னமான மயில் ஊர்ப் பெயராக அமைந்தது.

என்ற இரு காரணங்களை இவர்கள் தருகின்றனர்.

1. ஒரு காலத்தில் சிவ பெருமான் உமையம்மையாருடன் திருக்கைலாயத்தில் வீற்றிருந்தார். அப்போது அம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்க ஐந்தெழுத்தின் பெருமையையும் திருநீற்றின் மகிமையையும் பற்றிப் பெருமான் விளக்கம் செய்து கொண்டு இருக்கும் போது ஒரு மயில் தன் தோகையை விரித்து ஆடியது. அதன் அழகை உற்று நோக்கிய அம்மையார் அதன் ஆட்டத்தில் தமது கவனத்தைச் செலுத்தினார். இதைக்கண்ணுற்ற சிவ பெருமான் நீ பூதலத்தில் மயில் உருப்பெற்றிடுவாய் என்பதாக ஆணை பிறப்பித்தார். இந்நிலையில் வருந்திய தேவியார் இதைத் தவிர்ப்பது எங்ஙனம் என குறையிரப்ப இறைவன் புண்ணிய நாடாகிய தொண்டை நாட்டிற்குச் சென்று தவமியற்றுவாய் என்பதாகக் கூறினார். அவ்வாறே அம்மையார் தொண்டை நாட்டில் இப்போது மயிலாப்பூராக அமைந்துள்ள பகுதியில் புன்னை மரத்தின் கீழ்ச் சிவலிங்கம் ஒன்றைத் தாபித்துப் பூசித்து வந்தார். அப்போது சிவபெருமான் தேவியின் முன்தோன்றி, மயிலாய் இருந்த பழி உன்னை விட்டு அகன்றது. கற்பக வல்லி என்பதான

---

147. திருமயிலைத்திருத்தலம்-பக்.21-23

பெயர் உனக்காகுக, என்பதான வரமும் ஈந்தனர். தேவியாரும் பரமனாரை நோக்கி அடியேன். இங்குத்தவம் செய்து உய்ந்தேன். இப்பெரும் பகுதிக்கு மயிலை என்னும் பெயர் ஓங்க வேண்டும். என்னுடன் தாங்கள் பிரியாது இங்கு இருக்க வேண்டும். இங்கு வந்து வழிபடுபவர்களுக்கெல்லாம் தாங்கள் அருள் புரிய வேண்டும் என வேண்டிக் கொண்டபடியால் மயிலை என்னும் பெயர் பெற்றது என்று திருமயிலைத் தலபுராணம் கூறுகிறது.[148]

*புன்னாக வள்த் தெழில் சேர் கயிலை மலையுமை மயிலாய்பூசைசெய்யு*

*நன்னாமத்தான் மயிலையென விளங்குமூதூர்*

பக்தியின் செல்வாக்கு தமிழகத்தில் ஓங்குவதற்கு முன்னரேயே இவ்வூரின் தோற்றமும் இதன் பழமையும் வெளிப்படும் ஒன்று. தமிழரின் ஊர்ப்பெயர் வரலாற்றில் வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு அடிப்படையில் தமிழர் ஊர்கட்குப் பெயரிட்ட முறை விளக்கம் பெறுகிறது. இடைக்காலத்தில் சமயங்களின் செல்வாக்குக் காரணமாக, பல ஊர்கள் இறைச்சார்புப் பெயர்களைப் பெற்றிருப்பதை வரலாறு காட்டுகிறது. ஆயின் அதற்கு முன்பு மக்கள் இயற்கைச் சூழலிலேயே வாழ்ந்து வந்தனர். அக்காலத்திய ஊர்ப்பெயர்களும் இயற்கைச்சார்புடனேயே திகழ்ந்தன. பண்டைத் தமிழக ஊர்ப்பெயர்களை ஆராய்ந்த இலக்கியங்களில் ஊர்ப்பெயர்கள் (தொகுதி-1) நூலும் அப்போது பெரும்பாலும் இயற்கைச்சார்பு பெயர்களும் ஒரு சில பெயர்களே செயற்கைச் சார்ந்து காணப்பட்டதையும் இயம்புகிறது. அக்காலத்தில் எழுந்ததாகத் தெரியவருகின்ற ஊர் மயிலாப்பூர் எனவே இதுவும் இயற்கைச்சார்பு பெயராக இருந்திருத்தலுக்குரிய வாய்ப்பே மிகுதியாக அமைகிறது.

2. இப்பகுதியை ஆண்ட மன்னர்களின் மரபுரிமைச் சின்னமாக மயில் இருந்திருக்கலாம்[149] என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை. சங்க இலக்கியப் பாடல்களில் சென்னைப் பகுதி குறித்து எந்த வித செய்திகளும் இல்லை. தொண்டை மண்டலப் பகுதிகளை ஆண்ட அரசர் சிற்றரசர் குறு நிலத்தலைவர் சிலர் தெரிய வரினும் மயில் மரபுச் சின்னமாக அவர்களிடமோ அவர்க்கு முன்னோரிடமோ இருந்தது என்பதற்கான எந்தச்செய்திகளும் இல்லை. எனவே இக்கருத்தையும் சான்றுகள் ஏதும் இல்லாத

---

*148. திருமயிலைத் திருத்தலம் பக்-21-22*

*149. திருமயிலைத் திருத்தலம் ப-22*

நிலையில் ஏற்றுக் கொள்ள இயலாத சூழலே அமைகிறது.

எனவே மயிலின் ஒலிப்பு மிகுதியான இடம் என்ற பொருளே பெயர் நிலையிலும், பொருள் நிலையிலும், காலச் சூழ்நிலையிலும் பொருத்தமாக அமைகிறது. மேலும் மயிலாப்பூரைக் கானல், சோலை சூழ்ந்த பகுதியாகப் பாக்கள் காட்டுதலில், சோலைகளில் மயில்கள் வாழும் என்பது ஏற்புடையதே என்ற நோக்கிலும் இணைத்துப்பார்க்கலாம். மயிலையின் பகுதியாக அன்று இருந்த திருவல்லிக்கேணி பற்றிய வருணனை ஒன்று இங்கு மயில்கள் நிறைந்திருந்தமையைச் சுட்டுவதும் குறிப்பிடத்தக்க சான்றாகும்.

மயிலாடுதுறை, மயிலாடி போன்ற மயில் சார்பு ஊர்ப்பெயர்களும் இங்கே இணைத்து நோக்கத் தக்கன. மயிலாடு துறை மாயூரம், மாயவரம் என்றாகி இன்று மீண்டும் மயிலாடுதுறை ஆகியிருத்தலைக் காண்கின்றோம். அது போன்றே மயிலாப்பூரைப்பிரமாண்ட புராணம் மயூரபுரி, மயூரநகர் என்று குறிப்பிட்டதையும் கண்டோம். இவ்வொற்றுமைகளும் இங்கு எண்ணத் தக்கன.

மேலும் இவ்வூர்த் தொடர்பாகப் பல காரணங்கள் சுட்டப்பட்டாலும் அனைத்தும் அடிப்படையில் மயில்சார்பு பெற்று வருவதையும் நாம் எண்ணிப் பார்க்கலாம்.

மயிலையின் பிற பெயர்களாகப் புன்னைவனம், வேதநகர், சுக்கிரபுரி, பிரமபுரம், கந்தபுரி, கபாலீச்சரம், கபாலி மாநகர் போன்றன சுட்டப்படுகின்றன.

புன்னைவனம் என்ற பெயர் புன்னை மரங்கள் நிறைந்த பகுதியாக இது இருந்திருத்தலை அடையாளம் காட்டுகிறது. மயிலைத்திருப்புன்னையங்கானல் என ஐயடிகள்காடவர்கோனும் குறிப்பிடுகிறார். இதுவும் இயற்கைச் சார்பு பெயராகும். இங்கே இறைவன் குடிகொண்டுள்ளான் என்ற குறிப்பு அமைகிறது. இதனை நோக்க மயிலாப்பூர் மயில்களின் ஆர்ப்பு நிறைந்த பகுதி என்பதும் இப்பகுதியில் புன்னை மரங்கள் நிறைந்த சோலைப் பகுதியில் சிவன் கோயில் அமைந்திருந்தது என்பதும் தெரிய வருகின்றன. எனவே மயிலையின் ஒரு பகுதி புன்னை வனம் எனச்சுட்டப்பட்டு இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

பிற பெயர்கள் அனைத்தும் இவ்வூருக்கும் வடமொழியாளர்க்குமுரிய தொடர்பைக் காட்டுகின்றன. வேதநகர், சுக்கிரபுரி,

பிரமபுரி, கந்தபுரி குறிப்பிட்ட பொருண்மையைக் காட்ட, கபாலீச்சரம், கபாலிமாநகர் மீண்டும் சிவன் பெருமையைத் தெரிவிக்கின்றன. தேவாரப் பாக்கள் கபாலீச்சுரம் என்று சுட்டும் தன்மையில், கபாலிகர் என்ற சைவ மதத்தின் ஒரு பிரிவினர் வணங்கிய கோயில் இது என்பதை இப்பெயர்கள் காட்டுகின்றன. இத்தனைப் பெயர்கள் இதற்கு இடப்படினும், பழமையும் செல்வாக்கும் பொருந்தியதாக இன்று வரையிலும் எந்த வித செல்வாக்குக்குறைவுமின்றி வழங்கப்படும் பெயர் மயிலாப்பூர்.

***ஊர்ப்பெயர்- மயிலாப்பூர்***

***காரணம்- மயில்களின் ஒலி***

## 97.மாம்பலம்

மக்கள் நெருங்கி வாழ்கின்ற குடியிருப்பு. இதன் ஒரு பகுதியாக இருந்து இன்று தனிப்பெயருடன் திகழும் தியாகராயநகர் மிகவும் புகழ் பெற்று விளங்கும் பகுதியாகும்.

மாம்பலம் வரலாற்று நிலையில் புகழ் பெறவில்லை எனினும் இது தொடர்பான செய்திகள் இதனைப் பழைய தொரு கிராமமாகக் காட்டுகின்றன. ம.சு.சம்பந்தன் தனது சென்னை மாநகர் நூலில், மயிலாப்பூரைச் சார்ந்திருந்த சிற்றூர்களில் ஒன்றாக மாம்பலத்தைக் குறிப்பிடுகிறார்.[150] இங்குப்பல கோயில்கள் இருக்கின்றன. கோதண்ட இராமசாமி கோயில் கி.பி. 1927- இல் கட்டி முடிக்கப்பெற்ற கோயில்.

இப்பெயர்த்தொடர்பாக ஆராயும் போது, தட்சிணபத்தி ராசலம்- மாபில சேத்திரம் இது என்று இதனைக் கூறுகின்றனர். மா.சீதேவி; பில -வாழ்கின்ற; சேத்திரம் - தலம். சீதேவி வாழ்கின்ற தலம். மாபிலம் என்பது மாம்பலம் ஆயிற்று என்று இப்பக்கத்தார் கூறுகின்றார். பிலம் என்பது பாதலம் என்று பொருள்தருகிறது. அது கீழ்பூமி, கீழ் அறை. ஆதலின் மாபள்ளம் என்பதனை இக்கூற்றும் உடன் படுகின்றமை காண்க, என்பது ஒரு கருத்தாக்க் கிடைக்கிறது.[151] காசி விசுவநாதர் கோயில் முந்நூறு ஆண்டுகளுக்குமுன் தோன்றிய சிவன் கோயில். இக்கோவிலார் இதனை மாபில்வசேத்திரம் என்று கூறுகின்றார்கள். பில்வம்- வில்வமரம். மாபில்வம் என்பது திரிந்துமாபலம் ஆயிற்று என்பது

---

*150. சென்னை மாநகர்- ப.-19*

*151 .சென்னை மாவட்டக் கோயில் வரலாறு- ப.173.*

இவர்கள் கூற்று.[152]

மாபாடியக்காரர் ஆதி சென்ன கேசவப் பெருமாள் கோயில் என்பது இன்னொரு கோயில். இத்திருக் கோயில் உடையவர் கோயில் என்று வழங்கிவருகிறது. உடையவர்- இராமனுசர். ஆதிசேசவப் பெருமாள் கருவறையில் வலது புறம் சீதேவியும், இடது புறம் பூதேவியும் இருக்க மூலவராக எழுந்தருளியி ருக்கின்றார். அவர்களுக்கு முன் அவருடைய எழுந்தருள் திருமேனிகள் உள்ளன.......... எழுந்தருள் திருமேனிகளின் பீடத்தில், மயிலை கேசவன் மயிலை மாம்பலம் செங்கமலத் தாயார் என்று எழுதியிருப்பதால் இது மயிலாப்பூர் கேசவப்பெரு மாளை நினைத்துத் தோற்றிய திருக் கோயில் என்பதை அறியலாம்[153]

இங்கு மாபில்வம், மாபிலம் என்பன மாம்பலம் என்பதற்குக் காரணங்கள் எனச்சுட்டப்பட்டாலும் அறிவியல் ஆய்வுக்கு இக்காரணங்கள் பொருத்தமாக இல்லை.

இங்கு நாம் காணவேண்டியது முதலில் இவ்வூரின் பழமை.

தியாகராயநகர், புதியதாக 40 ஆண்டுகளுக்கு முன் மாம்பலத்தின் ஒரு பகுதி பெற்ற பெயர் என்று தெரிய வந்தாலும், இப்பகுதியில் மக்கள் முன்பே வாழ்ந்து வந்துள்ளனர் என்பது தெளிவு. இன்றைய புகை வண்டி நிலையத்துக்கு மேற்கே உள்ள பகுதி இன்று பழைய மாம்பலம் என்றும், கிழக்கே உள்ள பகுதி புதுமாம்பலம் என்றும் அழைக்கப்படுகின்றன. புது மாம்பலம் தான் தியாகராயநகர் எனவே முதலில் இரண்டு பகுதிகளும் மாம்பலம் என்று ஒரே ஊராக இருந்திருக்கிறது என்பது தெளிவான ஒன்று.

இங்குக் காணப்படும் மாபாடியக்காரர் ஆதி சென்ன கேசவப் பெருமாள் கோயிலில் எழுந்தருள் திருமேனிகளில், மயிலை கேசவன் மயிலை மாம்பலம் செங்கமலத்தாயார் என்று எழுதியிருப்பது தெரிகிறது. மயிலாப்பூர் கேசவப் பெருமாளை நினைத்துத் தோற்றிய திருக் கோயில் என்பதாகவும் கருத்து இருக்கிறது. மயிலை மாம்பலம் என்ற சொல்லும் ஆராய்ச்சிக்குரியது [154] வேறு வேறு இடங்களில் ஒரே பெயர் இருக்கும் போது அவற்றை வேறுபடுத்திக் காட்ட, அது சார்ந்த பெரிய ஊரையும் இணைத்துச் சுட்டுவது மரபு எனவே

152,. சென்னை மாவட்ட கோயில் வரலாறு ப - 174

153. சென்னை மாவட்ட கோவில் வரலாறு - 174

154. சென்னை மாவட்ட கோவில் வரலாறு-பக்.174

இத்தன்மையில் இப்பெயர் அமைந்திருக்கலாம் எனில் மாம்பலம் என்ற வேறு ஊர்ப்பெயர் இருந்ததாகத் தெரியவில்லை. எனினும் ம.சு.சம்பந்தன் காட்டியது போன்று மயிலாப்பூர் திருவல்லிக்கேணி போன்று, மயிலையின் ஒரு பகுதியாக இருந்தது மாம்பலம் எனவே மயிலை மாம்பலம் என்று சுட்டப்பட்டிருக்கலாமோ என்ற எண்ணமும் தோன்றுகிறது. மேலும் ஒரே ஊராக இருந்த நிலையில் கேசவப்பெருமாளை மயிலையில் வணங்கிய மக்கள், பின்னர் தனிக் குடியிருப்பாக மாம்பலத்தை அமைத்துக் கொண்ட பின்பு தங்கள் பகுதியிலும் கேசவப் பெருமாள் கோயில் வேண்டும் என்று எண்ணி இக்கோயிலை அமைத்திருக்கலாம். எனவே மயிலையின் ஒரு பகுதியாக அல்லிக் கேணி இடப் பெயராக இருந்துபின்னர் ஊர்ப் பெயராக மாறியது போன்று மயிலையின் ஒரு பகுதியாக இடப்பெயராக இருந்த இப்பகுதி பின்னர் குடியிருப்பாக அமையத் தொடங்கியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

எனவே இப்பெயரும் ஊர் பழமையாக இருக்கும் நிலையில் இப்பற்சைச்சார்புடன் இருக்க வாய்ப்பு அமைகிறது. இந்நிலையில் அறிஞர் கருத்துகள் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

மர்மலாங் என்பதன் திரிபு மாம்பலம் என்பது ஒரு கருத்து[155]

மேட்டுப்பாளையத்திற்கு அடுத்துக் கீழ்புறம் இருப்பது மாம்பலம். மாம்பலம் மிகப்பள்ளமான குளங்களோடு இருந்தது. அது மாபள்ளம் ஆகி இப்போது மாம்பலமாகி மருவி வழங்குகிறது. மாபள்ளம்-பெரிய பள்ளம். இது ஆதியில்

---

155. The river is fordered in Saidapet by a handsome new bridge built in place of the historic Maramalong bridge.Madras Discoverd-P.64

Maraimalai Bridge in Uscans day was Maramalong Bridge, a name that is but one version of the name of the near by villege of Mambalam (once Mamlan) an ancient causeway of uncertain date, it was rebuilt as a bridge by uscan in 1726 as part of his contribution to making access easy to Little Mount, on the South bank of the river near the Bridge, and St Thomas Mount p. 65.

செட்டிகுப்பம் என்று வழங்கி வந்தது. [156] என்பது இன்னொரு கருத்து. இப்பகுதி பள்ளமாக இருந்துள்ளது என்பதைப்பலரும் ஏற்கின்றனர். மேட்டுக்கு அருகில் பள்ளம் இருப்பது இயற்கையே எனவே இக்கருத்து ஏற்புடையது எனினும் இன்னொரு கருத்து வேறுபட அமைகிறது.

மாண்புலம்-மாம்புலம்-மாம்பலம் ஆயிற்று என்பது டாக்டர் மு.வ.கருத்தாகத் தெரிய வருகிறது.

சிறந்த நிலம் என்ற கருத்தில் இதனையும் ஏற்கக் கூடிய சூழல் உள்ளது.

எனினும் முன்கருத்து வலிமையுடையது என்பதற்கு இதன் இன்னொரு பெயர் துணைபுரிகிறது. இது ஆதியிற் செட்டிகுப்பம் என்று வழங்கி வந்தது என்பது அக்கருத்து. மயிலையின் ஒரு பகுதியாகிய இவ்விடத்தின் அருகாமையில் மக்கள் வசித்து வந்துள்ளனர். அவர்கள் செட்டியாராக இருக்கலாம். அவர்களின் தொழில் வணிகமே தவிர விவசாயம் இல்லை. எனவே செட்டிகுப்பம் அருகாமையில் நில அமைப்பால் பள்ளமாக இருந்த பகுதி பின்னர் மக்கள் குடியேற்ற நிலையில் மாபள்ளமாகி மாம்பலம் ஆகியிருக்கலாம் என்று கருதலாம்.

**ஊர்ப்பெயர்- மாம்பலம்**

**காரணம்- பள்ளமாகிய நில அமைப்பு**

## 98. முகப்பேரி★

## 99.முத்தியாலுப்பேட்டை

ஜார்ஜ் டவுனின் பகுதியாக அமைகிறது முத்தியாலுப்பேட்டை. மக்கள் நெருங்கி வாழும் இப்பகுதி ஆங்கிலேயரின் வரவுக்கு முன்னரேயே குடியிருப்புப் பகுதியாகத் திகழ்ந்துள்ளது.

இப்பகுதி சிறிய பகுதியாக இருப்பினும், இங்குப்பல கோயில்கள் காணப்படுகின்றன.

கச்சபேசுவரர் கோயில், தருமராசர் தரும விநாயகர் கோயில், மல்லிகேசுவரர் கோயில், வேணுகோபால சாமி கோயில், சண்முகம் பிள்ளையார் கோயில், நடராசர் கோயில் காளிகாம்பாள் கமடேசுவரர் கோயில் கிருஷ்ணன் கோயில் போன்றவை இக்கோயில்கள். அனைத்தும் கி.பி.17க்குப் பின்னர் கட்டப்பட்டவையாக இருந்திருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது. பல கோயில்கள் இருப்பினும், ஒரே ஒரு கல்வெட்டுச் செய்தியே தெரிய வருகிறது.

செங்கழு நீர் பிள்ளையார் கோயில் வெளிச்சுற்றில் காணப்படுகின்றது ஒரு கல்வெட்டு. [157] செட்டியார் நால்வர் முத்தியாலுப்பேட்டை இராமசாமி கோயிலில் தெப்ப உற்சவம் நடத்துவதற்கு நிலம்அளித்ததைக் குறிக்கிறது. இக்கல் வெல்வெட்டின் காலம் கி.பி.1835. எனவே கல்வெட்டுகள் மூலம் இவ்வூர் பற்றிய செய்திகள் எதையும் அறிதல் இயலவில்லை.

இலிங்கச்செட்டித் தெரு வடகோடியில் உள்ள தருமராசர், தரும விநாயகர் கோயிலில் முத்தியாலு அம்மன் மிக்க புகழுடன் எழுந்தருளியிருக்கின்றாள். அவ்வம்மை பெயராலேயே இப்பெயர் அமைந்திருக்கிறது என்ற கருத்து ஒன்று தெரியவருகிறது.[158] இங்குள்ள மல்லிகார்ஜுனர் கோயில் திருப்பணிகள் 17ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டாலும் இது ஒரு பழைய கோயில் என்று தெரிகிறது.[159] எனவே 17ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் மக்கள்

---

*157. சென்னை மாவட்டக் கல்வெட்டுகள் - தொடர் எ்ண் 1967/182*

*158 சென்னை மாவட்டக் கோயில் வரலாறு - ப-201*

159. It is said to be an ancient foundation, and referaed to as the Mally carjuns' old pagoda in the companies records of the 17th century. The Madras Teacentenary Commemoration Volume- p.362

★ பார்க்க அண்ணா நகர்.

மிக அதிகமாக வாழத் தொடங்கிய நிலையில் பல கோயில்கள் கட்டப்பட்டன என்பதை உணர்ந்தாலும் அதன் முன்னரேயேஇப்பகுதியில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு மல்லிகார்சுனர் கோயில் சான்று பகர்கிறது. இந்நிலையில் இங்குக் குறிப்பிடப் பட்ட தருமராசர், தரும விநாயகர் கோயிலும் காலம் தெளிவு படாத நிலையில் பழைய கோயிலாக இருக்க வாய்ப்பு அமைகிறது. இதனால் இங்கு அமைந்திருக்கும் அம்மன் பெயரே இப்பேட்டையின் பெயராகவும் அமைகிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இங்கு வாழ்ந்த மக்களை இந்த அம்மன் பெயரால் இனங்கண்டு கொள்ள முடியுமா என்ற நோக்கில் ஆராய ஓர் எண்ணம் புலப்படுகிறது.

முத்தாரம்மன் என்பது தமிழகத்தில் பரவலாக வணங்கப்பட்டு வரும் நாட்டுப் புறத் தெய்வமாகும். இத்தெய்வம் தெலுங்கர்களால் முத்தியாலு அம்மன் என வணங்கப்படுகிறது. எனவே தெலுங்கர்கள் இப்பகுதியில் குடியேறிய போது அவர்கள் இந்த அம்மனை இங்கு வைத்து வழிபடத் தொடங்கியிருக்கலாம் எனவே இப்பகுதியும் அந்த அம்மன் பெயரால் அழைக்கப்படத் தொடங்கியிருக்கலாம் என்பது பொருத்தமாக அமைகிறது. இப்பகுதி சார்ந்த பெத்த நாயக்கன் பேட்டை வரலாறும் இதனோடு தொடர்புடையது.

**ஊர்ப்பெயர்- முத்தியாலுப்பேட்டை**

**காரணம்- முத்தியாலு -அம்மன் பெயர்.**

## 100.மூலக்கடை

வடசென்னையில் வியாசர்பாடியை அடுத்துள்ள குடியிருப்பு.இப்பெயர்க்காரணம் ஆராய மூலிகைக்கடையா? அல்லது தெரு மூலையில் இருந்த கடையா என்பது தெளிவு பெறவில்லை.எனினும் மூலைக்கடை பொருத்தம் பெறலாம்.

**ஊர்ப்பெயர்- மூலக்கடை**

**காரணம் - மூலை**

## 101.மேட்டுப்பாளையம்

மாம்பலத்தை அடுத்த பகுதி. பள்ளம் தொடர்ந்து மேடு என்று நிலத்தின் மேட்டு அமைப்பால் பெயர் பெற்ற குடியிருப்புப் பெயர். தண்டையார்பேட்டை அருகிலும் ஒரு மேட்டுப்பாளையம் உள்ளது.

***ஊர்ப்பெயர்- மேட்டுப்பாளையம்***

***காரணம்- நில அமைப்பு***

## 102.மேடவாக்கம்

*நிலத்தின் மேட்டு அமைப்பும், கடற்கரைச் சிற்றூர் என்ற நிலையில் பாக்கமும் இணையப் பெயர் பெற்ற குடியிருப்புப் பகுதி.*

***ஊர்ப்பெயர்- மேட்டுப்பாக்கம்***

***காரணம்- மேடு-நெய்தல் நிலம்***

## 103.மேத்தா நகர்

*நுங்கம்பாக்கம் சேத்துப்பட்டு அருகில் உள்ளது. முன்பு நுங்கம்பாக்கத்தின் பகுதியாக இருந்திருக்க வேண்டும்.*

***ஊர்ப்பெயர்- மேத்தாநகர்***

***காரணம்- ஆட்பெயர்***

## 104.ரங்கராஜபுரம்

*சின்ன மலையின் அருகே அமைந்துள்ள புதிய குடியிருப்பு. பழைய மாம்பலம் அருகிலும் ஒரு ரங்கராஜபுரம் உள்ளது.*

***ஊர்ப்பெயர்- ரங்கராஜபுரம்***

***காரணம்- ஆட்பெயர் அல்லது இறைப்பெயர்***

## 105.ராயபுரம்

*வடசென்னையில் ஜார்ஜ் கோட்டை, துறைமுகம் இவற்றை அடுத்து, மிகவும் மக்கள் நெருக்கமாக வாழும் ஒரு குடியிருப்பு இராயபுரம்.*

*அங்காள பரமேஸ்வரி கோயில், பத்திரகாளி அம்மன் வீரபத்திரசாமி, சிவ சுப்பிரமணிய கோயில் ஆகிய மூன்று கோயில்கள் இங்கு உள்ளன.*[160]

*ஆங்கிலோ இந்திய மக்கள் மிகுதியாக இங்கு முன்பு வாழ்ந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியின் பிற்பகுதியில் இப்பகுதி*

---

*160. சென்னை மாவட்டக் கோயில் வரலாறு-பக்.200-201*

ரயில்வே பொருட்கள் பாதுகாப்புப் பகுதியாகவும் விளங்கியது.[161]

இன்று எல்லா தரப்பட்ட மக்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

சென்னை.மாநகர்க் கல்வெட்டுகள் நூல் ராயபுரம் சார்ந்த இரு கல்வெட்டுகளைக் குறிப்பிடுகின்றது. 1886 ஆம் ஆண்டு சார்ந்த ஒரு கல்வெட்டு இராயபுரத்தில் கிடைத்துள்ளது. எனினும் இப்பெயர் தொடர்பான எச்செய்தியும் அதில் இல்லை. 1818 ஐச் சார்ந்தது கல்வெட்டு.

ஆச்சாரியார்கள் மூவர் சென்னையைச் சார்ந்த இராயபுரத்தில அங்காளம்மன் கோயில் புதுப்பித்துத் திருப்பணிகள் பல செய்ததைத் தெரிவிக்கும் கல்வெட்டு இது.

அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயிலில் அம்மன் சந்நிதியின் கிழக்குப்பக்கம் இரண்டாவது வாயிலின் மேல் உள்ள இக்கல்வெட்டில், 'சென்னையைச்சார்ந்த இராயபுரத்தில்' என்ற தொடர் அமைகிறது[162]

எனவே 18 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரேயே இக்குடியிருப்பு இருந்தமை தெரிகிறது.

மேற்குறித்த செய்திகளின் அடிப்படையில் இவ்வூர்ப் பெயை ஆராயும் போது சில சிந்தனைகள் எழுகின்றன. இராயர் என்ற பெயர் ஆராய்ச்சிக்கு இங்கு வாழ்ந்த மக்கள் பற்றிய ஆய்வும் தேவைப்படுகிறது.

இராயர் என்ற சொல்லுக்குத்தமிழ் லெக்சிகன் விஜய நகர அரசர்களின் பட்டப்பெயர், மகாராஷ்டிர பிராமணர்களின் பட்டப்பெயர் என இரு பொருள்களைத் தருகிறது.[163] விஜய நகர ஆட்சி இங்கு நடைபெற்றமையும் தெலுங்கு மக்களின்

---

161. Royapuram historically in later - day British times was a village associated with the Railways and good storage. The association still remain in an area where you can still see same of the city's earliest Railway Buildings and yards. Royapuram's larger Anglo- Indian Population (only a fraction of what it once was) is yet another reminder of the area's links with the Railway's whose backbone before Independence was the Anglo Indian Community - Madras Discovered -p.195

162. சென்னை மாநகரக்கல்வெட்டுகள் - தொடர் எண் 1967/234

163. தமிழ் லெக்ஸிகன் தொகுதி 1 ப- 324

நெருங்கியத் தொடர்பும் காரணமாக முதல் பொருளே தொடர்புடையதாகலாம். விஜய நகர அரசர்களின் பட்டப்பெயர் என நோக்க ஸ்ரீ ரங்க ராயர் போன்ற அரசர்கள் பற்றிய சிந்தனை எழுகிறது. எனவே ராயர் என்ற சொல் தெலுங்கர் சார்பில் இவ்விடத்திற்குப் பொருத்தமானது. மேலும் இது சார்ந்த பகுதிகள் அதாவது சென்னை வரலாறு பற்றிய ஆய்வும் பெத்த நாயக்கன்பேட்டை முத்தியாலுப்பேட்டை போன்ற பெயர்களும் தெலுங்குச் சார்பு காட்டும் தன்மையில் இங்குத் தெலுங்கு மக்கள் வாழ்ந்தமையால் அல்லது இராயர் என்ற தெலுங்கு அரசரின் பட்டப் பெயரால் இக்குடியிருப்பு இப்பெயர் பெற்றிருக்கக் கூடும் என்ற எண்ணத்திற்கு வழி வகுக்கிறது.

இதுதவிர சென்னை மாவட்டக் கோயில் வரலாறு நூலாசிரியர், கிருத்துவ ஆசிரியர் ஒருவர் இராயப்பர் என்ற பெயரோடு பொது மக்களுக்குப் பெருந் தொண்டு செய்து இப்பேட்டையில் வாழ்ந்து இருந்தார். அதனால் இப்பேட்டை அவர் பெயரால் இராயப்பபுரம் என்று பெயரிடப்பெற்றது. இன்று இராயபுரம் என்று வழங்கி வருகிறது[164] என்ற கருத்தை உரைக்கின்றார். ஆங்கிலோ இந்தியர் மிகுதியாக வாழ்ந்தனர் என்ற தொரு குறிப்பு தவிர, பிற எந்தச் சான்றும் மேற்குறித்த கருத்துக்கு அரணாக இல்லை. மேலும் ஆங்கிலேயர் இங்கு வருமுன்னரேயே இவ்வூர் இருந்திருக்கலாம் என்பதை இங்குள்ள கல்வெட்டு, இந்துக்கோயில்கள், தெலுங்கர் அருகாமை இடங்கள் போன்றன காட்டுகின்றன.

எனவே இராயபுரம் என்ற குடியிருப்புத் தெலுங்கு மொழிச்சார்பும் அரசியல் சார்பும் கலந்தது என்பது பொருத்தமானதாகும்.

***ஊர்ப்பெயர் - இராயபுரம்***

***காரணம்- தெலுங்கர்சார்பு***

## 106.ராயப்பேட்டை

மயிலையை அடுத்த குடியிருப்புப் பகுதி. இவ்வூர் தொடர்பான செய்திகள் எதுவும் புலப்படவில்லை. பேட்டை என்ற சொல் முகமதியர்களின் வரவுக்குப்பின்னைய பெயர் என்ற நிலையில் இதன் காலம் கி.பி.12 க்குப் பிற்பட்டது எனக் கருதுதல் இயலுகிறது. இராயபுரம் என்பதில் இராய என்பது பெறும் விளக்கம் இங்கும்

164. சென்னை மாவட்ட கோயில் வரலாறு ப- 201

பொருத்தம் பெறலாம். மயிலாப்பூரின் பகுதியாகிய இது கி.பி. 12 க்குப் பின் தெலுங்கு மக்கள் குடியேற்றத்தால் தனிக் குடியிருப்பாக உருவாகியிருக்கலாம். இங்குள்ள கோயில்கள் சிறு கோயில்கள். இவை எந்த வித வரலாற்றுச் சான்றையும் தரவில்லை. ராயப்பேட்டை என இன்று சுட்டப்பட்டாலும் இராயர் என்பதே சரியான சொல் என்ற நிலையில் இராயர்பேட்டை என்ற பெயரே பொருத்தமானதாயிருக்கும்.

***ஊர்ப்பெயர்- இராயர்பேட்டை***

***காரணம்- தெலுங்கர் சார்பு***

## 107.ராஜ்பவன் காலனி

கிண்டி ராஜ்பவனில் உள்ள குடியிருப்பு.

***ஊர்ப்பெயர்- ராஜ்பவன் காலனி***

***காரணம்- ஆளுநர் மாளிகைக்குள் உருவாக்கப்பட்ட குடியிருப்பு***

## 108.ராஜா அண்ணாமலை புரம்

மந்தை வெளிக்கு தென்மேற்கே உள்ள பகுதி. தற்போது இராஜா அண்ணாமலைபுரம் என்று அழைக்கப்படுகிறது. செட்டிநாட்டு அரசர் இராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரின் பெயரை இப்பகுதி பெற்றுள்ளது.

அண்ணாமலைச் செட்டியாருக்குரிய நிலமாக இது இருந்து பின்னர் குடியிருப்பாக மாற்றம் பெற்று இப்பெயரால் வழங்கத் தொடங்கியுள்ளது. இதனைச் சுருக்கி ஆர்.வி.புரம் என்று அழைக்கின்றனர்.

***ஊர்ப்பெயர்- இராஜா அண்ணாமலை புரம்***

***காரணம்- ஆட்பெயர்***

## 109. லஸ்

லஸ் என்பதற்கு ஒளி என்பது பொருள். மயிலாப்பூரின் ஒரு பகுதி. போர்த்துக்கீசியர்களால் கட்டப்பட்ட கோயில் இங்கு உள்ளது. இது காட்டுக்கோயில் என்று அழைக்கப்படுகிறது[165] என்ற

165. Standing a mile from the Basilica of St.Thomas it lays claim to being the oldest church construction in Madras, it is known to the locals as kattu kovil (Jungle Church),it is dedicated to Ourlad of Light. A Road guide to Madras. p.9

செய்தி இப்பகுதி காட்டுப்பகுதி என்பதையும் இம்மக்களின் வரவிற்குப்பின்னர் இப்பகுதி இப்பெயர் பெற்று அதன்பின்னர் மக்கள் குடியிருப்புப் பகுதியாகவும் ஆகியுள்ளதைத் தெரிவிக்கிறது.

**ஊர்ப்பெயர்- லஸ்**

**காரணம்- ஒளி**

## 110.வடபழனி

இவ்வூரின் பழம்பெயர் சாளக்கிராமம். பழனியாண்டவர் வழிபாட்டின் தொடக்கம் இவ்வூர்ப் பெயர் வடபழனி என்று மாறுவதற்குரிய காரணமாக ஆகிவிட்டது. இன்றும் வடபழனியை அடுத்துள்ள பகுதி சாளக்கிராமம் என்று வழங்கப்படுகிறது. பேச்சு வழக்கில் சாலிகிராமம் எனப்படுகிறது. தற்போது வடபழனி ஆண்டவர் கோயில் கொண்டுள்ள இடத்தில் 140 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த அண்ணாசாமி என்பவர் தம் பழனி வழிபாட்டின் போது உணர்ந்த இறையருள் வாக்குக்கு ஏற்ப, பழனி ஆண்டவர் படந்தை வாங்கி இங்குக்கொண்டு வந்து வழிபடத் தொடங்கியதே இக்கோயிலின் தோற்றத்திற்குரிய அடிப்படை. இவர், இரத்தினசாமி செட்டியார், பாக்கியலிங்கம் தம்பிரான் மூவரின் முயற்சியும், பின்னர் இன்று வரையிலுமான நண்பர்களின் கொடையினாலும் இக்கோயில் மிகச் சிறப்பும் செல்வாக்கும் பெற்றுத் திகழ்கிறது.

வடபழனி ஆண்டவரே இங்கு இருப்பதாலும், பழனிக்கு வடக்குப்பகுதி ஆகையினாலும் இது வடபழனி என்று வழங்கப்பட்டு, இவ்வூரும் வடபழனி என்றே இன்று வழங்கப்படத் தொடங்கிவிட்டது.

சாளக்கிராமம் என்ற பெயர்க்காரணம் ஆராயும் போது சில எண்ணங்கள் தென்படுகின்றன.

சாளக்கிராமம் என்பதற்குத் தமிழ் லெக்ஸிகன் திருமால் உருவமாகக் கொண்டு பூசித்தற்குரிய கண்டகிச் சிலை எனப் பொருள் தருகிறது.[166]

இதில் கண்டகிச் சிலைக்குரிய பொருள் என்ன என்று நோக்கும் போது, நேபாளத்தில் தோன்றிக் காசிக்கருகே கங்கையிற் கலப்பதும் சாளக் கிராமச் சிலை உண்டாவதற்கிடமான ஒரு நதி என்ற எண்ணம்

166. தமிழ் லெக்ஸிகன் பகுதி 3. ப-1395

167 .தமிழ் லெக்ஸிகன் பகுதி.3 ப.686

கிடைக்கிறது.[167]

எனவே வைணவர்கள் வணங்கும் கல் என்பது சாளக்கிராமம் பற்றிய செய்தியாகும். ஆனால் இதற்கும் இந்த ஊர்ப்பெயருக்குரிய தொடர்பு தெரியவில்லை.

***ஊர்ப்பெயர்- வடபழனி***

***காரணம்- இறைத் தொடர்பு***

## 111.வண்ணாரப்பேட்டை

முதலில் ஆங்கிலக் கழகத்தின் துணிமணிகளை வெளுப்பதற்கும், துவைப்பதற்கும், சாயம் போடுவதற்கும் பல வண்ணார்கள் பெத்த நாயக்கன் பேட்டை வடபுறத்தில் இருந்து வேலை பார்த்து வந்தனர். அங்கே அவர்களுக்கு வேண்டிய நீண்ட திறந்த வெளியும், பெருமளவு நல்ல நீரும் கிடைக்காமையால் அவர்கள் கறுப்பர் பட்டணத்திற்கு வடக்கில் சென்று குடியேற வேண்டியதாயிற்று. அவர்களுக்குரிய வசதிகள் இங்கே நிறைந்திருந்ததால் இங்கேயே அவர்கள் நிலைக்கத் தொடங்கினர். இதனால் இப்பகுதிக்கு வண்ணாரப்பேட்டை என்ற பெயர் உண்டாயிற்று[168]

இங்கு அருணாசல ஈஸ்வரர் கோயில், பக்தவத்சலப் பெருமாள் கோயில், கசேந்திரவரதராசப் பெருமாள் கோயில் போன்ற கோயில்கள் இருக்கின்றன.

இந்த அருணாசல ஈஸ்வரர் கோயிலின் காலம் கி.பி.1728 ஆம் ஆண்டு. திருமணம் அருணாசல முதலியார் மகன் முத்துமுனியப்ப முதலியார் என்பார் அருணாசல ஈஸ்வரர் கோயிலையும் உண்ணா முலையம்மை கோயிலையும் பிற திருப்பணிகளையும் செய்ததைச் சென்னை மாநகர்க் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது [169] அந்த இடத்துக்கு அருணாசல ஈஸ்வரர் பேட்டை எனப் பெயரிட்டதும் அதில் தெரிகிறது.

இதனைத் தண்டையார்பேட்டையைச்சார்ந்த கல்வெட்டு என இந்நூல் தெரிவிக்கிறது. எனவே அருணாசல ஈஸ்வரர் பேட்டை என்றும் வண்ணாரப்பேட்டைஎன்றும் சுட்டப்பட்ட பகுதிகள் முதலில் தண்டையார்பேட்டையில் அடங்கிய பகுதியாக இருந்து பின்னர் தனிக்குடியிருப்பாக மாறின என்பது தெரிகிறது. எனினும்

---

*168. சென்னை மாநகர் பக்-65*

*169. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் தொடர் எண் 1967/170*

இன்றுஅருணாசல ஈஸ்வரர் பேட்டை என்ற பெயரை விட, வண்ணாரப்பேட்டையே செல்வாக்குடன் திகழ்கிறது. புதுவண்ணாரப்பேட்டை பழைய வண்ணாரப்பேட்டை என்று அழைக்கப்படும் தன்மையும் சிந்திக்கத் தக்கது. பழைய வண்ணாரப்பேட்டை முதலில் ஏற்படுத்தப்பட்ட பழைய குடியிருப்பு என்பதும் அதன் ஒரு பகுதி பின்னர் மக்கள் குடியேறிய நிலையில் புதுவண்ணாரப்பேட்டை என அழைக்கப்பட்டு இருக்கலாம் எனவும் தோன்றுகிறது.

**ஊர்ப்பெயர்- வண்ணாரப்பேட்டை**

**பெயர்க்காரணம்- வண்ணார் தொழிலாளர் நிறைந்த குடியிருப்பு**

## 112. வள்ளலார் நகர்

தங்க சாலையின் அருகில் உள்ள குடியிருப்பு. இராமலிங்க வள்ளலாரின் பெயரைக் கொண்ட குடியிருப்பு. வி.நகர் என்றும் அழைக்கப்படுகிறது.

**ஊர்ப்பெயர்- வள்ளலார் நகர்**

**காரணம்- ஆட்பெயர்**

## 113. வி.ஓ.சி. நகர்

வடசென்னையில் உள்ள குடியிருப்பு. சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் பெயர் கொண்ட குடியிருப்பு.

**ஊர்ப்பெயர்- வ.உ. சிதம்பரம் நகர்**

**காரணம்- ஆட்பெயர்**

## 114.வியாசர்பாடி

கி.பி.17ஆம் நூற்றாண்டு கல்வெட்டு இதனை வேஷாருபாடி எனக் குறிப்பிடுகிறது.[170] இவ்வூர் முதலாம் இராசாதி இராசன் காலத்தில் வேஷாருபாடி என வழங்கியிருக்கிறது. பின்பு மூன்றாம் இராஜராஜன் காலத்தில் வேழ்ஷாரு என்று சுருக்கி அழைக்கப்பட்டு இருக்கிறது என்கின்றார் நடன காசிநாதன்[171] வேஷாருபாடி என்ற

---

*170. சென்னை மாநகர்க் கல்வெட்டுகள் தொடர் எண்-1967*

*171. தமிழரசு - 16-5 -1990 பக்.23*

பெயர் முதலில் இடப்பட்ட பெயராக இருந்திருந்தால் இது தமிழ்ப்பெயர் அன்று. இல்லையெனில் இது மரூஉப் பெயராக இருக்க வேண்டும். வைசியர் பாடி வியாசர்பாடி ஆகியிருக்க லாமா? என்ற கோணத்தில் ஆராயலாம். இருப்பினும் எந்த விதச் சான்றுகளும் இது குறித்து இல்லாத நிலையில் மேலும் தெளிவினைப் பெறுதல் இயலவில்லை.

***ஊர்ப்பெயர்- வியாசர்பாடி***

***காரணம்-***

## 115. வியாசர்பாடி ஜீவா

*வியாசர்பாடியின் ஒரு பகுதி இன்று வியாசர்பாடி ஜீவா என்று அழைக்கப்படுகிறது.*

***ஊர்ப்பெயர்- வியாசர்பாடி***

***காரணம்- ஆட்பெயர்***

## 116. வெங்கடரத்தினம் நகர்

*இந்திரா நகரின் ஒரு பகுதியாக அமைகிறது இக்குடியிருப்பு*

***ஊர்ப்பெயர்- வெங்கடரத்தினம் நகர்***

***காரணம்- ஆட்பெயர்***

## 117.வெப்பேரி

*சூளையின் அண்மைக் குடியிருப்பு.*

வேப்பேரி -வேப்பு ஏரி என்பது வெப்பேரி என மாறியிருக்கலாம். ஊரின் பெயர் ஊரின் பழமையைக் காட்டுகிறது.

***ஊர்ப்பெயர்-வேப்பேரி***

***காரணம்-இயற்கை (தாவரம் + நீர்நிலை)***

## 118.வேளச்சேரி

கிண்டியை அடுத்த பகுதி வேளச்சேரி என்று அழைக்கப்படுகிறது. இன்று வேளச்சேரி என்று அழைக்கப்படும் இவ்வூரின் பழைய பெயர் வெளிச்சேரியாகும். இரண்டு கல்வெட்டுகள் வெளிச்சேரியைக் குறிப்பிடுகின்றன.[172]

---

*172 .சென்னை மாநகரக் கல்வெட்டுகள் -தொடர் எண் 1967/47 1967/54*

பார்த்த சாரதி கோயில் மண்டபத் தரையில் காணப்படும் கி.பி.15 ஆம் நூற்றாண்டைச்சார்ந்த கல்வெட்டு, வெளிச் சேரி என்ற பெயரை மட்டும் குறிப்பிடுகின்றதே தவிர, பிற செய்திகள் எதுவும் இதனுள் தெரியவில்லை.

இன்னொரு கல்வெட்டு, பார்த்தசாரதி கோயில் உட்சுவற்றின் உட்புறத் தரை கல்லின்மேல் காணப்படுகிறது.

*.........வேளச்சேரியான சின சிந்தாமணிச்ச*

*மங்கலத்திலே ஒருபது வேலி நிலம் முட்பத்து......*

எனச் செல்கின்றது இக்கல்வெட்டு. இங்கும் செய்திகளில் தெளிவு இல்லை. எனினும் வேளச்சேரி, வெளிச்சேரி என்னும் இருவழக்குகள் இப்பெயர் குறித்து இருந்தமை தெரிகிறது.

முதலில் தெரியவரும் வழக்கு வேளச்சேரியே என்பது இங்கு அறியலாகும் செய்தி.

வேளச்சேரி சின சிந்தாமணிச்சதுர் வேதிமங்கலம் என அழைக்கப்பட்டிருந்ததையும் இங்குத் தெரிய வருகின்றோம்.

பிராமணர்களுக்கு அளிக்கப்படும் நிலம் சதுர்வேதி மங்கலம்என்று பெயர் பெறினும், சின சிந்தாமணி என்ற பெயர் ஆராய்ச்சி க்குரிய தாகிறது. நடன காசிநாதன் தரும் இவ்வூர்ப் பெயர் குறித்த விளக்கம் ஒன்று இங்குச் சுட்டுதற்குரியது. இவ்வூர் சோழமன்னன் முதலாம் இராசேந்திரன் காலத்தில் (கி.பி.1014-1044) வெளிச்சேரி என்று அழைக்கப்பட்டு இருக்கிறது. இவ்வூர் செயங் கொண்ட சோழ மண்டலத்தில் புலியூர்க் கோட்டத்தில் கோட்டூர் நாட்டைச்சார்ந்த ஊராகத் திகழ்ந்திருக்கிறது. பிராமணர்களுக்காக அளிக்கப்பெற்ற பிரமதேயம் என்று குறிக்கப் பெறுகிறது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வெளிச் சேரி என்றும் ஜின சிந்தாமணிச் சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்பட்டு இருக்கிறது.[173] எனவே இவர் சுட்டும் செய்திகள் இதன் பெயர் வெளிச்சேரி என்பதைத் தெரிவிக்கின்றன. கோட்டூர் நாட்டு வெளிச்சேரி என்னும் போது, முதலில் கோட்டூர் நாட்டிற்கு வெளியே மக்கள் இருந்த குடியிருப்பு பின்னர் வெளிச்சேரி என்று அழைக்கப்பட்டி ருக்கலாம். சோழர்கள் காலத்தில் பிராமணர்கட்கு அளிக்கப்பட்டது என்ற எண்ணங்களைப் பெற முடிகிறது. எனினும் பிற செய்திகள் எதுவும் இது குறித்து இல்லை. இங்குள்ள கோயில்கள் சிறப்புப்

---

*173.தமிழரசு 16.5.1990 ப - 22*

பெற்றவையாகத் தெரிகின்றன. தண்டீஸ்வரர் கோயில், செல்லியம்மாள் கோயில்கள் அவை, சோழர் காலம் சார்ந்தவை.

**ஊர்ப்பெயர்- வெளிச்சேரி**

**காரணம்-ஊரின் புறத்து அமைந்த சேரி**

## 119.ஹைகோர்ட் காலனி

அண்ணா நகரின் அருகாமையில் உள்ள குடியிருப்பு.

**ஊர்ப்பெயர்- ஹைகோர்ட் காலனி**

**காரணம்- உயர் நீதிமன்ற அலுவலர் குடியிருப்பு**

## 120.ஸ்ரீ நகர்

சின்னமலைக்கு அருகில் அமைந்துள்ள புதிய குடியிருப்பு. ஸ்ரீ திரு என்ற பொருளைக் கொண்டது. மங்களம் என்ற தன்மை அமையும் பொருட்டு இப்பெயரை இப்பகுதிக்கு வைத்துள்ளனர் என்பது பொருத்தமானதாகும்.

**ஊர்ப்பெயர்- ஸ்ரீ நகர்.**

**காரணம்- மங்களகரமான உணர்வு**

## 121. ஸ்ரீராம் நகர்

சின்னமலைக்கு அருகில் உள்ள குடியிருப்பு.

**ஊர்ப்பெயர்- ஸ்ரீ ராம் நகர்**

**காரணம்- இறைப்பெயர்**

## 122. ஜவஹர் நகர்

பெரம்பூர் அருகே புதியதாக எழுந்த குடியிருப்பு. பண்டிதர் ஜவஹர்லால் நேருவின் பெயர் கொண்ட குடியிருப்பு.

**ஊர்ப்பெயர்- ஜவஹர் நகர்**

**காரணம்- ஆட்பெயர்.**

இந்தச் சென்னை மாநகர ஊர்ப்பெயர்கள் அனைத்தும் தமிழகத்தில் காணப்படும் பிற ஊர்ப்பெயர்கள் போன்ற அமைப்புடனேயே காணப்படுகின்றன.

பொதுக் கூறும் சிறப்புக்கூறும் இணைந்த ஊர்ப்பெயர்கள் தனிப்பெயர்கள் என இவை அமைகின்றன. இவற்றுள் சில மருவி வழங்கப்படுகின்றன. மேலும் சில ஊர்ப்பெயர்களுடன் முன், பின் அடைகள் இணைந்தும் காணப்படுகின்றன.

முழு நிலையில் இப்பெயர்களை நோக்க, இவற்றுள் நகர் என்ற பொதுக் கூறு பொருந்திய ஊர்கள் பிற பொதுக்கூறுகள் பெற்ற ஊர்களைக் காட்டிலும் மிகுதியானவை. புதிய குடியேற்றங்களின் மிகுதியை இவை தெளிவாக்குகின்றன.

| | |
|---|---|
| அசோக் நகர் | சாஸ்திரி நகர் |
| அண்ணா நகர் | சி.ஐ.டி. நகர் |
| அப்பாவு நகர் | சின்மயா நகர் |
| ஆழ்வார் திரு நகர் | தாடண்டர் நகர் |
| இந்திரா நகர் | தியாகராய நகர் |
| எம்.ஜி.ஆர். நகர் | திரு.வி.க .நகர் |
| எஸ்.கே.நகர் | பத்மநாப நகர் |
| கம்பர் நகர் | பெசன்ட் நகர் |
| கஸ்தூரிபாய் நகர் | மேத்தாநகர் |
| காந்தி நகர் | வள்ளலார் நகர் |
| காமராஜ் நகர் | வி.ஒ.சி.நகர் |
| கான்றன் ஸ்மித் நகர் | வெங்கடரத்தினம் நகர் |
| கே.கே. நகர் | ஸ்ரீராம் நகர் |
| சத்யமூர்த்தி நகர் | ஸ்ரீ நகர் |
| செனாய் நகர் | |

இவை அனைத்தும் தற்காலப் பெயர்கள். அண்மையில் உருவாக்கம் பெற்ற குடியிருப்புகள் பெற்ற பெயர்கள். எனவே இப்பகுதிகள் அனைத்தும் முதலில் வெறும் காடாக இருந்திருக்க வேண்டும். இல்லை எனில் ஊர்களின் பகுதியாக இருந்திருக்க வேண்டும். நகரின் வளர்ச்சியில், அரசாங்கத்தின் திட்டங்கள், தனி

மனிதத் தேவைகள் இங்குப் புதிய குடியிருப்புகளை உருவாக்கத்துணைபுரிந்துள்ளன. மேலும் இப்பெயர்கள் அனைத்தும் ஆட்பெயர்களைச் சிறப்புக்கூறாகக் கொண்டவை. இந்நூற்றாண்டில் தனிமனித செல்வாக்கு ஊர்ப்பெயர்களில் மிகுதியாக இடம் பெற்றதை இப்பெயர்கள் உணர்த்துகின்றன.

பேட்டை என்ற பொதுக்கூறு அடுத்த நிலையில் மிகுதியான ஊர்ப்பெயர்களில் அமைகின்றது. இப்பொதுக்கூறு, முகம்மதியர் வரவால் தமிழகம் வந்த பெயர் என்பர் கரு.நாகராஜன். எனவே கி.பி.12 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இப்பெயர் தமிழக ஊர்ப்பெயர்களில் இடம் பிடித்தது எனல் பொருத்தமானதாகும். சென்னையில் பேட்டையைப் பொதுக் கூறாகக் கொண்ட ஊர்ப்பெயர்களின் வரலாறும் இக்கருத்திற்கு ஏற்புடையதாக அமைகிறது. பெத்த நாயக்கன் பேட்டை, இராயர்பேட்டை போன்ற தெலுங்குச்சார்பு பெயர்கள், சையத்கான்பேட்டை, ஜாபர்கான் பேட்டை போன்ற முகமதியர் சார்பு பெயர்கள், சின்ன தறிப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போன்ற பிற்காலத் தொழிற்சார்பு பெயர்கள் இங்குச் சான்றாக அமைகின்றன.

| | |
|---|---|
| ஆழ்வார்பேட்டை | இராபர்ட்ஸன் பேட்டை |
| கண்ணம்மாபேட்டை | கிருஷ்ணாம்பேட்டை |
| கொருக்குப்பேட்டை | கோமளீஸ்வரன்பேட்டை |
| சிந்தாதிரிப்பேட்டை | சைதாப்பேட்டை |
| தண்டையார்பேட்டை | திருவேட்டீஸ்வரன் -பேட்டை |
| தேனாம்பேட்டை | வண்ணார்பேட்டை |
| இராயப்பேட்டை | ஜாபர்கான்பேட்டை |
| பெத்தநாயக்கன்பேட்டை | முத்தியாலுப்பேட்டை |

புரம் தமிழரிடம் தொன்று தொட்டே காணப்படும் ஊர்ப்பெயர்க்கூறு. இன்று வரை தொடர்ந்து இதன் செல்வாக்கு இருந்து வருகிறது. இதனையே இங்குக்காணப்படும் பெயர்களும் காட்டுகின்றன.

அயன்புரம் போன்ற ஒரு சில பெயர்கள் பழமைச்சார்பு காட்டுகின்றன. பிறவற்றின் வரலாறுகள் பிற்கால, அண்மைக்கால பெயர்களாக இவற்றை வெளிப்படுத்துகின்றன. எனவே பழந்தமிழகத்தின் இப்பகுதியில் இக்கூறு பொருந்திய ஊர்ப்பெயர்

இடும் வழக்கம் மிகுதியாக இருந்திருக்க வில்லையோ என எண்ணத் தோன்றுகிறது.

| | |
|---|---|
| அபிராமபுரம் | டிரஸ்ட்புரம் |
| அயனாவரம் | ரங்கராஜபுரம் |
| கணேசபுரம் | இராஜா அண்ணாமலை புரம் |
| கன்னிகாபுரம் | இராயர்புரம் |
| கோட்டூர் புரம் | கோபாலபுரம் |

தமிழகத்தில் பரவலாக, மிகுதியான மக்களால் இடப்படும் பொதுக்கூறான 'ஊரு'ம் இங்குக் காணப்படுகின்றது. இப்பெயர் களின் வரலாறு சென்னையின் பழமையைப் புரிந்து கொள்ளத் துணையாகின்றது. இப்பொதுக்கூறு பொருந்தித் திகழும் பெயர்களின் சிறப்புக் கூறுகள் பெரும்பாலும் இயற்கைச்சார்பு டையன. இயற்கைச்சார்பு தோன்றும்போதே பழமையும் இணைந்து தோன்றுகிறது. மயிலாப்பூர், எழும்பூர், புலியூர்,. பிரம்பூர் போன்றவற்றின் வரலாறுகளும் இக்கருத்துக்கு அரண் ஆகின்றன. எனவே சென்னையில் பண்டு தொட்டே காணப்படும் ஊர்களாக இவைகளைக் கொள்வதில் எந்தவித மாறுபாடும் இருக்க வாய்ப்பில்லை என்று தோன்றுகிறது.

ஆலத்தூர்

எழும்பூர்

குளத்தூர்

கொடுங்கையூர்

கோட்டூர்

திருவான்மியூர்

பிரம்பூர்

புலியூர்

மயிலாப்பூர்

ஊர் பொதுக் கூறு போன்று பழமை காட்டும் இன்னொரு பொதுக் கூறு 'பாக்கம்'. தமிழகத்தில் பல ஊர்ப்பெயர்கள் இப்பொதுக் கூறு கொண்டு திகழ்ந்தாலும் தமிழகத்தின் வடபகுதி போன்று செல்வாக்கு பெற்றுப் பிற இடங்களில் இது இல்லை. தெற்குப் பகுதி, குறிப்பாகக் குமரியில் இவ்வழக்கு இல்லை.

கடற்கரைச் சிற்றூர்கள் பாக்கம் என்று அழைக்கப்பட்டன. சென்னைக்கடற்கரை சார்ந்த சில ஊர்கள் இப்பொதுக்கூறு பெற்றுள்ளன. எனினும் பல உள்பகுதிகளும் இப்பெயர் பெற்றிருப்பதை எண்ணும் போது, மொழியின் தன்மை ஒன்று இங்குப் புலப்படுகிறது. சிறப்புப் பொருட்பேறு பெற்ற சொற்கள் பின்னர் பொதுப்பொருட்பேறு பெறும் நிலையே அது.

பொதுவாக, மேலே காட்டப்பட்ட நகர், பேட்டை, புரம், ஊர் போன்ற அனைத்துச் சொற்களும், ஊர்களின் சில சிறப்பினை குறிக்கும் நிலையிலேயே தோற்றம் பெற்றவை. பின்னர், நாளாக, நாளாக இச்சிறப்புப் பொருள் மறைந்து, வெறும் ஊர்ப்பெயர் பொதுக்கூறு என்ற நிலையில், எல்லாக் குடியிருப்புகட்கும் இவை சூட்டப்பட்டன. இதனைத் தமிழக ஊர்ப்பெயர்கள் பலவும் காட்டுகின்ற நிலையில் பாக்கமும் அமைகிறது என்ற எண்ணத்தையே நம்மால் இங்குப் பெற முடிகின்றது.

பாக்கம் பொருந்திய ஊர்ப்பெயர்களின் சிறப்புக்கூறுகளும் இவ்வூர்களின் பழமையைப்பறை சாற்றுவன. பட்டினப்பாக்கம் போன்று புதிதாக சூட்டப்பட்ட பிற பெயர்கள் தெரியவில்லை.

அரும் பாக்கம்

கோடம்பாக்கம்

கீழ்ப்பாக்கம்

சேப்பாக்கம்

நுங்கம்பாக்கம்

பட்டினப்பாக்கம்

புரசைவாக்கம்

இவை தவிர, பிற காலனி, எஸ்டேட், கார்டன் போன்ற பிற மொழிப்பெயர்கள் அண்மையில் எழுந்த பெயர்கள்.

ஹைகோர்ட் காலனி

ஐ.சி.எப்.காலனி

தியாசபிக்கல் எஸ்டேட்

ராஜ்பவன் காலனி

கீழ்பார்க் கார்டன்

பெசன்ட் கார்டன்

கிரேஸ்கார்டன்

சிங்கார கார்டன்

பிற பொதுக் கூறுகள் பெரும்பாலன ஒரூரிலும், சில ஒன்றிரண்டு ஊர்களிலும் காணப்படுகின்றன.

அடி-மண்ணடி

ஆறு-அடையாறு

கொல்லை-மாங்கொல்லை

கேணி-திருவல்லிக்கேணி

தோப்பு-புளியந்தோப்பு

வெளி-மந்தை வெளி

ஈச்சுரம்-திருவாலீச்சுரம்

கடை-மூலக்கடை

குப்பம் -தாதன் குப்பம்

சத்திரம்-டாக்கர் சத்திரம்

சாலை-தங்கசாலை

நகரி-ஆழ்வார்திருநகரி

பட்டு-சேத்துப்பட்டு

பாடி-வியாசர்பாடி

பேடு-கோயம்பேடு

மங்கலம்-திருமங்கலம்

கரை-அமிஞ்சிக்கரை

ஏரி -வேப்பேரி; ஓட்டேரி

மேடு-சூளைமேடு; பெரியமேடு

சேரி-எருக்கஞ்சேரி; வெளிச்சேரி

பாளையம்-எடப்பாளையம்;மேட்டுப்பாளையம்

இப்பெயர்களும் பெரும்பாலான இயற்கைச்சார்பு பெற்றும், சில செயற்கையுடனும் திகழ்கின்றன. எனவே இவையும் தொன்றுதொட்டே சென்னையில் இருந்த குடியிருப்புகள் எனக்கருத இடமுண்டு.

இவை தவிர, தனிப்பெயர்களாக அல்லது மரூஉப் பெயர்களாக

அமைவன சில.

அகரம்

ஆயிரம் விளக்கு

ஏழு கிணறு

கிண்டி

சாந்தோம்

சூளை

செம்பியம்

தரமணி

நந்தனம்

மாம்பலம்

லஸ்

வடபழனி

தனிப்பெயர்கள், மரூஉப் பெயர்களில் சில விளக்கம் பெற வில்லை எனினும், சில வரலாற்றைத் தெளிவு படுத்த உதவுகின்றன.

இந்நிலையில் இங்கே ஆராயப்பட்ட இச்சென்னை மாநகர் ஊர்ப்பெயர்களினின்றும், இப்பகுதியின் நிலவியல், அரசியல் , மக்கள் வாழ்வியல் குறித்த சிந்தனைகளைப் பகுதி இரண்டில் காணும் முன்னர் ஒரே ஒரு கருத்தை இங்குச் சுட்டி ச் செல்லல் பொருத்தமானதாக அமையும்.

1956 இல் மொழிவாரி மாநிலமாகத் இந்தியநாடு பிரிக்கப்பட்ட போது, சென்னை யாருக்கு என்ற வினா எழுந்தது. அறிஞர் பெருமக்களின் கருத்துக்கு இணங்க, தமிழகத்திற்கே யுரியது என்ற தீர்ப்பு வழங்கப்பட்டு, இன்று தமிழகத்தின் தலைநகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது சென்னை. இந்தச் சென்னை மாநகர் தொடர்பான ஆய்வும் இதில் எந்த வித ஐயத்திற்கும் இடமில்லை என்பதை உறுதிப்படுத்துமாறு அமைகின்றது.

சென்னை, இன்று பல புதிய ஊர்ப்பெயர்களுடன் பழைய ஊர்ப்பெயர்களையும் கொண்டு திகழ்கின்றது. இப்பெயர்கள் பெரும்பான்மையும் ஒரு சில தவிர, தமிழ்ப் பெயர்கள் எனவே இப்பகுதியில் தமிழர் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர்;

இவர்கள் பேசிய மொழி தமிழ். தமிழ் ஊர்ப்பெயர்களையே தம் குடியிருப்புகட்கும் சூட்டியுள்ளனர் என்பது தெளிவு பெறுகின்றது.

பெயரிட்ட முறைமையை நோக்கும் போதும், தமிழகத்தின் பிற பகுதி மக்கள் பெயரிட்ட, பெயரிட்டு வரும் முறையினின்றும் சற்றும் விலகவில்லை. பொதுக்கூறு சிறப்புக்கூறு கொண்ட பெயர்கள், தனிப் பெயர்கள், அடை முன்பின் இணைந்த பெயர்கள் போன்றன தமிழகத்தின் பிற பகுதி மக்களோடு இவர்கள் தொடர்பை விளக்கவல்லன.

தமிழக ஊர்ப்பெயர்களுக்கென்று தனித்த வரலாறு உண்டு.

தமிழ் மக்கள் தங்கள் குடியிருப்புகட்கு இட்ட பெயர்கள் அவர்களின் வாழ்வுச் சூழலைப் பிரதிபலிப்பவை. தமக்குள் அந்தந்தக் கால வரலாற்றுச் சுவடுகளைப் பதித்து கொண்டவை. இந்நிலையில் தமிழ் மக்களின் அன்றைய பெயரிடும் மரபு, இயற்கையின் தாலாட்டில் வாழ்ந்த நிலையில் அவர் சூட்டிய பெயர்களும் இயற்கைச் சார்பில் அமைந்தன. இயற்கைச் சார்பிலும் தாவரச் சார்பு பெயர்கள் முதலிடம் வகித்தன.

அடுத்து அவர்கள் செயற்கையாக உருவாக்கிய பெயர்கள் ஊர்ப் பெயர்களில் இடம் பெற்றன. பக்தி எழுச்சிக் காலத்தில் இறைச் சார்பு பெயர்கள், புராணச் சார்பு பெயர்கள் செல்வாக்கு பெற்றன. பின்னர் மன்னர் தொடர்பு பெயர்களும், தொடர்ந்து ஆட்பெயர்களும் செல்வாக்கு பெற்றன. இன்று வரை தொடர்வது ஆட்பெயர் செல்வாக்கு.

இந்த வரலாற்றையே சென்னை மாநகர ஊர்ப்பெயர்களின் வரலாறும் காட்டுகின்றது. எனவே இப்பெயர்களின் வரலாறு தொன்றுதொட்டுத் தமிழர் இங்குத் தொடர்ந்து வாழ்ந்து வந்த தன்மையைத் தெளிவாக்குகிறது. இவர்களுடன் பிற பகுதியினரும் தொடர்பு கொண்ட நிலையில் பிறபகுதியினர் அவ்வப்போது இங்குக் குடிபுகுந்த நிலையில் பிற மொழியாளரின் குடியிருப்புகள் காரணமாக அவர்களின் மொழிப்பெயர்கள் இங்குப்புகுந்தன என்பதையும் இவ்வாய்வு தெளிவுபடுத்துகின்றது.

# பகுதி-2

## 1. நிலவியல்

சென்னையின் கிழக்குப் பகுதியில் கடல் எல்லையாக இருக்கின்றது. 'அப்பொழுது கடல் இப்பொழுது தள்ளிச் சென்று இருப்பது போல் இல்லை. அன்று சற்றேறக் குறைய அங்கப்ப நாயக்கன் வீதி வரையிலும் கடல் உள்ளே வந்து இருந்தது' என்ற கருத்தைத் தருபவர் ம.சு.சம்பந்தன் (ப.33). இன்று திருவொற்றியூர் பகுதியின் கடல் அரிப்பு நாம் கண்கூடாகக் காணும் ஒன்று. எனவே பண்டு தொட்டுச் சென்னைப் பகுதியின் கடல் எல்லையும் முன்பின் இருந்திருக்கலாம் என்பது ஏற்புடைய ஒன்றாகத் தோன்றுகிறது.

கடற்கரைப் பகுதி நெய்தல் நிலம் என வகைப்படுத்தப்பட்ட தன்மையைப் பழந்தமிழர் வாழ்வியல் காட்டுகிறது. கடற்கரைச் சார்ந்த சிற்றூர்கள் பாக்கம் என்று சுட்டப்படும் தன்மையும் இருந்துள்ளது. இவ்வழக்குத் தமிழகத்தின் தென்பகுதிகளில் மிகுதியாக இல்லை. வடபகுதிகளில் மிகுந்து காணப்படுவன. நச் செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இதனைச் சென்னை மாநகரில் இன்று வரையிலும் காணப்படும் பாக்கங்களும் உறுதிப்படுத்துகின்றன.

இப்பகுதி நெய்தல் நிலப்பகுதி என்பதுடன் முல்லை நிலமாகவும் இருந்தமையை இப்பகுதி சார்ந்த ஊர்ப்பெயர்கள் உணர்த்துகின்றன. தொண்டை நாடு காடு மிகுந்த பகுதி என்பது வரலாற்றுண்மை. தொண்டை நாட்டைச் சார்ந்திருந்த இப்பகுதியிலும் காடுகள் மிகுந்து இருந்தன. பழைய ஊர்களாகத் தொன்று தொட்டுத் தெரியவரும் மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, எழும்பூர், புரசவாக்கம், திருவான்மியூர் போன்ற ஊர்களின் வரலாறு இதனைத் தெளிவுறுத்துகின்றன. காட்டுப்பாக்கம், கானகம் என்ற பெயர்களும் இச்சூழலை முன்னிறுத்துகின்றன. இன்று கிண்டிப் பகுதியில் காணப்படும் காட்டுப்பகுதிகளும் அரணாகின்றன. இத்தகைய சூழலில் வாழ்ந்து வந்த மக்கள் தம் ஊர்களைச் சுற்றி மதில்களை அமைத்துக் கொண்டனர் எனபதை அறியும் போதும், சுற்றிலும் காட்டுப்பகுதிகள் காரணமாகப் பாதுகாப்பு கருதி, மதில்களை அமைத்து கொண்டனரோ என்ற எண்ணம் தோன்றுகிறது. இக்கருத்துகளுடன் கி.பி.17 ஆம் நூற்றாண்டில் சென்னைப்பகுதியில் வாழ்ந்த செர்மானியப் பாதிரியாரின் குறிப்பும் இங்குச் சுட்டுதற்குரியது.

'மூர் மனிதர் ஒருவர் தன் தோட்டத்தில் சில பனைமரங்களை வளர்த்துள்ளார். பனங்கள் இறக்க ஒரு மரத்துக்கு ஒரு பகோடா (மூன்று ரூபாய்) அவருக்குக் கிடைக்கும். இந்த வீட்டுக்கு அருகே ஒரு காடு உள்ளது. அதோ அங்கே இரண்டு யானைகள் உலவுகின்றன. மிகப் பெரியதான சில பாம்புகளும் கூட தென்படு கின்றனவே. சூரியன் மறையும் நேரம் வந்து விட்டது. வேகமாகப் பல்லக்கு செலுத்துங்கள். இருட்டுவதற்குள் சென்னைப்பட் டணத்தில் உள்ள என் வீட்டுக்குச் சென்று விட வேண்டும்'. இப்படி ஹில்ட்ஸ் வருணனை செய்த இடங்கள் Treplekane மற்றும் Ekkimore castle, ஆம்இன்றைய திருவல்லிக்கேணி மற்றும் எழும்பூர் பகுதிகள் தான் அவை. (ஜெர்மனியை வியக்க வைத்த தமிழ்ப்புதையல்- சி.எஸ்.மோகனவேலு) இவ்வாறு காட்டுப்பகுதிகள் இடையே தம் குடியிருப்பை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர் இம்மக்கள். தவிர, இவர்கள் வாழ்ந்த இடங்களில் சம வெளிப்பகுதிகள் தவிர மேடு பள்ளங்களும் உண்டு. மேட்டுப்பாளையம், மேடவாக்கம், பெரியமேடு, சூளைமேடு, நரிமேடு போன்ற பெயர்கள் மேடான பகுதியாக இவ்விடங்கள் இருந்தமையைச் சுட்டு கின்றன. மேடு இருப்பின் அருகில் பள்ளம் இருப்பது இயற்கையே. மாம்பலம், கீழ்ப்பாக்கம் போன்ற பெயர்கள் பள்ளத்தைக் குறிப்பன. இப்பகுதிகளில் நீர் நிலைகளும் பல காணப்பட்டன.இன்று காணப்படும் கூவம் ஆறு, அடையாறு, பண்டைக் காலந்தொட்டே இப்பகுதியில் காணப்பட்ட நீர் நிலைகள். பல ஏரிகள் இன்று தூர்க்கப்பட்டு விட்டன.

இந்த நிலவியில் வரலாறு பெரும்பான்மை மாற்றம் பெற்று விட்டதைக் காட்டுகிறது இன்றைய வரலாறு.

1639 க்குப் பின்னர் சென்னையின் வளர்ச்சியில், இப்பகுதியின் நிலவியல் சூழலும் மாறிப் போனதை இன்றைய நிலை காட்டுகிறது.

கடற்கரையைச் சார்ந்து பல குடியிருப்புகள் இன்று தோற்றம் பெற்றுவிட்டன. காடுகள் பெரும்பாலும் மறைந்து விட்டன. காடுகள் இருந்த சூழலை மேற்கண்ட வரலாறு உணர்த்தி அமைகிறது. மேடு, பள்ளங்களும் இன்று இல்லை. இன்று பெரும்பாலும் சம வெளியாகவே காட்சி அளிக்கிறது சென்னைப் பகுதி. 1639 க்குப்பின்னர் இப்பகுதியில் மிகுதியாக ஏற்பட்ட குடியேற்றத்தின் விளைவு, இங்குக் குடியிருப்புகளையும் மிகுதியாக்கி விட்ட காரணமே மேற்கண்ட காடு கொன்று

நாடாக்கியமைக்குக் காரணமாக அமைகிறது. எனினும் நன்மையும் தீமையும் கலந்தே இருப்பது என்ற நிலையில், சென்னைக்கு ஒரு தீமையையும் விளைத்து விட்டிருக்கிறது.

இன்றைய சென்னைப்பகுதி நீரின்மையை அடிக்கடி எதிர்கொள்ளும் நிலையில் உள்ளது. மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப கிடைக்கும் நீரின் அளவு குறைவு. கோட்டையில் மக்கள் வாழத் தொடங்கிய போது தங்கள் நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்ய தோண்டிய கிணறுகளின் வரலாற்றையே ஏழு கிணறு என்ற ஊரின் வரலாறு காட்டுகிறது. ஏரிகளில் நீரைத் தேக்கி அவற்றைப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. பூண்டி நீர்த்தேக்கம், புழல், செம்பரம்பாக்கம் ஏரிகள் இன்று சென்னை வாழ் மக்களுக்கு உதவுகின்றன. மக்கள் பயன்படுத்தி வந்த பல ஏரிகள் தூர்க்கப்பட்டு, அப்பகுதிகளில் பல குடியிருப்புகள் அமைக்கப்பட்டதை ஊர்களின், ஊர்ப்பெயர்களின் வரலாறு காட்டுகிறது.

இவ்ஏரிகள் இருந்திருப்பின் சென்னை மக்களுக்கு இன்று நீர்ப்பஞ்சம் ஏற்படும் நிலை தவிர்க்கப்பட்டிருக்கும். மேலும் அடையாறு கூவம் ஆறு பண்டு மக்கள் பயன்படுத்தும் அளவிற்கு நல்ல நீரைக் கொண்டு ஓடிய ஆறுகளே. அடையாற்றின் கரையில் மக்கள் வாழ்ந்திருத்தலைத் தொல்பொருள் ஆய்வு தருகிறது, இன்று மக்கட்பெருக்கம் இவ்வாறுகளின் நீரையும் பயன்படுத்த இயலாமைக்குரிய காரணமாகும்.

சென்னையின் புவியியல் வரலாறு, :இதனை நெய்தல் நிலப்பகுதியாக, காட்டுப்பகுதியாக நீர்வளம் மிக்க பகுதியாக இது இருந்திருத்தலை இனம் காட்டுகிறது. இன்று மக்களின் மிகுதியான குடியேற்றம் இப்பகுதிகளைச் சமவெளியாக்கி, குடியிருப்புகளை மிகுதிப்படுத்தியிருப்பதைக் காண்கின்றோம். எனவே நீர் நிலைகள், விளைநிலங்களை போன்றன தங்கள் தன்மையை யிழந்து குடியிருப்பு இடங்களுக்கும் பிற தொழில்களுக்கும் வழிவிட்டிருக்கின்றன என்பதை இவ்வாய்வு தெளிவாக்குகிறது.

எனவே இயற்கைச்சூழலும், சுத்தமான காற்றும், நல்ல நீரும் சிறந்த வளமும் கிடைத்து வந்த நிலை இன்று இல்லை. இன்று செயற்கை இங்கு வாழ்கின்ற மக்களுக்கு எல்லா வளத்தையும் அளித்தாலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி வாழ வேண்டிய நிலையே அமைகிறது.

# 2. அரசியல்

ஆட்சி செய்தவர்களையும், அவர்கள் ஆண்ட பகுதிகளையும், அரசாட்சி செய்த முறைகளையும் பற்றிய கல்வி அரசியல் வரலாற்றில் அடங்குகிறது.

சென்னை மாநகரின் பகுதிகள், தமிழகம் சார்ந்த பகுதியாகத் தொன்று தொட்டு இருந்து வந்த போதிலும், இது அரசியல் முக்கியத்துவம் பெற்ற பகுதியாகப் பெரும்பாலான காலங்களில் விளங்கியிருக்க வில்லை. தமிழகத்தின் வடபகுதியில் வட எல்லைப் பகுதியாக இருந்த காரணத்தால் மூவேந்தர் ஆட்சியிலும் பெரும்பாலான காலங்களில் இருக்க வில்லை. தொண்டை மண்டலத்தின் பகுதியாக இருந்த போதிலும் அதன் தலை நகராக விளங்க வில்லை போன்ற செல்வாக்கு இன்மை நிலையே ஊர்ப்பெயராய்வும் உணர்த்துகிறது. எனினும் இங்குத் தெரியவரும் பெயர்கள், இது சார்ந்திருந்த பகுதியின் பெயர்கள் அரசியல் தொடர்பான சில செய்திகளைப் பெற உதவுகின்றன.

சென்னை மாநகர ஊர்ப்பெயர்கள் பண்டு இப்பகுதியிலிருந்ததாகத் தெரிவிக்கும் ஊர்கள் சிலவே. அடையாறு, மயிலாப்பூர், திருவான்மியூர், திருவல்லிக்கேணி, எழுமூர் போன்ற சிலவற்றையே காண்கின்றோம். இடைக்காலத்தனவாகவும் ஒரு சிலவற்றையே தெரிய வருகின்றோம். இவற்றை நோக்க, இவை தவிர பிற ஊர்கள் அன்று இருந்தனவா இல்லையா? பிற பகுதிகளில் மக்கள் வசிக்க வில்லையா? வசித்தனர் என்றால் அவற்றை அறியக் கூடிய சான்றுகள் உள்ளனவா? அவை எனவ? அவ்வூர்களின் மூலமாக அரசியல் வரலாறும் பிற வரலாறும் தெரியஇயலுமா? தெரிகின்ற ஊர்கள் இவற்றின் வளத்தையும் சிறப்பையும் மக்கள் வாழ்வையும் இனம் காட்டுகின்றனவே இவை தனியே திகழ்ந்திருந்தல் இயலுமா? இந்தப் பகுதி முழுவதும் தமிழகத்தின் எப்பகுதி சார்ந்து இருந்தது போன்ற எண்ணங்கள் எழுகின்றன. இந்த எண்ணங்கள் அனைத்திற்கும் விடை காணமுனையும் போது, சில செய்திகளே தெரிய வருகின்றன.

தமிழகத்தின் வட பகுதியில் இருக்கும் சென்னைப்பகுதி, இன்று ஒரே ஆட்சியின் கீழ் இருக்கிறது. அன்று தமிழகத்தின் பகுதியாக இது இருந்த போதிலும், ஒரே ஆட்சியின் கீழ் இல்லை. மூவேந்தர் ஆட்சியின் கீழ் எப்போதும் இருந்ததாகவும் சான்று இல்லை. இதனையே, தமிழ் நாட்டு வரலாறு தொல் பழங்காலம் என்னும் நூல் சங்க காலத்தில் தமிழ் பேசப்பட்ட தமிழகத்தின் எல்லை தான்

இங்குக் கூறப்பட்டது. தமிழ் மன்னர் ஆண்ட நாட்டின் எல்லை எது என்று கூறுவதற்கு உறுதியான சான்று இல்லை, என இயம்புகிறது(ப.33).

இஃது தமிழகத்தின் வடபகுதியில் வட எல்லைக்கு அருகேயிருந்த பகுதி என்பதைத் தமிழக எல்லையையுணர்த்தும் பாடலடிகள் காட்டுகின்றன.

வடவேங்கடம் தென் குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்

எனத் தொல்காப்பியப்பாயிரம் உணர்த்தும் தன்மையைக் கொண்டு, பிற் காலத்தும் இதனை இயம்புகின்றனர். தொடர்ந்து பல காலம் இவ்வெல்லை தமிழகத்தின் எல்லையாக இருந்து வந்ததைப் பாடலடிகள் உறுதிப்படுத்துகின்றன.

தென் குமரி வட பெருங்கல்
குண குட கடலா எல்லை — புறம்.17

வேங் கடம் குமரிதீம்புனல் பௌமென்று
அந்நான்கு எல்லை தமிழது வழக்கே — சிகண்டியர்

வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்
வேங்கடம் குமரி தீம்புனல் பௌமென்று
அந்நான்கு எல்லை — காக்கை பாடினியார்

மேலும் வேங்கடம் தாண்டி, மொழி பெயர்தேயம் இருந்ததாகச் சுட்டப்படும் பாடற்பகுதிகளும் தமிழகத்தின் தமிழ் பேசும் மக்கள் தமிழ் பேசி வாழ்ந்த எல்லை மேற்சுட்டியதே என்பதை உறுதிப்படுத்தவல்லன.

பனிபடு சோலை வேங்கடத்தும்பர்
மொழி பெயர் தேஎத்தராயினும் நல்குவர் — அகம்-211

பண்டைத் தமிழக வரலாற்றைத் தெளிவுபடுத்திக் கொள்ள மூலமாக அமையும் சங்க இலக்கியங்களில் சென்னை மாநகரின் பழமை குறித்தோ, இங்கு ஆண்ட மன்னர்கள், குறுநில மன்னர்களின் அரசியல் குறித்தோ செய்திகள் எதையும் காண இயலவில்லை. எனினும் மேற்சுட்டியது போன்று எல்லை, எல்லையை ஆண்ட புரவலர்கள், தொண்டை மண்டலம் பற்றிய செய்திகள் போன்ற சில செய்திகள் தெரிய வருகின்றன. இவற்றைக் கொண்டு இப்பகுதியைப் பற்றிச் சிந்திக்கும் போது சில எண்ணங்கள் வெளிப்படுகின்றன.

ஆதன் என்னும் பெயர் கொண்ட சேர அரசர் பலரை வரலாறு காட்டுகிறது. நெடுஞ்சேரலாதன், நெடு வேளாதன், வல்லியாதன், வாட்டாற்று எழினியாதன், ஆதன் ஓரி, ஆதன் அவினி, ஆதன் அழிசி போன்ற பலர் காணப்படுகின்றனர். மேலும் ஆதன் சேரரின் குடிப்பெயருள் ஒன்று என்ற கருத்தும் அறிஞரால் சுட்டப்படுகிறது (செந்தமிழ்ச் செல்வி 52.9-454).

இந்த ஆதன் பெயர்த் தொடர்புடைய பல அரசர்கள் தமிழகத்தின் பல பகுதியை ஆண்டனர் எனக் காண்கின்ற நிலையில் ஆதனுங்கன் என்றதொரு அரசன் வேங்கடத்தின் தலைவனாக இருந்தான் என்ற தொரு குறிப்பினை உ.வே.சா. வின் புறநானூற்று உரை தருகிறது.

கள்ளில் ஆத்திரையனார் என்ற புலவரின் இரு பாடல்கள் ஆதனுங்கனைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. புறம் 175, புலவரின் புரவலர் மீதான நன்றியுணர்வு வெளிப்படுத்தும் பாடல். 379 ஆம் பாடல் ஆதனுங்கனைக் கள்ளில் ஆத்திரையனர் என்ற குறிப்புடன் அமைகிறது. எனினும் இப்பாடல் ஆதனுங்கன் மேல் பாடியதா என்பது ஐயத்திற்குரியதாக அமைகிறது.

**புன்றலை மடப்பிடி யினையக் கன்று தந்து**
**குன்றக நல்லூர் மன்றத்துப் பிணிக்கும்**
**கல்லிழி யருவி வேங்கடங்கிழவோன்**
**செல்வுழி யெழா அ நல்லேர் முதியன்**
**ஆதனுங்கன் போல நீயும்**
**.......நல்குமதி பெரும**

என்னும் பாடலில் ஆதனுங்கன் போல நீயும் நல்கு என்று சொல்லும் தன்மையிலேயே வேறொரு அரசன் அமைகின்றான் என்பது தெளிவாகத் தெரிகிறது. இது பற்றி ஐயம் ஒரு புறம் இருக்க, இங்கு வேங்கடத்தை ஆண்டவன் நல்லேர் முதியனா அல்லது நல்லேர் முதியனாகிய ஆதனுங்கனா என்பது இன்னொரு வினாவாக அமைகிறது.

ஏனெனில் கழகப் பதிப்பில் நல்லேர் முதிய என விளித்து ஆதனுங்கன் போல நீயும் நல்கு என்னும் போது வேங்கடத் தலைவன் நல்லேர் முதியனாக அமைகின்றமையே தெளிவாகிறது. எனவே நல்லேர் முதியன் வேங்கடத்தை ஆண்டானே தவிர, ஆதனுங்கன் ஆளவில்லை என்ற குறிப்பே தெரிகிறது. எனவே இப்பாட பேதம் சரியாக உணரப்படும் வரை இரண்டு பேரில் யாரோ ஒருவன் வேங்கடப் பகுதியை ஆண்டு வந்துள்ளான் எனக் கொள்ளலாம் எனினும் கழக உரையாசிரியர் இப்பாடல்

தலைவனாக நல்லேர் முதியனைச் சுட்டி., நல்லோர் முதியனின் முன்னோன் ஆதனுங்கன் என்றும் உரைக்கின்றார். எனவே இவரது கருத்துப் படி, ஆதனுங்கன் வேங்கடத்தை ஒரு காலத்தில் ஆண்டவன் என்பது புலனாகிறது. எனினும் இக்கருத்து மேலும் ஆய்விலேயே தெளிவு பெறும்.

*கல்லா விளையர் பெருமகன் புல்லி*

*வியன்றமை நன்னாட்டு வேங்கடம்* அகம்.83

*புடையலங்கழற்கால் புல்லி குன்றத்து* அகம்295

*கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்*

*மழபுலம் வணக்கிய மாவண் புல்லி*

*விழ வுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்* அகம் 61

*நிரைபல கெழுமிய நெடுமொழிப் புல்லி*

*தேன்றூங் கு உயர் வரை நன்னாட்டும்பர்*

*வேங்கடம்* அகம் 393

என்னும் பாடலடிகள் புல்லி வேங்கடத்தை ஆண்டதைச் சுட்டுகின்றன. வேங்கடம் முழுமையாக ஆண்டானா? என்பதற்குச் சான்று இல்லை. வேங்கடத்தின் ஒரு பகுதியை ஆண்டிருக்கலாம் என்பதே இங்குத் தோன்றும் எண்ணம்.

புல்லி ஆண்ட இவ்வேங்கடப்பகுதியைத் தொண்டையர் என்பாரும் ஆண்டு வந்தனர் என்பதனை,

*பொருவார்*

*மண்ணெடுத் துண்ணும் அண்ணல் யானை*

*வண்தேர்த் தொண்டையர் வழையமல் அடுக்கத்து*

*கன்றில் ஓரா விலங்கிய*

*புன்றா ளோமைய சுரனிறந்தோரே* குறுந் 260

*வினை நவில் யானை விறற் போர்த் தொண்டையர்*

*இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு*

*ஓங்கு வெள்ளருவி வேங்கடத் தும்பர்* அகம் 213

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. இங்குத் தொண்டையர் என்றக் குறிப்பு, ஒருவரன்றிப் பலர் இருக்கலாம் என்பதை எண்ணச் செய்கிறது. பலர் தொடர்ந்து இப்பகுதியை ஆண்டனரா? அல்லது ஒரே காலத்தில் பலர் வேங்கடத்தின் பல பகுதிகளை ஆண்டனரா?

எனவும் எண்ணிப் பார்க்கலாம். தவிர, சங்கப்பாக்கள் மேலும் சில தொண்டையர் குலத் தலைவர்களை இனங்காட்டுகின்றன.

பெரும்பாணாற்றுப்படைத் தலைவன், கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாடப்பெற்றவன் தொண்டைமான் இளந்திரையன். இவனைப் புகழும் புலவர் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு இவன் ஆட்சி செய்த தன்மையையும் இவனது வள்ளல் தன்மையையும் பாடும் போது, இவனைப் பல்வேற்றிரைய னாகவும் (37) தொண்டையோர் மருகனாகவும் (454) இருநிலம் கடந்த திருமறுமார்பின் முந்நீர் வண்ணன் பிறங்கடை அந்நீர்த் திரைதரு மரபின் உரவோன் உம்பலாகவும்(29-31) பாடுகின்றார்.

ஔவையார் அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்று பாடிய பாடலாகப் புறம் 45 அமைகிறது. இப்பாடலில் இவ்வரசன் சிறிது வீரம் குறைந்தவனாகவே காட்டப்படுகின்றான். மேலும் புற நானூற்றில் தொண்டைமான் இளந்திரையன் பாடிய பாடல் ஒன்றும் அமைகிறது.(185)

எனவே பொதுவாக நோக்க இப்பகுதியில் தொண்டையர் என்போர் ஆண்டு வந்துள்ளனர் என்பது தெளிவுபடுகிறது.

பெரும்பாணாற்றுப்படை ஆசிரியர் தொண்டை மானைப் பல்வேற்றிரையனாகவும் காட்டியதைக் கண்டோம். இக்குறிப்பு, இரண்டு பெயரும் ஒரே இனத்தாரைக் குறிப்பிடச் சுட்டப்பட்டு வந்துள்ளது என்பதைத் தெளிவாக்குகிறது. வேங்கடப் பகுதியைத் திரையன் ஆண்டு வந்ததை அகம் 85 ஆம் பாடல் குறிப்பு மூலம் உணர்கின்றோம்.

**வென் வேற் றிரையன் வேங்கட நெடுவரை**

**நன்னாட்பூத்த நாகிள வேங்கை**

தவிர,

**செல்லா நல்லிசைப் பொலம்பூட்டிரையன்**

**பல்பூங்கானற் பவத்திரி அன இவள்-** அகம் 340

என நக்கீரர் உவமையாகக் குறிப்பிடும் திரையன் பவத்திரியும் இங்குக் குறிப்பிடத் தக்கது. எனவே இப்பகுதியில் தொண்டையராகிய திரையர் ஆட்சி பல இடங்களிலும் சில காலம் நடைபெற்று வந்தது தெளிவாகிறது.

கரும்பனூர் கிழான் என்பவனைப் பற்றிப் புறம் 381 ஆம் பாடல்

இயம்புகின்றது.

*ஒலி வெள்ளருவி வேங்கட நாடன்*
*உறுவருஞ் சிறுவரும் ஊழ் மாறுய்க்கும்*
*அறத்துறை அம்பியின் மான மறப்பின்*
*றிருங் கோளிராப் பூட்கைக்*
*கரும்பனூரன் காதன் மகனே*

ஔவை. சு. துரைசாமிபிள்ளை கரும்பனூர் தொண்டை நாட்டுத் திருவேங்கடக் கோட்டத்தில் உள்ள தோர் ஊர் என எழுதுகின்றார். இப்பாடல் மூலமும் வேங்கட நாட்டுப் பகுதி கரும்பனூர் என்பது தெளிவாகிறது. இங்குக் கரும்பனூர் சிற்றரசன் அல்லது சிறு நிலத் தலைவன் தெரிய வருகிறான். இவனைப் போன்று பாணன் என்பவன் பற்றியும் தெரிகிறது. குறுநில மன்னனாகிய இவன் நாடு வடக்குப் பகுதியில் உள்ளது. இவன் ஆரியப் பொருநனோடு பொருதவன் போன்ற குறிப்புகள் அகம் 325, 386 ஆம் பாட்டுகளில் காணப்படுகின்றன. மேலும் வடக்குப் பகுதி என்பதுடன் மலை நாடு இவனது நாடு என்றக் குறிப்பும், தலைமகன் இவனது நாட்டைக் கடந்து சென்றமை பற்றிய குறிப்பும் இவனது நாடு வேங்கடம் சார்ந்து அமைந்தது என்பதற்குச் சான்றாகின்றன. மேலும் வேங்கடம் பற்றிய பெரும்பாலான பாடல்கள் பாடிய மாமூலனார், கல்லாடனாரின் (அகம் 113, 325) இரண்டு பாடல்கள் இவன் குறித்து அமைவதும் இங்குச் சுட்டத்தக்கது.

இவ்வாறு பல சிற்றரசர்கள் அல்லது குறுநிலத்தலைவர்கள் ஆட்சி புரிந்த பகுதியாக வேங்கடம் அது சார்ந்த பகுதிகள் காஞ்சி போன்றன அமைகின்ற நிலையினைச் சங்கப்பாக்கள் நவில்கின்றன. சிறு நிலத் தலைவர்கள் எனப்பார்க்க அவர்கள் குறுகிய தொரு நிலப்பகுதியினை ஆண்டு இருக்கலாம் என்ற நிலையில் புல்லி, பாணன், கரும்பனூர்க் கிழான், சில தொண்டையர் அமைய வாய்ப்பு அமைகிறது. எனினும் சென்னைப்பகுதி இவர்கள் ஆட்சியின் கீழ் இருந்ததா என்பது தெரியவில்லை. பாடல்கள் எதுவும் கிடைக்காத பகுதிகளாகவும் இவற்றைக் கருதலாம். இங்கும் சிற்றரசர் ஆட்சிபுரிந்து இருக்கலாம். சான்றுகள் தெளிவு பெறவில்லை. ஆயின் தொண்டைமான் இளந்திரையனின் ஆட்சியைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் எடுத்தியம்பும் போது, சில எண்ணங்கள் எழுகின்றன. தன்னுடைய பத்துப்பாட்டு ஆராய்ச்சியில் பெரும்பாணன் சொன்ன வழியை மிகச் சிறப்பாக

எடுத்தியம்புகிறார் மா.இராசமாணிக்கனார். அப்போது, மாமல்ல புரத்திற்கு அண்மையில் செய்யூருக்குத் தெற்கிலோ சிறிது தள்ளி தென் மேற்கிலோ இருந்து புதிய பாணனுக்கு வழி கூறி இருத்தல் வேண்டும் என்கின்றார் (ப.70) எனவே மாமல்லபுரம் வரையிலும் தொண்டைமான் ஆட்சியே இருந்து இருக்கலாம் அல்லது அப்பகுதியில்பிற பாதுகாக்கும் அரசர் யாரும் இல்லை. எனவே புலவர்பாணனை இப்புரவலனிடம் ஆற்றுப் படுத்துகிறார் என்றும் கொள்ளலாம். இந்நிலையில் சென்னைப் பகுதி தொண்டைமானின் ஆட்சியில் இருந்ததா இல்லையா என்பதும் தெளிவு பெறவில்லை.

எனவே மேற்சுட்டிய கருத்துகள் சென்னைப்பகுதியை அடுத்துள்ள பகுதிகளை ஆண்ட சில மன்னர்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றதே தவிர அப்பகுதி அரசர் குறித்து அல்லது சிற்றரசர் குறித்து எந்தச் செய்தியையும் தரவில்லை. இங்குஇன்று இப்பகுதி ஊராகக் காணப்படும் ஆதன் பாக்கம் பற்றிய சிந்தனை தோன்றுகிறது. இப்பெயரின் வரலாறு எதுவும் புலப்படவில்லை எனினும் இப்பெயர் ஆதனோடு தொடர்புடைமையும், பாக்கம் பழமைச்சார்பு பெற்றிருப்பதும், ஆதன் என்ற மன்னனுடன் இவ்வூருக்கு ஏதோ ஒரு வகையில் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்பதை எண்ணச் செய்கிறது,

தன்னுடைய சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை நூலில் தொண்டை நாட்டுப்புலவர்கள் என்ற பகுதியில் ந.சஞ்சீவி, சில புலவர்களைச் சுட்டுகின்றார். தெரிந்த நிலையில் இப்பெயர்களைக் குறிப்பிடுவதாகச் சுட்டுகின்றார் (ப.36).

1. இளந்திரையன் (தொண்டைமான்) -நற்-94,99,106, புறம் 185.

2. சச்சிப்பேட்டு இளந்தச்சனார்-நற்-266.

3. கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனர்- குறுந்-213,216.

4. கச்சிப்பேட்டு பெருந்தச்சனார்- நற் 144,213.

5. கந்தரத்தனார்- நற் 238,306, குறுந் 155, 213, அகம் 13,95,193.

6. கள்ளில் ஆத்திரையனார் குறுந் 293, புறம் 173,389

7. தாமப்பல் கண்ணனார்- புறம் 43

8. பாரதம் பாடிய பெருந்தேவனார் -' கடவுள் வாழ்த்து புறம், அகம், ஐங்குறு, குறுந், நற்றிணை

9. பெருங்கௌசிகனார் - நற் 44,139

இப்புலவர்கள் அனைவரும் சென்னையை அடுத்த பகுதி சார்ந்தோரே தவிர, சென்னைப் பகுதி சார்ந்தோராக இல்லை. ஆயின் ந.சஞ்சீவி குறிக்கும் புலவர் தவிர, பிறரும் இங்கு இருந்திருக்கின்றனர் எல்பது சில பாடல்கள் தரும் செய்திகளை ஆராயும் போது தெரிகிறது. புல்லி, பாணன், தொண்டையர் இவர்களுடன் அம்பர்கிழான் அருவந்தை, பொறையாற்றுக் கிழான் ஆகியோரையும் பாடிய புலவர் கல்லாடனார். இவரது பாடல்களை ஆராயும் போது, பெரும்பாலான பாடல்கள் வேங்கடம் சார்ந்தவையாகவே அமைகின்றன. இது மட்டுமல்லாமல் இவரது பாடல்காட்டும் ஒரு குறிப்பு இவர் இப்பகுதியைச் சார்ந்தவர் என்பதைத் தெளிவாக்குகிறது.

*அரியலார் கையர் உண்டினிது உவக்கும்*

*வேங்கடவரைப்பின் வடபுலம் பசித்தென*

*ஈங்கு வந்திறுத்த என் இரும் பேரொக்கல்*

*தீர்கை விடுக்கும் பண்பில முதுகுடி*

*.......பொருநன் இவனென*

*நின்னுணர்ந்தோர் என்னுணர்ந்து கூற*

*காண்கு வந்திசிற் பெரும* புறம் 391

பொறையாற்றுக் கிழவனை நாடிப்பாடுகின்ற தன்மையில் வேங்கடத்திலிருந்து தன் சுற்றம் சூழ வறுமை காரணமாகச் சென்ற நிலையைச்சுட்டும் போது, இது அவரது உண்மை நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதாகக் கொள்ளலாம். கல்லாடனார் போன்றே மாமூலனார் என்ற புலவரும் அமைகின்றார். அகநானூற்றில் பல பாடல்களைப் பாடிய புலவர் புல்லிபற்றியும், மொழி பெயர் தேயம் பற்றியும் அத்தேயத்தை ஆண்ட எருமை பற்றியும் பாடும் நிலை அனைத்தும் இவரையும் இப்பகுதி சார்ந்தவராகவே எண்ணச் செய்கிறது. புல்லி-அகம் 61,211,265, 295,311,393 மொழி பெயர் தேயம் - அகம் 295.375 எருமை - அகம்-115. மேலும் புல்லியைப் பற்றி இவரது நற்றிணை (14) பாடலும் கட்டி நன்னாடு பற்றி குறுந்தொகை 11 ஆம் பாடலும், வடபகுதி ஆண்ட பாணர்பற்றி அகம் 325 ஆம் பாடலும் கூறுகின்றன. எனவே இவ்வனைத்துப் பாடல்கள் மூலமாகவும் இவர் தன்னை வேங்கடப்பகுதி சார்ந்தோராகவே புலப்படுத்துகின்றார் எனக் கொள்ளலாம்.

இவ்வாறு மிகுதியான பாடல்கள் பாடிய இவர்கள் இருவரையும்

தவிர, கரும்பனூர்க் கிழானைப் பாடிய நன்னாகனார் (புறம் 381,384), திரையனை ஒரு பாடலில் குறிப்பிடும் காட்டூர் கிழார் மகனார் கண்ணனார் (அகம்85) போன்றோரையும் இப்பகுதியினர் என்று எண்ணத் தோன்றுகிறது. இவர்களது பிற பாடல்கள் கிடைப்பின் அவற்றையும் ஆராயும் போது இக்கருத்தின் வன்மை மென்மை உறுதிப்படும்.

இவ்வாறு இங்கே மேற்சுட்டிய புலவர்களையும் அவர்களரல் பாடப் பெற்ற புரவலர்களையும் நோக்கும் போது காஞ்சியுடன் வேங்கடம் சார்ந்த பகுதிகளை ஆண்டோராகவும் அப்பகுதி சார்ந்த புலவர்களாவும் இவர்கள் இருக்கவே வாய்ப்பு அமையும் போல் தோன்றுகிறதே தவிர, இன்றைய சென்னைப் பகுதியில் வசித்த புரவலர், புலவர் யாவரையும் சங்கப் பாக்கள் வழியே தெரிந்து கொள்ளல் இயலவில்லை. பழுமரம் நாடும் பறவை போல், புலவர்கள் தம்மைப் பாதுகாக்கும் தலைவரைச் சென்று கண்டு பயன் பெறும் வழக்கினை நினைவில் கொண்டு எண்ணுவோம் எனில் மேலே சுட்டிய புரவலர் இருந்த இடங்களைத் தவிர சென்னைப் பகுதியில் வேறு புரவலர் இல்லையோ என்ற எண்ணமும் அமைகிறது. இத்துடன் பெரும்பாணாற்றுப்படையில் பெரும்பாணனுக்கு வழிகாட்டி, செய்யூரிலிருந்து காஞ்சிக்கு வழி சொன்ன புலவர், பிற சிறந்த அரசர் சென்னைப் பகுதியில் இருந்திருப்பின் அவர்களிடம் ஆற்றுப்படுத்தியிருக்கலாம். அம்மன்னனும் புகழப் பட்டுப் பாடப்பட்டு இருக்கலாம். மேலும் கல்லாடனார் பொறையாற்றுக் கிழானைச் சென்று இரந்து நிற்கும் நிலையினை நோக்க வறுமை காரணமாக இவர் இப்பகுதியில் அரசர், வழங்கும் வள்ளல் யாரும் இல்லாமல் அங்குச் சென்றாரா?என்ற கேள்வியும் எழுகிறது. சங்க இலக்கியம் முழுவதையும் இன்னமும் ஆழமாகப் புலவர், பாடப்பட்ட புரவலர் எனத் தனித் தனியே மீண்டும் பார்ப்போமெனின் இத்தகைய கருத்துகட்கு விடை கிடைக்கக் கூடும்.

இத்தகைய நிலையில் இப்பகுதிபற்றி, அங்கு வாழ்ந்த மன்னர், மக்கள், புலவர் பற்றியும் பக்திக் காலத்தில் சிறப்புற்றிருந்ததாகத் தெரிய வரும் மயிலாப்பூர், திருவல்லிக்கேணி போன்ற ஊர்கள் பற்றியும் எந்த விதக் குறிப்பையும் காணுதல் சங்க இலக்கியங்களைப் பொறுத்த வரையில் இல்லை.இவ்வாய்வில் தெரியவரும் இயற்கைச்சார்பு பெயர்கள் பழமைச் சார்பும் கொண்டு திகழும் தன்மை. இவற்றையெல்லாம் பண்டுதொட்டே இப்பகுதி குடியிருப்புகள் என எண்ணுதற்கு இடம் அளிப்பினும்

மேலே சுட்டப்பட்ட செய்தியில் இப்பெயர்கள் பற்றிய எந்தவிதக் குறிப்பும் இல்லை. இந்நிலையில் இது தொண்டை நாட்டின் ஒரு பகுதியாகத் திகழ்ந்த நிலை குறித்தும் இப்பகுதியின் அரசியல் குறித்தும் சென்னை ஊர்ப்பெயர்களின் வரலாற்றினின்றும் தெளிவு பெறல் இயலாது அமைகின்றது. எனினும் மேற்சுட்டிய வள்ளல்கள் அரசர்கள் என்ற நிலையில் பார்க்கும் போது தொண்டையர் இனம் சார்ந்த தலைவர்களே பெரும்பான்மையும் தமிழகத்தின் வட பகுதியை ஆண்டு வந்தனர் என்ற நிலையில் இப்பகுதியும் அவர்களின் ஆட்சியின் கீழ் இருந்திருக்க வாய்ப்பு அமைகிறது.

தொண்டை நாடு என்ற பெயர்க்குறித்து ஆராயும் போது மிகத் தெளிவாக இந்தக் காலத்தில் சூட்டப்பட்டது இப்பெயர் என்பதற்கு எந்தச் சான்றும் இல்லை எனினும் ஊகித்து உணர்தல் ஓரளவிற்கு இயலுகிறது. ஆயின் இப்பகுதியைப் பின்னர் இலக்கண உரையாசிரியர்கள், அருவா நாடு என்று குறிப்பிடும் தன்மைக்குரிய சான்றுகள் தெளிவாக இல்லை. இருப்பினும் பட்டினப்பாலை அடிகள் அருவாளர் இருந்தமையை இயம்பும் நிலை குறிப்பிடத் தக்கது. பட்டினப்பாலையில்கரிகாலன் வென்ற பகுதிகள் எனப்பகுத்துக் கூறும் போது, அருவாளர் இப்புகுதி சார்ந்தோராக இருந்திருத்தலைச்சுட்டுகின்றார் புலவர்.

*தான் முன்னிய துறை போகலின்*
*பல்லொளியர் பணிபொடுங்கத்*
*தொல்லருவாளர் தொழில் கேட்ப*
*வடவர் வாடக் குடவர் கூம்பத்*
*தென்னவன் திறல் கெடச் சீறி 273–277*

தமிழக வேந்தர் அனைவரையும் கரிகாலன் வென்றவன் என்றக் குறிப்பு காட்டும் பாடலடிகள் இவை. அருவாநாடு என்று இப்பகுதி அழைக்கப்பட்ட நிலையைத் தொல்காப்பியம் நச்சினியார்க் கினியர் உரையினின்றும் பெறுவதுடன் கரிகாலன் அருவாளர் ஆண்ட இப்பகுதியையும் வென்றான் என்ற எண்ணத்தை உ.வே.சா உரையினின்றும் பெறுதலும் இயலுகிறது. ஆயின் இப்பகுதியை அவன் ஆண்டானா என்பது தெரிய வில்லை.

குடவர், பாண்டியர், சோழர் தவிர, பிறராகக் குறுநில மன்னர் அமைகின்றனர். தமிழகத்தின் அன்றைய நிலையும் இதே. அருவாளர் என்று சொல்லி, அடுத்து வடவர் எனக் குறிப்பிடும் நிலையும் வடவர் அருகே இவர் இருந்திருக்கக் கூடிய சூழலை இனம் காட்டுகிறது. மேலும் தமிழ் மொழியைத் தெலுங்கர் அரவம்

என்று சுட்டினர் என்பதும் இன்றும் அவர்களின் பேச்சில் தமிழ் அரவம் என்று சுட்டப்படுவதும் இங்கு எண்ணத் தக்கது. அருவாளர் ஆண்ட பகுதியை அடுத்து வாழ்ந்த வடுகர் அருளாளர் பேசிய மொழியை அரவம் எனக் குறித்திருக்கலாம். எனவே தமிழ் அவர்களிடம் அரவம் ஆயிற்று என்ற கருத்தும் இங்கு அரண் ஆகிறது (தமிழ்நாடு - தொல்பழங்காலம்-ப.93). பின்னர் உரையாசிரியர்கள் செந்தமிழ் சேர் நிலத்துள் ஒன்றாக அருவா நாட்டையும் சுட்டும் நிலை, அன்று இன்னமும் சான்றுகள் அவருக்குக் கிடைத்திருக்கலாம் என்பதை எண்ணச் செய்கிறது. எனினும் அருவாநாடு தொடர்பாகச் சங்க இலக்கியத்தில் வேறு ஏதும் குறிப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. இத்துடன் சென்னை மாநகர ஊர்ப்பெயராய்வு தரும் சில சிந்தனைகளை இங்கு நோக்கலாம்.

தொல்லருவாளர் என்ற குறிப்பு தொண்டையர் ஆட்சிக்கு முன்னர் அருவாளர் ஆட்சி செய்திருக்கலாம் என்ற சிந்தனையைத் தருகிறது. அருவா நாடு, அருவாவட தலை நாடு என்ற பெயர்களும் தொண்டை மண்டலத்திற்கு முன்னைய பெயர்களாகவே அமைகின்றன.

எனவே தொண்டையர், திரையர் ஆட்சியின் செல்வாக்குக்கு முன்னர் அருவாளர் என்ற ஓர் இனத்தார் இப்பகுதி முழுமையும் ஆண்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. மேலும் அருவாளர் வழங்கிய மொழியை அரவம் என்று சுட்டும் வழக்கினையும் இங்கு இணைத்து நோக்கலாம்.அரவம் என்பதற்குரிய பல பொருள்களுள் ஒலி, நாகம் என்பனவும் உண்டு, ஒலி' என்ற பொருளில் தமிழ் அரவம் என்று வழங்கப்பட்டதா அல்லது நாகம் சார்புடையதா என நோக்கும் போது பிற்பட்டதற்குச்சிறப்பு மிகுகிறது. இப்பகுதிக்கும் 'நாகர்' க்கும் தொடர்பு மிகுதியாக அமைகிறது. நாகர் வணக்கம் கொண்டவர்கள் அரவாளர் என்ற நிலையில் அவர்கள் பேசிய மொழி அரவம் என்று வழங்கப்பட்டு, அவர்கள் வாழ்ந்த பகுதி அருவா நாடு என்று சுட்டப்பட்டிருக்கலாம் என்பது ஓர் எண்ணம்.

சென்னை மாநகரப் பகுதி ஊர்ப்பெயர்களின் வழி காணக்கிடைக்கும் தொன்மையான ஊர்கள் மயிலாப்பூர், திருவான்மியூர், திருவொற்றியூர் போன்றன.

மயிலாப்பூர் என்ற ஊர் மயில் காரணமாகப் பெயர் பெற்றது என்பது உறுதியானது. பிற இரண்டு ஊர்ப் பெயர்களின் ஆய்வு உறுதியான முடிவைத் தரவில்லை எனினும் இவை தரும் ஒரு

காரணமாக் அமைவது புற்று என்பது. 'புற்று' காரணமாக வான், ஒற்று என்ற புற்றின் பிற பெயர்கள் காரணமாக இப்பெயர்கள் இவ்வூருக்கு அமைந்திருக்கலாம் என்றதொரு எண்ணத்தை இப்பெயர்கள் தருகின்றன. இந்நிலை இரண்டையும் ஒப்பிட்டு எண்ணும் சிந்தனைக்கு நம்மை இட்டுச் செல்கின்றது. எனவே புற்றுகளின் மிகுதி நாகர் வணக்கத்தையும் மிகுதிப்படுத்தலுக் குரிய தொரு காரணமாகக் கருதலாம். இன்றும் திருவான்மியூர் பகுதிகளில் புற்றுகள் மிகுதியாக உண்டு என்ற கருத்து உண்டு.

இப்பெயர்கள் தவிர, கோடன்பாக்கம் பெயரும் ஆய்வதற்குரியது. இப்பெயரின் தொன்மையும் பெயர்க் காரணமும் கூட தெளிவுபட வில்லை. இருப்பினும் கோடகன் என்ற பெயர் நாகத்திற்கு உரியது என்பதும் பாக்கம் என்ற பொதுக்கூறு பழமையான, தொண்டை மண்டல ஊர்ப்பெயர்ப் பொதுக் கூறுகளில் ஒன்று என்பதும் இங்கு எண்ணத் தக்கது.

இத்துடன் திரையன் நாகர் மகள் தொடர்பும் நினைத்தற்குரியது.

எனவே நாகர் என்ற இனத்தார் இப்பகுதியில் அன்று மிகுதியாக வாழ்ந்து வந்திருக்கலாம். அவர்களே அருவாளர் எனப்பட்டனர். பழமை மிகுந்த குடிகள் என்பதனாலேயே அவர்கள் தொல்லருவாளர் எனப்பட்டனர். பின்னர் தொண்டையர் இனஞ்சார்ந்த அரசர்களின் ஆட்சியின் செல்வாக்கு இப்பகுதிக்குத் தொண்டை மண்டலம் என்ற பெயரை அளித்தது. நாளடைவில் 'அருவாநாடு' என்ற பெயர் வழக்கு மறைந்து தொண்டை மண்டலம் என்ற பெயர் செல்வாக்குடன் திகழத் தொடங்கிற்று என எண்ணுதல் இயலுகிறது.

தொண்டை மண்டலம் என்ற பெயர்க்கும் பல காரணங்கள் இயம்பப்படுகின்றன. தொண்டை மண்டலம் என்ற பெயர் எப்போது இருந்து இப்பகுதிக்குச் சுட்டப்பட்டது என்பது தெரியவில்லை. வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கல்பட்டு மாவட்டம் மூன்றும் இணைந்தது தொண்டைமண்டலம்; இம்மூன்றும் இணைந்தது மாவிலங்கைப்பகுதி; அருவா நாடு அருவா வடதலை நாடு இரண்டும் இணைந்தது தொண்டை மண்டலம் என்று பெயர் பெற்றது போன்ற பல கருத்துகள் உண்டு. மேலும் தொண்டையர் ஆட்சிக்குப் பின்இப்பகுதி இப்பெயர் பெற்றதா அல்லது தொண்டை மண்டலத்தை ஆட்சி செய்ததால் தொண்டையர் என்ற பெயர் பெற்றனரா போன்ற பல ஐயங்கள் இருக்கின்றன. இவையனைத்திற்கும் எந்த விதமான

விளக்கத்தையும் சென்னை மாநகர ஊர்ப்பெயர்கள் ஆய்வு தரவில்லை. ஊர்ப்பெயர் ஆய்வில் இப்பெயர்கள் சில இடங்களில் எதிர்ப்படுகின்றன.

தொண்டை மண்டலம் பற்றிய தெளிவான வரலாற்றைப் புரிந்து கொள்ள தொண்டை மண்டலத்துள் அடங்கியிருந்த அன்றைய பகுதிகளின் முழு வரலாறும் முழு வரலாற்று மூலங்களின் அடிப்படையிலும் ஆராய்தல் தேவைப்படுகிறது.

எனவே அருவா நாடு, தொண்டை மண்டலம் என்ற பிரிவுகளுள் சென்னைப் பகுதியும் அடங்கியிருந்தது. தமிழகத்தின் இப்பகுதியிலும் ஆட்சி நடை பெற்று வந்துள்ளது. நிர்வாக நலன் கருதி அவையும் தனிப் பிரிவாக நாடு என்றும் மண்டலம் என்றும் அழைக்கப்பட்டன; இவற்றினின்றும் இவற்றுள் உள்பிரிவுகளும் இருந்திருக்கலாம். அவை தெளிவாகத் தெரியும் அளவிற்கு இன்றைய ஊர்ப்பெயர்கள் துணையாக வில்லை என்பதையே இங்குக் குறிப்பிடல் இயலுகிறது.

இடைக்கால அரசியல் வரலாற்றை இப்பெயர்கள் மூலம் தெளிவாக்க இயலுகின்றதா என்ற கோணத்தில் ஆராயும் போதும் சில செய்திகளே புலப்படுகின்றன.

தொண்டை மண்டலத்திற்குப் பின்னர் இப்பகுதி ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்ற பெயரைப் பெற்றதை இவ்வாய்வுப் புலப்படுத்துகிறது. எனவே சோழர் ஆட்சியில் இப்பகுதி பெயர் மாற்றம் பெற்றிருப்பதைத் தெரிகின்றோம். பல்லவர் இப்பகுதியில் சோழர்க்கு முன்னர் ஆட்சி செய்தனர் எனினும், இவர்கள் இப்பகுதியில் உள்ள கோயில்களில் திருப்பணிகள் செய்தனர் என்பது போன்ற செய்திகள் புலப்பட்டாலும், இப்பகுதியின் பெயரை மாற்ற வில்லை அவர்கள்.

சங்க காலத்தைக் காட்டிலும் தெளிவான பிரிவுகளை இக்காலத்தில் காண்கின்றோம். மண்டலம், கோட்டம், நாடு, ஊர் என இப்பிரிவுகள் பிரிக்கப்பட்டு இருந்த நிலை புரிகிறது. கோட்டத்தை வளநாடு என்று மாற்றினர் சோழர்கள். இருப்பினும் 'வளநாடு' செல்வாக்கு பெறவில்லை. எனவே கோட்டம் என்ற பிரிவு பல்லவர் காலத்திலேயே தொடக்கம் பெற்றிருக்கக்கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தின் கீழ் கோட்டம் நாடு ஊர் பிரிவுகள் இருந்தன. புலியூர்

நாடு, எழுமூர் நாடு, கோட்டூர் நாடு, துடர் முனை நாடு, புலியூர்க் கோட்டத்தினுள் இருந்துள்ளன. புழற் கோட்டத்தினுள் எழுமூர் துடர் நாடு இருந்துள்ளது தெரிகிறது. இவை தவிர பிற கோட்டங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. எனினும் இக்கோட்டங்களுள் அடங்கிய நாடுகள் பல இருந்திருக்கலாம். சோழர்காலத்தில் கோட்டம் வளநாடு என்று மாற்றப்பட்டதே தவிர, நாடுகள், ஊர்கள் பெயர் மாற்றம்பெற்ற செய்திகள் தெரிய வில்லை.

இந்நிலையே கி.பி.16 வரையிலும் நீடித்து இருந்துள்ளது. பின்னர் சந்திரகிரி ராஜ்யத்தின் கீழ் ஒரு சில காலம் இப்பகுதி இருந்தது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலேயே இப்பகுதி சென்னைப்பட்டணம் என்று பெயர் பெறத் தொடங்கியது. பல கல்வெட்டுகள் இப்பகுதி சென்னைப்பட்டணம், சென்னைபுரி என்று குறிப்பிடப்படத் தொடங்கியதைக் காட்டுகின்றன. சென்னைப் பட்டணம் என்று மட்டுமல்லாது மதராஸ் என்றும் இப்பகுதி வழங்கப்படத் தொடங்கியது.

இவ்விரு பெயர்களின் பெயர்க் காரணங்களும் பல விதமாகக் கூறப்பட்டு வருகின்றன எனினும் இதுதான் இவற்றிற்குக் காரணம் என்ற முடிவினைப் பெற முடியவில்லை. எனினும் சில சிந்தனைகளை இவ்வாய்வு மூலம் பெறுகின்றோம். இப்பகுதியின் இப்பெயர்களைப் பொறுத்த வரையிலும் 1639 க்கு முன்னும் பின்னும் ஓர் அடிப்படை வேறுபாடு அமைகிறது. 1639 வரையிலும் இப்பகுதி அருவா நாடு, தொண்டை மண்டலம், ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என பிற பல தலைமையின் கீழ் ஒரு சிறு பகுதியாக இருந்து வந்துள்ளது. ஆயின் 1639 க்குப் பின்பு சென்னை இராஜ்யத்தின் கீழ் தென்னிந்தியா முழுவதும் வருவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டது. பின்னர் 1956 இல் மொழி வாரி மாநிலமாகப் பிரிந்த பின்னர் தமிழகத்தின் தலை நகராகச் சென்னை விளங்கத் தொடங்கியது இங்குக் குறிப்பிடத்தக்கது. சென்னையின் பெயர் வரலாற்றில் சென்னையின் தோற்ற வரலாறும் இணைந்திருக்கிறது.

## சென்னை

சென்னைப்பட்டணம், சென்னைபுரி, சென்னை நகர், சென்னை இராஜ்யம் போன்றன சென்னையின் பல்வேறு பெயர் வழக்குகள். இன்று சென்னை என்று குறிப்பிடப்படினும், சென்னை மாநகர் என்றும் சுட்டப்படும் வழக்கில் தன் தகுதியை வெளிப்படுத்தி நிற்கின்றது சென்னை.

ஆங்கிலேயர்கள் மசூலிப்பட்டினத்திலும் பின்னர் ஆறுமுகப் பட்டினத்திலும் தங்கள் வாணிபச்சூழல் சரியாக அமையாத காரணத்தால் மேலும் தெற்கு நோக்கித் தங்கள் பயணத்தைத் தொடங்கினர். பிரான்சிஸ்டே என்பவன் இக்கடற் கரைப்பகுதியைக் கண்டு, தங்களுக்கு உகந்ததாகத் தேர்ந்தெடுத்தான். அப்போது இப்பகுதி, சந்திர கிரி ராஜ்யத்தில் அடங்கிய நிலையில், பூந்தமல்லி நாயக்கர் ஆட்சியின் கீழ் இருந்தது. பூந்தமல்லியினின்றும் இப்பகுதியை ஆண்டவன் தாமல் வேங்கடபதி. ஆங்கிலேயருக்கும் இவனுக்கும் 1639-ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் படி ஆங்கிலேயருக்கு அளிக்கப்பட்ட இடம் மதராஸ்பட்டினம்( இன்றைய கோட்டை இருக்குமிடமும் அதன் வடபகுதியும்). எனினும் இந்த ஒப்பந்தத்தில் ஆங்கிலேயருக்குக் கொடுத்த இடத்தின் எல்லை வரையறுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மதராஸ்பட்டினம் முழுவதையும் கொடுத்தனர் என்பது தெரிகிறது.

மெக்கன்ஸியின் கைப்பிரதி மூலம், மதராஸ் குப்பத்துடன் சென்னைக் குப்பம்,ஆர்குப்பம், மேலுப்பட்டு என்பவற்றையும் கொடுத்தனர் எனத் தெரிகிறது (சென்னை மாநகர்-34).

இவ்வாறு ஆங்கிலேயருக்குக் கொடுத்த இடம் எவை என்பது பற்றி, மேலும் பல கருத்து மாறுபாடுகள் உண்டு.

அடுத்து இப்பகுதியை ஆங்கிலேயர் தேர்ந்து எடுத்தனர் என்ற கருத்துடன் பூந்தமல்லி நாயக்கர் விரும்பி இப்பகுதியை அளித்தனர் என்றதொரு கருத்தும் உண்டு.

Channa or Channappa was the son of a certain Venktappa Nayaka of Damal according to an inscriptian... The emperor Venkatapatiraya, whose head quarters were at Chandragiri had to move down from there against the Rebel Lingamma Nayaka... This Channa or Channnappa who apparently held office under that Venkata played a distinquished part in this war against the rebel, defeated Lingamma at a place called Munnali, now the railway station Minnal, a little way at Arakkonam, and subdued the rebel... This Channa or Channappa was appointed governor of this province after its recovery from the rebel. As memorials of his rule, we have a tank, which goes by the name Channasagaram in the North Arcot District, and this town of Channapattinam which is said to be a foundation in honour of the father by his son Aiyappa, who held a subordinate position,under his elder brother, Damarla Venkata,whose govern-

ment was the province of Wandiwash... In the poem ascribed to him, Anka says that the foundatian of the town was due to the constant fight between the Dutch at Pralayakaveri...and the Portuguese.at Mylapore. This foundatian could not have been many years earlier than that of Fort St. George as Aiyappa could not have laid the foundatians of the town before he came to cccupy the official position of governor of the locality.

In regard to this particular foundation, the reasons leading to the actual foundation of the town require to be considered carefully. Two points came out clearly. The local governor found the inconvenience of the European companies fighting between themselves in the territory of the empire and the sea littoral within the limits of his own particular province. The two companies were fighting both on the sea carrying their disputes as well as on land. The local ruler...found...that he could do something to prevent their fighting extending to the land. The foundation of a town whereby to prevent such fights between the two hostile companies was the town of Channapatam. The Madras Tercentenary Commeration. Volume - 42-43

திவான் பகதூர் டாக்டர் எஸ்.கிருஷ்ணசுவாமி அய்யங்கார் தன்னுடைய கட்டுரையில், இது குறித்து விளக்கத்தைத் தருகின்றார். அய்யப்ப நாயக்கன் தன் தந்தையின் பெயரான சென்னப்ப நாயக்கன் பெயரால் ஒரு நகரை உருவாக்கினான். அதற்குக் காரணம் டச்சு; போர்ச்சுக்கீசியர் இடையே நிகழ்ந்த சண்டை. இந்த நகர் உருவாக்கும் செயின்ட் ஜார்ஜ் கோட்டை உருவாக்கத்திற்குப் பல ஆண்டுகள் முன்னர் என்று கூற முடியாது என்று அவ்விளக்கத்தில் கருத்துகள் அமைகின்றன.

எனவே சென்னை என்ற பெயருக்குக்காரணம் அய்யப்ப நாயக்கரின் தந்தை என்பது என்ற கருத்து அடிப்படையானது. ஆங்கியேருக்கு அளித்தபகுதிக்கு இப்பெயரை வைக்கவேண்டும் என்று நாயக்கர் விரும்பியதால் சென்னைப்பட்டினம் என்று பெயரிடப்பட்டது; அன்று ஏற்கெனவே இந்நகர் உருவாக்கப்பட்டு இருந்தது என்ற இரண்டு மாறுபட்ட கருத்துகள் இதனடிப் படையில் எழுந்துள்ளன. இவற்றைத் தவிர மேலும் சில கருத்துகளும், சென்னைக்குரிய பெயர்க்காரணங்களாகச் சுட்டப்படுகின்றன. எனினும், பரவலாக அமைவது பூந்தமல்லி நாயக்கனின் தந்தையின் பெயர் என்பதே ஆகும்.

தமிழில் சென்னி என்றால் தலை என்று பொருள். சென்னி வளவன், சென்னி குலோத்துங்கன், இளஞ்சேய்சென்னி என்ற வழக்குகளும் உண்டு.சென்னி என்ற சொல்லில் இருந்து சென்ன -சென்னை என மருவி வழங்குகின்றது என்று சொல்லலாம் (சென்னை மாநகர் பக் 40-41) என்பது தமிழ்ச் சார்புடைய கருத்து. பிற அனைத்தும் தெலுங்குச் சார்பு காட்டுவன.

ஆங்கிலேயருக்கு அளிக்கப்பட்ட இடம், எல்லை வரையறை தெளிவில்லை எனினும் சில செய்திகள் வெளிப்படுகின்றன. 1. வெறும் மணல்பகுதி. அருகாமையில் குடியிருப்புகள் இருந்தனவே தவிர, ஆங்கிலேயர்பெற்ற இடம் வெறும் மணல் இடம்.

2. இதன் அருகாமையிலிருந்த இடம் மதராஸ் குப்பம் அல்லது மதராஸ் பட்டணம்.

3.மெக்கன்ஸி மதராஸ் குப்பத்துடன் சென்னைக் குப்பம், ஆர் குப்பம் மேலுப்பட்டு என்ற கிராமங்களையும் கொடுத்தான் எனக் குறிப்பிடும் தன்மை.

4.இந்தப் பகுதியின் பெயர் நரிமேடு

5.தாமல் வேங்கடபதியின் மகன் ஸ்ரீரங்கராயன். 1642-இல் பட்டத்திற்கு வருகின்றான் இவன். இவன் அளித்ததே நரிமேடு. இன்றைய பொது மருத்துவமனையிருக்கும் பகுதியே நரிமேடு. இவ்விடம் ஸ்ரீரங்கராயப்பட்டினம் என்று பெயரிடப்பட்டதாகவும் தெரிகிறது. (whats in a name Madras Discovered-p1-5,p.8-11;

Day`s No Mans -sand, The character and significance of the foundation of Madras Devan .Bahadur Dr.S. Krishnaswami Aiyangar. The Madras Tercentenary Commemoration Volume p -39-50;

சென்னை மாநகர்.ம.சு.சம்பந்தன் பக்:29-43.)

தாமல் வேங்கடபதி தன் தந்தையின் பெயரால் ஒரு நகர் அமைக்க விரும்பி, ஆங்கிலேயருக்குக் கடிதம் எழுதியுள்ளான் என்ற செய்தியும் உண்டு.

சென்ன கேசவபுரம் என்ற பெயர் அப்பகுதிக்கு கி .பி.17 இல் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

இக்கருத்துக்கள் அனைத்தையும் ஆராயும் போது சில சிந்தனைகள் எழுகின்றன. இவை இப்பெயரின் தோற்றம் குறித்த எண்ணங்களையும் தருகின்றன.

1. நாயக்கர் ஆங்கிலேயருக்கு அளித்த பகுதியின் எல்லை எது என்பது தெரியவில்லை எனினும், அது திறந்த வெளி; கடற்கரையை அடுத்த பகுதி என்பதுடன், இன்றைய நிலையில் இன்று செயின்ட் ஜார்ஜ் கோட்டை இருக்கும் பகுதி என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

2. இதனை அடுத்து மதராஸ் பட்டினம் என்ற ஒன்று இருந்தது என்பதை யாரும் மறுக்கவில்லை. பின்னர் மதராஸ் என்று பெயர் வருவதற்கும் இப்பெயர்க் காரணமாக அமைந்திருக்க வேண்டும் என்பதும் மறுக்கவியலாத ஒரு செய்தி.

3. நாயக்கர்கள் தன் தந்தையின் பெயரில் நகர் உருவாக்க வேண்டும் என எண்ணினர் என்பது இச் செய்திகளின் பின்னர் இருக்கும் ஒரு எண்ணம் எனினும், நகர் அமைத்த பின்னர் இப்பகுதியை ஆங்கிலேயருக்கு அளித்தனரா அல்லது ஆங்கியேயர்க்குக் கொடுத்த பகுதிக்கு அப்பெயரிட்டு வழங்கினரா? என்ற செய்தி தெளிவில்லாதது. எனினும், ஆங்கிலேயர்க்குக் கொடுத்த பகுதியைச் சென்னப்பநாயக்கன் பெயரால் வழங்கவேண்டும் என்று பத்திரத்தில் எழுதி வழங்கினர் எனில் ஆங்கிலேயர் ஏன் தாங்கள் கோட்டை கட்டிய பின் அப்பெயரை வைக்காது செயின்ட் ஜார்ஜ் கோட்டை என்று வழங்கினர் என்ற கேள்வி எழுகிறது. அவ்வாறு தாங்கள் கூறியதை ஏற்காத நிலையிலும், பின்னர் ஸ்ரீரங்கன் நரிமேடு பகுதியை அவர்க்கு அளிக்கின்றான். இது ஏற்புடையதா? எனவே முனைவர் கிருஷ்ணசாமி அய்யங்காரின் கூற்றுக்கு ஏற்ப, போர்த்துக்கீசியர், டச்சுக்காரர்களின் பகைமையைச் சமாளிக்க, சென்னைபட்டினம் அல்லது சென்னை கேசவபுரம் என்ற தொரு குடியிருப்பினை அய்யப்ப நாயக்கன் இப்பகுதியில் உருவாக்கியிருக்கக்கூடும். பின்னர் ஆங்கிலேயரின் கோட்டையின் தோற்றமும் அங்கு மக்கள் மிகுதியாகக் குடியேறிய நிலையும், இங்கு வாழ்ந்த தெலுங்கு மக்களின் செல்வாக்கும் இப்பெயரின் செல்வாக்குக்கு வழி வகுத்திருக்கலாம் என்றுதோன்றுகிறது.

மேலும், இப்பெயரின் விளக்கத்திற்கு இப்பகுதியில் காணப்படும் இரண்டு கோயில்களின் வரலாற்றையும் காண வேண்டும்.

இன்று சென்னை பூக்கடை காவல் நிலையம் அருகே தேவராஜமுதலித் தெருவில் அடுத்தடுத்துக் காணப்படுவன இவை. இக்கோயில்களின் வரலாறு இவை இரண்டும் புதியதாக 1762 இல் கட்டப்பட்டன என்பதைத் தெரிவிக்கின்றன. பழைய கோயில் இடிக்கப்பட்டு, மணலி முத்துகிருஷ்ண முதலியார் இப்போதுள்ள கோயில்களைக் கட்டியதாக வரலாறு தெரிவிக்கின்றது.

முதலில் இக்கோயில் சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தினுள் இன்றைய ரிஸர்வ் வங்கியிருக்கும் பகுதியில் இருந்தது. ஆங்கிலேயர் 1757 இல் படைவீரர்களுக்காக இக்கோயிலை இடித்தனர். மக்கள் கொதித்து எழுந்தனர். ஆங்கிலேயரிடம் துபாஷியாகப் பணிபுரிந்த மணலி முத்துகிருஷ்ணமுதலியார் இன்றுள்ள இந்தப்புதிய கோயில்களைக் கட்டினார் என்பது வரலாறு தரும் செய்தி.

இந்தக் கோயில்கள் பட்டினம் கோயில்கள் என்று பொதுவாகவும், சென்ன கேசவர், சென்னமல்லீசர் கோயில்கள் எனச் சிறப்பாகவும் வழங்கப்படுகின்றன.

உயர்நீதி மன்ற வளாகத்தினுள் இருந்ததாகத் தெரியவரும் முதல் கோயில் சென்ன கேசவர் கோயில். இக் கோயிலைக் கட்டியவர்களாகப் பேரிதிம்மண்ணா, நாகப்பன் ஆகியோர் சுட்டப்படுகின்றனர். இவர்கள் இருவரும் பிரான்ஸிஸ்டே, கோகன் இருவருடனும் வந்தவர்கள், பேரிதிம்மண்ணா துபாஷியாகவும், நாகப்பன் வெடிமருந்து தயாரிப்பவனாகவும் இருந்தனர்.

The Patnam Perumal temple that Beri Thimmanna built also known as the Chennakesava Perumal Temple, was the Town Temple from the day it was consecrated a day, unrecorded though the existnce of the temple is noted in the records of 1648..... Both Thimmanna and Nagabattan are referred to in a law suit early two centuries after their death, as having endowed the Great Town Pagoda,, the latters endowment even being referred to as being in 1646. It is quite possible that Nagabattan endowed and built a small temple which Thimmanna two years later enlarged into the Great Town Pagoda . Madras Discovered- p.215,216

And the two shrines together are known as the Town Temple in the records available and seem to have existed in close association from the very beginning. In the second civil suit filed in 1898 some

original documents were produced and these show that Nagabattan who was a gun - powder maker in the company's service and Beri Thimmanna a broker who came along with Day to Madras granted endowments to the Chenna Keseva Perumal temple in 1646 and 1648 respectively. Madras Tercentenray commemoration Volume.p.360-361

இச் செய்திகள் சென்னை குறித்த மேலும் சில எண்ணங்களைப் பெற வாய்ப்பு அளிக்கின்றன.

சென்னை கேசவர் கோயில் உயர்நீதிமன்ற வளாகத்தினுள் இருந்த கோயில், இக்கோயில் இடிக்கப்பட்டு இரண்டு கோயில்கள் கட்டப்பட்டன. இவை பட்டினம் கோயில்கள் என்று அழைக்கப்பட்டன என்று கட்டும்போது இப்பகுதிக்குப் பட்டினம் என்ற் பெயர் இருந்ததாக தெரிகிறது.

அடுத்து சென்னைபட்டணம் என்ற பெயர் வழக்கையும் இப்பகுதி பெற்றிருந்தது என்பது தெரிகிறது.

" whereas at (this) Chenna Puttanem I have built the Chenna Kesava Perumal covil and have endowed it with Manyam....(signed) Thimmanen. The Madras Tercentenary Commemoration Volume-p.362.

பேரிதிம்மணன், நாகப்பன் இக்கோவில் கட்டக்காரணமாக இருந்தார்கள் எனின் 1639க்குப் பின்னர் தான் இதனைக் கட்டியிருக்கவேண்டும். அப்படி எனில் சென்னைப் பட்டினத்தில் இக்கோயில் கட்டப்பட்டதால் இங்குள்ள இடப் பெயரையும் இணைத்துச் சென்னை கேசவர் கோயில் என்று வைத்திருக்கலாம் இல்லை இவர்கள் இதற்குத் திருப்பணி செய்தனரே தவிர, கோயில் முன்னரேயே இருந்த கோயில் எனில், அய்யப்பநாயக்கன், தன் தந்தையின் பெயரால் சென்ன சமுத்திரம் ஏரியை உருவாக்கியது போன்று, நகர் உருவாக்க எண்ணிய எண்ணத்தின் அடிப்படையில் சென்னை என்ற பெயருடன் கடற்கரைப்பகுதியாகிய இவ்விடம் இருந்த நிலையில் இதற்குச் சென்னப்பட்டினம் என்று பெயரிட்டுக் குடியிருப்பையும் அமைத் திருக்கலாம். பின்னர் இங்குள்ள மக்கள் தாங்கள் வணங்க சிறிய தொரு கோயிலை அமைத்திருக்கலாம். எனவே இக்கோவிலைச் சென்ன கேசவர் கோயில் என்று அழைத்திருக்கலாம். மேலும் சென்னை பட்டினம் என்ற வழக்கு தவிர, சென்ன கேசவர் கோயில் சார்பாக இப்பகுதி சென்ன கேசவ

புரம் என்று வழங்கப்பட்டிருக்கலாம் என்றதொரு எண்ணத்தைத் தருகிறது டாக்டர் வி.ராகவன் கட்டுரை. இவர் இரண்டு வடமொழி நூல்கள் மூலமாகச் சென்னையின் பெயரினை ஆராய்ந்து இவ்வெண்ணத்தைத் தருகிறார். இவரது கருத்துப்படி இக்கோயில் இறைவன் பெயர்தான் சென்னைக்குரிய காரணமே தவிர, சென்னப்ப நாயக்கன் பெயர் அன்று .

Henry Davison Love comes to the following conclusions regarding the name Chennapattana. (Vestigess of Old Madras pp 83-85):-

1.The Fort region must have had an original name, prior to Venkatappa Naiyakas gift of the place to the English.

2.This original name may be Chinnapatam.

3.The assigned derivation from Chennappa was evolved later.

4. This designation Chinnapatam is found in the grant of 1644 relating to an endowment (by Nagabattan) of the Chenna Kesava parumal temple.

This Chenna Kesava perumal temple or the Great Pagoda stood originally in the fort area, covering part of the site now occupied by the High Court. Records speak of only one temple, for Vishnu. It is after this temple of Chenna Kesava that the place was known as Chenna Kesava Pattana or Chenna Kesava pura which was abbreviated into Chenna Pattana. It is therefore after God Chenna Kesava that the place got the name Chenna (kesava) pattana and not because, at the instance of Venkatappa, the name was given to the place to commemorate his father Chennappa. This is confirmed by the Anandaranga Champu.,The Madras Tercentenary Commemoration Volume- p. 112.

எனவே 1646க்கு முன்னரேயே சென்னபட்டினம், சென்ன கேசவர் பெயர்கள் வழக்கில் இருந்திருக்கின்றன என்ற நிலை, ஆங்கிலேயர் நாயக்கர் விருப்பப்படி பேரி திம்மண்ணன் மூலமாக இப்பெயரை இப்பகுதிக்குச் சூட்டி, இங்குக் கோயில் எழுப்பச் செய்திருக்க லாம். அல்லது நாயக்கரே சென்ன சமுத்திரம் ஏரி போன்று, தன் தந்தையின் நினைவாக, ஆங்கிலேயருக்குக் கொடுத்த பகுதிக்கு அருகாமையில் சென்னபட்டினம் என்று பெயரிட்டுக் குடியிருப்

பினை உருவாக்கி இருக்கலாம் என்பது இங்குத் தோன்றுகின்ற எண்ணங்கள். உறுதியாக இது தான் என்று கூற இன்னமும் ஆழ்ந்த ஆய்வு தேவைப்படுகிறது.

எனினும். இப்பெயர் தமிழ்ப் பெயரன்று என்பதுமட்டும் திட்டவட்டமாகத் தெரியக்கூடிய உண்மை.

தமிழில் சென்னை என்ற சொல் தொடர்பாகத் தமிழ்ப் பெயரகராதி சில சொற்களைத் தருகின்றது.

சென்னக் கூனி-சிறிய இறால் மீன்.

சென்ன - நித்தியப்படித்தரம்

சென்னபட்டனம்- சந்திரகிரி அரசன் கீழ்ச் சிற்றரசனாக இருந்த சென்னப்பநாயக்கன் ஊராகிய சென்னை நகர்.

சென்ன பாத்திரம் -தென்னைவகை

சென்னபுரி-சென்னபட்டினம்

சென்னம்-நீர்ப்பறவை

சென்னமல்லையா- சிவசிவவெண்பா இயற்றியபுலவர்

சென்னல் - கெண்டை மீன்

சென்னல் - ஜன்னல்

சென்னவலை- பெருமீன் பிடிக்க உதவும் வலை

சென்னக் கூனி- மீன்வகை

சென்னி- தலை, உச்சி, சிறப்பு,சோழன், பாணன், அசுவினி நட்சத்திரம்

சென்னி- சென்னை

சென்னியம் -உண்டுபண்ணப்பட்டது

சென்னியர்- கூத்தர்

சென்னை -சென்னபட்டணம்

சென்னை- கோயில் புறப்பாடு, அறிவிக்கும் மேளம், மீன்வகை, கன்னம்.

இவற்றுள் சென்னி என்ற சொல் தவிர, பிற தமிழர்களால் பண்டுதொட்டு மிகுதியாகப் பயன்படுத்தப்படாத சொற்களாகவே அமைகின்றன. இப்பொருட்களுடன் சென்னையின் வரலாற்றையும் ஒப்பிட்டுப் பார்க்க இவை எந்த வித தமிழ்ச்

சொல்லுடனும் ஒற்றுமையுடன் திகழ்வதாகத் தெரியவில்லை.

திராவிட மொழிகளின் வேர்ச் சொல்லகராதி, தமிழில் சென்னி, சென்னை என்ற சொற்களைச்சுட்டுகிறது.

Ta. Cenni- Head summit elephants temple

cenni; cennai - cheak.

கன்னம் என்ற பொருளில் சென்னி என்ற வழக்கைப் பயன்படுத்துதல் இன்றும் தமிழரிடம் அமைகின்றது. ஆயின் தமிழர், கோயில், உச்சி என்ற பொருளில் இச் சொல்லைப் பயன்படுத்துதலைக்காண முடியவில்லை. பயிற்சியில் இருக்கலாம்.

இதே நேரத்தில் பிற திராவிட மொழிகளில் சென்னா தொடர்பான சொற்கள் மிகுதியாக இடம் பெறுகின்றன. சென்னா, சென்னு, சென்னெ என்ற சொற்கள் கன்னடத்திலும், சென்னு என்னும் சொல் தெலுங்கிலும், பிற மொழிகளிலும் இடம் பெறுகின்றன. இவை நேர்மை, அழகு, உயர்வு போன்ற சிறப்பான பொருட்களில் கையாளப்படுகின்றன. இன்றும் பயிற்சியில் இவை பரவலாக அம்மக்களிடம் உள்ளன. தெலுங்கரும், கன்னடரும் சென்ன என்ற சொல்லினை, தங்கள் குடும்பப் பெயராக, இல்லப்பெயராக ஊர்ப்பெயராகப் பயன்படுத்துகின்றனர் என்பது தெரிகிறது.

சென்னையின் வரலாற்றில் தெலுங்கர் நுழைவு என்பது கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிய ஒன்று.

ஆங்கிலேயர் இங்குக் கால்கொள்ள, வாணிபத்திற்குரிய துணிகள் மலிவாகக் கிடைத்தமையையும் ஒரு காரணமாகச் சுட்டுவர். அந்நிலையில் பார்க்கும் போது இவர்களுக்கு நாயக்கர்கள் அளித்த மதராஸ்பட்டினத்தில் ஒரு சில வீடுகளே இருந்ததாகத் தெரிய வரினும் அருகாமையில் தெலுங்கராகிய நெசவுத் தொழிலாளர்கள் இருந்திருக்கக்கூடும் என்பதை உணரக் கூடுகிறது. இதனை அறிஞர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆங்கிலேயர் வந்தபோது இப்பகுதியில் தெலுங்கர் வசித்து வந்துள்ளனர். அவர்களது தொழில் நெசவுத் தொழில். எனவே இருவருக்கும் தொடர்பு இருந்து வந்துள்ளது. ஆயின் இப்பகுதி தமிழர்கள்

உழவர்கள் .எனவே ஆங்கிலேயருக்கும் இவர்களுக்கும் மிகுதியாக உறவு இருக்க வில்லை. (தமிழ் நாட்டு எல்லை - 306)

எனவே இப்பகுதியில் வாழ்ந்த தெலுங்கர்கள் 1646க்கு முன்னர் கட்டிய கோவில்; அவர்கள் வசித்த பகுதி அல்லதுபேரிதிம்மணன், நாகப்பன் கட்டிய கோயில் பெயர் அல்லது அய்யப்ப நாயக்கன் ஏற்படுத்திய குடியிருப்பு, இக்காரணங்களுள் ஒன்றாக இப்பெயரின் தோற்றம் அமைய வழியிருக்கிறது என்ற நிலையில், இப்பெயர் தெலுங்குப் பெயர் என்பது மட்டும் உறுதியாக அமைகிறது.

சென்னையின் பெயராய்வு இத்தகைய சிக்கலான சிந்தனைகளைத் தந்து செல்ல ,மதராஸ் என்பதும் இவ்வாறு சிக்கலுள் அமிழ்ந்து கிடக்கும் நிலையே அமைகிறது.

மதராஸ் குறித்த செய்திகள் நாயக்கர்கள் ஆங்கிலேயருக்கு அளித்த பகுதியில் இருந்த பகுதி இது என்பதும், இப்பெயர் அப்போதே இருந்தது என்பதும் இப்பெயருக்கு ஆங்கிலேயர் காரணமல்ல என்பதை உறுதிபடுத்துமாறு அமைகின்றன. அவ்வாறு எனில் மதராஸின் பெயர்க் காரணம் என்ன என்று ஆராயும் போது தெளிவாக இது தமிழ்ப் பெயரன்று என்பது மட்டும் புலப்படுகின்றதே தவிர பிற சிக்கல் தீருமாறு இல்லை. (Why Madras? Especially when the word has little or no association with the language of the region -Madras Discovered- p.1)

1522 இலேயே சாந்தோமை அடைந்த போர்த்துக்கீசியருள் ஒரு குடும்பத்தினர் சார்பாக இப்பெயர் இப்பகுதிக்கு வைக்கப்பட்டது என்பது ஒரு கருத்து .மதரா என்பது குடும்பப்பெயர். அக் குடும்பத்தினரின் செல்வம், செல்வாக்கு இப்பெயருக்குக் காரணம் என்பது ஒரு கருத்து.

ஆங்கிலேயர்க்கு இப்பகுதி அளிக்கப்பட்டபோது இங்கு வாழ்ந்தவன் மதராசன் என்ற கிறித்தவன். அவன் பெயர் பெற்றது இப்பகுதி என்பது மேலும் ஒரு கருத்து.

மதராஸா என்பது கல்லூரி என்று பொருள்படும். இங்கு முகமதியர்களின் கல்லூரி ஒன்று இருந்ததால் இப்பெயர் பெற்றது என்பது அடுத்த கருத்து.

இம்மூன்றனுள் முதல் கருத்து பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. One,that the kuppam had been colonised by fisher folk who were parishioners of the Madre deDeus Church at

San Thome and their contraction of Church name and headmans had produced Madarasan. if not Madras! The second an even more ingenious explanation is that Madarasan the head man took his name from a family of wealthy Portuguese were benefactors or the Madras or Madera family were prominent members of early Santhome and later Madras. Madras Discovered p- 3.

Origin of the word Madras- The Madras Tercenternary Commemoration Volume p-35 37.

Other theories associated with the city's name include one that is derived from the Persian and Madrasa, a term describing a Muslim school and indicating in this case the possible existence of a Muslim educational institution nearby .Certainly there has been from earliest Madras times a Muslim settlement in the present Triplicane - Royapettah area and from time to time there has been mention of the Muslim school or college somewhere about here, without an actual location being cited. It is however significant that a domed Muslim style of architecture was a notable feature of the very first Governors House built in 17th century Fort St. George. There has also been atleast one writer who explained the village name of Makhraskuppam found in a persian chronicle of the Nawabs of Carnatic as being derived from Marakkayar Kuppam - a village of seafaring Muslims (Marakkayar- Muslims from Arab Markab - Tamil Marakkalam - Ship) Madras Discoverd p -4.

எனினும் இப்பெயர்கள் தற்செயலாகப் புகழ் பெற்ற பெயர்களே தவிர, திட்டமிடப்பட்டு வைக்கப்பட்ட பெயர்கள் அல்ல என்பது மட்டும் இங்கு உறுதியாகக் கூறமுடிகிறது.

எனவே பண்டு தொட்டுத் தெரியவரும் சென்னை மாநகர் ஊர்ப் பெயர்கள் வழி, தமிழகத்தின் அரசியல் வரலாற்றைக் காணும் போது, சில செய்திகள் புலப்படுகின்றன.

வாழ்வின் ஒவ்வொரு சூழலும், அவர்களின் குடியிருப்புகளின் பெயர்களுடன் தொடர்பு கொண்டு திகழினும், அரசியல் மிகுந்த தொடர்புடையது என்பது இங்கு வெளிப்படும் ஓர் எண்ணமாக அமைகிறது.

சென்னையில் அண்மைக் காலத்தில் எழுந்ததாகத் தெரியவரும் ஊர்ப் பெயர்கள், அண்மைக் கால அரசியல் வரலாற்றை முழுமையாகத் தெரிவிக்கவில்லை. எனினும், அரசியல் செல்

வாக்கு ஊர்ப் பெயர்களில் மிகுந்துள்ளதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

அரசியல் தலைவர்களின் பெயர்கள், தலைவாகள் விரும்பும் பெயர்கள், தலைவர்களின் விருப்பிற்கிணங்க மாற்றம் பெற்ற பெயர்கள் அரசியல் செல்வாக்குப் பெற்றமையை உணர்த்துகின் கிறன. மன்னர் காலத்தில் தொடங்கிய இம்மரபு, இன்று உச்சகட்ட நிலையில் உள்ளது என்பதையும் மறுத்திட இயலாது.

# 3. வாழ்வியல்

உணவு, உடை, உறையுள் போன்ற வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள்; இத்தேவைகளைப் பெற்ற நிலை; இத்தேவைகளின் நிறைவில், அவர்களின் வாழ்வியல் போன்ற செய்திகள் மக்களின் வாழ்வியலில் அடங்குபவை.

சென்னை மாநகர ஊர்ப்பெயர்களின் காரணங்கள், ஊர்ப் பெயர்களின் காரணங்களை ஆராயும் போது தெரியவந்த ஊர்களின் வரலாறு, இப்பகுதியில் பண்டு தொட்டு வாழ்ந்து வரும் மக்களின், காலந்தோறும் புதிது புதிதாக இப்பகுதியில் குடியேறிய மக்களின், வாழ்வைத் தெளிவாகக் காட்டத் துணையாகவில்லை. எனினும் சில செய்திகளை அறிந்து கொள்ளத் துணையாகின்றன.

இயற்கையின் அரவணைப்பில் தங்கள் வாழ்வை நடத்தியவர் தமிழர். இன்று செயற்கையை எதிர் நோக்கியுள்ளனர். இந்த நிலையிலிருந்து எந்த விதத்திலும் வேறுபட்டவர்களாகச் சென்னை மக்களும் இல்லை என்பதை இந்த ஆய்வு உறுதிப்படுத்துகின்றது.

கடற்கரையில் காட்டுப் பகுதிகளுக்கு இடையே, நீர்நிலைகளுக்கு இடையே, மேடு பள்ளங்களுக்கு இடையே, தம் குடியிருப்பை அமைத்து வாழ்ந்தனர் பண்டைய மக்கள். இச்சூழல் அவர்களுக்குப் பலவித இயற்கை வளங்களையும் அளித்தது. கடல் உணவும், காட்டு உணவும் இயற்கை உணவாக அமைய, நீர்நிலைகளின் மிகுதியில் அவர்கள் வேளாண்மைத் தொழிலையும் செய்து வந்துள்ளனர் என்பது ஊர்ப்பெயர்களின் வரலாறு தெரிவிக்கும் செய்தியாகும். இங்கு இருந்ததாகத் தெரியவரும் ஏரிகள் தூர்க்கப்பட்ட நிலை வேளாண்மைத் தொழில் இன்று குறைந்து விட்டதற்கான சூழலை இனம் காட்டுகிறது. இங்கு வேளாளர் வாழ்ந்த நிலையும் தெளிவாகிறது. அவர்களின் மிகச் சிறப்பான வாழ்க்கையைச் சென்னை மாநகர் கல்வெட்டுகள் தருகின்றன. பல ஊர்ப்பெயர்களின் வரலாறும் இதனையுணரச் செய்கிறது. இவர்களின் வாணிப முறைகள் போன்ற செய்திகள் தெளிவில்லை. எனினும் மயிலாப்பூர், திருவான்மியூர் பற்றிய வருணனை இங்கு வணிகர் வாழ்ந்தனர் என்பதைத் தெரிவிக்கிறது. எனவே இங்கு இயற்கை வளத்தால் கிடைத்தப் பொருட்கள், வேளாண்மையில் கிடைத்த பொருட்களின் மிகுதி காரணமாக

வாணிபத் தொழிலும் சிறப்பாக நடந்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கலாம். மேலும் தாலமி, மலியார்பாவை ஒரு வாணிபத் தலம் என்று சுட்டும் தன்மையும், இக்கருத்துக்கு அரணாகிறது. உணவு, உணவுத் தொழில் தொடர்பான இச்செய்திகள், இவ்வாறு கிடைக்கும் உணவே அவர்களின் உணவாகவும் இருந்திருத்தல் வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறது. 'உடை' என்று நோக்கும் போது இவ்வூர்களின் வரலாற்றில் செல்வச் செழிப்பு சுட்டப்படுவதால், சிறந்த ஆடையையே இவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்ற சிந்தனை அமைகிறது. இருப்பினும் தெளிவான சான்றுகள் இல்லை. தமிழர் ஆடைகள் பற்றிய வரலாறு தமிழரிடம் தொன்று தொட்டு நெசவுத் தொழிலின் வளர்ச்சி பற்றியும், அவர்களின் ஆடைகள், உடைகளின் சிறப்பும் நேர்த்தியும் பற்றியும் தெரிவிக்கின்றது. இருப்பினும், இப்பகுதி மக்கள் நெசவுத் தொழில் செய்தனர் என்பதற்குரிய செய்திகளை இனங்காண இயலவில்லை. மேலும், 10 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தெலுங்கு மொழி மக்கள் இப்பகுதிக்கு வந்தபின்னர், அவர்களின் தொழிலாக நெசவு காணப்பட்டது என்பதை வரலாறு தருகிறது. ஆங்கிலேயர்க்கும் தெலுங்கு மொழி மக்களுக்கும் முதலில் இருந்த தொடர்பும், இது பற்றி ஆங்கிலேயர் வரும் போது தெலுங்கர்கள் நெசவாளர்களாகவும், தமிழர்கள் உழவர்களாகவும் இருந்தமை பற்றிய எண்ணமும் இங்குச் சிந்தனைக்குரியதாக அமைகிறது.

உறையுள் என்று எண்ணும் போது இம்மக்கள் வசித்த பகுதிகள் அமைத்துக் கொண்ட குடியிருப்புகள் வீடுகள் பற்றிய செய்திகளை ஊர்ப்பெயர் வரலாறு தருகின்றது.

மாடமாளிகை நிறைந்த தெருக்கள் சுட்டப்படுதல், கோட்டைக் கட்டப்பட்ட குடியிருப்புகள், இவர்களின் குடியிருப்புகட்கு அருகில் சேரிகள் இருந்திருத்தல், இம்மக்களின் வளம் நிறைந்த வாழ்வைக் காட்டப் போதுமானவை.

இத்தகைய வாழ்வு அவர்கட்குப் போதுமான வளத்தை அளித்த காரணத்தால் கோயில்களில் விழாக்கள் பல எடுத்துக் கொண்டாடினர். மயிலாப்பூர் பதிகத்தில் மாதந்தோறும் எடுத்த விழாக்கள் பற்றிய வருணனை இதனையே எண்ணச் செய்கிறது. மேலும், இப்பகுதியினவாகத் தெரியவரும் கல்வெட்டுகள் இக்கோயில்களில் பல்வேறுபட்ட மக்களும் மன்னரும் செய்த திருப்பணிகள் பற்றியும், கோயில்கள் நாடோறும் பெருகிக் கொண்டு வந்தமைபற்றியும் சான்று உரைக்கின்றன. திருவான்

மியூரின் வருணனையில் அமையும் ஓதல் தொழில் பற்றிய எண்ணம் இங்கு வாழ்ந்த மக்கள் வேளாளர்கள் மட்டுமல்ல அந்தணரும் கூட என் றஉணர்வைத் தருகிறது.

இறைபற்றிய செய்திகளில், இங்குள்ள கோயில்கள் பற்றிய செய்திகளை அறிய வரும் போது இம்மக்களின் சமயம் குறித்தும் தெரிய வருகின்றோம்.

இங்குள்ள பழம் மக்களின் வாழ்வு இவர்கள் சைவர்களாக இருந்திருத்தல் வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறது, பின்னர் வைணவம் இவர்களிடையே பரவுகிறது .சமணமதத்தின் செல்வாக்கும் இங்கு அப்போது காணப்பட்டது. இவர்களின் வாழ்வில் பெருந்தெய்வம் மட்டுமின்றி, சிறு தெய்வங்களும் வழிபடப்பட்டுவந்தன என்பதைச் சில ஊர்ப்பெயர்களின் வரலாறு தெரிவிக்கிறது. கி.பி.10ஆம் நூற்றாண்டுக்குப்பின்னர் இஸ்லாம் கிறித்துவத்தின் பரவுதல் தொடக்கம் பெறுகிறது. இதன் காரணமாக இப்பகுதி பலவகைப்பட்ட மதம் சார்ந்த கோயில்களைப் பெறத் தொடங்கியது.

இத்தகைய மக்களின் வரவு இப்பகுதியை முழுமையாக மாற்றம் பெறச் செய்யவில்லை எனினும் 1639 இல் ஆங்கிலேயர் பார்வை பட்டு, கோட்டையினுள் அவர்களின் ஆட்சி தொடக்கம் பெறத் தொடங்கிய நிலையில் இயற்கையின் செல்வாக்கினை செயற்கைப் பெறத் தொடங்குகிறது.

ஆங்கிலேயர் தாம் வாழப்பல இடங்களிலும் பல தோட்ட வீடுகள் கட்டமுற்பட்டனர் எனவே அவர்களின் ஆட்சி நிலை பெறத் தொடங்க அவர்கள் தங்கள் ஆட்சிக்காகவும் வாணிபத்திற்காகவும் பல்வேறுபட்ட மக்களை இப்பகுதியில் குடி அமர்த்தத் தொடங்கினர்.

எனவே கோட்டையின் அருகாமைப்பகுதி மிகுந்த மக்கள் தொகையைப் பெறத் தொடங்கின. இன்றும் வட சென்னை மிக நெருக்கமான பகுதியாக இருக்க இதுவே காரணம் .பின்னர் இங்குத் தொடங்கப்பட்ட பல்வேறு தொழில்களின் வளம், கல்வி வளம், கலைவளம், தமிழகத்தின் தலைநகராகச் சென்னை மாறிய நிலை தென்சென்னைப் பகுதியிலும் மக்கள் குடியேறத் தொடங்கி யமைக்குரிய காரணமாகும். எனவே பலதரப்பட்ட பண்பாடு சார்ந்த மக்களின் வரவு, இவர்களின் தொடர்பு, இவ்வூர் மக்களின் வாழ்வியலையும் முழுமையாக மாற்றிவிட்டு இருக்கச் காண்கிறோம். எனினும் சாதி, சமயம்என்ற நிலையில் சில

தனிப்பட்ட பண்பாடுகளும் அவர்களிடம் காணப்படுகின்றன என்பதை மறுத்தல் இயலாது. அரசியல் செல்வாக்கையும் மீறி, தாங்கள் வசிக்கும் பகுதிகட்குத் தங்கள் சமயம் சார்ந்த பெயர்களை சூட்டும் தன்மை குறிப்பாகச் சுட்டுதற்குரியது.

கி.பி.17 ஆம் நூற்றாண்டில் ஜெர்மானிய பாதிரியார் இங்கு வாழ்ந்த மக்களாக இங்கிலீஸ்காரர், போர்த்துக்கீசியர், பிரெஞ்சுக்காரர்கள் ஸ்பெயின் நாட்டவர்கள், இத்தாலியர்கள், டச்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், பேரீஸ்காரர்கள், ஸ்வீடன் நாட்டவர்கள், மற்றும் ஆர்மேனியர்கள், பிராம்மணர்கள், மராத்தியர்கள், குஜராத்தியர்கள், சீனக்காரர்கள், மலாய்நாட்டவர்கள், யூதர்கள், மலபாரிகள். தெலுங்கர்கள், கன்னடத்துக்காரர்கள் என்று பலரைக் குறிப்பிடுகின்றார்.(ஆனந்த விகடன்-14.6.92-ப.14)

இத்தகைய பல தரப்பட்ட மக்களின் வாழ்வியல் சூழலும் கலந்து இன்று மக்கள் வாழ்வியல் சென்னையில் காணப்படுகின்றது.

# முடிவுரை

சென்னை மாநகர ஊர்ப்பெயர்களின் ஊர்ப்பெயர்க் காரணங்கள் காணும் முயற்சி முதல் பகுதியில் அமைந்தது.

இரண்டாம் பகுதியில் இவ்வூர்ப் பெயர்க்காரணங்களை ஆராயும் முயற்சியில் கிடைத்த சில முடிவுகளின் அடிப்படையில் சென்னையின் வரலாறு நோக்கப்பட்டது.

சென்னையின் வரலாற்றைத் தொன்று தொட்டு இன்று வரையிலும் முழுமையாக இவை தெரிவித்து விடவில்லை. என்றாலும் இங்கு விளக்கமான செய்திகள் பெரும்பாலும் மறுப்பதற்கிடமில்லானவே.

இங்குக் கிடைத்த முடிவுகளை மேலும் இங்கு ஆராயப்படாத பிற ஊர்ப்பெயர்கள், பிற வரலாற்று மூலங்கள் கொண்டு ஆராயும் போது சென்னையின் வரலாறு மேலும் தெளிவும் துல்லியமும் பெறுதல் உறுதி.

## சென்னை மாநகர ஊர்ப்பெயர்கள்.

| இன்றைய பெயர் | இவ்வாய்வின் மூலம் அறியப் பட்ட முதற் பெயர். |
|---|---|
| 1. அகரம் | அகரம் |
| 2. அசோக் நகர் | அசோக்நகர் |
| 3. அடையாறு | அடையாறு |
| 4. அண்ணாநகர் | அறிஞர் அண்ணாநகர் |
| 5. அப்பாவுநகர் | அப்பாவுநகர் |
| 6. அபிராமபுரம் | அபிராமபுரம் |
| 7. அமிஞ்சிக்கரை | அமைந்தகரை |
| 8. அயனாவரம் | அயன்புரம் |
| 9 அரும்பாக்கம் | அருகன்பாக்கம் |

| | |
|---|---|
| 10. ஆதம்பாக்கம் | ஆதன்பாக்கம் |
| 11.ஆயிரம் விளக்கு | ஆயிரம் விளக்கு |
| 12.ஆலந்தூர் | ஆலத்தூர் |
| 13.ஆழ்வார்திரு நகர் | ஆழ்வார்திரு நகர் |
| 14.ஆழ்வார்பேட்டை | ஆழ்வார்பேட்டை |
| 15.இந்திரா நகர் | இந்திரா நகர் |
| 16.இராபட்ஸன் பேட்டை | இராபட்ஸன் பேட்டை |
| 17.ஈக்காட்டுத்தாங்கல் | ஈக்காட்டுத்தாங்கல் |
| 18.எடப்பாளையம் | இடைப்பாளையம் |
| 19.எம்.ஜி.ஆர் நகர் | எம்.ஜி.ஆர். நகர் |
| 20.எருக்கஞ்சேரி | எருக்கஞ்சேரி |
| 21.எழும்பூர் | எழுமூர் |
| 22.எம்.கே.நகர் | சீதக்காதி நகர் |
| 23.ஏழுகிணறு | ஏழுகிணறு |
| 24.ஐ.சி.எப். காலனி | ஐ.சி.எப்.காலனி |
| 25.ஓட்டேரி | ஓட்டேரி |
| 26.கண்ணம்மாபேட்டை | கண்ணம்மாபேட்டை |
| 27.கணேசபுரம் | கணேசபுரம் |
| 28.கம்பர் நகர் | கம்பர் நகர் |
| 29.கன்னிகாபுரம் | கன்னிகாபுரம் |
| 30.கஸ்தூரிபாய் நகர் | கஸ்தூரிபாய் நகர் |
| 31.காந்தி நகர் | காந்தி நகர் |
| 32.காமராஜர் நகர் | காமராஜர் நகர் |
| 33.கான்றன் ஸ்மித் நகர் | கான்றன் ஸ்மித் நகர் |
| 34.கிண்டி | கிண்டி |
| 35.கிருஷ்ணாம்பேட்டை | கிருஷ்ணாம்பேட்டை |
| 36.கிரேஸ்கார்டன் | கிரேஸ் தோட்டம் |
| 37.கீழ்ப்பாக்கம் | கீழ்ப்பாக்கம் |

| | |
|---|---|
| 38.கீழ்ப்பாக் கார்டன் | கீழ்ப்பாக்தோட்டம் |
| 39.குயப்பேட்டை | குயவர்பேட்டை |
| 40. கெல்லிஸ் | கிள்ளியூர் |
| 41.கே.கே. நகர் | கலைஞர் கருணாநதி நகர் |
| 42.கொடுங்கையூர் | கொடுங்கையூர் |
| 43.கொருக்குப்பேட்டை | குறுக்குப்பேட்டை |
| 44.கொளத்தூர் | குளத்தூர் |
| 45.கோட்டூர் | கோட்டூர் |
| 46.கோட்டூர் புரம் | கோட்டூர் புரம் |
| 47.கோடம்பாக்கம் | கோடகன் பாக்கம் |
| 48.கோபாலபுரம் | கோபாலபுரம் |
| 49.கோமளேஸ்வரன்பேட்டை | கோமளேஸ்வரன் பேட்டை |
| 50.கோயம்பேடு | கோயன்பேடு |
| 51.சத்யமூர்த்தி நகர் | சத்தியமூர்த்தி நகர் |
| 52.சாந்தோம் | செயின்ட் தாமஸ் |
| 53.சாஸ்திரி நகர் | சாஸ்திரி நகர் |
| 54.சி.ஐ.டி. நகர் | சி.ஐ.டி.நகர் |
| 55.சிங்காரகார்டன் | சிங்காரத்தோட்டம் |
| 56.சிந்தாதிரிப்பேட்டை | சின்னதறிப்பேட்டை |
| 57.சின்மயாநகர் | சின்மயா நகர் |
| 58.சின்னமலை | சின்னமலை |
| 59.சூளை | சூளை |
| 60.சூளை மேடு | சூளைமேடு |
| 61.செம்பியம் | செம்பியம் |
| 62.சேத்துப்பட்டு | சேத்துப்பட்டு |
| 63.சேப்பாக்கம் | சேல்பாக்கம் |
| 64.சைதாப்பேட்டை | சையத்கான்பேட்டை |
| 65.டிரஸ்ட் புரம் | டிரஸ்ட்புரம் |

| | |
|---|---|
| 66.தங்கசாலை | தங்கசாலை |
| 67.தண்டையார்பேட்டை | தண்டையார்பேட்டை |
| 68.தரமணி | தரமணி |
| 69.தாக்கர் சத்திரம் | டாக்கர் சத்திரம் |
| 70.தாடண்டர் நகர் | தாடண்டர் நகர் |
| 71.தாதன் குப்பம் | தாதன் குப்பம் |
| 72.தியாகராய நகர் | தியாராய நகர் |
| 73.திருமங்கலம் | திருமங்கலம் |
| 74.திருவல்லிக்கேணி | திருவல்லிக்கேணி |
| 75.திருவான்மியூர் | திருவான்மியூர் |
| 76.திரு. வி.க நகர் | திரு.வி. கல்யாண சுந்தரம் நகர் |
| 77.திருவட்டீஸ் வரன்பேட்டை | திருவேட்டீஸ் வரன் பேட்டை |
| 78.தேனாம்பேட்டை | தெய்வநாயகம்பேட்டை |
| 79.நந்தனம் | நந்தனம் |
| 80.நாசரத் புரம் | நாசரத் புரம் |
| 81.நுங்கம்பாக்கம் | நுங்கம்பாக்கம் |
| 82.நொச்சிக்குப்பம் | நொச்சிக்குப்பம் |
| 83.பட்டினப்பாக்கம் | பட்டினப்பாக்கம் |
| 84.பத்மநாப நகர் | பத்மநாபன் நகர் |
| 85.புதுப்பாக்கம் | புதுப்பாக்கம் |
| 86.புரசைவாக்கம் | புரசைப்பாக்கம் |
| 87.புளியந்தோப்பு | புளியந்தோப்பு |
| 88.பெசன்ட் நகர் | பெசன்ட் நகர் |
| 89.பெத்த நாயக்கன் பேட்டை | பெத்த நாயக்கன் பேட்டை |
| 90.பெரம்பூர் | பிரம்பூர் |
| 91.பெரியமேடு | பெரிய மேடு |

| | |
|---|---|
| 92. போயஸ்கார்டன் | போயஸ் தோட்டம் |
| 93. மண்ணடி | மண்ணடி |
| 94. மந்தைவெளி | மந்தைவெளி |
| 95. மந்தவெளிப்பாக்கம் | மந்தைவெளிப்பாக்கம் |
| 96. மயிலாப்பூர் | மயிலாப்பூர் |
| 97. மாம்பலம் | மாபள்ளம் |
| 98. முகப்பேர் | முகப்பேரி |
| 99. முத்தியால் பேட்டை | முத்தியாலுப்பேட்டை |
| 100. மூலக்கடை | மூலக்கடை |
| 101. மேட்டுப்பாளையம் | மேட்டுப்பாளையம் |
| 102. மேடவாக்கம் | மேட்டுப்பாக்கம் |
| 103. மேத்தாநகர் | மேத்தாநகர் |
| 104. ரங்கராஜபுரம் | அரங்கராஜபுரம் |
| 105. ராயபுரம் | இராயர்புரம் |
| 106. ராயப்பேட்டை | இராயர்பேட்டை |
| 107. ராஜ்பவன் காலனி | ராஜ்பவன் குடியிருப்பு |
| 108. ஆர்.வி.புரம் | இராஜாஅண்ணாமலைபுரம் |
| 109. வடபழனி | வடபழனி |
| 110. லஸ் | லஸ் |
| 111. வண்ணாரப்பேட்டை | வண்ணார்பேட்டை |
| 112. வள்ளலார் நகர் (வி.நகர் ) | வள்ளலார் நகர் |
| 113. வி.ஓ.சி. நகர் | வி.ஓ.சிதம்பரம் நகர் |
| 114. வியாசர்பாடி | வியாசர்பாடி |
| 115. வியாசர்பாடி ஜீவா | வியாசர்பாடி ஜீவா |
| 116. வெங்கடரத்தினம் நகர் | வெங்கடரத்தினம் நகர் |
| 117. வேப்பேரி | வேப்பேரி |
| 118. வேளச்சேரி | வெளிச்சேரி |
| 119. ஹைகோர்ட் காலனி | ஹைகோர்ட் குடியிருப்பு |
| 120. ஸ்ரீநகர் | ஸ்ரீநகர் |
| 121. ஸ்ரீ ராம் நகர் | ஸ்ரீராம் நகர் |
| 122. ஜவஹர் நகர் | ஜவஹர் நகர் |

# பயன்பட்ட நூல்கள், கட்டுரைகள், பிற

அகநானூறு களிற்றுயானை நிரை மூலமும் உரையும் பேராசிரியர் வித்துவான் மயிலம் வே.சிவ.சுப்பிரமணியன், உ.வே.சா. நூல் நிலையம், சென்னை-1990.

அகநானூறு மணிமிடை பவளம் மூலமும் உரையும்- ,, -,, - ,,

அகநானூறு நித்திலக் கோவை ,, -,,

அருள் பரப்பும் ஆலயங்கள்- புலவர் சி.முத்துப்பிள்ளை, இலக்குமி நிலையம், சென்னை, *1984*.

அருள்மிகு கங்காதரேஸ்வரர் திருக்கோயில் மலர் வெளியீடு, *6-1-84*. புரசைவாக்கம், சென்னை.

நூதன இராஜ கோபுர கும்பாபிஷேக மலர், *1983*.

அருள் மிகு பார்த்தசாரதி சுவாமி கோயில் பழமையும் பெருமையும், திருமதி. அ.ஜெயம், முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம் , சென்னை, 1990.

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம், தமிழாக்கம் கா.அப்பாதுரை, கழக வெளியீடு, சென்னை, 1962.

ஆராய்ச்சித் தொகுதி- மு.இராகவையங்கார், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1984.

ஆழ்வார்கள் கால நிலை- மு.இராகவையங்கார், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1981(2).

இடைக்காலத்தில் சென்னை, முனைவர் கு.பகவதி, வெள்ளிக் கிழமை கருத்தரங்கம் 26-6-92, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

இலக்கியச் சாசன வழக்காறுகள்- மு.இராகவையங்கார், தமிழ் நாடு அரசு-1973.

இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-தொகுதி-2, டாக்டர் கு.பகவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.

ஊர்ப்பெயர் ஓர் ஆய்வு- நடன காசிநாதன், தமிழரசு, 16-5-1990.

கலைக் களஞ்சியம்-தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.

குறுந்தொகை-டாக்டர். உ.வே.சாமிநாதையரவர்கள் உரை, கபீர் அச்சுக் கூடம், சென்னை, 1962.

சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை-டாக்டர் ந.சஞ்சீவி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1973.

சங்க காலச் சிறப்புப் பெயர்கள்-டாக்டர். மொ.அ.துரை அரங்கசாமி, பாரி நிலையம், சென்னை, 1980(2).

சங்க காலத்தில் சென்னைப் பகுதி-டாக்டர் கு.பகவதி, வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கம், 29-11-91, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

சங்க கால தமிழக வரலாற்றில் சில செய்திகள்-மயிலை சீனி, வேங்கடசாமி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1970.

சமணமும் தமிழும் (முதற்பகுதி)-மயிலை சீனி வேங்கடசாமி, கழக வெளியீடு, சென்னை, 1970.

சிவப்பதிகள் வரலாறு-கழக வெளியீடு, 1977.

செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள்-டாக்டர். கரு.நாகராசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.

செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, இரா.நாகசாமி, (பதிப்பாசிரியர்) வரலாற்றுப் பேரவை, சென்னை, 1977.

சென்னைக் கோயில்கள் அ.அறிவொளி, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1984.

சென்னை நகரம் யாருக்குரியது-மயிலை சீனி வேங்கடசாமி, செந்தமிழ்ச் செல்வி 22, ப-73, 1948.

சென்னை மாநகர். மா.சு.சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, 1978 (2).

சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்-இரா.நாகசாமி, (பதிப்பாசிரியர்) தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1970.

சென்னை மாவட்டக் கோயில் வரலாறு- டாக்டர். இ.மு.சுப்ரமணிய பிள்ளை, அறநிலையத் துறை, தமிழ் நாடு அரசாங்கம்-1974.

சென்னை மாவட்டம் - லேனா தமிழ்வாணன் பதிப்பு

மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1987.

தமிழ் இடப்பெயராய்வு - டாக்டர் கி.நாச்சிமுத்து சோபிதம் பதிப்பகம், நாகர்கோவில் 1983.

தமிழ்நாட்டின் ஊர்ப்பெயர்கள் - வித்துவான், ஔவை.சு.துரைசாமிபிள்ளை, செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 22, ப-113, 1948.

தமிழ் நாட்டு எல்லை-கோவை கிழார், செந்தமிழ்ச் செல்வி-22, ப-305, 1948.

தமிழ் நாட்டு வட எல்லை வரலாறு-வித்துவான் ஔவை. சு.துரைசாமி பிள்ளை, செந்தமிழ்ச் செல்வி 22, ப.273, 1948.

தமிழ் நாட்டு வரலாறு - சங்ககாலம்- அரசியல்- தமிழ் நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ் நாடு அரசு வெளியீடு, 1983.

தமிழ் நாட்டு வரலாறு-தொல் பழங்காலம்- தமிழ் நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ் நாடு அரசு வெளியீடு, 1975.

தமிழ் நாடு மாவட்டக் குறிப்புகள் - கவிஞர். தே.ப.பெரு மாள். கவிக்குயில் பப்ளிக்கேஷன்ஸ், சென்னை, 1967.

தமிழ் நாடு வரலாற்றுக் கருத்தரங்கு - டாக்டர் இரா.நாகசாமி (பதிப்பாசிரியர்) வரலாற்றுப் பேரவை, சென்னை, 1979.

தமிழ் லெக்ஸிகன்-சென்னைப் பல்கலைக்கழகம்.

தமிழக ஊர்களின் பெயர்க் காரணங்களும் சிறப்புகளும், பாகம்-1, மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1988.

தமிழக ஊர்ப்பெயர்கள் - டாக்டர் கே.பகவதி. உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், சென்னை, 1986.

தமிழகம்-ஊரும் பேரும் - ரா.பி.சேதுப்பிள்ளை, இராஜன் அச்சகம், சென்னை, 1946.

தலைநகர் சென்னை - சம்பந்தம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1983.

தனிப்பாடல் திரட்டு -4, கருப்பக் கிளர் சு.அ.இராம சுவாமிப் புலவர், கழக வெளியீடு, 1964.

தாலமி (கி.பி. 119-161) - வி.எஸ்.வி.இராகவன், மணிவாசகர் நூலகம், சென்னை 1978.

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப்

பதிகங்கள் 123, கழக வெளியீடு, சென்னை, 1973.

திருத்தலங்கள் வரலாறு-வித்துவான் சு.பாலசாரநாதன் (பதிப்பு), டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1990

திருத்தொண்டர் மாக்கதை- கழக வெளியீடு, சென்னை, 1970.

திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள், ஐந்தாம் திருமுறை, தருமபுர ஆதினம், 1961.

திருமந்திரம் (இரண்டாம் பகுதி)- திருமூலநாய்னார், ப.இராமநாதபிள்ளை - விளக்கம், அ.சிதம்பர்னார் குறிப்பு, கழகம், 1969.

திருமயிலைத் திருத்தலம்-இலக்கிய வரலாற்றுப் பார்வை, டாக்டர்.சு.ராஜசேகரன், ராஜலட்சுமி பதிப்பகம், சென்னை, 1989.

திருவருட்பா மூலமும் உரையும் 5ஆம் தொகுதி- ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கழக வெளியீடு, சென்னை, 1985.

திருவான்மியூர் மருந்தீஸ்வரர்-தாமரைக் கண்ணன், தமிழ் அரசி, தீபாவளிச் சிறப்பிதழ், 25-10-92.

தென்னாட்டுக் கோயில்கள்- எம்.ராதாகிருஷ்ணபிள்ளை, அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, 1987.

தென்னாட்டுத் திருத்தலங்கள், எம்.நாராயணவேலுபிள்ளை, தமிழ்ச் சோலை பதிப்பகம், சென்னை, 1983.

தேவார ஒளி நெறி- அப்பர், தணிகைமணி ராவ்பகதூர் வ.சு. செங்கல்வராயபிள்ளை, கழக வெளியீடு, 1962.

தேவார ஒளி நெறி-சம்பந்தர் - கழக வெளியீடு-1963.

தேவார ஒளி நெறி-சுந்தரர் - கழக வெளியீடு-1963.

தொண்டை நாட்டுக் கோயில்கள், புலவர் செந்துறைமுத்து, சிதம்பரம், 1987.

தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற சிவத் தலங்கள்- வித்துவான் பாலூர் கண்ணப்பமுதலியார், பாரி நிலையம், சென்னை, 1969.

தொல்காப்பியம்- சிறப்புப்பாயிரம்-ஆ.சிவலிங்கனார், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும் -சா.குருமூர்த்தி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1974.

பத்துப்பாட்டு- நச்சினார்க்கினியர் உரை, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1974.

பத்துப்பாட்டு ஆராய்ச்சி- டாக்டர் மா.இராஜமாணிக்கனார், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1970.

பதினோராம் திருமுறை- கி.வ.ஜகந்நாதன் குறிப்புரை, திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து வெளியீடு, 1950.

பல்லவர் வரலாறு- டாக்டர் மா.இராசமாணிக்கம் பிள்ளை, கழக வெளியீடு, சென்னை, 1971(8).

புறநானூறு மூலமும் உரையும்-டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் உரைக் குறிப்பு, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1974.

புறநானூறு- ஒளவை. சு.துரைசாமி, கழக உரை, சென்னை, 1951.

பேரும் பெருமையும் - மா.நயினார், சோபிதம் பதிப்பகம், நாகர் கோயில், 1982.

பௌத்தமும் தமிழும் -மயிலை சீனி வேங்கடசாமி , கழக வெளியீடு, சென்னை, 1957.

300 ஆண்டுகளுக்கு முன் ஜெர்மனியை வியக்க வைத்த தமிழ்ப் புதையல், ஹூல்ட்ஸ் ப்ரதிரியாரின் மெட்ராஸ் டைரி, டாக்டர் சி.எஸ்.மோகனவேலு, ஆனந்தவிகடன், 14-6-1992.

முப்பது கல்வெட்டுகள் - வை.சுந்தரேசவாண்டையார், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1967.

வடஎல்லையை வாழ்வித்தவர் மு.இராமலிங்கம், இ.த.ம. 18-3-75.

வரம் தரும் வடபழனி ஆண்டவர், மு.குப்புசாமி, ஜெயசக்தி பதிப்பகம், சென்னை, 1992.

வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசன் - மா.இராஜகோபாலன், இரா.ப்ரகதீஸ்வரன், திருக்கோயில் வெளியீடு, 1984.

வைப்புத்தலம்: எழுமூர் (எழும்பூர்) சு.பொன்னுசுவாமி,

சித்தாந்தம், மலர் 54, இதழ்-1, சனவரி 1981, சைவசித்தாந்தம் பெருமன்றம், சென்னை.

ஸ்ரீ சென்னை மல்லீச்சுவரர்- ஸ்ரீ சென்னை கேசவப் பெருமாள் திருக்கோயில்களின் வரலாறு, சென்னை, 1958.

all about Madras, the little flower co, Madras, 1959.

A Road guide to Madras., T.T.Maps and publication Ltd, Discover India, Series 1991.

A Topographical List of the Inscriptions of the Madras Presidency-V.Rangacharya, Vol.I Asian Educational Services, New Delhi. 1985.

Madras Discovered-S.Muthiah, Affiliated East-West Press Private Ltd, Madras, 1987.

Maruntheswara, The Divine physician, A history of the Marun theswara Temple, Tiurvanmiyur, 1992.

The Madras Tercentenary Commemoration Volume, Madras Tercentenary celebration Committee, Oxford University Press, Madras 1930.

Vestieges of Old Madras- Vol.I,II,III,IV, Henry Davision Love, Mittal Publications, Delhi, 1988.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY MADRAS-28

# புதிய வெளியீடுகள்

Mysticism of Love in Saiva Tirumurais — Dr. V. C. Sasivalli ... 50.00
எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-2 — முனைவர் அன்னி தாமசு ... 30.00
தொல்காப்பியம்-பொருள்-களவியல் — பேரா. சிவலிங்கனார் ... 85.00

The Contributions of the Tamils to Indian Culture
Vol. I Language and Literature — Dr. K. Subbiah Pillai ... 18.00
Vol. II Art and Architecture — Dr. K. Bhagavathi ... 30.00
Vol. III Socio Cultural Aspects — Dr. M. Valarmathi ... 90.00
Vol. IV Religion and Philosophy — Dr. V. C. Sasivalli ... 80.00

எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-I — முனைவர் அன்னி தாமசு ... 47.00
சிவகிரி குமர சதகம் — திரு. மெய். சந்திரசேகரன் ... 39.00
புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை — திரு. மொ. மருதமுத்து ... 27.00
தேரையர் அந்தாதி — மருத்துவர் மா. புனிதா ... 33.00
குசலவர் சுவாமி கதை — செல்வி இரா. வசுமதி ... 36.00
குணவாகடம் — முனைவர் வே. நெடுஞ்செழியன் ... 40.00
தோட்டுக்காரி கதை — முனைவர் வ. அலமேலு ... 28.00
சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள்
முனைவர் சாலினி இளந்திரையன் ... 24.00
உலகத்தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு
முனைவர் தி. மகாலட்சுமி ... 35.00

Selected Poems of Bharathidasan — Translation:
Tamil to English — Dr. V. Murugan ... 60.00
Tamil to Malayalam — Dr. P. P. Thambi & D. Ramakrishnan ... 60.00
Tamil to Kannada — Mr. V. Pasumalai Arasu ... 60.00
Tamil to Telugu — Dr. C. R. Sarma ... 60.00

Chieftains of the Sangam Age — Dr. K. D. Thirunavukkarasu ... 20.00
பாரெலாம் பரந்த தமிழர் — உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ... 25.00
காண்டேகரும் கா. ஸ்ரீ. ஸ்ரீ. யும் — முனைவர் மு. வளர்மதி ... 18.00
A Comparative Study of Tamil and Japanese
Dr. Pon. Kothandaraman ... 15.00
தமிழும் பிற துறைகளும் — முனைவர் ந. கடிகாசலம் ... 35.00
பெண்ணியம் — முனைவர் இரா. பிரேமா ... 25.00
விலங்கியலும் தமிழியலும் — முனைவர் ஏ. த. சோதிநாயகம் ... 10.00
தமிழும் தெலுங்கும் — முனைவர் தா. சா. மாணிக்கம் ... 15.00
தமிழ் ஆய்வுக் களங்கள் — முனைவர் ந. கடிகாசலம் ... 70.00
வ.உ.சியும் தமிழும் — முனைவர் அ. சங்கரவள்ளிநாயகம் ... 18.00
தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புக்கள்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம் ... 14.00
புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம்
முனைவர் நா. ஆறுமுகம் ... 20.00
கனகாபிஷேக மாலை — திறனாய்வு —
முனைவர் பீ. டாக்டர் நசீம்தீன் ... 16.00
இருபதின் கவிதைகளில் சமூகநீதிக் கோட்பாடு
முனைவர் து. சீனிச்சாமி ... 20.00
பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்
முனைவர் ச. சிவகாமி ... 60.00
தொல்காப்பியம் — பொருள் — பொருளியல்
பேரா. ஆ. சிவலிங்கனார் ... 32.00